
நீல நயனங்களில்...
சுபர் வெளியீடு
அபிபாலா

# நீல நயனங்களில்...

அபிபாலா

நித்திலா பதிப்பகம்
எண். 15, மணிகண்டன் ஐந்தாவது தெரு,
(ஜி.ஆர்.டி அருகில்) பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை - 600 021.
E-mail : nithilapathippagam@gmail.com

₹.150/-

## நூற்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | நீல நயனங்களில்... |
| ஆசிரியர் | : | அபிபாலா |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பக்கங்கள் | : | 320 |
| முதற்பதிப்பு | : | மார்ச் 2015 |
| வெளியிடுவோர் | : | நித்திலா பதிப்பகம் |
| தாளின் தன்மை | : | 11.6 Kg வெள்ளைத்தாள் |
| கணினி அச்சு | : | சிருஷ்டி லேசர் |

| | | |
|---|---|---|
| Title | : | Neela Nayanagalil |
| Author | : | Abibala |
| Language | : | Tamil |
| First Edition | : | Feb - 2015 |
| Published by | : | Nithila Pathippagam |
| Distributed by | : | **Subam Publications,** 15, Manigandan 5th Street, (Near GRT) Old Washermenpet, Chennai -600 021. **Cell:9443142544** |


All Rights Reserved. This book or parts thereof, may not be reproduced in any means, electronic or mechanical, including photocopy, recording or any information storage and retrieval system now known or to be invented, without written permission from the author & publisher.

**விலை : ₹.150/-**



# நீல நயனங்களில்...

# நீல நயனங்களில்...

## 1

புலர்ந்தும் புலராத இளங்காலைப் பொழுது! அன்றைய பொழுதை இனிதே புத்துணர்ச்சியோடு எதிர்கொள்ள ஆதவன் உற்சாகமாக மேலெழும்பத் துவங்கிய அழகான விடியல்! வானில் அதன் செந்நிற கிரகணங்கள் நிகழ்த்திய வர்ண ஜாலங்களைக் கண்டு, புள்ளினங்கள் உற்சாகக் கூச்சலிட்டன. அதன் மகிழ்ச்சியான ஒலி கேட்டு மலர்ந்த மலர்கள், தோட்டத்தையே ரம்யமாக்கி மலர்ந்து இனிய மணத்தை பரப்பிய இனிய புத்தம் புதுக்காலை!

சிறியதாக இருந்தாலும், அழகு கொஞ்சும் தோட்டத்தை தன்னுள் அடக்கியிருந்த ''தேவி மஹால்'' உறக்கம் கலையாமல் அமைதியோடு இருந்தது. இதோ... அதிலிருந்த ஏதோ ஒரு அறையிலிருந்து, இனிய சங்கீதமாய் செல்போனில் ஒலி அழைக்க, அதன் ஓசையில் ஆழ்ந்த துயில் கொண்டிருந்த அந்த வீட்டின் இளவரசி, ப்ரியங்கா தேவி தன் சிப்பி இமைகளை மெல்ல விரித்தாள்.

தன் அருகேயிருந்த சிறிய மேஜை மீதியிருந்த போட்டோவை முத்தமிட்டு ''மார்னிங் டாடி! மார்னிங் மை ஸ்வீட் மா!'' என்ற முறுவலோடு எழுந்து ஒரு நிமிடம் கண் மூடி தியானித்தாள். அவள் குளியலையிலிருந்து வருவதற்குள் அவளைப் பற்றிய ஒரு சின்ன அறிமுகம்.

ப்ரியங்கா தேவி! துள்ளலும் துடிப்பும் குழந்தைத் தனமும் நிரம்பிய இருபத்தியொரு வயது சந்தனச் சிலை. கட்டிட நுண் கலையை விரும்பித் தேர்ந்தெடுத்து, இன்னும் ஓரிரு மாதங்களில் இளம் பொறியாளராக தேர்வு பெறும் நிலையிலிருப்பவள். கல்லூரியிலும் அவள் உயரமும், கம்பீரமும் ஒரு ராணிக்கே உரிய நிமிர்வுமாக மற்றவரிடமிருந்து தனித்தே தெரிவாள். படிப்பிலும் படு சுட்டி. உற்சாகப் பந்து.

குளியலறையிலிருந்து வெளிப்பட்டவள் தன் நீண்ட கூந்தலைச் சுருட்டிக் கொண்டையிட்டபடி சமையலறைக்கு விரைந்தாள். ஜன்னல் வழியே தெரிந்த தோட்டத்தைப் பார்த்ததுமே மனம் ததும்பி, ''ம்! ஸாரிடா. இன்னிக்கு நான் அங்க வந்து சுத்த முடியாது. இன்னிக்கு என் செல்லத் தாத்தாவுக்குப் பாத்டே. அதுவும் எழுபதாவது பிறந்த நாள். அவர் எழுவதற்குள் எனக்குக் கிச்சனில் நிறைய வேலையிருக்கு. கொஞ்சம் ஸ்பெஷலா என் தாத்துவுக்குப் பிடித்த டிபனைச் செய்யணும். இன்னிக்குக் காலேஜ்ல கேம்ப்ஸ் இன்டர்வியூ வேற இருக்கு' மனதோடு பேசிக் கொண்ட கிச்சனில் நுழைந்தவளின் கண்கள் வியப்பில் விரிய,

''ப்ரோ!'' குட்மார்னிங். என்ன இது? அஞ்சு மணிக்கே எழுந்தாச்சு. இது உனக்கு மிட்நைட் ஆச்சே! நான் வந்து



உன்னை எழுப்பவே இல்லையே? என்ன நடக்குது?''

மணக்க மணக்கக் காபியைப் ப்ளாஸ்கில் ஊற்றிக் கொண்டிருந்த சிபிச் சக்கரவர்த்தி, தேவியின் ஒரே அண்ணன்.

புன்னகையோடு, ''மார்னிங் குட்டிம்மா!'' இன்னிக்குத் தாத்தா பாத்டே இல்லையா. கண்டிப்பா செலிப்ரேட் பண்ண விடமாட்டார். அதனால, அட்லீஸ்ட் அவருக்கு முன்னால எழுந்து ரெடியாகி, அவரை விஷ் பண்ணி ஆசீர்வாதம் வாங்கிடலாம்-னு தான் சீக்கிரம் எழுந்துட்டேன்.

நானும் டிஃபன் செய்ய ஹெல்ப் பண்றேன். இன்னிக்கு மட்டுமாவது அவருக்குக் கிச்சனிலிருந்து விடுதலை கிடைக்கட்டும்! சரியா. இந்தா முதல்ல காபியை குடி!'' என்றவனின் குரலில் தெரிந்த வாஞ்சையில் கரைந்து போன தேவி, காபியைச் சுவைத்துக் கொண்டே, ''சரிண்ணா! நேத்து நைட் நீங்க தூங்கின பிறகு குலோப்ஜாமூன் செஞ்சு வச்சுட்டேன். இன்னிக்குச் சமையல் பண்ண காய் கூட கட் பண்ணி பிரிட்ஜில் இருக்கு. நைட் நீயும் ஆபிசிலிருந்து வந்ததும் டின்னருக்கு வெளியே போகலாம்.'' இருவரும் பேசிக் கொண்டே வேலையை முடித்தார்கள்.

சிபி பொறுப்பாக அவளுக்கு உதவி செய்து விட்டு, ''சரி குட்டிம்மா.'' நான் இதையெல்லாம் டேபிளில் எடுத்து வைக்கிறேன். நீ குளிச்சு ரெடியாயிடு கேம்பஸ் இருக்கில்ல. பிரிப்போ பண்ணியாச்சா? இன்னிக்கு நான் டூ ஹவர்ஸ் பர்மிஷன் போட்டிருக்கேன். நாம கோயிலுக்குப் போய் தாத்தா பேருக்கு அர்ச்சனை பண்ணிட்டுப் போலாம். உன்னை நானே காலேஜ்ல டிராப் பண்ணிடறேன். ஓ.கே.''

''தேங்க்ஸ் ப்ரோ!''

சிபி, தேவி இருவருமே சங்கர், நந்தினி தேவியின் செல்லக் குழந்தைகள். அவர்களே உலகமென மகிழ்ச்சியாக ஒவ்வொரு நாளையும் அனுபவித்து வாழ்ந்தனர். வட இந்தியாவில் மிகப் பிரபலமான கல்லூரியில் ஒன்றாகப் படித்து காதலித்து மணந்தவர்கள். சங்கர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். அவர் தந்தை கிருஷ்ணமூர்த்தி அவர்களின் காதலை அங்கீகரிக்க, ஜெய்பூரைச் சேர்ந்த நந்தினி தேவியின் வீட்டிலோ கடும் எதிர்ப்பு. அதை மீறி வீட்டை விட்டு வெளியேறி சங்கரின் கரம் பிடித்தவளுக்கு, அன்றைய தினமே தன் வீட்டினரோடு தொடர்பே அற்றுப் போனது.

சென்னைக்குக் கிளம்பி வந்த அவர்கள் இருவருக்குமே ஒரு பெரிய மல்டி நேஷனல் கம்பெனியில் வேலை கிடைத்தது. இருவரின் உயர்ந்த பதவியே அவர்களின் வளமான வாழ்விற்கு அடித்தளமிட்டது. கிருஷ்ணமூர்த்தி நேர்மையான தலைமை ஆசிரியராக பணியாற்றி ஒய்வு பெற்றவர். ஆடம்பரமில்லாத எளிமையான வாழ்வில் தன்னைப் பிணைத்துக் கொண்டிருந்ததால், தனது சேமிப்பை வைத்து, சென்னையில் பிரதான இடத்தில் நிலம் வாங்கிப் போட்டிருந்தார். சங்கரும், நந்தினியும் அதை ‘தேவி மஹாலாக மாற்றியிருந்தனர்.

நந்தினிக்கு, தன் மாமனார், கணவர் என இருவரின் அன்பும் ஆதரவும் சேர தன் தாய் வீட்டு நினைவே மறந்து போனது. சிபியும் தேவியும் அவர்களின் வாழ்க்கையைச் சொர்க்கமாக்கினர். இருவருமே தங்கள் தாத்தாவின் அரவணைப்பில் ஒழுக்கமான குழந்தைகளாய் வளர்த்தனர். சிபி டெக்ஸ்டைல் துறையில் ஆர்வத்தோடு கால் பதித்தான்.



அதற்குரிய படிப்பை முடித்து எம்.பி. ஏ.வும் முடிக்க, கல்லூரியில் நடந்த கேம்பஸில் அகமதாபாத்தில் உள்ள பிரபலமான டெக்ஸ்டைல் நிறுவனம் சிபியை வேலையில் இணைத்துக் கொண்டது.

தேவியோ கட்டிடக் கலையில் ஆர்வம் கொண்டு பி. ஆர்க் முடிக்கும் தறுவாயில் இருந்தாள். அவளது மூன்றாம் வருட செமஸ்டர் தேர்வின் போது, ஒரு வேண்டுதலை நிறைவேற்ற சங்கர் - நந்தினி இருவரும் வெளியூர் சென்றனர். திரும்பி வந்த விமானம் விபத்துக்குள்ளானதில் சிபி, தேவி இருவரும் பெற்றோரைப் பறி கொடுத்தனர்.

வயோதிகத்திலிருந்த கிருஷ்ணமூர்த்தி தனது மகன், மருமகள் மறைவில் இடிந்து போனார். அந்தத் துயரத்தைத் தன்னோடு புதைத்துக் கொண்டு, கலங்கிப் போய் பரிதவித்து நின்ற தேவி, சிபி இருவரையும் தன் மார்போடு அணைத்துக் கொண்டார். அதன்பிறகு, தன் பேரக் குழந்தைகளின் எதிர்காலமே அவரின் உயிர் மூச்சாகிப் போனது. சிபியும் தங்கள் வீட்டு தேவதையைத் தாயின் கனிவோடு அரவணைத்துக் கொண்டான்.

அகமதாபாத்தில் தான் ஏற்றிருந்த வேலையை தங்கைக்காக உதறித் தள்ளினான். வீட்டின் ஆதாரமாக இருந்தவர்களின் இழப்பை ஈடு செய்ய முடியாது தான். ஆனாலும், அந்தத் துயரத்தை தங்களின் ஒரே ஆதரவான தாத்தாவின் மடி தேடி ஆறுதல் அடைந்தனர்.

காலம் காயத்தை ஆற்றும் மருந்தானது. வாழ்க்கை மெல்ல இயல்பு நிலையடைந்ததும், சிபி தனது படிப்பிற்கான வேலையை சென்னையிலேயே தேட ஆரம்பித்தான். அவனது முந்தைய அனுபவத்திற்கும்,

திறமைக்கும் வேறு ஊர்களிலிருந்து வந்த நல்ல வாய்ப்புகளைக் கூட நிராகரித்தான்.

'பத்மினி குரூப் ஆப் கம்பெனிஸ்' சென்னையில், மிகப் பிரபலமான டெக்ஸ்டைல் யூனிட் அதன் தொடர்ச்சியாக புதிதாக ஒரு நிறுவனம் துவங்குவது தொடர்பாக வந்த வேலை வாய்ப்பு விளம்பரம் ஒன்றை நாளிதழில் படித்து விட்டு, அதன் ஜெனரல் மேனேஜர் பதவிக்குத் தனது ரெஸ்யூம் ஒத்துப் போக, அதற்கு விண்ணப்பித்தான். குறிப்பிட்ட நாளில் அதன் நேர்முகத் தேர்வையும் திருப்திகரமாக முடித்து வெளியே வந்தபோது, தனது நெருங்கிய நண்பன் கௌதமைச் சந்தித்தான். சிபி, கௌதம், மிதுன், வருண் நால்வரும் பெங்களூரில் ஒன்றாகப் படித்தவர்கள். சிபியைத் தவிர மற்ற மூவரும் ஆர்க்கிடெக்சர் படித்தனர். ஹாஸ்டலில் அடுத்தடுத்த அறையில் தங்கியதால், நட்பு இறுகியது.

''ஹாய் சிபி!'' தன்னைத் தோளோடு அணைத்த கௌதமைப் பார்த்து மகிழ்ச்சியானான்.

''டேய் கௌதம்! எப்படி இருக்கடா? உன்னைப் பார்த்து இரண்டு வருஷம் ஆச்சு... என்ன செய்யற? உன் அப்பா கன்ஸ்ட்ரக்ஷன் தானே பண்றார்? நீ அவர் கூட இருக்கியா? நம்ம ப்ரண்ட்ஸ் எங்க இருக்காங்க தெரியுமா?''

''நம்ம கான்வகேஷன் போது தானே லாஸ்டா மீட் பண்ணினோம்? நான் அகமதாபாத் போன பிறகு கொஞ்ச நாள் தொடர்பிலிருந்தோம். அப்புறம் கான்டாக்ட் பண்ணவே முடியலை. நீ எங்கடா இங்க?'' - கேள்வி மேல் கேள்வி கேட்டு திணறடித்தான்.

''மூச்சு விடுடா. வா, லஞ்ச் டைம் தானே. போய்



சாப்பிட்டுகிட்டே பேசலாம். இன்னிக்கு என் ப்ரோக்ராம் எல்லாம் கேன்சல்ட்'' சிபியைக் கைப்பிடித்துக் காருக்கு அழைத்துச் சென்றான். வழியில் யாருக்கோ போன் செய்து அன்றைய வேலைகளைப் பட்டியலிட்டவன், ஒரு ஸ்டார் ஹோட்டல் முன் காரை நிறுத்தினான்.

உள்ளே வசதியான இடம் பார்த்து அமர்ந்ததும், ''அதெல்லாம் இருக்கட்டும். நீ என்ன பண்ற? அதைச் சொல்லு'' என்றான் கௌதம்.

''நான் பார்த்துட்டு இருந்த வேலையை விடும் படியான சூழ்நிலைடா'' என்று சுருக்கமாக தன் நிலையை விளக்கினான்.

''இங்க பத்மினி டெக்ஸ்டைல் யூனிட்டில் ஜி.எம் போஸ்ட்க்கு அப்ளை பண்ணி, இண்டர்வியூ முடிச்சிட்டு வெளியே வரும்போது தான் உன்னைப் பார்த்தேன்.''

''சாரிடா. உன் பேரண்ட்ஸ் தவறிய விஷயம் எனக்குத் தெரியாம போச்சு. டோண்ட் வொர்ரி. அது எங்க யூனிட் தான். என் அம்மாதான் எம்.டி. அப்பா தான் பார்த்துக்கறார். உனக்கு வேலை கன்பார்ம்ட். நான் அப்பாகிட்ட பேசறேன்'' அவன் கைகளை அழுந்தப் பற்றினான்.

அவன் அக்கறையில் நெகிழ்ந்த சிபி, ''தேங்க்ஸ்டா. ஆனா, என் திறமைக்கு இந்த வேலை நிச்சயமா கிடைக்கும். அப்பத்தான், என்னாலயும் நிம்மதியா வேலை பார்க்கவும் முடியும். சரி. உன்னைப் பத்திச் சொல்லு.''

அவனின் தன்னம்பிக்கையும், நிமிர்வும் கௌதமைப் பெருமைப்பட வைத்தது. ''சிபி! நான் படிச்சு முடிச்சதும், வருண், மிதுன் கூடச் சேர்ந்து சுமி ஆர்க்கிடெக்ட் ஆரம்பிச்சு, சக்சஸ்புல்லா நடத்திகிட்டு இருந்தோம். ஒரு வருஷம்

முன்னால மிதுன் அதிலிருந்து விலகி லண்டன் போய் செட்டிலாயிட்டான்.

வருண் மேரேஜ் முடிஞ்சதும், அவன் வொய்ப் வந்து ஹெல்ப் பண்ண ஆராம்பிச்சாங்க. என் அப்பாவுக்குக் கொஞ்சம் ஹெல்த் ப்ராப்ளம். அவரோட விஷ்வா பில்டர்ஸை நான் ஏற்று நடத்த வேண்டிய சூழ்நிலையால, நானும் விலகிட்டேன். வருண் கலக்கிட்டு இருக்கான். அவனும், நானும் பிசினஸில் மியூச்சுவலா ஹெல்ப் பண்ணிக்குவோம். இப்ப எனக்கும் நிறைய ப்ராஜெக்ட் சைன் ஆகி இருக்கு. டைட் வொர்க் வருண்கிட்ட பேசலாம். ஒரு நாள் பிளான் பண்ணி டின்னருக்குப் போலாம்'' என்றான்.

அதன் பிறகும் பேச நிறைய விஷயங்கள் இருந்தன. செல்போன் நம்பரைப் பரிமாறிக் கொண்டனர். சிபி நினைத்தது போலவே, அங்கேயே தேர்வாகி வேலையில் அமாந்தான். கௌதமுடனான நட்பும் இறுகியது. ஸ்வீட்டான செய்தியோடு வீட்டுக்கு வந்தவனை தேவி புன்னகையோடு வரவேற்றாள்.

''தேங்க்ஸ்ண்ணா. இனிமே என்னை விட்டுட்டுப் போக மாட்ட தானே. இப்பத்தான் நிம்மதியாய் இருக்கு.''

''என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க தாத்தா!''

''நல்லாயிருப்ப கண்ணா. எப்ப ஜாயின் பண்ணணும்? ஜி.எம் போஸ்ட்னா பொறுப்பு அதிகம்... கவனமா இருக்கணும். ஆல் த பெஸ்ட்.''

நாட்கள் வேகமாக விரைய, இதோ தேவி படிப்பை முடிக்கப் போகிறாள். சிபியுடைய வேலையும் எந்தத் தடையும் இல்லாமல் செவ்வனே நடந்து கொண்டிருந்தது.



''குட்டிம்மா! ரெடியா? டைம் ஆச்சு. வா. தாத்தாவை எழுப்பலாம். டிஃபன் சாப்பிட்டுட்டுக் கிளம்பச் சரியா இருக்கும்.''

தாங்கள் வாங்கிய பரிசுப் பொருளோடு தாத்தாவின் அறைக்குள் நுழைந்தார்கள். தூங்கிக் கொண்டு இருப்பார். எழுப்ப வேண்டும் என்று நினைத்து உள்ளே வந்தவர்களின் முகத்தில் அசடு வழிந்தது.

அங்கே கிருஷ்ணமூர்த்தி குளித்து முடித்து நெற்றியில் திருநீறு துலங்க, வெண்ணிற உடையில் கம்பீரமாக இவர்களை எதிர்பார்த்து காத்திருந்தார்.

இருவரும் ஒரு சேர, ''ஹேப்பி பாத்டே தாத்தா. எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க'' என்று அவர் காலில் விழுந்தனர். பின் பரிசைக் கொடுத்து விட்டு, அவரை டிஃபன் சாப்பிட அழைத்துச் சென்றனர்.

''தேவிம்மா! இன்னிக்கு உனக்கு இண்டர்வியூ இருக்கில்ல. தைரியமா கான்ஃபிடன்டா பண்ணு. உன்னோட திறமையை, தன்னம்பிக்கையை வெளிப்படுத்தற மாதிரி தெளிவா பேசணும்! உன்னோட ஃபைல் ரெடி பண்ணிட்டியா? என்று கேட்டு தெளிவுபடுத்திக் கொண்டார்.

''சரி தாத்தா! லஞ்ச் ஹாட் பேக்ல இருக்கு. இன்னிக்குப் ஃபுல்லா உங்களுக்கு ரெஸ்ட் தான். நைட் டின்னர் அண்ணாவோட ட்ரீட் வெளியே! ரெடியா இருங்க. இன்னிக்குக் கிளாஸ் இல்ல. கேம்பஸ் ரிசல்ட் தெரிஞ்சதும் வந்திடுவேன். பை தாத்தா. சிபியுடன் காரில் கிளம்பினான்.

கோவிலுக்குச் சென்று தாத்தாவின் பெயரில் அர்ச்சனை செய்து விட்டு, தயாராக வாங்கி வைத்திருந்த உணவுப்

பொட்டலங்களை கோவில் வாசலிலிருந்த எளியவர்களுக்கு அளித்து விட்டு மன நிறைவோடு கிளம்பினார்கள்.

சந்தன நிறத்தில் கருநீல பூக்கள் மின்னிய காட்டன் சுடிதாரில், அழகு தேவதையாக காரில் அமாந்திருந்த தங்கையைப் பார்த்து மனம் கனிந்தான் சிபி.

''இன்னிக்கு எந்தக் கன்சர்ன்ல இருந்து இண்டர்வியூ பண்றாங்கடா?

''சிவில் இன்ஜினியரிங் ஸ்டூடண்ட்ஸை ஐ.டி. ஃபீல்ட்ல எல்லாம் கூட செலக்ட் பண்றாங்க. பட் எனக்கு அதுல இஷ்டமில்ல ப்ரோ. விஷ்வா பில்டர்ஸ், ஆர்.எம்.பி கன்ஸ்ட்ரக்ஷன் மாதிரி ஃபேமசான கன்சர்ன்ல வொர்க் பண்ணி எக்ஸ்பீரியன்ஸ் கெயின் பண்ணணும். அப்புறம் சொந்தமாக நானே ஒரு பிசினஸ் ஸ்டார்ட் பண்ணி நடத்தணும்! பார்க்கலாம்.''

''ஏய் குட்டிம்மா! விஷ்வா பில்டர்ஸ் என் ப்ரண்ட் கௌதமோடது. நான் வொர்க் பண்றதும் அவங்களோட டெக்ஸ்டைல் யூனிட்ல தான். கௌதமுக்கு ஒரு போன் பண்ணினா போதும். ஆர்டர் உன் கையில்! அவன் என் பேச்சைமீற மாட்டான்.''

''அ.ண்.ணா! அது தான் வேண்டாங்கறேன். நான் என்ன மக்கு ஸ்டூடண்டா? ரெகமண்டேஷன்ல வேலை வாங்க! நான் என் டேலண்டை ப்ரூவ் பண்ணி, இந்த வேலையை வாங்கிடுவேன். இது பத்தி நீ யார்கிட்டயும் மூச்சு விடாதே. நான் இது வரைக்கும் செஞ்ச ப்ராஜெக்ட்ஸ், பேப்பர் பிரசன்டேஷன்ஸ், செமினார்ஸ் அப்புறம், நான் ஸ்பெஷலா ரெடி பண்ணி வச்சிருக்க என்னோட பில்டிங் ப்ளான்ஸ்! இது போதும்! வேலையைத் தூக்கி என் கையில



கொடுத்திடுவாங்க. நான் உன் தங்கைன்னு ப்ராமிசா யார்கிட்டயும் சொல்லக் கூடாது. இண்டர்வியூ முடிஞ்சதும் உனக்கே நான் சொன்னது புரியும்! கண்கள் மின்ன நம்பிக்கையாகப் பேசியவளைப் பார்த்து புன்னகைத்தான்.

''சரிம்மா. நான் சொல்ல மாட்டேன். போதுமா? இண்டர்வியூ முடிஞ்சு எனக்குப் போன் பண்ணு. ஈவினிங் நானே வந்து பிக்கப் பண்ணிக்கறேன். ஆமா உன் ஃப்ரண்ட் ஒண்ணு அடிக்கடி வீட்டுக்கு வருவாளே ஏன் இப்ப வர்றதில்லை என்னாச்சு?

''தான்யாவா அண்ணா? அவ டெக்ஸ்டைல் படிக்கற காலேஜ்ல ஐ.வி. போயிருக்கா. படிப்பு முடிஞ்சதும் அவளோட பெரியப்பாவோட நிறுவனத்திலேயே வேலை ரெடியா இருக்கு. நெக்ஸ்ட் வீக்தான் வருவா.''

''நான் உள்ள வரட்டுமாடா?''

கண்களில் குறும்பு மின்ன, ''எதுக்கு சைட் அடிக்கவா? அஞ்சு வருஷமா நான் படிக்கிற காலேஜ் தான் இது. நீ ஆபிஸ் போற வழியப்பாரு'' என்றதும் அவள் தலையில் செல்லமாகக் குட்டியவன், ''பை தேவிம்மா!'' என்று காரைக் கிளப்பினான்.

தன்னுடைய ஃபைலோடு இண்டர்வியூ நடக்கும் இடத்துக்கு வந்ததும், அங்கிருந்த எல்லோருடைய முகத்திலும் இருந்த டென்ஷனைப் பார்த்ததும் மனதில் லேசாக பயம் தோன்றியது. பைலை சரிபார்த்து விட்டு அருகிலிருந்தவளைப் பார்த்து ''ப்ரிப்போ பண்ணியாச்சா?'' என்றாள்.

அவளோ, ''பயமா இருக்குப்பா. இண்டர்வியூ கஷ்டமா இருக்கும்னு சொல்றாங்க. நிறைய கேள்வி கேட்டாங்களாம்''

அதற்குள்ளாக அவள் பெயர் அழைக்கப்பட கொஞ்சம் நெர்வசானாள் ஃபைலோடு உள்ளே நுழைந்தவள், நாற்பது வயதுக்கு மேல் மதிக்கும்படியான மூன்று பேரை எதிர் கொண்டாள்.

ப்ரியங்கா தேவி காலை வணக்கம் தெரிவித்ததும், மூவரில் கம்பீரமாக அனுபவசாலியாக இருந்த பெரியவர், அவளின் பதட்டம் உணர்ந்து, ''ஹலோ ப்ரியங்கா தேவி! யூ ஆர் லுக்கிங் ஸ்மார்ட். உக்காருங்க. செமஸ்டருக்கு எப்படிப் ப்ரிப்பேர் பண்ணிருக்கீங்க? இது ஃபைனல் செமஸ்டர் தானே!''

அவரின் கனிவான பேச்சில் கொஞ்சம் ரிலாக்ஸ் ஆன தேவி, ''தேங்க்யூ சார். இந்த செம் கண்டிப்பா நல்லா பண்ணுவேன்'' என்றாள்.

''உங்களைப் பத்தி கொஞ்சம் தெரிஞ்சுக்கலாமா? பொதுவா பெண்கள் சிவில் செலக்ட் பண்ண மாட்டாங்க. உங்களை இது தான் படிக்கணும்னு, யாராவது ஃபோடஸ் பண்ணினாங்களா?''

''நோ சார். கன்ஸ்ட்ரக்ஷன் எனக்கு ரொம்பப் பிடிச்ச ஃபீல்ட். ஏதாவது பழமையான பில்டிங், கோயில்லாம் பார்த்தா அதிலிருக்கும் கலை நுணுக்கம் தான் என் கண்ணுக்கு முதல்ல தெரியும். அது ரிலேட்டடா நிறைய நெட்ல சர்ச் பண்ணிப் பார்ப்பேன். என் இண்ட்ரஸ்ட் தான் நான் ஆர்க்கிடெக்சர் படிக்க முதல் காரணம்.''

''ஓ குட்!'' என்று கேள்விகள் தொடர்ந்து கொண்டேயிருக்க, அவளுக்கு இஷ்டமான சப்ஜெக்ட் என்பதால் அவரின் கேள்விகளால் கவரப்பட்டு ஆர்வத்தோடு பதில் அளிக்கத் தொடங்கினாள். இது



அவளுடைய வேலைக்கான இண்டர்வியூ என்பதையே மறந்து போய் அவருடன் விவாதித்தாள்.

கட்டிடம் கட்டும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள், சேஃப்டி வழிகள், தவறுகளை சரி செய்யும் முறை என்று எல்லாக் கேள்விகளுக்கும் சளைக்காமல் பதில் சொன்னாள். இறுதியாக அவள் டிசைன் செய்த கட்டிடங்களின் பிளான்கள் அடங்கிய ஃபைலைப் பார்த்ததும் மலர்ந்த மூவரின் முகங்களுமே, அவளுடைய ரிசல்டை அறிவித்தன.

அந்தப் பெரியவரே, ''வெல்டன் ப்ரியங்கா! யூ ஆர் வெரி பிரில்லியண்ட். நீ இங்க செலக்ட் ஆனா கூட ஃபைனலா உனக்கு மெயின் இண்டர்வியூ எங்க ஆஃபீஸ்ல காத்திருக்கு. விஷ்வா பில்டர்ஸ் எம்.டியே நேரில் உன்னைச் சந்திப்பார். அதிலயும் வெற்றி பெற்று, எங்க விஷ்வா பில்டர்ஸ் ஃபேமலியில் ஜாய்ன் பண்ண அட்வான்ஸ்ட் வாழ்த்துக்கள் மா.''

''தேங்க்யூ சார். தேங்க்யூ வெரி மச். நான் உள்ள வந்ததுமே உங்களோட பேச்சு என்னை ரிலாக்ஸ் பண்ணிடுச்சு. உங்க கூட எல்லாம் பேசியது எனக்கு ஒரு நல்ல அனுபவமா இருந்தது. என்னோட கான்பிடன்ஸ் லெவலும் கூடியிருக்கு. உங்க எல்லோர் கூடவும் சேர்ந்து வொர்க் பண்ண ஒரு சந்தாப்பம் கிடைச்சா, அதை என் அதிர்ஷ்டமா நினைக்கறேன். கண்டிப்பா எம்.டியை சந்திக்கறேன். ஐ வில் ப்ரூவ் மை செல்ஃப்! தேங்க்யூ அகெய்ன்'' கரம் குவித்து மூவரிடமும் நன்றி தெரிவித்து விட்டு தன்னம்பிக்கை மிளிரும் புன்னகையோடு வெளியே வந்தாள்.

உள்ளே மூவரின் மனதிலும் திருப்தி அவர்களின் ஜி.எம். சாரா, பெரியவரிடம், ''சார். சச் எ ஸ்வீட் கேர்ள். வெரி பிரில்லியண்ட் பாஸீக்கு இந்தப் பொண்ணு சேலஞ்சிங்கா இருப்பா.''

''ஆமாம் சாரா. என் மகன் ஃபாரின்லயிருந்து வந்து இந்த பிசினசை ஆரம்பித்தபோது இருந்த துடிப்பு, ஆர்வம், அறிவு, வேகம் எல்லாமே இந்தப் பொண்ணுகிட்டயும் பார்க்கறேன். ஆனா இவளைப் பார்த்து கௌதம் என்ன சொல்வானோ? அவன் செலக்ட் பண்ணணுமே.''

சாரா, ''இவ பாஸை செலக்ட் பண்ண வெச்சிடுவா. நிறைய நாலெட்ஜ் இருக்கு'' என்றதும், மூவரும் சிரித்தனர்.

# 2

தன் அண்ணனுடன் இண்டர்வியூ நடக்கவிருந்த அலுவலகம் வந்து சேர்ந்த தேவி, உள்ளே அடியெடுத்து வைத்ததும் மலைத்துப் போனாள். ஐந்து மாடிக் கட்டிடத்தில் அத்தனை ஹை-டெக்காக, அழகு கொஞ்சும் இன்டீரியருடன் அலுவலகம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

சிபியிடம், ''அண்ணா! நீ கிளம்பு நான் பார்த்துக்கறேன். நீ என் அண்ணன் என்று இப்போது யாருக்கும் தெரிய வேண்டாம்'' என்றாள்.

ரிசப்சனிலிருந்த பெண் இவளைப் பார்த்து விழி விரிக்க, புன்முறுவலோடு, ''குட்மார்னிங்! ஐ யாம் தேவி. பதினோரு மணிக்கு இங்கே எனக்கு இண்டர்வியூ இருக்கு'' என்றவளைப் பார்த்ததுமே பிடித்துப் போனது.



''கால் மீ சிந்து'' என்ற ரிசப்ஷனிஸ்ட், ''ஜிஎம் மேடம் பைவ் மினிட்ஸ்ல வந்திடுவாங்க. ப்ளீஸ் பீ சீட்டட்'' அருகிலிருந்த சோஃபாவைக் காட்டினாள்.

''தேங்க்யூ!'' என்று நகர்ந்தவளிடம், ''தேவி! ரொம்ப அழகு நீங்க. அதுவும் உங்க கண்ணு, நோ சான்ஸ். சோ அட்ராக்டிவ்.''

கன்னங்கள் சூடாக, டீப்பாய் மேலிருந்த மேகசினைப் புரட்டத் துவங்கினாள். ஜி.எம் வந்ததும் அவரது அறைக்கு வரச் சொன்னார்கள். பைலோடு உள்ளே நுழைந்தவளை, ஜி.எம் சாராவின் மலர்ந்த முகம் வரவேற்றது.

முகம் விகசிக்க, ''குட் மார்னிங் மேடம். ஹவ் ஆர் யூ?''

''ஃபைன். உட்காரும்மா ஒரு அர்ஜென்ட் வொர்க்கா. எம்.டி. டெல்லி போயிருக்கார். வர ஒரு வாரம் ஆகும். அதனால, ஃபார் த ஃபர்ஸ்ட் டைம், அவரோட ஒபினியன் இல்லாம, நாங்களே செலக்ட் பண்ண போறோம். பாஸ் ஒரு பெரிய ஷாப்பிங் மால் ப்ராஜெக்ட்ல, கமிட் ஆகியிருக்கார். அவருக்கு பி. ஏ.வா இருந்தவங்க போன வாரம் மேரேஜ் ஆகி ஃபாரின் போயிட்டாங்க. அதனால, அவரோட பர்சனல் செகரட்டரியா உன்னை அப்பாயிண்ட் பண்றேன்.

பாஸ் ரொம்ப ஃபாஸ்ட். வொர்க்குன்னு வந்தா சாப்பாடு, தூக்கம் எதுவுமே ஞாபகம் இருக்காது. வேலையில பர்ஃபெக்ஷனை ரொம்ப எதிர்பார்ப்பார், அவருக்கு ஈக்வலா அதே ஸ்பீட்ல வேலை செய்யப் பழகணும். இல்லேன்னா அவருக்கு ரொம்ப கோபம் வந்திடும். ஹோப் யூ கேன் டூ இட். ஆல் த பெஸ்ட். என்னிக்கு வந்து ஜாய்ன் பண்றீங்க?

வேலை கிடைத்த மகிழ்ச்சியில் முகம் பளபளக்க,

''தேங்க்யூ மேம். எங்க தாத்தா தான் எனக்கு எல்லாமே. அவர்கிட்ட கேட்டுட்டு உங்களை உடனே கான்டாக்ட் பண்றேன்'' என்று மறுபடியும் நன்றி கூறி விட்டுக் கிளம்பினாள். சிபிக்கு உடனே போன் செய்து தன் மகிழ்ச்சியை பகிடந்து கொண்டாள்.

ஸ்வீட்டோடு வீடு திரும்பிய தேவியின் முகத்தைப் பார்த்தே விஷயத்தை தெரிந்து கொண்ட தாத்தா, அவள் தலையை வருடி, ''சந்தோஷம்டா. இப்ப தான் என் கை பிடித்து ஓடி விளையாடியது மாதிரி இருக்கு. படிச்சு முடிச்ச வேலையிலயும் சேர்ந்தாச்சு. காலம் ரொம்ப வேகமாக தான் போகுது.''

அவர் தோள் மீது சாய்ந்த தேவி, ''தாத்தா! இது எல்லாமே உங்களாலே தான். நீங்க மட்டும் இல்லேன்னா, நானும் அண்ணாவும்...'' பேச முடியாமல் கண் கலங்கியது.

அவளைத் தோளோடு சேர்த்தணைத்த தாத்தா, ''குட்டிம்மா! நீ சந்தோஷத்திற்காக கூட கண்ணீர் சிந்தினா எனக்குத் தாங்க முடியலை. இனி எதற்கும் அழக் கூடாது. சரி, சிபி இப்ப வந்திடுவான். நைட் வெளியே போலாமா?'' என்றவர், ''தான்யா எங்கே ஆளையே காணோம்? அவ எப்ப வேலையில ஜாய்ன் பண்ணப் போறா? பேச்சை மாற்றினார்.

தோழியின் பெயரைக் கேட்டதுமே உற்சாகமாக, ''எக்ஸாம் இருக்கறதால் தான் அவ வரலை தாத்தா. இரண்டு பேரும் ஷாப்பிங் போக ப்ளான் பண்ணியிருக்கோம். ஆபிஸ் போக இன்னும் கொஞ்சம் டிரஸ் வாங்கணும். சிபி பர்சையே காலி பண்ணிடலாம். இன்னிக்கு நைட், நான் வீட்டிலேயே டின்னர் பண்ணிடறேன். வழக்கம் போல இன்னிக்கு மூன் லைட் டின்னர். ஓகே வா. பனீர். வாங்கி வச்சுட்டேன்.



சப்பாத்தியும், கிரேவியும் ப்ரோ வர்றதுக்குள்ள ரெடி பண்ணிடலாம். நான் பார்த்துக்கறேன். நீங்க டி.வி. பாருங்க.''

ஒரு சின்ன வெற்றி, சந்தோஷம் என்றால் மூன்று பேருக்கும் டின்னர் மொட்டை மாடியில் தான். நிலவொளியில் சாப்பிட்டு முடிந்ததும் சிபி, தேவி இருவருமே தாத்தாவின் மடியில் படுத்து உறக்கம் வரும் வரை கதை பேசுவார்கள். மெலோடி பாடல்கள் ஒலிக்க, அன்றைய பொழுது இனிமையாகக் கழியும்.

இந்த ஆறு மாதங்களாக, சிபியின் வேலைப்பளு, தேவியின் ப்ராஜெக்ட், எக்ஸாம் என்று அவர்களுக்கு இதற்கு நேரமே இல்லை. அதனால் தேவி வீட்டிலேயே டின்னர் ரெடி செய்தாள்.

ஒரு கிஃப்ட் பார்சலோடு வீடு திரும்பிய சிபி களைத்திருந்தான். ''குட்டிம்மா! கங்கிராட்ஸ்... இந்தா என் பரிசு...'' - அழகான வாட்சும், செல்போனும் வாங்கியிருந்தான்.

''தேங்க்ஸ் ப்ரோ! டயர்டா தெரியறயே... ரொம்ப வேலையா? இப்பல்லாம் நீ சீக்கிரமா வீடு திரும்பறதே இல்லை. உன்னை ரொம்ப வேலை வாங்கறாங்க. அதனால் நீ எங்க கூட பேசற நேரமே குறைஞ்சு போயிடுச்சு. வேற நல்ல வேலை கிடைச்சா இதை விட்டுடு. ஏன் தாத்து! நான் சொல்றது சரிதானே. சிபி ரொம்ப இளைச்சுப் போயிட்டான் இல்லையா?''

''அதெல்லாம் இல்லைடா. எனக்கு இங்க வேலை செய்யறது ரொம்பப் பிடிச்சிருக்கு. நம்ம டேலண்டை வெளிப்படுத்தற மாதிரி சேலஞ்சிங்காவும் இருக்கு. ஜி.எம்

போஸ்ட்னா அதுக்குரிய ரெஸ்பான்ஸிபிலிடி இருக்கும் தானே. ஐ லவ் திஸ் வொர்க். விஷ்வநாதன் சார் திறமைக்கு ரொம்ப மதிப்பு கொடுக்கிறவர். என்கிட்ட ரொம்பப் பிரியமா பழகுவார். கௌதம்கிட்ட காட்டற அதே பாசத்தை என் மேலேயும் காட்டுவார்.

பத்மினி மேடம் தான் கொஞ்சம் ஸ்ட்ரிக்ட். அவங்க என்னை முதன் முதலா இண்டர்வியூ பண்ணும் போதே, கேள்வி கேட்டுத் திணறடிச்சாங்க. அவரின் கேள்வியே அத்தனை சேலஞ்சிங்கா இருந்தது. இதுக்கு முன்னால நான் வேலை செஞ்ச அனுபவம் தான் என்னைச் சரியா பதில் சொல்ல வச்சது. எந்த ஒரு சின்ன விஷயத்திலயும் அவங்ககிட்ட ஓ.கே. வாங்கறது சுலபமே இல்லை. அதனால தான் என் வேலையில் அதிக கவனத்தோட இருக்க வேண்டியிருக்கு. தட்ஸ் ஆல். சரி நைட் டின்னர் வெளியே போலாமா. நான் ப்ரஷ் ஆயிட்டு வந்திடறேன்'' என்றான்.

''நோ ப்ரோ. டிஃபன் ரெடி. நீ வந்ததும் மாடிக்குப் போகலாம். நாம அங்க டின்னர் சாப்பிட்டு ஆறுமாதத்துக்கு மேலாகுது. சீக்கிரம் வா, பசிக்குது'' என்றாள்.

சிபிக்கும் பசி கிளர்ந்தெழ. அன்றைய மூன் லைட் டின்னர் அவர்களது அத்தனைச் சோர்வையும் போக்கி, மனநிறைவைத் தந்தது. அவர்கள் பேசி முடித்து கீழே வர நள்ளிரவானது. மறுநாள் சண்டே என்பதால் அவசரமில்லாமல் மெதுவாக எழலாம் என்ற நிம்மதியோடு உறங்கச் சென்றார்கள். ஆனால், காலையில் தேவிக்குச் சீக்கிரமே உறக்கம் கலைந்தது. குளிப்பதற்கு முன் தினமும் அரைமணி நேரம் தோட்டத்தில் தான் செலவிடுவாள்.

வீட்டின் முன்புறம் பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கின. பக்கவாட்டில் இரண்டு தென்னை மரங்கள், பின்புறம் வாழை, முருங்கை, வெண்டை, தக்காளி, கறிவேப்பிலை, கத்தரி என்று பார்த்துப் பார்த்து வளர்த்திருந்தாள். அதோடு கூட மணம் பரப்பிக் கொண்டிருந்த மகிழ மரம், அவள் தாய் பிரியமாக வளர்த்தது. அதனால் அதன் மீது தேவிக்குத் தனி வாஞ்சை. அவளின் பராமரிப்பில் தோட்டம் செழிப்பாக, பசுமையாக கண்ணைக் கவாந்தது. வியர்வை வழிய செடிகளுக்கு நீர் விட்டு, தேவையில்லாத செடிகளைக் களைந்த பின், திருப்தியாக குளிக்கச் சென்றாள். டிஃபன் செய்து விட்டு, தன் செல்போனை எடுத்து தான்யாவை அழைத்தாள்.

''எங்கடி இருக்க? டிஃபன் என் வீட்டில் தான். சீக்கிரம் வா.''

''இன்னும் அரை மணியில் வரேன் தேவி. சாரி, கொஞ்சம் லேட்டாயிடுச்சுப்பா...'' என்றாள் தன்யா.

ஸ்கூட்டியில் வந்திறங்கிய தான்யாவை, ''வாம்மா தான்யா. வந்து ரொம்ப நாளாச்சு. எக்ஸாம் நல்லா செஞ்சிருக்கியா. நீ உன் பெரியப்பா கன்சர்ன்லயே சேரப் போறதா தேவி சொன்னா உன் ஆபீஸ் எங்க இருக்கு?'' என்று தாத்தா வரவேற்றார்.

''நீங்க எப்படி இருக்கீங்க தாத்தா? என் பெரியப்பா பெரிய டெக்ஸ்டைல் யூனிட் வெச்சிருக்கார். 'பத்மினி டெக்ஸ்டைல்ஸ்' என்றதும், பேப்பர் படித்துக் கொண்டிருந்த சிபி, விழியுயர்த்தி அவளைப் பார்த்தான்.

''அடடே! நம்ம சிபி கூட அங்கதாம்மா ஜி.எம்மா இருக்கான். விஷ்வநாதன் சாரோட தம்பி பொண்ணா நீ?''

''ம் ஆமாம் தாத்தா. ஆனா, என் அப்பா ஸ்டேட் பேங்க்ல

ஏ.ஜி.யெமா இருக்கார். நான் ஒரே பொண்ணு. பெரியப்பா தான் அங்க வந்து வேலை கத்துக்கச் சொன்னார்.

''சந்தோஷம்மா. சிபியோ புது யூனிட்ல அப்பாயிண்ட் பண்ணினா, நீ இவன்கிட்ட தான் வேலை செய்யணும் சிபி.''

''ம்...'' தலையசைத்து விட்டு, எழுந்து சென்றான்.

அன்று முழுக்க தேவியோடு தான்யா ஷாப்பிங், ஹோட்டல், சினிமா என்று பிளான் பண்ணிருந்தாள். அது போலவே பொழுதும் உற்சாகமாகவே கழிந்தது. தாத்தா தேவியை புதன்கிழமை வேலையில் சேரச் சொன்னார். உடனே அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு, அதைத் தெரிவித்த தேவி, வேலையில் சேர மனதளவில் தன்னை தயார் படுத்திக் கொண்டாள்.

புதன்கிழமை காலைப் பொழுது அழகாக விடிந்தது. குளித்து முடித்து விட்டு மூவரும் கோயிலுக்கு சென்றனர். பின் டிஃபன் சாப்பிட்டதும், ''தாத்தா! அண்ணா! என்னை விஷ் பண்ணுங்க.''

''நல்லா இருடா குட்டி!'' என்று இருவருமே வாழ்த்திய போதும், மூவரின் கண்களுமே கலங்கித் தான் போயிருந்தன. பெரியவர் தேவியை அணைத்துக் கொண்டார்.

''நோ தேவிம்மா! நீ சிரிச்சுகிட்டே கிளம்பினா தான் எனக்கு நிம்மதியா இருக்கும். கண்ணைத் துடை'' என்றார்.

அவள் வாயில் சாக்லெட்டைத் திணித்த சிபி, ''ஏய்! அழுமூஞ்சி! நான் வந்து கௌதம்கிட்ட உன்னை நல்லாப் பார்த்துக்கச் சொல்லி விட்டுட்டு வரவா?'' வேண்டுமென்றே சீண்டினான்.

''போடா! நீ ஒண்ணும் என்னைப் பத்தி யார்கிட்டயும் சொல்ல வேண்டாம். நான் என்னை அங்க ப்ரூவ் பண்ணிய பிறகு தான், நீ எங்க ஆபீஸ் உள்ளயே எண்டர் ஆகணும்'' விரல் நீட்டி எச்சரித்தாள்.



அவள் இயல்பு நிலைக்குத் திரும்பியதில் நிம்மதியானவன், ''சரி தாத்தா! நான் இவளை ஆபிஸ் வாசலில் இறக்கி விட்டுட்டு கிளம்பறேன். இன்னிக்கு எங்க ஆபீஸ்ல கூட புதுசா நாலு பேர் ஜாயின் பண்றாங்க. சீக்கிரம் போகணும்'' என்றவன், ''குட்டிம்மா! ஆல் த பெஸ்ட். உனக்கு அங்க ஏதாவது பிச்சனைன்னா உடனே எனக்குக் கால் பண்ணு. ஈவினிங் ஐந்து மணிக்கு வந்திடறேன். நீ வெளியே வந்திடு. நாளையிலயிருந்து நீ உன் ஸ்கூட்டியில போகலாம்.''

''ம், சரிண்ணா! நான் மேனேஜ் பண்ணிக்குவேன். டோண்ட் வொர்ரி லஞ்ச் டைம்ல கால் பண்றேன்.''

அலுவலகத்தின் உள்ளே நுழைந்ததும், சிந்து மலர்ந்த முகத்தோடு, ''ஹாய் தேவி! வெல்கம் டூ அவர் விஷ்வா பேமலி!'' வாழ்த்துச் சொல்லி வரவேற்றாள்.

''தேங்க்யூ சிந்து!''

''ஜி.எம் வந்தாச்சு போய் விஷ் பண்ணி ஜாய்னிங் ரிப்போட்ட் குடுத்துடு''

சாரா மேடம், ''வெல் தேவி! இன்னும் எம்.டி. வரலை. யூ கேரி ஆன் யுவர் வொர்க்'' என்றவர், ஒரு இளைஞனை வரவழைத்து, ''இவர் மிஸ்டர்.விக்ரம் சிங். பர்சனல் மேனேஜர். உன் வேலை என்ன என்பதை சொல்லுவார். நம்ம பாஸ்கிட்ட நல்ல பேர் வாங்கறதுல தான் உன் திறமையே இருக்கு. அது ரொம்பக் கஷ்டம்னு அவர்கிட்ட வேலை செய்யும் போது உனக்கே புரியும். திறமைசாலிகளைத்

தேடிக் கண்டுபிடிச்சு பாராட்டுவார். ஆனா, தவறு செய்யறவங்களுக்கு அவர் சிம்ம சொப்பனம் தான். அவரோட கோபத்தை நம்மால தாங்கவே முடியாது.''

தேவிக்கு வியப்பாக இருந்தது. அவனை கோபக்காரன் என்று சொல்லிக் கொண்டே அதிகமாக தூக்கி வைத்து கொண்டாடுவது போலத் தெரிந்தது.

''பாஸ் பெரிய கொம்பனா? ரொம்ப தான் பில்டப் பண்றாங்க. என்னைப் பத்தி இவங்களுக்குத் தெரியலை. என்னை வேலை வாங்கும்போது உங்க எம்.டிக்கே புரியும் என்ற நினைப்பில் சிரிப்பை அடக்க முயன்றாள்.

விக்ரம் ''மேடம்! உங்க சீட் எம்.டி.ரூமுக்கு உள்ளேயே தனி கேபின்ல இருக்கு. அவர் இல்லாதபோது இது தான் உங்க இடம்'' என்று வெளியே ஒரு டேபிளை சுட்டிக் காட்டினான்.

''தேங்க்யூ. ஆனா, என்னை மேடம்னு கூப்பிடாதீங்க. பேர் சொல்லியே கூப்பிடலாம். நான் வெளியவே உட்கார்ந்துக்கறேன். பாஸ் இருந்தாலும்!

''நோ... நோ. எம்.டியோட பர்ஸனல் செகரட்டரி நீங்க. அவர் அடிக்கடி டீடெய்ல்ஸ் ஏதாவது கேட்டுகிட்டே இருப்பார். பர்டிகுலர்ஸ் ஏதாவது உடனே ரெடி பண்ணச் சொல்லுவார். கேட்டவுடனே எதுவும் இமீடியட்டா ரெடியாகணும். அவரோட டெய்லி ஷெட்யூல்படி தேவையான எல்லா பைல்ஸையும், நீங்க அப்டேட் பண்ணி வைக்கணும். பாஸ் ரொம்பப் பிஸி. ரிப்போர்ட்ஸ், பிளான்ஸ் எல்லாம் பர்ஃபெக்டா இல்லைன்னா, தூக்கி விசிறியடிச்சுடுவார். பீ கேர் ஃபுல்'' என்று தன்னால் முடிந்தவரை தேவியைக் கலவரப்படுத்திப் பார்த்தான்.



''ஆனா, விக்ரம் சார். நான் என்ஜினியரிங் பண்ணியிருக்கேன். ஆர்க்கிடெக்சர் இஸ் மை பீல்ட். ஒரு பி.ஏ.வா'' எனும் போதே, ''இதுக்கு முன்னால இருந்தவங்களும் இதே போல ஆர்க்கிடெக்சர்ல மாஸ்டர்ஸ் முடிச்சவங்க தான். உங்க வேலை இதோட முடியாது. டிசைனிங், ப்ளு ப்ரிண்ட்ஸ் என்று உங்க ஃபீல்ட் சம்பந்தமான எல்லா வேலையும் செய்ய வேண்டியிருக்கும். பாஸ் இல்லாத போது, சாரா மேடம் கூட சைட் வொர்க் பார்க்கணும்'' என்று பட்டியலிட்டபோது தேவிக்குக் கண்ணைக் கட்டியது.

'நம்மால் முடியுமா?' என்ற சந்தேகம் எழுந்தாலும், அதை அடக்கி விட்டு விக்ரமைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

அவளருகிலிருந்த சீட்டில் தேவியை ஆர்வமுடன் பார்த்துக் கொண்டிருந்தவளைப் பார்த்து, ''இவங்க ரூபா மேடம். போன வருஷம் ஜாயின் பண்ணினாங்க. நல்ல வொர்க்கா. இவங்ககிட்ட உங்க சந்தேகங்களை தெளிவு படுத்திக்கலாம்.''

''ஹாய்! நான் தேவி. இன்னிக்குத் தான் ஜாயின் பண்ணியிருக்கேன்.''

''வெல்கம். வாங்க... நான் உங்களோட ஜாப் பத்திச் சொல்றேன்.''

தேவி வேலைகளை விரைவாகக் கற்றுக் கொண்டு, அதை எளிதாகச் செய்தும் முடித்தாள். அங்கு வேலை செய்தவர்களும் நட்போடு பழக, அதில் ஒன்றிப் போனாள். அவள் வரவிற்குப் பிறகு, லஞ்ச் டைமில் ஆபிசே கலகத்தது. அவளின் குழந்தைத்தனமும், எளிமையும் எல்லோரிடமும் ஒரே மாதிரிப் பழகும் சுபாவமும், அனைவரையும் ஈர்த்தது.

# 3

அன்று காலை அவள் உள்ளே நுழைந்ததும் ஆபிசே பரப்பரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

சாரா, ''தேவி! வந்துட்டியா? புது ப்ராஜெக்ட்ல சாயில் டெஸ்ட் சம்பந்தமா நாம அனுப்பிய பேப்பர்ஸ் எல்லாம் ஐந்து காப்பி எடுத்து நீட்டா பைல் பண்ணிக் கொண்டுவா. அதோட நான் சைன் பண்ண வேண்டிய பேப்பர்ஸ் கூட ரெடி பண்ணிடு.''

''யெஸ் மேம்!''

சிஸ்டத்தை ஆன் செய்தவள், சில முக்கியமான பேப்பர்ஸ் எம்.டியின் அறையிலிருக்க, அதைத் தேடி உள்ளே சென்றாள். தேவையான விபரங்களைத் தன் ஹேண்ட் நோட்டில் குறித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது வேகமாக கதவு திறக்கப்பட அதிகாரமான ஒரு குரல், ''ஹே! யார் நீ? இங்க என்ன பண்ற? உன் நோட்ல எதை எழுதற? டோண்ட் யூ ஹேவ் சென்ஸ் பர்மிஷன் கேட்காம...'' படபடவென பொரிந்து தள்ளியதும் விதிர்த்துப் போய் திரும்பியவளைப் பார்த்ததும், கண்கள் மின்ன, அதை நொடியில் மறைத்துக் கொண்டு, ''ஹூ ஆர் யூ? என்றான்.

அவனது பேச்சில் அதிர்ந்து போய், ''அ.அது வந்து... நா.....நான் தேவி இங்க...'' என்று தடுமாறினாள்.

''ஓ! தேவின்னு சொன்னதும், உன்னைப் பத்தித் தெரிய, நீ சீஃப் மினிஸ்டரோ...? எனக்குத் தெரியலை'' அவனின் கிண்டலான குரலில் கோபம் தலைக்கேறியது.



கோட் சூட்டில் கம்பீரமாக வந்து எம்.டி இருக்கையில் அமர்ந்ததுமே அவன் தான் கௌதம் என்பதை சந்தேகமில்லாமல் புரிந்து கொண்டாள்.

ஆனாலும், அவனின் ஏளனம் கலந்த குரல், அவளை உசுப்பி விட, ''ஹலோ... சி.எம்.முக்கு இங்க என்ன சார் வேலை? மொதல்ல நீங்க யார்னு சொல்லுங்க. யார் நீன்னு என்னை மட்டும் கேட்டீங்களே? உங்களைப் பார்த்ததுமே தெரிஞ்சுக்க நீங்க ப்ரைம் மினிஸ்டரா? பாஸ் அவுட் ஆஃப் ஸ்டேஷன். நீங்க முதல்ல எங்க ஜி.எம்மை மீட் பண்ணுங்க. எங்க பாஸோட சீட்லயே உட்கார்ந்து என்னையே அதிகாரம் பண்றீங்களா? போங்க சார். பாஸ் இல்லாம இந்த ரூமுக்குள்ள வரக்கூடாது. இது கூடத் தெரியலை, என்னை அதிகாரம் பண்றீங்க''. கெத்தாக அவனிடம் எரிந்து விழுந்து விட்டு வெளியேறினாலும், உள்ளூர உதறலாகத் தான் இருந்தது.

ஆனாலும், அவனையே பேச்சிழக்க வைத்ததும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

இவளின் பேச்சுக்கு, எப்படி ரியாக்ட் செய்வது என்பது கூட மறந்தவனாக, செயலற்றுப் போய் இருந்தவனை ஜி.எம்மின் குரல் அசைத்தது.

''குட்மார்னிங் பாஸ்! இப்ப ஆஃபீஸ் வர்றதா நீங்க இன்ஃபார்ம் பண்ணவே இல்லையே.''

தேவியின் பேச்சைக் கேட்டு ஏற்கனவே கொதி நிலையிலிருந்த கௌதம், ''ஓஹோ! அப்படின்னா நான் போயிட்டு உங்களுக்கு இன்ஃபார்ம் பண்ணிட்டு வரவா? ம்! இது என் ஆபிஸ் தானே? அதில் ஏதாவது உங்களுக்கு டவுட் இருக்கா... மிஸஸ் சாரா?'' கடித்துத் துப்பினான்.

சாரா பதறியவராக, ''சாரி பாஸ். நான் எதையும் மீன் பண்ணல. மொதல்லயே தெரிஞ்சிருந்தா ரூமில் ஏசி போட்டு ரெடி பண்ணி வச்சிருப்பேன்.''

அப்போதும் எரிச்சல் குறையாதவனாக ''தென் வாட் எல்ஸ்?''

''பாஸ்! பிரியங்கா தேவி போன வாரம் வேலையில் சேர்ந்துட்டாங்க. ரொம்ப ஸ்மார்ட் அண்டு டேலண்டட். ஸ்பீடா வேலை கத்துக்கறாங்க. அப்புறம் சாயில் டெஸ்டுக்கு சாம்பிள் எடுத்து அனுப்பியாச்சு. ரிசல்ட் டூ டேஸ்ல வந்திடும். ஒன் மினிட்'' இண்டர்காமில் தேவியை அழைத்தார்.

''பாஸ் இவங்க தேவி. உங்க பர்ஸனல் செகரட்டரி'' பேசும் போது தைரியமாகப் பேசிவிட்டாலும், உள்ளே நுழைந்ததும் தேவிக்குக் கொஞ்சம் பதட்டமாகத் தான் இருந்தது.

பவ்யமாக இரு கைகளையும் கூப்பினாள். அவனோ அலட்சியத்துடன், ''ம். வேலையில் பர்பெக்டா இருக்கணும். வேற எதிலயும் உன் அதிகப் பிரசங்கித்தனத்தைக் காட்ட வேண்டாம். பீ கேர் ஃபுல்! ஐ டோண்ட் அலவ் நான்சென்ஸ் பிஹேவியர்ஸ் இன் மை ஆபீஸ்!'' என்றவன், இறுகிய முகத்தோடு மடிக்கணினியை உயிர்ப்பித்தான்.

சாரா வெளியே வந்து தேவியைப் பரிதாபப் பார்வை பார்த்து, ''தேவி! டோண்ட் பீ அப்செட். பாஸ் கொஞ்சம் ஸ்ட்ரிக்ட் தான்! ஆனா, நல்லவர். வேலைன்னு வந்துட்டா பிசாசு மாதிரி ஓய்வே இல்லாமல் செய்து முடிச்சிடுவார். அவரோட ஸ்பீடுக்கு நம்மை மாத்திகிட்டா எவ்ரிதிங் வில் பி ஆல்ரைட்'' தட்டிக் கொடுத்து விட்டுச் சென்றார்.



''ஹப்பா! என்ற நெடிய பெருமூச்சுடன், 'கொஞ்சம் ஸ்ட்ரிக்ட்டா... இவனா? வேலையில் மட்டும் இல்லை. நிஜமாவே பிசாசுத ன். தேவி பிச்சுக்கோ. இல்லைனா உன்னையே ஆட்டி வைத்திடுவான் போல இருக்கு' தன்னையே தேற்றிக்கொண்டு வேலையில் அமிழ்ந்து போனாள்.

இரவு, சமையலறை மேடையில் அமர்ந்து துருவி வைத்திருந்த தேங்காயை வாயில் போட்டுக் கொண்டே, ''ப்ரோ! சீக்கிரமா பணியாரத்தைச் சுட்டுக் கொண்டு வா! பசி கொல்லுது. அது சரி. என்னோட பாஸை எப்படிடா உன்னோட க்ளோஸ் ப்ரண்டுன்னு சொல்ற? ப்பா...! கடுகை மூஞ்சில் போட்டா பொரிஞ்சிடும் தாத்து. நிஜமா... சரியான குடாக்கு! பக்கத்தில வந்தாலே... அனலடிக்குது.

ஏன் சிபி! என் பாஸ் நிஜமாகவே உன் ப்ரண்ட் தானா? உன் கேரக்டருக்கு ஒத்துப் போகவே முடியாதே. ஓ.எம்.ஜி! எப்பப் பார்த்தாலும் ஜெம் (ஜிஞ்சா ஈட்டிங் மங்கி) மாதிரி மூஞ்சியை வச்சுருக்கான். துளி சிரிப்பு கிடையாது. சமாளிக்கிறது கொஞ்சம் கஷ்டம் தான் போல. அவன் உள்ளே நுழைஞ்சதுமே ஆபிசே சைலண்டா ஆயிடுச்சு. எல்லோரும் ரோபோ மாதிரி சிஸ்டமேடிக்கா வேலை செய்ய ஆரம்பிச்சுட்டாங்க. பின் டிராப் சைலண்ட் தான்.

தாத்து! எங்கேயிருந்து புடிச்சானோ சிபி இவனை. எங்க ஜி.எம் மேடமே இவன் வந்தவுடன் கதி கலங்கிப் போய்ட்டாங்க. லஞ்ச் டைம்ல தான் வாயே திறந்தோம். எப்படியடா.... இவனெல்லாம்.... ம் ஹாரிபிள்!''

''தாத்தா! இவ என்னமா வாயடிக்கறா பாருங்க. இந்த மாதிரிப் பேசினா அவனுக்குக் கோபம் வராம என்ன

செய்யும்? குட்டிம்மா! கௌதம் ரியலாவே ரொம்ப நல்லவன். ஸ்கூல், காலேஜ் எல்லாம் ஜாலியா சேர்ந்து தான் சுத்துவோம். அவங்கம்மா ரொம்ப ஸ்ட்ரிக்ட். அதை ரொம்பவே எதிர்ப்பான். அவங்க டாமினேட் பண்றதைப் பார்த்து, லேடீஸ்க்கு ரொம்ப இடம் கொடுக்கக் கூடாது. விட்டா நம்ம தலை மேல ஏறி உட்கார்ந்திடுவாங்க. அப்புறம் நமக்கு மதிப்பே இருக்காது.

அதனால, அவங்களை எப்பவுமே நம்ம கண்ட்ரோல்ல வைக்கணும். அப்படீன்னு சொல்வான். அதனால, பெண்கள்னா ஒதுங்கிப் போயிடுவான். அவனைக் காலேஜ்-ல ரிஷின்னு கேலி பண்ணிக் கூப்பிடுவோம். அவனைப் பத்தி இனி ஒரு வார்த்தைத் தப்பா பேசாதே. அவன் கூட வேலை செஞ்சு பாரு. உன் ஒபீனியனை நீயே மாத்திக்குவே'' உணர்ந்து நீளமாக பேசிய சிபியைப் பார்த்து உதட்டைச் சுழித்து விட்டு, பொட்டுக் கடலையை அள்ளி வாயில் போட்டாள்.

தாத்தா, ''தேங்கா, கடலை இரண்டும் உள்ள போயாச்சு. இனி இரண்டு பச்சை மிளகாயை உப்போட சோத்துக் கடிச்சு முழங்கு. முழுசா சட்னியாயிடும்.''

''போங்க தாத்து! என் பசி எனக்கு. பணியாரம், சட்னி இரண்டும் செய்ய எத்தனை நேரம்? சிபி! எனக்கு ரெண்டு எடுத்துத் தட்டில் வைத்து குடு. ரொம்பப் பசிக்குது'' சிணுங்கினாள்.

மறு நாளிலிருந்து, 'ஷாப்பிங் மால்' ஆரம்பிக்க வேண்டியிருந்ததால், கௌதம் ஒரு மீட்டிங் அரேஞ்ச் செய்திருந்தான். புதிய ப்ராஜெக்டை செய்து முடிக்க, ஒன்பது பேர் கொண்ட புதிய டீம் ஒன்றை அமைத்தான்.



ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையை பிரித்துக் கொடுத்து, அதை மேற்பார்வையிட ஆணை பிறப்பித்தான்.

டெய்லி ரிப்போர்ட்டை மேனேஜரான விக்ரம் சிங்கிடம் அளிக்கவும், அவன் சரிபார்த்த பைல்கள் ஜி.எம்மின் பார்வைக்குப் பின், தினமும் தன்னிடம் வந்து சேர வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தினான்.

மீட்டிங்கில் கலந்து கொண்ட அனைவரும் அவனது பேச்சின் ஆளுமையில் மயங்கிப் போனார்கள். இந்தத் துறையில் அவனுக்கிருந்த ஆர்வமும், ஈடுபாடும், அதைப் பற்றிய ஆழமான அறிவும் கௌதமைப் பற்றிய எண்ணத்தை மாற்றிக் கொள்ள, தேவிக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்தது.

அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற பிறகு, உரிமையாளரின் விருப்பப்படி ஒரு முகூர்த்த நாளில், பூமி பூஜைக்கு கௌதம் ஏற்பாடு செய்தான். தன்னுடைய டீம் வொர்க்கர்ஸ் மட்டும் பூஜையில் கலந்து கொள்ள வாகன வசதியும் பண்ணிருந்தான். எளிமையான ஃபங்ஷன் என்பதால் மிக முக்கியமான நபாகள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர்.

காலை ஒன்பது மணிக்குப் பூஜை என்பதால், டீம் மெம்பர்ஸ் வந்து சேர்ந்திருந்தனர்.

சிந்து, ''தேவி! யூ ஆர் லுக்கிங் கார்ஜியஸ், இன் திஸ் டிரஸ். உன்னோட பெரிய கண்களும், அள்ளுது போ!'' என்றாள்.

''ஷ்! சும்மா இருங்க சிந்து. உங்களுக்கு எப்பவுமே இதே வேலை தான். நீங்க என்னை விட ரொம்ப அழகு. இது உங்களுக்கே தெரியலை.''

''தோடா! இதானே வேணாங்கறது.''

''அது இருக்கட்டும். சைட்டில் பாஸை காணோம். ஏதாவது போன் வந்ததா? சாரா மேம் எப்ப வருவாங்க. ஆமா இந்த விக்ரம் சார் ஏன் நம்ம கூட வேனில் வரலை?''

விக்ரமே அருகில் வந்து, ''சாரி தேவி! கிளம்பறப்ப என் பையன் பைக்ல ரவுண்ட் போகணும்னு ஒரே அழுகை. அதான் உங்களை முதல்ல போகச் சொல்லி ரூபாகிட்ட போன் செஞ்சேன். சாரா மேடம் வந்திடுவாங்க.''

பூஜை செய்ய தேவையான பொருட்களை எடுத்துக் கொடுத்து, பெண்கள் மூவரும் ஐயருக்கு உதவிக் கொண்டிருந்தார்கள். அப்போது சைட்டில் வழுக்கிக் கொண்டு வந்த வெர்னாவிலிருந்து ஃபுல் சூட்டில் ஆண்மை மிளர, ஸ்டைலாக அவர்களை நோக்கி வந்த கௌதமைக் கண்டு, தேவி சற்றே தடுமாறினாள்.

கௌதமின் கண்கள் சுற்றுப்புறத்தை பார்வையிட, தனது ஊழியர்களின் காலை வணக்கத்தைச் சின்ன தலையசைப்பில் எற்றுக் கொண்டான். இறுதியாக, அவனது லேசர் பார்வை, கருநீலத்தில் முத்துக்கள் பதித்த அனார்கலி சுடியில், எளிமையாகத் தன்னை அழகுபடுத்திக் கொண்டு நின்றிருந்த தேவியின் மேல் படிந்தது.

அவன் பார்வையில் தவித்துப் போன தேவியின் இமைகள் நிலம் தாழ்ந்தன. அவனின் முகம் எந்த உணர்வையும் வெளிக்காட்டா விட்டாலும், தேவிக்கு ஏனோ எரிச்சலாக இருந்தது.

சாராவிடம், ''ஓனர் வருவதை உறுதிபடுத்தியாச்சா?'' என்று கேட்டான்.

''யெஸ் பாஸ்! உங்க பேரண்ட்ஸ் வந்துட்டு இருக்காங்க?''



''ஆன் த வே'' என்றவன் ஷுக்களைக் கழற்றிவிட்டு, பூஜை நடக்கும் இடத்தில் சென்று நின்றான். ஒவ்வொன்றாக வரிசை கட்டிக்கொண்டு, நாலைந்து கார்கள் ஒரே சமயத்தில் வந்து நிற்க, அதிலிருந்து இறங்கியவர்களில் தேவியை காலேஜில் இண்டர்வியூ செய்த பெரியவரும் இருந்தார்.

அவருடன் கூட வந்த பெண்மணியின் பகட்டான உடையும், அமர்த்தலான நடையும், கம்பீரமும் யாருக்கும் அடிபணியாத கர்வமும் இருப்பதை, முதல் பார்வையிலேயே தேவியால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

சாரா மேடம், ''தேவி! இவங்க நான் நம்ம பாஸோட பேரண்ட்ஸ். விஷ்வா சார் ரொம்ப ப்ரண்ட்லி. ஆனா, பத்மினி மேடம் சாதாரணமா நம்ம மாதிரி இருக்கறவங்க கூடப் பேசவே மாட்டாங்க. பத்தடி தள்ளியே நிற்பாங்க. எப்பவும் போல எங்ககிட்ட பேசறது போல அவங்ககிட்ட பேச்சு வெச்சுக்காதே. அவங்களுக்கு பிடிக்காது. அவங்க ஸ்டேட்டஸுக்கு ஈக்வலா இருந்தா தான் பேசுவாங்க. ஜாக்கிரதை.''

'அதனால் எனக்கென்ன?' என்ற பாவனையில் உதட்டைச் சுளித்த தேவி, அதன் பிறகு சிந்துவிடம் பேச ஆரம்பித்தாள்.

அனைவரின் வணக்கத்தையும் கண்ணசைவில் ஏற்ற பத்மினி, அதன் பிறகு அவர்கள் இருக்கும் திசைக்கே வரவில்லை. விஸ்வநாதன் தானே அவர்கள் இருக்கும் இடம் தேடி வந்து நலம் விசாரித்தார்.

பின் தேவியிடம், ''என்னம்மா பிரியங்கா தேவி! ஆஃபீஸ் எப்படி இருக்கு? வேலை பிடிச்சிருக்கா?'' என்றதுமே தேவிக்கு அவரைப் பிடித்துப் போனது.

''யெஸ் அங்கிள். சேலஞ்சிங்கா இருக்கு. ஐ லைக் இட். ஆபிஸில் எல்லோருமே ஒரு பேமலி மாதிரி பழகறோம். எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்றவள் மனதுக்குள், 'உங்க மகனைத் தவிர' என்று நினைத்துக் கொண்டாள்.

அகமும், முகமும் மலர தன் தந்தையிடம் பேசியவளைத் தான், கௌதமும் கவனித்துக் கொண்டிருந்தான். அதன் பின் ஒரு சிறிய தோள் குலுக்கலோடு, ஓனரிடம் பேசத் துவங்கினான். பூஜை முடிந்தவுடனே பத்மினி கிளம்பி விட்டார்.

சாரா, ''மேம்! பாஸ் பிரேக் ஃபாஸ்ட் அரேஞ்ச் பண்ணியிருக்கார்.

கை உயர்த்தி மறுத்து விட்டு மகனிடம், ''கௌதம்! ஆஃபீஸ் கிளம்பறேன்.''

''சரிம்மா! அப்பா இருக்கட்டும். ஓனர்கிட்ட கொஞ்சம் டிஸ்கஸ் பண்ண வேண்டியிருக்கு. நானே அவரை டிராப் பண்ணிடறேன்.''

சைட்டிலேயே ஷாமியானா போட்டு பஃபே முறையில் சர்வ் பண்ணப்பட்டது. பத்மினியின் அலட்சியம், தேவியின் கோபத்தைக் கிளர, அங்கிருந்து கிளம்ப நினைத்தாள்.

சிந்து, ''வா தேவி! டிஃபன் சாப்பிட்டு விட்டு சேர்ந்தே போகலாம்.''

''வேண்டாம் சிந்து! நீங்க போங்க. அந்தம்மாவுக்கு எதுக்கு இத்தனை அலட்சியம்? அவங்க மகன் ஏற்பாடு செய்த ஃபங்ஷன்-ல கலந்துக்கவே இத்தனை ஆர்ப்பாட்டம். அவங்களே சாப்பிட மாட்டாங்களாம். நமக்கு மட்டும் என்ன? சாப்பிட வழியில்லாமலா வந்தோம். நான் ஆஃபீஸ் கிளம்பறேன். வழியில சாப்பிட்டுக்கறேன்.''



ரூபா அவள் கையைப் பற்றி, ''தப்பு தேவி! அவங்க போனா போகட்டும் விடு. நாம பாஸ் சொல்லி தானே வந்தோம். அவருக்கு மரியாதை குறையும்படி நடந்துக்க லாமா? பெரிய பாஸ் நம்மை மதிச்சு நம்மோட சாப்பிட காத்திருக்கார். நீ கிளம்பினா அவரை அவமானப்படுத்தினது போல இருக்கும். வா'' ஏறக்குறைய அவளை இழுத்துப் போனாள்.

கௌதம் தொலைவில் நின்றிருந்தாலும், தேவியின் கோப முகத்தையும் சிந்து, ரூபாவின் கெஞ்சலையும் பார்த்தே நடந்ததைப் புரிந்து கொண்டான். உடனே அவன் முகம் இறுகிப் போய்க் கடினமானது. அவர்கள் சொல்வதிலிருந்த நியாயத்தை புரிந்து கொண்டு தேவியோ, சகஜமானாள். விஷ்வநாதனும் அவர்களோடு சேர, அன்றைய காலைப் பொழுது இனிமையாகக் கழிந்தது.

ஆனால், கௌதம் அன்று மாலை வரை, தேவியை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. முக்கிய தேவைகளைத் தவிர வேறு எதற்காகவும், அவளை அழைக்கவும் இல்லை. இதே நிலை தொடர்ந்து ஒரு வாரம் வரை நீடித்தது. அவனது உதாசீனத்தில் மனம் காயப்பட்டாலும், தன் மேல் ஒரு தவறும் இல்லை என்பதால், தேவி அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

# 4

ஆரம்ப கட்டப் பணிகள் துவங்கியிருந்தால், அவர்கள் டீமிற்கு வேலை அதிகமாக இருந்தது. தேவியும் அதிகமாக உழைக்க வேண்டியிருந்தது. அவளது கனவு ப்ராஜெக்ட்

என்பதால், அதிக ஆர்வத்தோடு முழு மூச்சாக ஈடுபட்டாள். வரைபடம் தயாரிப்பதில் ஒவ்வொரு விஷயத்தையும் நுணுக்கமாக ஆராய்ந்து, தன் திறமையனைத்தும் வெளிப்படுத்தி வடிவமைத்தாள். மேடம் சாராவின் தலைமையில், ஒன்பது பேரின் கடுமையான உழைப்பில் வரைபடம் தயாரானது. அதைப் பற்றிய முழுமையான கலந்துரையாடல் கௌதமுடன் நடத்த அன்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காலையிலிருந்தே தேவிக்குக் கண் எரிச்சல். மதியத்துக்கு மேல் தலைவலி மண்டையைப் பிளக்க, காய்ச்சல் வரும் போலிருந்தது. அதிகப்படியான வேலை செய்து பழக்கமில்லா ததால், அதிக களைப்படைந்து, உடல் ஓய்வுக்காக ஏங்கியது. டிசைன் செய்த அனைத்தையும் கம்ப்யூட்டரில் ஏற்றி ப்ரசன்டேஷனுக்குத் தயார் செய்தாள். தன்னுடைய தனிப்பட்ட ஐடியாக்களைப் பென்டிரைவில் பதித்து, எடுத்து வைத்தாள்.

ஜி.எம்.மின் அறைக்குச் சென்றவள், ''மேம்! இது ப்ரசன்டேஷனுக்கான சி.டி. இது என்னோட ஐடியாஸ் எல்லாம் சேர்த்து வைத்திருக்கும் பைன் ட்ரைவ். வேற எந்த ஷாப்பிங் மாலிலும் இல்லாத சில வசதிகள்... இதைச் செய்து கொடுத்தால், கண்டிப்பா எல்லோருடைய பாராட்டையும் அள்ளும். முதல்ல நீங்க போட்டுப் பாருங்க... பிடிச்சிருந்தா பாஸ்கிட்ட சொல்லலாம்.''

''ஓ! தேங்க்யூ. ஈவினிங் நாலு மணிக்கு பாஸ் வந்திடுவார். ரொம்ப டயர்டா தெரியற. நீ ஓய்வெடுக்க நினைச்சா ரெஸ்ட் ரூமில் கொஞ்சம் தூங்கு. பின் ஃப்ரெஷ் ஆயிட்டு ஷாடப்பா நாலு மணிக்கு மீட்டிங் ஹால் வந்திடு. லஞ்ச் கொண்டு வந்தியா?''



''மேம்! எனக்குப் பிவரிஷா இருக்கு. ஹாஃப் எ டே லீவ் வேணும். நம்ம டீம் கூட மீட்டிங்கை நீங்களே அட்டெண்ட் பண்ணிடுங்க. பாஸுக்கு ஏதாவது டௌட்ஸ் இருந்தா, காலையில வந்து பேசிக்கறேன் ப்ளீஸ்.''

தேவியின் நலிந்த தோற்றமும், உலர்ந்து சிவந்திருந்த இதழ்களும், சிவந்து பளபளத்த முகமும், அவளுக்குக் காய்ச்சல் இருப்பதை உறுதிபடுத்தின. அவள் நெற்றியில் கைவைத்துப் பார்த்து விட்டு, ''தேவி! டேப்லட் போட்டுக்க. டேக் கம்ப்ளீட் ரெஸ்ட். பாஸ் இந்த மாதிரி எக்ஸ்க்யூஸ் எல்லாம் அலவ் பண்ண மாட்டார். நீ கொஞ்ச நாளா நைட் கூட தூங்கிய மாதிரி தெரியலை. டேக் கேர்.''

பதினைந்து நாட்களாக கடுமையாக ஓய்வின்றி வேலை செய்ததில் ஓய்ந்து போயிருந்தாள். வீட்டிற்குப் போனதும், அவள் தோற்றத்தில் தாத்தா பயந்தே போனார்.

''குட்டிம்மா. என்னாச்சு?'' உடம்பு சரியில்லையா? சிபியை வரச் சொல்றேன்'' பதறினார்.

''வேண்டாம் தாத்தா! வழியில டாக்டரை பார்த்து மெடிசின் வாங்கிட்டு தான் வரேன். ரெஸ்ட் எடுத்தா சரியாயிடும். டிரைவர் அண்ணாவுக்கு மோர் குடுங்க. ஜி.எம் என்னை அவங்க கார்லயே அனுப்பி வைத்தாங்க.''

தாத்தாவிடம் ரசம் சாதம் கரைத்துத் தரச் சொல்லிக் குடித்து விட்டு, மாத்திரையைப் போட்டாள். நைட்டிக்கு மாறி படுக்கையில் விழுந்ததுமே, கண்கள் உறக்கத்தை தழுவின.

மீட்டிங் ஹாலில் நுழைந்த கௌதமின் கண்கள், தேவி இல்லாததை உடனே கண்டு கொண்டன.

சாரா, ''குட் ஈவினிங் பாஸ்!. நீங்க சொன்ன எல்லா வொர்க்கும் முடிந்து ரெடியா இருக்கு. பார்த்திடலாம்''

எதிரேயிருந்த ஸ்கிரினில் அட்ஜஸ்ட் செய்த போது, கௌதமின் கண்களில் தொக்கி நின்ற கேள்வியைப் புரிந்து கொண்டு, ''தேவிக்கு, ஃபீவர் பாஸ்! அவங்களால உட்காரவே முடியலை. மதியத்துக்கு மேல தான் கிளம்பினாங்க. ஐ வில் எக்ஸ்ப்ளைன்'' என்றதும் முகம் இறுக, உணர்ச்சி துடைத்த குரலில் ''ப்ரொசீட்'' என்றான்.

தேவி துல்லியமாக தயாரித்திருந்த டிசைனின் அழகும், நவீனமும் கூடுதல் வசதிகளும், புதுமையான ஐடியாக்களும் கௌதமின் கவனத்தை ஈர்க்கவே, அவன் முகம் இளகியது. சாராவின் விளக்கத்தில் தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை அவரிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டான்.

ஆனாலும், சில விஷயங்களை தெளிவுபடுத்த தேவியால் மட்டுமே முடியும் என்ற நிலையில், ''சாரி பாஸ்! நாளைக்கு தேவி வந்ததும் உங்களைப் பார்க்கச் சொல்றேன். அவங்க எல்லா டவுட்டையும் கிளியர் பண்ணிடுவாங்க. இதெல்லாம் அவங்களோட சொந்தக் கற்பனையில் உருவானது. வீட்ல பிரிப்பேர் பண்ணிக் கொண்டு வந்தாங்க. அதனால, இது பத்தி எனக்குத் தெரியலை.

''ரைட். எனி ஹௌ... குட் ஜாப்'' மெல்ல தலையசைத்து விட்டு, எழுந்து சென்றான்.

மூன்றாம் நாள் அலுவலகத்தில் நுழைந்ததுமே, ''வா தேவி! நீ இல்லாம ஆபிசே சுத்தப் போர். உடம்பு எப்படி இருக்கு?'' என்ற சிந்துவிடம், ''குட்மார்னிங் சிந்து! நேத்து கொஞ்சம் பரவாயில்லை. தாத்தாவும், அண்ணாவும் என்னை வெளியே போகவே விடலை. இன்னிக்குக் கார்டனில் போய் ஒரு சுற்று சுற்றியதும் என்னோட டயர்ட்னஸ் எல்லாம் போயே போச்சு. போயிந்தே... இட்ஸ் கான்'' என்று சிரித்தாள்.



''உனக்கென்னம்மா... எங்க அப்பார்ட்மெண்ட்ல சாமான் போக காலை வைக்கவே இடமில்லை. இதில கார்டனுக்கு எங்கே போறது?''

''எங்க வீட்டுக்கு வாங்க சிந்து. எங்க வீடும் சின்னது தான். ஆனா, தோட்டத்தோட ரொம்ப அழகா இருக்கும். நானே ஃபுல்லா அதை மெயின்டெய்ன் பண்றேன். தினமும் காலையில் எனக்குக் கார்டன் போயாகணும். இல்லைன்னா அன்னிக்கு முழுக்க வேஸ்டா போன மாதிரி ஃபீலிங் வந்திடும். குளு குளுன்னு ஏசியை விட, ஜில்லுன்னு நேச்சுரலா இருக்க செடியெல்லாம் பார்த்ததுமே, மனசு எத்தனை கஷ்டமா இருந்தாலும் ரிலாக்ஸாயிடும். ஒவ்வொரு செடியும் எனக்குப் ஃப்ரண்ட் மாதிரி. எனக்கு ஏதாவது கஷ்டம்னா அதையெல்லாம் அதுங்ககிட்ட தான் சொல்வேன். என்னோட சின்ன முகச் சுளிப்பைக் கூட, என் வீட்ல தாங்க மாட்டாங்க. அதனால, என்னோட பெரியப் பெரிய இழப்புகளையும், துயரங்களையும் எடுத்துகிட்டு ஆறுதல் தர்றது என் கார்டன் தான்'' என்னும் போதே, பெற்றோரின் இழப்பு நினைவுக்கு வர கண்கள் கலங்கியது.

விபரம் புரியாத சிந்து திகைத்து, ''தேவி!'' என்றதும்; உடனே சுதாரித்துக் கொண்டு, ''ஓ. எம்.ஜி! (ஓ மை காட்!) பாஸ் வந்திடுவார். நான் இன்னும் என் கேபினுக்கே போகலை. ஏ.சி. வேற ஆன் பண்ணணும்.''

''ரிலாக்ஸ் மூணு நாளா நீ இல்லாததால, மணி போய் செய்திட்டார். பாஸுக்கு உன் ஐடியாவில் சில டவுட்ஸ் இருக்கறதா, சாரா மேடம்கிட்ட சொல்லியிருக்கிறார். அவர் வர்றதுக்குள்ளே நீ போய் அவங்களைப் பார்த்திடு.''

அவர்கள் பேசியதை நின்று கேட்டு விட்டு, தன்

அறைக்குள் நுழைந்த கௌதம், ''நல்லா டிராமா போடறா. இந்த வயசில இவளுக்கென்ன கஷ்டம்? மூணு நாள் லீவ் எடுத்துட்டு ஊரைச் சுத்தினதைச் சமாளிக்க ஏதோ ஒரு சாக்கு போக்கு. ம்! வரட்டும்'' எரிச்சலோடு சிஸ்டத்தை ஆன் செய்தான்.

ஜி.எம்மிடம் பேசிவிட்டு, அனுமதி பெற்று தேவி உள்ளே வந்த போது, கௌதம் கம்ப்யூட்டரில் மூழ்கியிருந்தான்.

தயக்கத்துடன், ''குட்மார்னிங் பாஸ்!'' என்றவளுக்கு முறைப்பையே பதிலாகத் தந்தான்.

''ஹலோ, மிஸ் தேவி! உங்க டிசைனில் சில டவுட்ஸ் கிளியர் பண்ணணும். உங்களால அதுக்கு நேரம் ஒதுக்க முடியுமா?'' என்ற நக்கலான குரலில் தடுமாறி, ''பாஸ்! எனக்கு நிஜமாகவே அன்னிக்கு ஃபீவர். அதான்...'' என்றவனை கையுயர்த்தி தடுத்தான்.

''உட்காருங்க, செகண்ட் ஃப்ளோரில் சில்ரன்ஸ் ரூம் ஸ்கெட்ச் எடுங்க. அதில்...'' என்று அழுத்தமான குரலில், அவள் முகம் பாராது பேச ஆரம்பித்ததுமே, அவளுக்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது. இமைகளைத் தட்டி அதைச் சரி செய்து கொண்டு, அவனின் கேள்விகளுக்குப் பதிலளிக்க ஆரம்பித்தாள். அதன்பின் டிசைனை ஓகே செய்து, சாராவிடம் எஸ்டிமேட் பற்றிப் பேசி முடித்தான்.

''எஸ்டிமேஷன், டிசைன் இரண்டுமே அப்ரூவலுக்கு அனுப்பிடுங்க. நான் சைட்டுக்குப் போறேன்'' என்று வெளியேறிய கௌதம் தேவியை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

அவனுடைய அலட்சியமும், உதாசீனமும், தேவியை



வருத்தப்பட வைத்தது. ஆனாலும், 'ஆபிஸ் விஷயம் தவிர பேச வேறு என்ன இருக்கு? இப்படியே இருக்கட்டும். என் மேல் எந்தத் தவறும் இல்லாத போது நான் ஏன் ஃபீல் பண்ணணும்?' என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டு, வேலையில் மூழ்கிப் போனாள்.

அன்றிலிருந்தே கண்ணுக்குத் தெரியாத ஒரு மாயச் சுவர் இருவரிடையேயும் பலமாக எழும்பி, இயல்பான பேச்சைத் தடை செய்தது. அவனின் பாராமுகம் மனத்தை வருத்தினாலும் அதையும் மௌனமாகவே ஏற்றுக் கொண்டு, வேலையில் எந்தத் தவறும் நடந்து விடாமல் மேலும் கவனமாக நடந்து கொண்டாள்.

தான் கோபத்தைக் காட்டினால், அவள் பதிலுக்கு வாயாடுவாள். அதை வைத்தே ஒரு வழியாக்கலாம் என்று எதிர்பார்த்தவன் ஏமாந்து போனான். அது மேலும் எரிச்சலைக் கிளப்ப, அவளைக் கண்டாலே எரிந்து விழுந்தான். தேடித் தேடி சின்னக் குறைகளைக் கூட் பூதாகரமாக்கி, அவளைக் காய்ச்சி எடுத்தான். சைட் இன்ஸ்பெக்ஷனுக்கு போகும் போதெல்லாம் குறிப்பெடுக்க வேண்டும் என்று, அவளையும் கூடவே அழைத்துச் சென்று அலைய வைத்தான்.

ஆனால், அவனுடன் கூடவே திரிந்ததில் தேவியின் மனதில் மிகப்பெரிய மாற்றம். அவனைப் பற்றிய தன் கணிப்பு பொடிப் பொடியாக உதிர்ந்து, அவன் மேல் ஒரு நல்ல அபிப்ராயத்தை ஏற்படுத்தியது. தொழிலில் அவனிடமிருந்த அபரிதமான திறமையைக் கண்டு, வியந்து போனாள். எதிராளியை ஒரே பார்வையில் வீழ்த்தி விடும் தீட்சண்யமான பார்வை, அங்கு நடக்கும் ஒரு சின்னத் தவறு கூட அவன் பார்வைக்குத் தப்பாது.

அதே சமயம், அவன் உண்மையாக உழைப்பவர்களைக் கண்டறிந்து ஊக்கப்படுத்திய விதத்தில், ஊழியர்கள் அவன் மீது அளவில்லாத பிரியமும், மரியாதையும் கொண்டிருந் தார்கள். அவனுக்காக உயிரையே கொடுக்குமளவு விசுவாசமாக இருந்தனர். இல்லாவிட்டால் இந்தச் சின்ன வயதில், இத்தனை பிரம்மாண்டமான நிறுவனத்தை ஒற்றை ஆளாக, 'நம்பர் ஒன்' என்ற நிலைக்குக் கொண்டு வருவது என்பது சாத்தியமில்லாத ஒன்று.

கௌதம் தன் ஊழியர்கள் மீது கொண்டிருக்கும் அக்கறை, அவன் செயல்களில் வெளிப்படுமேயன்றி, ஒரு போதும் தன் வார்த்தைகளால் அவர்களை நெருங்கியதே இல்லை. சின்னத் தலையசைப்பு, ஒரு புன் முறுவல் இதோடு சரி. அதையே தங்களுக்குச் சூட்டும் கிரீடமாக எண்ணி ஊழியர்கள் அகமகிழ்ந்து போவார்கள்.

ஒவ்வொரு ஊழியரின் பெயரும் வேலையையும் பற்றித் தனது கம்ப்யூட்டர் மூளையில் ஏற்றி வைத்திருந்தான். அவனது மறுபக்கத்தை அறிந்து கொண்டவளுக்கு பிரமிப்பு கூடியது. மெல்ல மெல்லத் தேவியின் மனம், அவன் வசமானது. அவனறியாமலேயே தன் இதயம் முழுக்க கௌதமை நிரப்பிக் கொண்டாள்.

அவளின் மௌனம், கௌதமின் ஆத்திரத்தைக் கிளப்பியது. டிராயிங்கில் சில மாறுதல்களைச் செய்து ஃபைலை கௌதமிடம் நீட்டியவள், அவன் பதிலுக்காகக் காத்திருந்தாள். கவனமாக அதை வாங்கி ஆராய்ந்தவன், முகம் இறுக ஃபைலை விசிறியடித்தான். அவன் செயலில் விக்கித்துப் போய் செய்வதறியாது திகைத்து நின்றாள்.

''வேலையில் கவனம் தேவை மிஸ் தேவி! ஒரு டிராயிங்



ஃபைலை ஒழுங்கா சரிபார்த்து கொடுக்க முடியலை...? ம்! உடனே ரெஸ்ட் எடுக்கப் போயிடுவீங்க. பிஃப்த் ஃப்ளோரோட டிசைனே இதில் இல்ல. அது கூட மறக்கற அளவு என்ன பிரச்சனை? அப்படி இருந்தா வீட்ல இருக்க வேண்டியது தானே. ஏன் இங்க வந்து டார்ச்சர் பண்ணி உயிரை எடுக்கறீங்க? போங்க ரெடி பண்ணிக் கொண்டு வாங்க'' வார்த்தைகளாலேயே அவளைக் கிழித்தெறிந்தான்.

இந்தப் பதினைந்து நாட்களாக, அவள் மௌனம் காத்து நின்றது எரிச்சலைக் கிளப்ப, சமயம் பார்த்து பழி வாங்கி விட்டான். கௌதமின் கோபப் பார்வைகளும், எரிக்கும் விழிகளும், சுட்டுப் பொசுக்கும் வார்த்தைகளும் கூட தேவி அவன் மேல் வைத்த காதலில் கருகிப் போனது.

கண்களை நிறைத்த கண்ணீர்ப் பார்வையை மறைக்க எழும்ப மறுத்த குரலைச் சரி செய்து, ''அஃது தனி ஃபைல்ல இருக்கு பாஸ்! ஐந்தாம் தளம் முழுக்க ஃபுட் கோர்ட் இருக்கு. அதனால, அது லேண்ட் ஸ்கேப்பா இருந்தா அட்ராக்டிவா இருக்குமேன்னு தனியா ஸ்கெட்ச் போட்டு கிரீன் கலர் ஃபைல்ல போட்டு வைத்தேன். பவுண்டன், ஃப்ளவர்ஸ், கார்டன் இருக்கற மாதிரி டிசைன் செய்து, அதன் பிரிண்ட் அவுட் கூட எடுத்து இரண்டு நாள் முன்னால உங்ககிட்ட சொல்லித்தான் உங்க கைல கொடுத்தேன். அதை வாங்கி நீங்க டேபிள் மேல வைத்தீங்க.'' பொறுமையாக அவனிடம் விளக்கம் சொன்னாள்.

டேபிள் மேல் தன் முன்னாலிருந்த ஃபைலை எடுத்து அவன் பார்வையில் படும்படி வைத்து விட்டு, சிதறிக் கிடந்த பேப்பர்களை எடுத்து டேபிள் மேல் வைத்து, பேப்பர் வெயிட்டை வைத்து விட்டு வெளியேறினாள்.

அவள் அன்று சொல்லி தன்னிடம் கொடுத்தது நினைவுக்கு வர, 'ச்சே!' என்று தன் மீதே கோபம் எழ, சுழல் நாற்காலியை வேகமாக பின்னால் தள்ளி எழுந்தான். அதே வேகத்தோடு காரில் ஏறி, இலக்கின்றி காரைச் சீறிப் பாய விட்டுத் தன் கோபத்தைத் தணிக்க முயன்றான்.

அவன் கிளம்பிச் சென்றதும், பெரும் புயலடித்து ஓய்ந்தது போன்ற அமைதி. கண்களில் நீர் வழிய டேபிளில் தலை சாய்த்தாள்.

ஆறுமணிக்கு கௌதம் மீண்டும் ஆபீஸ் வந்த போது, விக்ரம் சிங் மட்டுமே இருந்தான். வேகமாக ஓடி ஏ.சியை ஆன் செய்து, ''சாரி பாஸ்! ஆறு மணி ஆனதால் நீங்க வரமாட்டீங்கன்னு நெனைச்சேன். சொல்லுங்க பாஸ்!''

''நோ. நோ. நீ கிளம்பு விக்ரம். எனக்குச் சின்ன வேலை தான். நான் பார்த்துக்கறேன். வாட்ச்மேன்கிட்டச் சொல்லி, ஒரு காஃபி மட்டும் கொண்டு வரச் சொல்லிட்டு நீ வீட்டுக்கு கிளம்பு'' சேரில் சாய்ந்து கண்களை மூடினான்.

காபி வந்ததும் அதைப் பருகியபடி, கிரின் ஃபைலில் பார்வையைப் பதித்தவனது விழிகள் விரிந்தன. டிசைனைப் பார்த்து வியந்து போனான். அத்தனைக் கச்சிதமாக ஒவ்வொரு இடமாகப் பார்த்துப் பார்த்து மிக அழகாக வடிவமைத்திருந்தாள். பிரபலமான டிசைனர்களுக்கு சவால் விடும் வகையில், அற்புதமாக கண்ணைக் கவரும் விதத்தில் அமைந்திருந்தது.

'இதை முடிக்க எத்தனை நேரம் உழைத்திருக்க வேண்டும்' என்பதை அவனால் அனுமானிக்க முடிந்தது. எந்தத் தவறும் செய்யாத தேவியை கடிந்து பேசியதற்காக, தன்னையே நொந்து கொண்டான். 'அவளிடம் நான் ஏன் கோபப்பட வேண்டும்? இனி மேலாவது கொஞ்சம் தன்மையாக நடந்து கொள்ள வேண்டும்' என்று தீர்மானத்துடன் எழுந்தான்.



# 5

**அ**தன் பிறகு சகஜமாகப் பேசவில்லையென்றாலும், அவளிடம் கோபித்துக் கொள்வதை நிறுத்தினான். அன்று வந்ததிலிருந்தே தேவி யாருடனும் அதிகமாகப் பேசவில்லை. அவளின் செயல்களைச் சில நாட்களாகக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தவனுக்கு, இன்றைய தோற்றம் புதிதாக இருந்தது.

ஏதோ ஒரு துயரம் முகத்தில் தெரிய, அதை எப்படிக் கேட்டுத் தெரிந்து கொள்வது என்று புரியவில்லை. அவனது வேலைகளை முடித்துக் கொடுத்தாள். லஞ்ச் சாப்பிடப் போகவில்லை.

''பாஸ்! இன்னிக்கு எனக்கு வேற ஒண்ணும் வேலையில்லை. மதியம் லீவ் வேணும்'' தன் கலங்கிய கண்களை மறைப்பதற்காக தலை குனிந்து நின்றவளைக் கூர்ந்து கவனித்து விட்டு, ஒற்றைச் சொல்லில் தன் அனுமதியை அளித்தான்.

அவன் ''ம்'' என்றதும் வெளியே வந்து சிபியை அழைத்தாள்.

''அண்ணா! எனக்குக் கஷ்டமா இருக்கு. ப்ளீஸ், வந்து என்னைக் கூட்டிட்டுப் போறியா? தாத்தாவும் மூட் அவுட்டாகி இருப்பார்'' கலங்கிய குரலில் பேசியதும், சிபி பதறிப் போனான்.

''குட்டிம்மா! என்னடா அழறியா? அதனாலதான், இன்னிக்கு நீ ஆபிஸ் போக வேண்டாம்னு சொன்னேன். நானும் லீவ போட்டுட்டு ஐந்து நிமிஷத்தில வந்திடறேன். நீ கீழே வந்து வெய்ட் பண்ணு.''

அவன் கொண்டு வந்து கொடுத்த குறிப்புகளைச் சரிபார்த்துக் கொண்டிருந்த கௌதம், எதேச்சையாக ஜன்னல் வழியே பார்த்தான். யாரோ ஒரு இளைஞன், தேவியை தோளோடு அணைத்து அவள் கண்களைத் துடைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துத் திகைத்துப் போனான். வாழ்க்கையிலேயே முதல் முறையாக, பொறாமை என்ற உணர்ச்சியை அனுபவித்தான். கூடவே, எரிச்சலும் வந்தது.

'என் பி.ஏவைக் கூட்டிப் போக இவன் யார்? என்று கோபப்பட்டான். தேவியுடன் சென்றவனின் முகம் தெரியவில்லை. அவன் கார்க் கதவைத் திறந்து தேவியை உட்காரச் சொல்லி மறுபுறம் வந்து வண்டியைக் கிளப்பியதும், கௌதமுக்கு அவனைக் கொலை செய்யும் அளவு ஆத்திரம் வந்தது.

தேவியின் கலங்கிய கண்களைப் பார்த்து, தான் தவித்துப் போனது எதனால் என்பது, இப்போது தெளிவாகப் புரிந்தது. அவளின் துயரம் கண்டு, தன் மனம் துடிப்பது ஏன்? என்று விளங்கியதும் இனிய அதிர்ச்சிக்கு உள்ளானான்.

ஆம். கௌதம் தேவியை மனப்பூர்வமாக விரும்புகிறான். 'அவளைத் திட்டவும், ரசிக்கவும் ஏன் அவளைத் தீண்டவும், தனக்கு மட்டுமே உரிமை உண்டு' என்பதை மனப்பூர்வமாக உணர்ந்ததும், முகம் பிரகாசமானது. இதைப் போல ஒரு உணர்வு தேவியைத் தவிர



வேறு யாரிடமும் தோன்றாது என்பதும் புரிய, மனம் உல்லாசமானது.

சிபியின் தோள் சாய்ந்து கண்களை மூடி காரில் அமர்ந்திருந்தவள் தன் பெற்றோரை நினைத்து, கண்ணீர் வழிய அவர்கள் மறைந்த அன்று நடந்த நிகழ்வுகளை அசை போட்டுக் கொண்டிருந்தாள். இன்று அவர்களின் நினைவு நாள். காலையிலிருந்தே அவள் மனம் ஒரு நிலையில் இல்லை. வீட்டிலிருந்தால் பெற்றோரின் ஞாபகம் அதிகமாக இருக்கும் என்று தான் ஆஃபீஸ் வந்து வேலையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள்.

ஒரு கட்டத்திற்கு மேல் அதுவும் முடியாமல் போகவே, சிபியை அழைத்திருந்தாள். வீட்டிலும் தாத்தா அவர்களின் போட்டோவைக் கைகளால் வருடிக் கொண்டே, கண் மூடி சோபாவில் சாய்ந்து அமாந்திருந்தார். இமை ஓரம் கண்ணீர் பூக்கள் பூத்திருக்க, அவர் அமாந்திருந்த கோலம் மனதைப் பிசைய, இருவரும் வேகமாக வந்து இருபுறமும் அமர்ந்து தோளில் சாய்ந்து கொண்டனர்.

அவர்களைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். பேச்சற்ற மௌனமும், அவர்களது அருகாமையும் ஆறுதலைத் தர, நிம்மதியாக உணர்ந்தார். அன்று முழுவதுமே அவளைப் பிரியாமல் கூடவேயிருந்து அவள் துயரத்தைப் போக்கினர்.

தன் மனது புரிந்ததும், கௌதமிற்கு ஆஃபிசே சொர்க்கமானது. தினமும் தன் மனம் கவர்ந்தவனின் தரிசனத்திற்காக, ஆவலோடு காத்திருக்க ஆரம்பித்தான். அவள் வேலை செய்யும் போது, அவளுக்குத் தெரியாமல் அவள் அழகை ரசிப்பதே அவனது வேலையானது.

அவளுடன் பேசும் பேச்சில் கடுமை குறைந்து, கனிவு பொங்கியது. ஒரு இதமான உணர்வு இருவரையும் ஆட்கொண்டது. ஷாப்பிங் மால் ப்ராஜெக்ட் சம்பந்தமாக மட்டுமல்லாது, பொதுவான வேறு விஷயங்களைப் பற்றியும் பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். எல்லோருடனும் இனிமையாகப் பழகும் குணம் கொண்ட தேவியின் மனம், கௌதமின் மாற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியில் நிரம்பித் தளும்பியது.

''தேவி! இத்தனை நாளா உன்கிட்ட நான் நடந்துகிட்ட முறையே சரியில்லை. சாரி, நீ எனக்கு ஈக்வலா... ஏன் சில சமயம் என்னை விட திறமையா வேலை செய்யறதைப் பார்த்து, எனக்குப் பொறாமைன்னு நினைக்கிறேன். ஆனா, உன்னோட ப்ரசன்ஸ் இங்க எத்தனை முக்கியம்னு இப்பப் புரிஞ்சுகிட்டேன். சாரி! இனி இந்த மாதிரி எதுவும் நடக்காது.''

அவன் தேளாய்க் கொட்டிய போதே அவனையே துரத்திச் சென்ற இதயம், இப்போதெல்லாம் சந்தோஷமாக கண்கள் மின்னச் சிரித்துப் பேச ஆரம்பித்ததும், அவன் காலடியிலேயே விழுந்து விட்டது. இப்போதெல்லாம் கௌதம் தன்னைப் பார்க்கும் விதமே மாறியிருப்பதாகத் தோன்றியது. 'அவன் பார்வையில் அக்கறையோடு, கொஞ்சம் காதலும் கலந்திருக்கிறதோ' என்ற சந்தேகமும் எழுந்தது. அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியில் உற்சாகமாகவே வளைய வந்தாள். அது வீட்டிலும் பிரதிபலித்தது.

இரவு, சிபி ரோஸ்டாக சுட்டுப் போட்ட தோசைகளை, காலாட்டிக் கொண்டே ருசித்து கபளிகரம் பண்ணிக் கொண்டே, ''ஜென் தத்துவம்னா என்ன தாத்தா?''



''அதுவா!'' என்று ஆரம்பித்த தாத்தாவை, ''நீங்க சும்மா இருங்க தாத்தா. நானே இவகிட்ட பேசிக்கறேன். படிக்கும் போது தான் எந்த வேலையும் செய்யாம டிமிக்கி கொடுத்திடுவா. வேலை சொன்னாலே இண்டர்னல் அசைன்மெண்ட்னு ஏதாவது சொல்லித் தப்பிச்சுடுவா.

இப்ப வேலைக்குத் தானே போறா. ஆனா, எப்பவும் செய்யறதைக் கூட இப்பச் செய்யறதில்லை. நைட் டிஃபன் தினமும் இவதானே செய்வா. நீங்களே பாருங்க. இப்ப அது கூட இல்லை. அவளுக்குப் பொறுப்பே பத்தாது தாத்தா. கொஞ்சமாவது கண்டிச்சு வைங்க. இல்லைன்னா கல்யாணம் பண்ணிப் போற வீட்டில், இவ தான் கஷ்டப்படுவா'' தேவியின் தலையில் செல்லமாகக் குட்டினான்.

''போ சிபி! உன் தோசை டேஸ்டாவே இல்லை. என் ஆஃபீஸ் கேன்டீன்ல இதை விட நல்லா, டேஸ்டா கிடைக்கும். நீ சுத்த வேஸ்ட். இதில என்னைக் குறை சொல்றியா? ஹலோ மிஸ்டர்.சிபி! ஃபார் யுவர் கைன்ட் இன்ஃபர்மேஷன், நான் உன்னை விட நல்லா சமைக்கத் தெரிஞ்ச ஆளைத் தான் மேரேஜ் பண்ணிக்குவேன். ஓ.எம்.ஜி. சூப்பர் சிங்கர் ஆரம்பிச்சிருக்கும். நான் போறேன்'' கை கழுவி விட்டு, பைப்பில் தண்ணீர் பிடித்து சிபி மேல் தெளித்து விட்டு, ஹாலுக்குச் சிட்டாகப் பறந்தாள்.

''சிபி! விடுப்பா. அவ இன்னும் குழந்தை தான். ஆனா, ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிச்சா, அதில சின்னத் தப்பு கூட இல்லாம செய்து முடிச்சிடுவா. சமையல் நல்லா தானே பண்றா... விடு. நம் வீட்டிலிருக்கிற வரை தானே இந்தச் செல்லம். மேரேஜ் ஆனா, தானா பொறுப்பு வந்திடும்.''

''கஷ்டம் தாத்தா! இவகிட்ட எவன் மாட்டப் போறானோ?'' என்று வாய் கூறினாலும், 'தன் செல்லத் தங்கை மணமாகிப் போகும் வீட்டிலும், இதே போல மகிழ்ச்சி குறையாமல் வாழ வேண்டும்' என்று மனம் இறைவனை பிராத்தித்தது.

அதன் பிறகு புது ப்ராஜெக்டில் நாட்கள் பறந்தன. மண் பரிசோதனை ரிசல்ட்டில் ஆரம்பித்து, அஸ்திவாரம், கட்டிடப் பொருட்களின் தரம், அரசு தரப்பில் வாங்க வேண்டிய ஒப்புதல்கள், பில்லர்களின் உறுதி என்று அத்தனையும் கருத்தில் கொண்டு, ஒரு குழுவே அவனுக்குத் துணையாக நின்றது. தேவியும், காலநேரம் பார்க்காது அவனோடு ஒத்துழைத்தாள். அவளுடைய சில ஐடியாக்களை அவனே வியந்து பாராட்டினான்.

லஞ்ச் சாப்பிடக் கூடத் தோன்றாமல் வேலையில் மூழ்கியிருக்கும் போது, தேவி அதைப் பார்த்து விட்டு விரைவாக எடுத்து சாப்பிடும்படியான உணவுகளை வரவழைத்து, ஸ்பூன் போட்டுச் சாப்பிடக் கொடுப்பாள்.

அடிக்கடி காபி, டீ, ஜூஸ் என்று அவன் தேவையறிந்து தயாரித்தும் கொடுப்பாள். அப்போதெல்லாம் அவளை ஆழ்ந்து பார்ப்பான். அவள் கொடுப்பதை மறுக்காமல் வாங்கி சாப்பிடுவான் அதோடு சரி.

அன்று அவள் பெற்றோரின் திருமண நாள். போன வருடம் இதே நாளில் குடும்பத்தோடு பெங்களூர், மைசூர் சென்று கொண்டாடியது நினைவுக்கு வர, கண் கலங்கியது.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த கௌதம் அவளருகில் விரைந்தான். ''தேவி! எனி ப்ராப்ளம்?''

''நத்திங் பாஸ்! எனக்குக் கொஞ்சம் ஹெட் ஏக் அதிகமா இருக்கு. நைட் சரியா தூங்க முடியல. மதியத்துக்குள் வேலையை முடித்து விட்டு வீட்டுக்குப் போகட்டுமா?'' - குரல் ஒடுங்கக் கேட்டவளை, அணைத்து ஆறுதல் சொல்ல மனம் விழைந்தாலும், தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான்.



''ஏன் தேவி! என்னாச்சு? இன்னிக்கு லஞ்ச் எனக்கு வெளியே தான். அதனால, வாங்க நானே உன்னை கூட்டிட்டு போறேன். லஞ்ச் முடிச்சு வீட்ல ட்ராப் பண்ணிடறேன். சரியா?''

''தேங்க்யூ பாஸ்! என்னைக் கூட்டிட்டுப் போக வருவாங்க. நீங்க கிளம்புங்க'' என்றதும் முகம் இறுகிப் போனது.

அவளைக் கூட்டிச் செல்வது யார் என்பதை இன்று தெரிந்து கொண்டே ஆக வேண்டும் என்ற உறுதியோடு இருந்தான்.

''பாஸ்? நீங்க கிளம்பலையா?''

''ஏன் தேவி? என்னை சீக்கிரமா கிளப்பி விடறதிலேயே குறியா இருக்க? என்று முறைத்ததும் வாயை மூடிக் கொண்டாள்.

ஹாலில் அவள் காத்திருக்க, உள்ளே நுழைந்த சிபி, ''என்னடா? அம்மா, அப்பா ஞாபகம் வந்திடுச்சா? எனக்கும் தான். வேலையில் கவனமே இல்லை. நாம மைசூர் போனதெல்லாம் ஞாபகம் வந்திடுச்சு'' என்றதுமே, விம்மல் வெடிக்க அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

அவள் கண்ணீரைத் துடைத்து, ''அழக்கூடாது குட்டிம்மா! உனக்கு நான் இருக்கேன். ஆமா எங்க யாரையும் காணோம்? சாப்பிடப் போயிட்டாங்களா? கௌதம்

இருக்கானா?'' என்றதும் தலையாட்டினாள்.

''சரிடா, ஒரு ஐந்து நிமிஷம் இரு. நான் பேசிட்டு வந்திடறேன்'' என்றான்.

கண்ணாடி தடுப்புக்குள் நின்றபடி இதையெல்லாம் பார்த்த கௌதம், கொதித்துப் போனான். அவர்கள் பேசியது காதில் விழாததால், தேவியிடம் உரிமையோடு பழகுபவன் தன் உயிர்த் தோழன் சிபி என்று அறிந்ததும், தாங்க முடியாத அளவு அதிர்ந்து போயிருந்தான். கதவைத் தட்டிவிட்டு தான் உள்ளே வந்தது கூடத் தெரியாமல், யோசனையில் மூழ்கியிருந்தவனின் தோளைத் தொட்டான் சிபி.

கவனம் கலைத்து அவன் புறம் திரும்பியவனிடம், ''ஹாய் கௌதம்! என்னடா யோசனை? பேயடிச்ச மாதிரி உட்கார்ந்திருக்க. என்ன விஷயம்? சாப்பிடப் போகலையா?'' என்றான்.

''வா சிபி! எங்கே இந்தப் பக்கம்? ஆச்சரியமா இருக்கு'' அவன் வரவை விரும்பாமல் ஒப்புக்குக் கேள்வி கேட்டான்.

''தேவியை கூட்டிட்டுப் போக வந்தேண்டா'' எனும் போதே, தேவி உள்ளே வந்தாள்.

கூர்மையான அவனது பார்வை, தேவியை துளைக்க, ''நீ எதுக்குடா என் ஸ்டாப் கூட....'' என்று செல்ல ஆரம்பித்ததுமே, வாய்விட்டுச் சிரித்த சிபி, தேவியைத் தோளோடு சேர்த்தணைத்தான்.

எரிமலை வெடிக்க சேரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, வேகமாக எழுந்தான். இது எதையுமே கவனிக்காத சிபி, தேவியின் தலையில் செல்லமாக குட்டி விட்டு, ''சாரிடா! தேவி என்னோட ஒரே செல்லத் தங்கை. அதை உன்கிட்ட சொல்லக் கூடாதுன்னு கண்டிஷன் போட்டுட்டா. தன்னோட



டேலண்ட்டை, இந்த ஆஃபிசில் ப்ரூவ் பண்ற வரை உள்ளேயே வரக் கூடாதுன்னு மிரட்டினா. அதனாலதான், ஒவ்வொரு தடவையும் நான் டிரைவர் மாதிரி வெளியே நின்னே கூட்டிட்டுப் போயிடுவேன். மேடம்! அவங்க சொந்தத் திறமையால தான் வேலை செய்யணுமாம். அது தான்'' என்றதும் கௌதம் இன்ப அதிர்ச்சிக்கு ஆளானான்.

தன் டென்ஷனெல்லாம் வடிய, பற்கள் பளீரிட வாய்விட்டு சிரித்தவனையே சுற்றுப்புறம் மறந்து விழியகலாது பார்த்தாள். அவள் பார்வையைப் புரிந்து கொண்டவனின் கண்கள் மின்னியது. அவன் விழிகளை சந்திக்க முடியாமல் மனம் தடுமாற தலை குனிந்தாள்.

'இவளுக்கும் என் மேல் ஒரு ஈர்ப்பு இருக்கு. ஆனா, எப்படி மறைக்கிறா பார்?' என்ற செல்லக் கோபம் தலை தூக்கியது.

''என்னடா சொல்ற? தேவி உன் தங்கைன்னு அவ வேலையில் சேர்ந்த பிறகாவது சொல்லியிருக்கலாம் தானே. அவளை ஸ்பெஷலா கவனிச்சிருப்பபேன். ஏன் தேவி நான் சொல்றது சரிதானே?'' குறும்பு மிளிர கேட்டதும் கன்னங்கள் சிவக்க, ''அண்ணா! சாவியைக் கொடு. நான் காரில் இருக்கேன்.''

''வேணாம் குட்டிம்மா! நீ காரில் கிளம்பு. உன் ஸ்கூட்டி சாவியை என்கிட்ட கொடுத்திட்டு போ. நான் இவன்கிட்ட பேசிட்டு அரைமணி நேரத்தில் வந்திடறேன். நீயும் தாத்தாவும் சாப்பிடுங்க. நான் வந்து சாப்பிட்டுக்குவேன். நீ தனியா போயிடுவியாடா?''

''ம் என்று இருவருக்கும் பொதுவாக தலையசைத்து விட்டு, வெளியேறினாள்.

அவள் கிளம்பியதும், ''சாரி கௌதம்! இன்னிக்கு என் பேரண்ட்ஸோட வெட்டிங் டே. அதனால மூட் அவுட்டா இருக்கு. போன வருஷம் எல்லோரும் சேர்ந்து சந்தோஷத்தின் உச்சியிலிருந்தோம். இப்ப நாங்க ரெண்டு பேருமே அனாதைங்கடா.

எங்க வீட்டில இவளோட பேச்சும், சிரிப்பும் தான் உயிரோட்டத்தைக் குடுத்திட்டு இருக்கு. குழந்தைத்தனமா இருக்கற மாதிரி இருந்தாலும், என்னை அம்மா போலப் பார்த்துக்குவா. விளையாட்டாவே என்னோட எல்லாத் தேவைகளையும் நிறைவேத்திடுவா.

எனக்கும், தாத்தாவுக்கும் சந்தோஷமே தேவியால் தான் கௌதம். அவ வேலைக்குப் போவதையே நாங்க விரும்பலை. ஆனா, அவ வேலை செய்யப் போறது உன்னோட கன்சர்ன்னு தெரிஞ்சதும், கொஞ்ச நாள் அவ இஷ்டப்படி வேலை பார்க்கட்டும்னு அலவ் பண்ணினேன்.

அவ மனசு புரிஞ்சு, சந்தோஷமா பார்த்துக்குறவனா தேடிக் கண்டு புடிச்சி மேரேஜ் பண்ணி வைக்கணும்டா. அப்பத்தான் எனக்கு நிம்மதி. சரிடா, நான் கிளம்பறேன். குட்டிம்மா இன்னேரம் வீடு போய்ச் சேர்ந்திருப்பா. தாத்தாவும் அப்செட் ஆகியிருப்பார்.

நான் போய்ச் சேர்ந்தா தான் சாப்பிடுவாங்க. மணி இரண்டாகப் போகுது. என்னோட வாடா. ஹோட்டல்ல தான் சாப்பிடப் போற. என் வீட்டில் சாப்பிடலாம் வா'' என்று நண்பனையும் அழைத்தான்.

''இல்லடா. நீ கிளம்பு நானும் வீட்டுக்கே போறேன். மதியம் எனக்கும் முக்கியமான வேலை எதுவும் இல்லை.''

சிபி கிளம்பிச் சென்றதும், கௌதம் மௌனத்தில் ஆழ்ந்தான். 'எத்தனைத் துக்கத்தை மறைத்துக் கொண்டு, சந்தோஷமாக வளைய வந்திருக்கிறாள்' என்று நினைத்ததும் மனம் கனத்தது. சீக்கிரமாகவே தன் மனதுக்கினியவளிடம் தன் விருப்பத்தைத் தெரியப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தோடு, அவனும் கிளம்பினான்.



# 6

மறுநாளிலிருந்தே, 'நண்பனின் தங்கை' என்ற கூடுதல் உரிமையும் சேர, அவளைத் தன் கண் பார்வையிலேயே வைத்துக் கொண்டான். ரோஜா நிற சல்வாரில் புன்னகையையே அணிகலாக சூட்டிக் கொண்டு தன்னைக் கடந்து போனவளின் பின்னே, தன் அனுமதியின்றியே அவன் இதயமும் சென்றது.

குழந்தைத்தனம் நிறைந்த அழகை, அவள் லட்சியமே செய்யாமல் எல்லோரிடமும் எளிமையாகப் பழகியது, அவளது அழகை மிகைப்படுத்திக் காட்டியது. அவனது சுபாவமே மாறிப் போயிருந்தது. எப்போதும் முகத்தில் குடி கொண்டிருந்த இறுக்கமும், கடுமையும் அவனின் காதலில் கரைந்து போயிருந்தது.

'பெண்ணே! இது நானா? ஒரு பெண்ணைப் பற்றி இடைவிடாது யோசித்துக் கொண்டும்... நேரம் தான். என்னை எத்தனை அலைக்கழிக்கிறாய் நீ. உன் மனம் முழுக்க நான் தான் இருக்கிறேன் என்பது எனக்கும் தெரியும். என்னை மயக்கிக் கொண்டிருக்கும் அந்த உலக மகா காதல் உன்னையும் ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறது

என்பதையும் நான் அறிவேன். என்னையே மொய்க்கும் விழிகளே அதற்குச் சாட்சி.

தொழிலில் பெரிய புலி! தினம் ஒரு வெற்றி என்னைத் தேடி வருவதும் நிஜம் தான். ஆனால், உன்னிடம் காதல் சொல்லும் தைரியம் மட்டும் உன் விழிகளைக் கண்டதும் பறந்து போகிறது. இந்த ஜென்மத்தில் நீ என்னவள்! அதை எந்தக் கொம்பனாலும் தடுக்க முடியாது.' தொடர்ந்து கொண்டேயிருந்த எண்ணங்களை, விக்ரமின் குரல் கடிவாளமிட்டுத் தடுத்து நிறுத்தியது.

''பாஸ்! உடம்பு சரியில்லையா? நான் ரொம்ப நேரமா கூப்பிட்டும் உங்ககிட்டயிருந்து பதிலே இல்லை. பயந்து போயிட்டேன். இது மாதிரி உங்களை நான் பார்த்ததே இல்லை. டாக்டரைக் கூப்பிடட்டுமா?'' உண்மையான அக்கறையில் தவிப்போடு கேட்டவனைப் பார்த்ததும் முகம் சிவந்தான்.

தன் நிலை கண்டு வெட்கி, ''அதெல்லாம் ஒண்ணும் இல்லை. ஐயாம் ஓகே. கொஞ்சம் ஹெட் ஏக். அவ்வளவு தான். ஒரு காபி கொண்டு வரச் சொல்லு. ம் சொல்லு என்ன விஷயம்?'' பழைய இயல்பு திரும்ப சகஜமானான்.

லஞ்ச் டைமில் டைனிங் ஹாலை கடந்த போது, தேவியின் குரல் மட்டுமே உரத்துக் கேட்டது.

''இங்கிலீஷ் தெரியலைங்கறது ஒரு பெரிய விஷயமே இல்லை சிந்து. வெளிநாடுகளில் ஆங்கிலம் பேச்சு மொழியா இருந்தாலும், நம்ம அளவு நாலெட்ஜ் அங்க எல்லார்கிட்டயும் கிடையாது. அதனால, நான் நம்ம இந்தியர்களுக்கு அங்கு நல்ல மதிப்பு.

ஆனா, இங்க ஆங்கிலம் தெரிஞ்சுகிட்டு இருக்கறது



ஸ்டேட்டஸ் சிம்பலா ஆயிடுச்சு. கான்வென்ட் கூட, பேரண்ட்ஸ் டிகிரி ஹோல்டரா இருக்கணுங்கற கட்டாயம். அந்தக் குழந்தைங்க இங்கிலீஷ் தெரியாத அம்மாவைப்பத்தி வெளியே சொல்லவே சங்கடப்படறாங்க. ஆனா, எப்பவுமே அம்மாவோட பாசத்தை யாராலயும் ஈடுகட்ட முடியாது. அதுக்கு லாங்வேஜ் தேவையில்லை. அவங்களோட அன்பான அரவணைப்பு, கனிவான பார்வை, கண்டிப்பு கலந்த கோபம் போதும்.

அம்மா இல்லாதவங்களால தான் அந்த அருமையை புரிஞ்சுக்க முடியும். எங்க தாத்தாவுக்கு எழுபது வயசாச்சு. அவர் தான் எனக்கு அம்மா, அப்பா எல்லாமே. அவர் செய்யற வேலையை பார்த்தா இருபது வயசுன்னு கூட சொல்ல முடியாது. அத்தனை ஆக்டிவா இருப்பார். தினமும் ஐந்து மணிக்கு எழுந்து வாக்கிங், யோகா, சமையல், கிளீனிங்ன்னு எப்பவுமே சுறுசுறுப்பா இருப்பா.

எங்க தாத்தா ரொம்ப ஸ்வீட் தெரியுமா? அவர்கிட்ட இருந்து தான் நல்ல பழக்கங்களை நிறைய கத்துக்கிட்டேன். எங்கேயோ ஆரம்பிச்சு பேச்சு எங்கேயோ போயிடுச்சு. ரூபா நீங்க என்ன கொண்டு வந்தீங்க? ஏன் யாரும் எதுவும் பேச மாட்டீங்கறீங்க?

விக்ரமின் குரல், ''எங்கே பேச விட்ட? அப்பா! தினமும் உன் பேச்சை கேட்க மட்டும் தான் முடியுது. நீ பேச்சை நிறுத்தும்போது லஞ்ச் டைமே முடிஞ்சிடுது. ம்! இத்தனை நாளா வீட்ல தான் வாயைத் திறக்க முடியலைன்னு நினைச்சேன். இப்ப எங்கேயும்.'' என்று இழுத்ததும் அனைவரின் சிரிப்பும் சேர்ந்து ஒலிக்க,

முகம் சிவந்த தேவி ''போங்க சார். இனி லஞ்ச் டைமில

நான் வாயே திறக்கலை... போதுமா?''

ரூபா, ''ச்சும்மா தேவி! சார் விளையாட்டுக்குச் சொல்றார். நீ வாயை திறக்கலைன்னா எப்படிச் சாப்பிடறது? சொல்லப் போனா, நீ வந்த பிறகு தான் ஆபிஸ் கலகலன்னு இருக்கு. எங்களை சிரிக்க வைக்கிறதே நீதான் தெரியுமா? கோவிச்சுக்காதடா.'' என்று கொஞ்சினாள்.

இதையெல்லாம் வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்த கௌதமுக்கு வாய் கொள்ளாத சிரிப்பு. ''சரியான ராட்சசி பேசியே எல்லோரையும் மயக்கி வைக்கிறா. அப்பா! வாய் தான் வலிக்காதா. எப்பவும் தாத்தா புராணம் தான். பார்வை அவளைத் தொட்டது. சிந்துவும், ரூபாவும் அவளுக்கு ஊட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் இதழ்களில் புன்னகை பூத்தது.

'இவளை நெனைச்சாலே நார்மலா நடந்துக்க முடியலை. நான் ஒரு எம்.டி. என்பதையே மறக்க வைக்கிறா. நான் போய் திருட்டுத்தனமா வெளியே நின்னு இவ பேச்சை கேட்கிறேன் பார். சரியூான வாயாடி!' தன் செயலுக்கு அவளையே காரணமும் ஆக்கினான்.

இரண்டு மாதங்களில் ஆரம்ப கட்ட வேலைகள் முடிந்து ரிலாகஸ் ஆனான். அவனது வேலையில் மால் உரிமையாளருக்குப் பரிபூரண திருப்தியும் நம்பிக்கையும் ஏற்பட்டது. அவனைப் பாராட்டி விருந்தளித்தவர் அவன் கனவிலும் எதிர்பாராத பெருந்தொகையை முன் பணமாக அளித்து வேலையைத் தொடர ஊக்கப்படுத்தினார்.

முகம் மலர நன்றியுரைத்து வெளியே வந்து காரில் அமாந்ததும், கண்களை மூடி பத்து நிமிடங்கள் ஓய்வெடுத்தான். மனம் மகிழ்ச்சியில் திளைக்க, அந்த நாளை



சிபியுடன் கழித்தால் என்ன என்று தோன்ற புன்னகையோடு சிபியை அழைத்தான்.

அவனிடம் விஷயத்தை சொல்லி, ''இந்த வேலை சக்ஸஸ்புல்லா முடிஞ்சா என் லைஃப்ல ஒரு மைல் கல்லா இருக்கும். இந்த சிட்டியில நம்பர் ஒன் கன்சான்ங்கிற பேர் கிடைக்கும். ரொம்ப சந்தோஷமா இருக்கு. இன்னிக்கு டின்னர் நீயும் தேவியும் என் கூட வந்து சாப்பிடறீங்க. உன் தாத்தாவும் வரட்டும்.

இந்த வெற்றிக்கு உன் தங்கையோட முழு ஒத்துழைப்பும் ஒரு காரணம். அவளோட டிசைன் பத்தி ஓனர் ரொம்ப பாராட்டினார். அதுக்காக இந்த ஸ்பெஷல் ட்ரீட். ஏழுமணிக்குக் கால் பண்றேன். ப்ளேஸ் உங்க சாய்ஸ்.''

''கங்கிராட்ஸ்டா.'' கண்டிப்பா நீ இதில ஜெயிப்ப. ரொம்ப சந்தோஷமா இருக்கு. இது விஷயமா எந்த ஹெல்ப் வேணும்னாலும் செய்யத் தயாரா இருக்கேன். சரி கௌதம். தேவியோட வந்திடறேன். எங்கேன்னு நீயே சொல்லிடு. தாத்தா அதிகமா வெளியே வர மாட்டார். நாங்க வந்திடறோம். பைடா!''

ஆஃபிஸ் வந்ததும் தன் அசிஸ்டெண்டை அழைத்து, ஊழியர்கள் அனைவருக்கும் ஸ்வீட் பாக்ஸ் வாங்கி வரச் சொன்னான்.

''ஹாய் ப்ரண்ட்ஸ்! இந்த ஷாப்பிங் மால் வொர்க்-ல ஏறக்குறைய முழுத் தொகையும் உரிமையாளா அட்வான்ஸா கொடுத்திட்டார். அவருக்கு நம்ம வொர்க்ல ஏற்பட்ட திருப்தி தான் காரணம். அதுக்கு முழுசா நீங்க கொடுத்த ஒத்துழைப்பு தான் காரணம். இந்த ரெண்டு மாதமும் நேரம் காலம் பார்க்காம வந்து எனக்கு ஹெல்ப் பண்ணியிருக்கீங்க.

தேங்க்யூ. அதே போல இந்த ப்ராஜெக்ட் முடியற வரை உங்க சப்போர்ட் எனக்கு கிடைக்கும்னு நம்பறேன்.

என்னோட சந்தோஷத்தை பகிர்ந்துக்க நாளைக்கு உங்க எல்லோருக்கும் தாஜ் ஹோட்டல்ல லஞ்ச் அரேஞ்ச் பண்றேன். கண்டிப்பா வரணும். தேங்க்ஸ் அகெய்ன்'' அனைவருக்கும் ஸ்வீட் வழங்கச் சொல்லிவிட்டு தன் அறைக்குத் திரும்பினான்.

சிறிது நேரம் கழித்து முகம் மலர வந்த தேவியின் உற்சாகம் அவனையும் தொற்றிக் கொண்டது. அவளைப் பார்த்து முறுவலித்தவன். ''என்ன தேவி! இன்னிக்கு நீ ரொம்ப ஹேப்பியா இருக்கற மாதிரி தெரியுது. ம்! என்ன விஷயம்''

''அது. என் பாஸ்க்கு பெரிய ப்ராஜெக்ட் கிடைத்த சந்தோஷம் தான்.''

''எத்தனை நல்ல செய்தி. வாழ்த்துக்கள் தேவி. அதுக்கு ட்ரீட் எதுவும் எனக்குக் குடுக்க மாட்டியா?'' என்றான் உல்லாசமாக.

முகம் சூடாகிச் சிவக்க, தன் மனதில் எழுந்த பேரலைகளை அடக்கிய தேவி, ''கண்டிப்பா. உங்களுக்கு என்ன வேணும் சொல்லுங்க... தரேன்.''

''ம் அப்படியா. சொல்ற. ஆனா, அது கொஞ்சம் காஸ்ட்லியா இருக்கேன்னு தான் யோசிக்கிறேன்.''

''நோ ப்ராப்ளம். அதை நான் என் பாஸ்கிட்ட சொல்லி கறந்திடுவேன். ஏன்னா அவர் இப்ப ஹேப்பி மூட்ல இருக்கார்.''

நிதானமாக அவளருகில் வந்து குனிந்து, மனதை வருடும் மென்மையான குரலில், ''நிஜமா தானே தேவி! நான் கேட்கிறது எனக்கு கிடைக்குமா? கேட்ட பிறகு மறுக்க மாட்டியே?''



கைவிரல்கள் மெல்ல நடுங்க, இதுவரை இருந்த தைரியமில்லாமல் அவனின் அருகாமையில் கரைய, ''ம்'' என்று மட்டுமே சொல்ல முடிந்தது.

அவள் நிலை புரிந்து சிரிப்பை அடக்கியவன், அவள் கைகளை அழுத்தி, ''அதுக்குள்ள என்னாச்சு? ஜஸ்ட் ரிலாக்ஸ் நான் போறேன்.'' என்று தனது கைகளுக்குள் பாந்தமாகப் பொருந்தியிருந்த அவளின் கைகளை விடுவித்தான். அவனின் ஸ்பரிசத்தால் தேவி நிலை குலைந்து போயிருந்தாள். அவன் வேலையில் மூழ்கிப் போனதும், தன் விரல்களை கன்னத்தில் பதிக்க, அது தந்த இனிமையில் கண்கள் தாமாக மூடிக் கொண்டன.

கௌதம் அவளைப் பார்த்ததுமே, அவள் மனது புரிந்து போனது.

'ராட்சஸி வாய் திறந்து சொல்றாளா பார். இனி நெக்ஸ்ட் வீக் அதிரடி ஆக்ஷன் தான். மேடம் இது தான் சாக்குன்னு ஜம்முனு தூங்க ஆரம்பிச்சுட்டா போல இருக்கே. ஹே பார்பி டால்! இதுக்கே இப்படீன்னா நான் லவ் ப்ரபோஸ் பண்ணினா, என்ன செய்வ?' என்று செல்லமாக கடிந்து கொண்டு, ''ஹலோ தேவி மேடம்! என்ன தூக்கமா? நைட் சரியா தூங்கலியா? நான் இப்ப கிளம்பிடுவேன். நீ வேணா உள்ள இருக்கிற என் ரூம்ல கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்க. நைட் நீயும், சிபியும் என் கூட டின்னருக்கு வரப் போறீங்க. அவன்கிட்ட சொல்லிட்டேன். சி.யூ'' கிளம்பினான்.

அன்று மாலை சிபியும் சீக்கிரமாகவே வீடு திரும்பினான்.

தாத்தாவிடம் ''தாத்தா! கௌதம் இன்னிக்கு எங்களுக்கு ட்ரீட் தரான். இவளோட டிசைன் பத்தி ஒரே பாராட்டு தான் போங்க. உங்களையும் கூட்டி வரச் சொன்னான். போலாமா?''

'நான் வரலைப்பா. நீங்க போங்க நான் ரெண்டு தோசை ஊற்றி சாப்பிட்டுக்கறேன்.''

தேவி கோபமாக வெளியே வந்து ''ஏன்? அந்தத் தோசையை நான் ஊற்றித் தர மாட்டேனா? நீங்க டி.வி. பாருங்க. அது போதும்'' டிஃபன் செய்து ஹாட் பேக்கில் வைத்து விட்டு, பாலைக் காய்ச்சி பிளாஸ்க்கில் ஊற்றி டேபிள் மீது வைத்து விட்டு குளிக்கச் சென்றாள்.

சிபி இந்த வருடம் பிறந்த நாளுக்காக வாங்கி வந்து, கட்டாமல் விட்ட வெள்ளை நிற டிசைனர் புடவை அணிந்து, முத்துக்களும், பவளமும் கோர்த்த மாலையில் அதற்கு மேட்சாக வளையல் என்று தேவதையாக தயாரானாள்.

அவளைப் பார்த்து நெகிழ்ந்து போன தாத்தா, ''குட்டிம்மா! நீ புடவை கட்டியதும் பெரிய பொண்ணா தெரியற. உனக்கும் கல்யாண வயது வந்தாச்சுன்னு இப்ப நினைக்கத் தோணுது. சிபிகிட்ட சொல்லி ஜோசியரைப் பார்க்கணும். முதல்ல நீ போயிட்டு வந்ததும் திருஷ்டி கழிக்கணும்.'' என்றதும் சிணுங்கி,

''போங்க தாத்தா! எனக்குக் கல்யாணமே வேண்டாம். உங்களையும், சிபியையும் விட்டுட்டு நான் எங்கேயும் போக மாட்டேன். இங்க தான் இருப்பேன். ஏதாவது சதி பண்ணி என்னை துரத்தப் பார்த்தீங்கன்னா, நடக்கறதே வேற. ஆமாம். சொல்லிட்டேன்'' விரல் நீட்டி எச்சரித்து விட்டு தன் தாத்தாவின் தோளில் சாய்ந்து கொண்டாள்.



தன் ரூமிலிருந்தபடி இவர்களது பேச்சைக் கேட்ட சிபி உள்ளிருந்தே, ''தாத்தா! நல்ல ஐடியா. இத்தனை நாளா இது எனக்குத் தோணாம போச்சே! இவ ஜாதகத்தை எடுத்து வையுங்க. சண்டே ஜோசியரை போய் பார்த்திட்டு வரலாம். எந்த அப்பாவி மாட்டப் போறானோ?''

அதைக் கேட்டு கோபத்தில் குதித்த தேவி, ''அடப்பாவி! நான் உன்னை என்னடா செஞ்சேன். என்னை விரட்டப் பார்க்கறே.''

''பின்னே! என் லைன் கிளியா ஆக வேண்டாமா? இப்பவே நிறைய ஃபிகர் வந்து என்னை சுத்துது என் மனசுக்குப் பிடித்த மாதிரி அதில ஒண்ணு செட் ஆகற மாதிரி இருக்கு'' பேசிக் கொண்டே வெளியே வந்து தேவியைப் புடவையில் பார்த்து திகைத்து போனான்.

தன் விளையாட்டுப் பேச்சை கைவிட்டு, குரல் கரகரக்க, ''குட்டிம்மா! இனிமே புடவை கட்டாதே. சின்னப் பொண்ணா லட்சணமா ஜீன்ஸ், மிடி, சுடிதாரே போடு'' அவள் தலையை வருடினான்.

அவன் கையைத் தட்டிவிட்டு, ''போ ப்ரோ! நீயும் என்னைக் கிண்டல் பண்ற. நான் போய்ச் சுடியே மாத்திக்கறேன்.''

''இதே போதும்டா வா. ரொம்ப லேட்டாயிடுச்சு. கௌதம் மூன்று தடவை போன் பண்ணிட்டான். அவனே வந்து பிக்கப் பண்றதா சொன்னான். நான் மறுத்திட்டேன், என்ன தான் நம்மகிட்ட சகஜமா பேசினாலும், அவன் அந்தஸ்தே வேற. அவனைப் போய் எப்படி நம்ம வீட்டுக்கு வரச் சொல்றது? நாம நம்ம காரிலேயே போயிடலாம்.

'தன் உயிர் நண்பனை வீட்டுக்கு அழைக்கவே

அந்தஸ்து பேதம் பார்க்கும் சிபியை நினைத்து தேவி கலங்கினாள். தன் காதல் வேர்விட்டு தழைக்குமா; இல்லை கருகிப் போகுமா?' என்ற பரிதவிப்புடனேயே சிபியுடன் கிளம்பினாள்.

சந்தன நிற பேண்டும், வெள்ளை நிற கார்கோ ஷர்ட்டும் அணிந்து, தன் பென்ஸ் காரில் சாய்ந்து யாரிடமோ போன் பேசிக் கொண்டிருந்த கௌதமைப் பார்த்துப் படபடத்துப் போனாள். காரிலிருந்து இறங்கும் முன் ஆசை தீர அவனை ரசித்துவிட்டு, கீழே இறங்கினாள்.

தேவியை சேலையில் பார்த்து, கௌதம் தன் வசமிழந்து போனான்.

''வா சிபி! ஹாய் தேவி! வாங்க டேபிள் ரிசர்வ் பண்ணியிருக்கேன். போலாமா?''

இருவரும் காலேஜ் பற்றி, ஃப்ரெண்ட்ஸ் பற்றி உற்சாகமாகப் பேசிக் கொண்டே சாப்பிட்டனர். கௌதமின் பார்வை அடிக்கடி தேவியைத் தொட்டு மீண்டது. தொடர்ந்த அவனின் பார்வைகளில், தேவியின் முகம் சிவக்க வாயே திறக்காமல் டின்னரை முடித்தாள்.

சிபி, ''குட்டிம்மா! இங்க ஃப்ரைட் ஐஸ்கிரீம் ரொம்ப நல்லாயிருக்கும். உன்னோட ஃபேவரைட் ஐட்டம் தானே! மூன்று பேருக்கும் ஆர்டர் செய்து விட்டு, கௌதம் ஃபைவ் மினிட்ஸ். நான் வாஷ்ரூம் போயிட்டு வந்திடறேன்.''

கௌதமின் விழிகள் உரிமையோடு நிதானமாக, தனக்கே உரிய பார்பி டாலை அணுஅணுவாக ஸ்கேன் செய்தது. அவன் பார்வையில் கன்னங்கள் சிவக்க, தன் விரல்களை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

வருடும் குரலில், ''தேவி! இன்னிக்கு இந்த ட்ரஸில் எப்படி இருக்க தெரியுமா? ஏஞ்சல் மாதிரி! ப்யூட்டிஃபுல்'' என்றான்.

''ம்!''

''பிடிச்சிருக்கா.''

திடுக்கிட்டு எதை என்பதைப் போல பார்த்து விழித்தவளிடம், ''டின்னர் பிடிச்சிருக்கான்னு கேட்டேன்.''

''ம். ரொம்ப நல்லா இருந்தது. நாங்க இங்க வர்றது இது தான் ஃபாஸ்ட் டைம்'' என்றாள்.

'ரொம்பக் கஷ்டம்டா கௌதம். ரொமான்ஸ் உன் ஆளுக்குச் சுட்டுப் போட்டாக் கூட வராது போலிருக்கே. நீ பாவம்டா'' என்று தன்னையே நொந்து கொண்டான்.

சிபி வந்ததும், ஐஸ்கிரீமும் வந்தது. ஐஸ்கிரீமை குலோப் ஜாமூன் போல பொரித்து, அதன் மேல் சீவிய நட்ஸ் வகைகளோடு அழகு படுத்தியிருந்தார்கள். ஆசையோடு ரசித்துச் சாப்பிட்டவளைப் பார்த்ததும் கௌதமின் மனம் நிறைந்தது.

''தேவி! இதையும் நீயே எடுத்துக்க. டின்னரே ரொம்ப ஹெவி. என்னால் முடியாது.''

மறுக்காமல் அவன் தட்டை தன் புறம் இழுத்தவள், ''ரொம்ப டேஸ்டா இருக்கும் பாஸ். ஒண்ணாவது எடுத்துச் சாப்பிடுங்க. இதை விடவே மாட்டீங்க.''

ஸ்பூனால் ஒரு பீஸை மட்டும் எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

சிபி, ''நீ சாப்பிடுடா. விட்டா மூணு பேரோடதும் இவளே ஸ்வாஹா பண்ணிடுவா. இதுன்னா அத்தனை கஷ்டம்.''

''சாப்பிடும்போது தடுக்காதே நிஜமாவே வயிறு ஃபுல் சிபி! எப்பவும் டின்னர் ரொம்ப லைட்டா தான் சாப்பிடுவேன்.''

அன்றையப் பொழுது மனதுக்குப் பிடித்த விதத்தில் இனிமையாகக் கழிந்த மகிழ்ச்சியில், நிம்மதியாக வீடு திரும்பினான். அறைக்கு வந்து உடை மாற்றிப் படுத்தவன், அவளின் அருகாமைக்காக தன் மனம் ஏங்குவதை உணர்ந்தான்.

'இனியும் தாமதிக்காமல் நாளையே இதற்கொரு முடிவெடுக்க வேண்டும்' என்ற உறுதியுடன் உறக்கத்தை தழுவினான்.

## 7

தேவியின் நிலையோ அதைவிட மோசமாக இருந்தது. தினம் தினம் தன் உணர்வுகளோடு போராடிக் கொண்டிருந்தாள். அவனைப் பார்க்கும் போதெல்லாம் தோள் சாயத் துடித்த மனதை, அந்தஸ்து பேதம் என்ற ஒன்று மட்டுமே அணை போட்டு தடுத்துக் கொண்டிருந்தது.

அன்றும் அவன் நினைவுகளை சுமந்து கொண்டே அலுவலகம் சென்றவள், பதினொரு மணியாகியும் அவன் ஆஃபீஸ் வராததன் காரணம் தெரியாமல் தவித்துப் போனாள். சைட்டிலும் அவன் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டு, அவனைச் செல்போனில் அழைக்கலாம் என்று அவன் நம்பரை ஒற்றிய போது, ''ஹலோ தேவி! யாருக்குப் போன்? எனிதிங் இம்பார்டண்ட்?'' என்ற குரலில், கையிலிருந்த செல்போன் நழுவியது.



கீழே விழாமல் அதைக் கேட்ச் செய்து, ''என்ன பயம்? நான் தான் தேவி. ஏன் இத்தனை டென்ஷனா இருக்க... என்னாச்சு?'' என்றான்.

அவனைத் தேடித் தான் இத்தனை தவிப்பும் என்று சொல்ல வெட்கம் தடை செய்ய, ''தாத்தாவுக்கு!'' என்றாள்.

அவள் கூறுவது பொய் என்று தெரிந்தாலும், தன்னையே ஒரு முறை பார்த்துக் கொண்டு, ''என்னைப் பார்த்தா தாத்தா மாதிரி இருக்கா என்ன?'' என்றதும், தேவியின் முகம் குங்குமமாய் சிவந்து போனது.

''ம். சரி. அதை விடு காலையில் எழுந்ததுமே என் அப்பாவோடு சரியான சண்டை. அதான் கிளம்ப லேட் ஆயிடுச்சு. ஏதாவது முக்கியமான லெட்டாஸ்? போன் கால்ஸ்?''

''இல்லை பாஸ். ஆனா, சிபி அண்ணா உங்களைப் ப்ரியா இருக்கும்போது போன் பண்ணச் சொன்னான்.'' வீட்டில் சண்டை எதற்கு என்று கேட்கத் துடித்த நாவைக் கட்டிப் போட்டு வேலையைத் தொடர்ந்தாள். கௌதம் அதன் பின் தன் வேலையில் மூழ்கிப் போனான்.

சிறிது நேரம் அமைதியாகக் கழிய, ''தேவி! ப்ளீஸ் எனக்குக் கொஞ்சம் ப்ளாக் டீ வேணும். ஒரே தலைவலி வாங்கி வரச் சொல்லேன்.''

''இதோ! டேப்லட் ஏதாவது வேணுமா பாஸ்?

''வேண்டாம்.''

ஆனால், டீ கப்பை அவன் கையில் கொடுத்து விட்டு, தன் ஹேண்ட் பேகிலிருந்து ஒரு டேப்லட்டையும் பிரித்து, ''இதையும் போட்டுக்குங்க. சீக்கிரம் சரியாயிடும்.''

அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்து, ''சொந்த வைத்தியமா? தேங்க்ஸ். '' டீயை பருகியதும். ''தேவி முக்கியமா ஏதாவது வேலை இருக்கா? சொல்லுங்க பாஸ். ரொம்ப முக்கியமா ஒண்ணும் இல்லை'' ஏனோ மனம் படபடத்தது.

''அம்மா ஒரு பிசினஸ் டீல் விஷயமா கனடா போயிருப்பது தெரியும் தானே? அவங்க வர இன்னும் ஒரு மாதத்துக்கு மேல ஆகும். அப்பா இன்னிக்கு நான் எழுந்ததுமே என் கல்யாணப் பேச்சை ஆரம்பிச்சார். நான் டென்ஷனாகி பதிலுக்கு அவர்கிட்ட கத்தி ரகளை பண்ணிட்டேன்'' என்ற கௌதமின் விழிகள் தேவியைத்தான் மொய்த்தன.

தேவியின் முகத்தில் ஒரு நொடிக்கும் குறைவாக தோன்றி மறைந்த அதிர்ச்சி திருப்தியைத் தர, மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

ஓ! அப்படியா பாஸ். ஏன் அதுக்கு நீங்க சண்டை போடணும். பேசாம ஒத்துக்க வேண்டியது தானே. பேரண்ட்ஸ் ஆசைப்படறதில் தப்பில்லையே. நீங்க ஏன் வேண்டான்னு சொன்னீங்க?'' அவன் பதிலுக்காக ஆவலோடு காத்திருந்தாள்.

''நான் எப்ப கல்யாணம் வேண்டான்னு சொன்னேன்?'' என்று அவளுக்கு ஒரு ஷாக் கொடுத்தான்.

''சொல்லலையா? அப்ப சண்டை எதுக்கு போடணும்?'' நிஜமாகவே குழம்பிப் போனாள்.

''நீ என் குளோஸ் ப்ரண்ட் சிபியோட தங்கை என் பி. ஏவும் கூட; நாமளும் ரொம்ப குளோஸா பழகறோம்'' என்றவன் சற்று இடைவெளி விட்டு, ''என் அம்மாவுக்கு ஒரே அண்ணன். பெங்களூரிலே பெரிய பிசினஸ்மேன். அவர் பொண்ணு தாருணா, டெக்ஸ்டைல் என்ஜினியரிங் முடிச்சிருக்கா. லுக்கிங் குட் ஆல்சோ. அவளைத் தான் நான் மேரேஜ் பண்ணணும்னு அம்மா கண்டிஷன் போட்டுட்டு தான் ஊருக்கே போனாங்க.

என் மாமா ரொம்ப பந்தா பார்ட்டி. ரொம்ப ஜம்பமா பேசுவார். அப்பாவுக்கு அவரைக் கண்டாலே அலர்ஜி. அதனால, அப்பா கூடாதுங்கறார் அவர் வேற பொண்ணோட போட்டோவைக் காட்டி, சம்மதம் கேட்கறார். அதான் டென்ஷன்.

ஆனா, தாருணா ரொம்ப நல்ல பொண்ணு. அவங்க குடும்பத்துக்கும், அவளுக்கும் சம்பந்தமே இல்லை. ரொம்ப அழகு. கல்யாணம் பண்ணி, சென்னைக்கு வரத்தான் அவளுக்கும் ஆசை'' என்றான்.

அவன் பேச்சில் எரிச்சல் மண்டியது. 'உன் மனசுல என்னன்னு சொல்லித் தொலையேண்டா'.

''ஆனா, நீங்க என்ன பாஸ் முடிவு செஞ்சீங்க?'' ''என் முடிவா? எனக்கும் என் மாமாவை பிடிக்காது. அதனால்தான், நான் பிடிவாதமா ஹாஸ்டல்ல தங்கிப் படிச்சேன். அங்க போகவே மாட்டேன். திடீர்னு ஒரு பெண்ணைப் பார்த்ததும் சம்மதம் சொல்றது தப்பு. வாழ்க்கை முழுமைக்கும் நம்ம துணையா வரப் போறவளைப் பத்தி முழுசா தெரிஞ்சுக்கணும்.''

''ஆனா, தாருணா உங்க மாமா பொண்ணு தானே... அவளைப் பத்தி முழுசா தெரியும் இல்லையா? நல்ல அழகு; படிப்பு இரண்டுமே இருக்கறதா சொல்றீங்க. அவ மேரேஜ் ஆனா, இங்க வந்து தானே இருக்கப் போறா. அப்புறம்

என்ன? உங்க மாமா பேச்சே தேவை இல்லையே.''

''ஓ! நீ அப்படி வர்றியா? இருங்க மேடம்!'' என்று குதூகலித்தவன், ''நீ சொல்றதெல்லாம் ரொம்பக் கரெக்ட். எனக்கும் அவளை ரொம்ப பிடிக்கும். ஆனா, மாமா பெண் என்ற உறவில் மட்டும். ஆனா, என் மனைவியா நினைக்க முடியலை. எனக்குப் பிடிச்ச பெண்ணைப் பார்த்தா, இவ எனக்காகவே பிறந்திருக்கான்னு மனசு சொல்லணும். அவளை அடையறதுக் காக லைஃப்ல எந்த ரிஸ்க் வேண்டுமானாலும் எடுக்கலாம்னு வெறி வரணும். என் உயிரானவளுக்காக சின்னதும் பெரியதுமா பொய் கூட சொல்லத் தோணனும். அந்த மாதிரி பார்த்தவுடனே என் மனசில நிறைஞ்ச பெண் தான், என் லைஃப் முழுக்க என் கூட கை கோர்த்து வரணும்னு நினைக்கிறேன்''

அவன் பேசப் பேச கண்கள் பொங்கியது. 'ரசிகன்டா நீ. உன்கிட்ட இத்தனை கனவா, வரப் போற பெண் பத்தி? ம். ஆனா, உனக்கு என்னைப் பார்த்து அந்த மாதிரி நினைப்பு வரவே இல்லையா? என் அதிர்ஷ்டம் அவ்வளவு தானா?' மனம் ஊமையாய் புலம்பியது.

''என்ன யோசனை தேவி? ஆனா பாரு. இந்தப் போட்டோவில் இருக்க பெண்ணைப் பார்த்தேன். எய்ட்டி பாசென்ட் நான் நினைச்ச மாதிரி இருக்கா. அவகிட்ட என் விருப்பத்தைச் சொல்லி கொஞ்ச நாள் ஜாலியா லவ் பண்ணிட்டு, அப்புறம் மேரேஜ் பண்ணலாமான்னு யோசனை. நீ என்ன சொல்ற? இன்னிக்கு உறுதியா அவகிட்டப் பேசிடறேன். தானாவே வந்து என்னை எந்தப் பொண்ணு ப்ரபோஸ் பண்ணுவா சொல்லு?'' -சோகமாக முடித்தான்.



''ஏன் பாஸ்? உங்களுக்கு என்ன குறை. ஜம்முன்னு ஹீரோ மாதிரி ஹேண்ட்சம்மா தானே இருக்கீங்க. நான் ஜாயின் பண்ணிய சமயத்தில் நீங்க யார் கூடவும் பேசாம ரொம்ப ரிசர்வ்டா இருந்தீங்க. ஆனா, இப்ப உங்க் பிஹேவியரே டோட்டலா மாறிடுச்சு. நீங்க பெரிய பணக்காரர் அப்படிங்கற பந்தா இல்லாம ஃப்ரண்ட்லியா பழகறீங்க. வொர்க்காஸ் எல்லாம் உங்க மேல உயிரையே வைத்திருக்காங்க. வீட்டின் ஒரே செல்லப் பையனும் கூட உங்களை நான் நீன்னு போட்டி போட்டுகிட்டு கல்யாணம் பண்ண ரெடியா இருப்பாங்க.''

கண்கள் மின்ன அவள் பேச்சை ரசித்தவன், ''சும்மா கிண்டல் பண்ணாதே தேவி. என் மனது கஷ்டப்படக் கூடாதுன்னு தானே இப்படிப் பேசற. இதுவரை ஒரு சுமாரான பொண்ணு கூட வந்து, என்கிட்ட காதல் சொல்லவில்லை. ஏன்... உனக்குத் தோணுச்சா? இல்லையே!'' என்றான்.

உடனே, அவள் முகத்தில் நவரசங்களும் வந்து போனது. ''சரி தேவி! உன்னை ரொம்ப போரடிச்சுட்டேன். நான் கிளம்பறேன். அவ என்கிட்ட நல்ல பதிலா சொல்லணும்னு விஷ் பண்ணு நாளைக்குப் பார்க்கலாம். நான் சொன்ன வொர்க் எல்லாம் முடிச்சிட்டு நீயும் சீக்கிரமா கிளம்பிடு. பை தேவி!'' அவள் பார்வையில் படுமாறு கவரை டேபிள் மேல் வைத்து விட்டு கிளம்பினான். தலையசைக்கக் கூட தோன்றாமல் அவன் பேச்சில் சிலையாக நின்றவள் கதவின் ஒலி கேட்டு கவனம் கலைந்தாள்.

'இனி கௌதம் தனக்கு இல்லை' என்ற முடிவில் அழுகை பொங்க, ''சரியான லூசுடா நீ. உன்னையே நினைத்துக் கொண்டு நான் பைத்தியம் மாதிரி உன் கூடவே

நிழலா சுத்தறேன். என்னைப் புரிஞ்சுக்க துப்பில்லை. யாரோ ஒருத்தியை லவ் பண்ணிட்டு கல்யாணம் பண்றானாம். ஏன் என்னைப் பார்த்தா அந்த மாதிரி நினைப்பே வரலையா? நான் பைத்தியக்காரி. உன்னை நினைச்சு உருகிட்டு இருக்கேன்' என்று சத்தமாகவே புலம்பினாள்.

கௌதமின் கார் சீறிக் கொண்டு வெளியேறுவதைப் பார்த்ததும் துயரம் மேலிட கண்ணீர் சிந்தினாள். டேபிள் மேலிருந்த கவர் கண்ணில்பட்டதும், கை நடுங்க அதைக் கையில் எடுத்தாள்.

'ஏன் பாஸ் கொஞ்ச நாளா என்கிட்ட வேற மாதிரி நடந்துகிட்டீங்க? ஹோட்டல்ல கூட ஏஞ்சல் மாதிரி இருக்கேன்னு உருகினீங்க. அதெல்லாம் பொய்யா?' கவரிலிருந்த போட்டோவை உருவியெடுத்து அதில் பார்வை பதிய, கால்கள் வேரோடிப் போனது. கண்ணீர் அருவியாய் பொழிய, போட்டோவிலிருந்த உருவம் மங்கலானது.

''என்ன தேவி! பொண்ணு ஓ.கே.வா? எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இனி அவகிட்டயிருந்து தான் கிரீன் சிக்னல் வரணும்!'' என்ற குரலில் பரவசமானாள்.

குறும்பு மிளிரப் புன்னகைத்த கௌதம், அவள் கையிலிருந்த போட்டோவை வாங்கி டேபிள் மேல் வைத்தான். பின் அவள் இரு கைகளையும் பற்றி தன்னருகே இழுத்து அவளைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். ஏனெனில் அந்தப் போட்டோவில் புன்னகைத்துக் கொண்டிருந்தது வேறு யாருமல்ல... தேவியே தான்.

அவள் முகத்தை இருகைகளிலும் ஏந்திய கௌதம்,



''ரொம்ப பயந்திட்டியா கண்ணம்மா? உன்னை விட உன்னை நான்தான் அதிகமா புரிஞ்சு வைத்திருக்கேன். நீ என்னை விரும்பறதை உன் வாயால் சொல்லவே தேவையில்லை. என்னையே வட்டமிடும் கடல் மாதிரி இருக்கிற உன் கண்களே போதும். அது சொல்லும் என் மேல் மலையளவு இருக்கும் உன் காதலை! இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டை இதோட நிறுத்திடலாம். சரி; நானே முதல்ல சொல்றேன். ஐ லவ் யூ மை டியர் வித் ஆல் மை ஹார்ட். நான் தேடிக்கிட்டிருந்த புதையல் கண்ணம்மா நீ!

நாம ரெண்டு பேரும் சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்கலாம். எனக்கு... இனி நீ எப்பவுமே என் கூட இருக்கணும் யூ ஆர் மை ஏஞ்சல். உன் அண்ணாகிட்ட நான் பேசறேன். உனக்குச் சம்மதம் தானே பார்பி?'' என்று அவள் கண்களை ஊடுருவியவன், அதில் தெரிந்த அளவில்லாத காதலில் உணர்ச்சி வசப்பட்டு அவள் கண்களில் இதழை ஒற்றினான். அதற்கு மேல் தாள முடியாமல், தேவி ஒரு விம்மலோடு அவன் மார்பில் அடைக்கலமானாள். அவள் முகத்தில் விளையாடிய கேசத்தை ஒதுக்கிய கௌதம், ''கேம் ஓவர் பார்பி! இப்ப நிம்மதியா இருக்கு. கிளைமாக்ஸ் எப்படி இருந்தது'' -கண்ணடித்தான்.

''போங்க பாஸ்! என்னைத் துடிக்க வைத்துப் பார்க்க இத்தனை ஆசையா? நான் பொண்ணு பார்த்துட்டேன்னு சொன்னதும், என் உயிரே போயிடுச்சு.'' கலங்கிப் போய் பேசியவளின் இதழ்கள் நடுங்க, மெல்லக் குனிந்து சிறை செய்தவன், அவளைப் பேசவே விடவில்லை. அவளைத் தன் ரெஸ்ட் ரூமிற்கு அழைத்துச் சென்றான்.

''உன்கிட்டப் பேசணும் தேவி. உட்கார்!'' சோபாவில்

அமர்ந்ததும் அவள் கைவிரல்களைத் தனதோடு கோர்த்து முத்தமிட்டு, ''ஹே பார்பி டால்! இனிமே என்னை பாஸ்னு கூப்பிடாதே! பிடிக்கலை. நீயே ... செல்லமா எனக்கு ஒரு பேர் வெச்சுக் கூப்பிடு.''

அவள் கன்னம் வருடியவனைப் பார்த்து, ''இன்னும் எனக்கு நம்பவே முடியலை பாஸ். நான் உங்களைப் பார்த்ததலிருந்தே, உங்களுக்கு என்னைப் பிடிக்கலை. எரிஞ்சு எரிஞ்சு விழுந்துகிட்டேயிருந்தீங்க. என் வேலையிலேயும் தப்பு கண்டு பிடிச்சுகிட்டே இருந்தீங்க. ஆனா, இப்ப நீங்க... எப்படி பாஸ்? காமெடி எதுவும் பண்ணலையே?'' என ஏக்கத்துடன் கேட்டவளை அணைத்துக் கொண்டான்.

''என்ன பேசறே? அறைஞ்சேன்னா. ஆனா, எனக்கும் தான் புரியலை. பெங்களூர்ல எங்க காலேஜ்லையும் அழகான பெண்களைப் பார்த்திருக்கேன்... பேசியிருக்கேன். ஆனா, இந்த ஃபீலிங் வரலை. சிபி வந்து உன்னைக் கூட்டிட்டுப் போறதைப் பார்த்து... எனக்கு வந்த கோபமும் பொறாமையும்தான், எனக்கே என்னைப் புரிய வைத்தது. என்னோட ஃபிரண்ட்ஸ்னா... சிபி, வருண், மிதுன் மட்டும் தான்.

வீட்டிலயும் அப்பாதான் க்ளோஸ். அம்மா எப்பவுமே ரொம்ப ஸ்ட்ரிக்டா இருப்பாங்க. அன்பா அரவணைச்சதே இல்லை. எல்லா விஷயத்திலயும் டிசிப்ளின், ஸ்டேட்டஸ், பங்க்சுவாலிட்டின்னு ஒரு பிரின்சிபால் மாதிரிதான் பிஹேவ் பண்ணுவாங்க. பிசினஸ் முழுக்க அவங்க கன்ட்ரோல்ல இருந்ததால, வீட்லயே இருக்கமாட்டாங்க. அப்பாதான் என்னோட எல்லா தேவைகளையும் கவனிச்சுக்குவார்.



ஹி இஸ் மை ஃப்ரண்ட் ஆல்சோ. எங்கம்மா வீட்லயும் பாஸ் அதனாலதான். லேடீஸ்..., சென்டிமென்ட்ஸ்..., இதெல்லாம் பிடிக்காமப் போச்சு.

நான் உன்னை ஏற்கனவே இரண்டு தடவை பார்த்திருக்கேன் தெரியுமா? ஒரு நாள் டிராபிக் ஜாம் ஆகி, கோயில் வாசல்ல கார் நின்னிடுச்சு. அப்ப லெமன் யெல்லோ சுடிதாரில்... சிரிச்ச முகத்தோடு, அங்க இருந்தவங்களுக்கு நீ பாக்கெட் கொடுத்துட்டு இருந்த. உன்னோட ஃபேஸ், என் மனசில பதிஞ்சு போச்சு. அன்னிக்குத்தான், இந்தப் ப்ராஜக்ட்ல சைன் பண்ணினேன். அப்ப உன் முகம் எனக்குள் மின்னி மறைஞ்சது. நீ யார்னே எனக்குத் தெரியாது.

அதன்பிறகு வேறொரு நாள், முதியோர் இல்லத்திலே டொனேஷன் கொடுக்கப் போயிருந்தேன். அங்க நீ ஒரு பெரியவருக்கு எதையோ படிச்சுக் காட்டிட்டு இருந்த. அங்க இருந்த எல்லோருமே... உன்னைச் சுத்தி நின்னு ஆசையா பேசினாங்க. ஒரு தாத்தா உன் கன்னத்தை வருடி, முத்தம் கொடுத்தார். எனக்குச் சுள்ளுனு கோபம் வந்திடுச்சு. விர்ருனு கிளம்பிப் போயிட்டேன். அது ஏன்னு இப்பப் புரியது!

காலேஜ்ல இண்டர்வியூ முடிஞ்சதும், அப்பா டெல்லிக்கு போன் செய்தார். உன்னைப் பற்றிய புராணம் தான். அப்ப, நீதான்னு எனக்குத் தெரியாததால, அவர் பேச்சைக் கேட்டு எனக்குக் கோபம் வந்திடுச்சு. அவர் கண்டிப்பா உன்னைச் செலக்ட் பண்ணணும்னு... ஆர்டர் போட்டுட்டார். என்னை விட அப்பாவுக்கு நீ முக்கியமா போச்சேன்னு, எனக்கு ரொம்ப ஆத்திரம். அதனாலதான் நீ ஜாயின் பண்ணும் போது, வேணும்னே நான்

டெல்லியிலேயே இருந்துட்டேன். வந்து உன்னைப் பார்த்ததும், பயங்கர சர்ப்ரைஸ்! ஆனாலும், அப்பாவோட ரெகமண்டடேஷன் தானேன்னு, உன்னைக் கடுமையா ட்ரீட் பண்ணினேன். சில சமயம் நீ சொல்லற எக்ஸலண்ட் ஐடியாஸ் பார்த்ததும், நீ என்னை டாமினேட் பண்றதா நெனைச்சு... உன்னைத் திட்டுவேன்.

ஆனா, நீ எனக்கு லஞ்ச், டீ, காபி எல்லாம் டைமுக்கு அரேஞ்ச் பண்ணிக் கொடுத்த அக்கறை, ரொம்பப் பிடிச்சுது. நீ டைனிங் ஹால்ல எல்லார்கிட்டயும் சிரிச்சுப் பேசறதை, வெளியே நின்னு நிறைய தடவை கேட்டிருக்கேன். என்கிட்ட அதுமாதிரி பேசறதில்லைன்னு அப்பவும் கோபம்தான். சிபி வந்து உன்கிட்ட பேசிய போது, அவன் உன் அண்ணன்னு தெரியாம... நான் தவிச்ச தவிப்பு இருக்கே. ம்! இதெல்லாம் அனலைஸ் பண்ணிப் பார்த்ததும்தான், நான் உன்னை விட்டுட முடியாதுன்னு புரிஞ்சது. உன் மனசையும் வெளியே கொண்டு வரத் தான் இந்த டிராமா!'' -மனம் விட்டுச் சிரித்தான்.

தேவியோ கண் கலங்கினாள். ''ஆனா பாஸ்! எங்க வீட்ல, நான் இதுவரைக்கும் எதையுமே மறைச்சதில்லை. சிபி அண்ணா உங்களைப் ஃப்ரண்டா நினைச்சாலும், உங்க அந்தஸ்தைக் கண்டு மிரள்றான். எனக்குப் பயமா இருக்கு. என் தாத்தாவும், சிபியும் மனப்பூர்வமா சம்மதிக்கணும். எனக்கு எல்லாமே அவங்க தான்.''

''லவ் பண்றது குற்றமா பார்பி! டோண்ட் வொர்ரி. கில்டியா ஃபீல் பண்ணாதே. சம்மதம் வாங்கறது என் பொறுப்பு. இன்ஃபேக்ட்... உன் பேரண்ட்ஸ் கூட லவ் மேரேஜ் தானே? சிபி சொல்வான். சிபிகிட்ட நாளைக்குப்



பேசிடறேன். நானே சீக்கிரமா என் அப்பாவோட வந்து, முறைப்படி பொண்ணு கேட்கறேன். உன்னை... யாருக்காகவும், எதுக்காகவும்... என்னால் விட்டுக் கொடுக்க முடியாது. ப்ராமிஸ்!'' என்று அவள் கரங்களில் தன் கரங்களை வைத்து அழுத்தினான்.

''பாஸ்! ஆனா, உங்க அம்மா எங்களோட சரிசமமா பேசறதையே விரும்பாதவங்க. அவங்க சம்மதிப்பாங்கன்னு எனக்குத் தோணலை. அதோட உங்க அந்தஸ்து...''

''ஏய்! அடிச்சுப் பல்லைப் பேத்திடுவேன். அந்தஸ்தாம்... அந்தஸ்து! இந்தப் பிசினஸ்... நூறு சதவீதம் என்னோடது. வேற யாரோட இன்வெஸ்ட்மெண்டும் இல்லை. நாலைந்து ப்ராஜெக்ட் முடிஞ்சதும், அதில வந்த ப்ராஃபிட்ல முறையா வாங்கி, என் பேர்ல ரெஜிஸ்டர் பண்ணிட்டேன். என்னோட உழைப்பும் முயற்சியும் தான் எனக்கு மூலதனம். என் அப்பா எனக்குப் பக்கபலமா இருக்கார். அவ்வளவு தான். அதனால, உனக்கு எந்தச் சஞ்சலமும் வேண்டாம்.

தொழில்ங்கறது, மூளை சார்ந்த விஷயம். அதில் நம்ம லைஃபைப் போட்டுக் குழப்பிக்காதே. இது... உயிரும், உணர்வும் சார்ந்த விஷயம். நீ தான் என் வாழ்க்கை என்று தீர்மானித்து விட்டேன். ஆனா, என் மேல் நம்பிக்கை வரலைன்றதால தான், ஏதேதோ காரணம் சொல்லித் தயங்கிட்டு இருக்க. என் மேல் நம்பிக்கை வை பார்பி!'' என்று கோபமும், உரிமையுமாய் பேசியவனை, காதலோடு, கண்கள் பனிக்க ஏறிட்டாள்.

அவள் கன்னத்தில் முத்தமிட்டவன், ''ஐ லவ் யூ பார்பி. என்னால் உன்னை விட்டுட முடியாது. நீ சொல்ற

மாதிரி, என் அம்மா சம்மதம் கிடைக்கான்னாலும், அப்பாகிட்ட பேசின்னா, சீக்கிரமா நம்ம கல்யாணம் நடக்கும். ஐ ப்ராமிஸ் யூ!'' என்றவன், அவளை மென்மையாக அணைத்துக் கொண்டான்.

''இது ஆஃபிஸ் பாஸ்! யாராவது பார்த்தா கஷ்டம். சிபிகிட்டப் பேசுங்க!'' என்றவள், எழுந்து தன் கேபினுக்குள் நுழைந்தாள். அவனின் கரை காணாத காதல், தங்களைக் கண்டிப்பாக வாழ வைத்து விடுமென்ற நம்பிக்கையோடு வேலையைத் தொடர்ந்தாள்.

எந்த ஒரு ஆணுக்கும், ஏதோ ஒரு பலவீனம் உண்டு. அவன் முரடனாக இருந்தாலும், அந்தப் பலவீனமே அவனை மென்மையாக்கி விடும். கௌதமின் பலம், பலவீனம் எல்லாமுமாக தேவி இருந்தாள். அவனின் ஆண்மை, கம்பீரம், அறிவு எல்லாமே, அவன் தேவியின் மேல் வைத்திருந்த அன்பில் தோற்றுப் போனது. அவர்களின் காதலுக்கு எதிர்காலம் உண்டா என்பதைக் காலம்தான் தீர்மானிக்கும்.

# 8

மறுநாள் காலை பதினொரு மணிக்கு, வெகு நாட்களுக்குப் பிறகு தேவியை அழைத்தாள் தான்யா.

''ஹலோ தன்னு! எங்கேயிருந்து பேசற? எப்படியிருக்க? வேலையில ஜாயின் பண்ணியாச்சா? ஆபீஸ் எங்கே?''

''இதெல்லாம்... இப்பத்தான் உனக்குக் கேட்கலாம்னு தோணுதா? உன் கூட நேர்ல வந்து சண்டை போடறேன்.



உன் பாஸ் இருக்காரா?''

''ம். இப்பத் தான் வந்தார். ஏண்டி?''

''நேர்ல வர்றேன்.''

சற்று நேரத்தில் புயல் வேகத்தில் உள்ளே நுழைந்த தான்யா, ''ஹலோ சார்! என் ஃப்ரண்ட் தேவி இங்க வேலை செய்யத்தான் வந்திருக்கா. அவகிட்ட நீங்க மிஸ்பிஹேவ் பண்றதா நியூஸ் வந்திருக்கு. ஜாக்கிரதை! நீ பாஸ்னா... என்ன வேணாலும் பண்ணலான்னு நினைச்சீங்களா? ஜாக்கிரதை! நீங்க யார் சார்? அவளைத் தனியா வெளியே கூட்டிட்டுப் போக?'' என்றாள்.

குரல் உயாந்து கொண்டே போகவும், தேவி ஓடிவந்து தான்யாவை இழுத்து, ''சாரி பாஸ்! யாரோ இவகிட்ட தப்பா ஏதோ சொல்லியிருக்காங்க. வா தன்னு! என்ன பேசறே? ப்ளீஸ். என் கூட வா. வெளியே போய்ப் பேசலாம்'' என்று தேவியின் குரல் இறைஞ்சவும், கௌதம் சிரித்தான்.

''விடு தேவி! இப்பக் கூட பாரு... உன்னைப் பார்த்துச் சிரிக்கிறான். இதைச் சும்மா விடக்கூடாது. கம்ப்ளெயிண்ட் பண்ணணும்'' என்று குதித்தவளின் காதைப் பார்த்து திருகினான் கௌதம்.

''ஏய் வாலு! அதுக்குள்ள உனக்கு விஷயம் தெரிஞ்சிடுச்சா? என் அப்பா சும்மா இருக்க மாட்டார். பாரு... உன் ப்ரண்ட் முகத்தில எத்தனைப் பயம்னு. உன் குறும்புக்கு அளவே இல்லை தன்னு. முதல்ல உன்னைப் பேக் பண்ணி, வேற வீட்டுக்கு அனுப்பணும்'' என்றபடி, அவள் தலையில் செல்லமாகக் குட்டினான்.

நடப்பது எதுவும் புரியாமல் விழி விரித்த தேவியைப் பார்த்து கண் சிமிட்டிய தான்யா, ''என்னடி முழிக்கிற?

கௌதம் என் அண்ணன்டி... மறந்துட்டியா? என் பெரியப்பா மகன். நேத்து நைட் பெரியப்பாகிட்ட அண்ணா பேசிட்டான். உடனே அவர் என்கிட்ட சொல்லிட்டார்.

ஹேப்பியா இருக்குடி. ஆனா, நீ திருடி! என்கிட்டச் சொல்லவே தோணலை பாரு. அதனாலதான் கொஞ்சம் கலாய்ச்சேன். அண்ணா! நீங்க எனக்குப் பெரிய ட்ரீட் தரணும்!'' என்று கலகலத்தாள்.

அன்று மாலையே சிபியைச் சந்தித்த கௌதம், காஃபி ஷாப்பில் அமர்ந்து ஸ்ட்ரெய்டாக விஷயத்துக்கு வந்தான்.

''சிபி! நான் தேவியைக் கல்யாணம் செய்துக்க ஆசைப்படறேன். என் அப்பா கிட்ட ஆல்ரெடி சொல்லி, ஓகே பண்ணியாச்சு. சொல்லப் போனா... நான் தேவியை விரும்பறது தெரிஞ்சதும், அவர் ரொம்பச் சந்தோஷப்பட்டார். இப்ப, நீ தான் சம்மதிக்கணும்.''

சிபி இதை எதிர்பாராது, திகைத்துப் போனான். ''ஆனா, தேவி... நீ என்னடா சொல்ற? எனக்குப் புரியலை.''

''தேவியும் என்னை விரும்பறாடா.''

'கௌதம் பக்கா ஜெண்டில்மேன். கல்லூரி நாட்களில் நெருங்கிப் பழகி, அவனை நன்கு புரிந்து வைத்திருக்கும் உயிர்த் தோழன். தவறான பழக்கங்கள் எதுவும் இல்லாத, டீ டோடலர். தேவிக்கு இவனைப் போல ஒருவனைத் தேடினாலும் கிடைக்காது. ஆனால், தன் வசதியோடு ஒப்பிடும்போது... எட்டாத உயரத்தில் அல்லவா இருக்கிறான்? அதிலும், அவன் தாய் பத்மினியை நினைத்ததும் மனம் நடுங்கியது.

ஒரே பார்வையில் அவன் மனதில் ஓடும் எண்ணங்களைப் புரிந்து கொண்டான் கௌதம்.



''என் அம்மாவை நினைத்துப் பயப்படறியா சிபி? ஆனா, என்னை நம்புடா... தேவியைச் சந்தோஷமா பார்த்துக்குவேன். அம்மா கனடாவிலிருந்து திரும்பி வர இன்னும் ஒரு மாதத்துக்கு மேல் ஆகும். அதுக்குள்ள தேவி எனக்குச் சொந்தமாகணும்றதால, நான் உடனே தேவியை ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கறேன்.

இந்த வாரமே என் அப்பாவோட உங்க வீட்டிற்கு வந்து தாத்தாகிட்டப் பேசறேன். என்னோட ஃபர்ஸ்ட் ப்ராஜெக்ட்ல வந்த லாபத்திலே, அண்ணா நகர்ல ஒரு வீடு வாங்கி, ரீ மாடல் பண்ணியிருக்கிகேன். அங்கதான் இருக்கப் போறோம். ''விஷ்வா பில்டாஸ்'' ஹண்ரட் பர்சென்ட் என்னோடது. இதை மட்டும் நம்பி, எனக்குத் தேவியைக் கொடு. எனக்குன்னு இருக்கிற சொத்து, இது மட்டும் தான். என்னை நம்புடா.

என் அம்மாவையும் கன்வின்ஸ் பண்ண முடியும். கண்டிப்பா ஒத்துக்குவாங்க. தேவி இல்லாத லைஃபே, எனக்கு இல்லைடா!'' என்றான்.

சிபி, கௌதமை அணைத்துக் கொண்டான். ''சந்தோஷமா இருக்கு கௌதம். என் தங்கையோட சம்மதம் கிடைச்ச பிறகு, வேறென்ன? அவ சந்தோஷம் தான் எங்களுக்கு முக்கியம். உன் அம்மா ரொம்ப ஸ்டேட்டஸ் பார்க்கிறவங்க. அவங்க தேவியை ஏத்துக்கலைன்னா, ரொம்ப மனசு உடைஞ்சு போயிடுவா. வாயடிச்சாலும், தேவி ரொம்ப சாஃப்ட் கௌதம். அவளால யாருக்காவது பிரச்சை வரும்னா, ஒதுங்கிப் போயிடுவா. உங்க அம்மா எங்க யூனிட்டுக்கு வந்தா, கிளம்பற வரை எங்களை உட்காரவே விடமாட்டங்க. அத்தனைப் ப்ரஸ்டீஜ் பார்ப்பாங்க. அதான் பயமா இருக்கு.''

''டோண்ட் வொர்ரிடா. என் அப்பா எனக்குச் சப்போர்ட்டா இருக்கார். என் அம்மா கன்வின்ஸ் ஆனா தான், நான் அவங்க கூட தேவியைக் கூட்டிட்டுப் போயிருப்பேன். இல்லைன்னா, அண்ணா நகர் வீடே எங்களுக்கு போதும். நாங்க, ரொம்ப நாளா லவ் பண்றதா நினைச்சுடாதே. அவளை எனக்கு ரொம்பப் பிடிக்கும். நேத்துதான், அதை அவகிட்டச் சொன்னேன். அவளும் ஏத்துக்கிட்டா. உடனே, அப்பாகிட்டச் சொல்லிட்டேன். நாளைக்கு உன் வீட்டுக்கு வரேன். என் அம்மாவுக்குத் தெரிஞ்சு அதை மறுத்திட்டா, என்னால அதை மீற முடியாது. அதனால, அவங்க சென்னை திரும்பறதுக்குள்ள, என் மேரேஜ் முடியணும். நாளைக்கு சொஜ்ஜி, பஜ்ஜி எல்லாம் ரெடி பண்ணிடு. நான் வந்து ஒரு பிடி பிடிக்கணும்!'' என்று சூழ்நிலையைச் சகஜமாக்கினான்.

மறுநாள் மதியம் தேவி, ''பாஸ்! எனக்கு மதியம் லீவ் வேணும்'' என்றாள்.

''அடிக்கடி மதியம் லீவ் போட்டுட்டு எங்கே சுத்தற? லீவ் கொடுக்க முடியாது.''

''ஓ.கே. பாஸ். உங்க லீவை நீங்களே வெச்சுங்கங்க. எனக்கு வேண்டாம். ஏன்... இந்த வேலையே வேண்டாம். எனக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆயிருக்கு. இன்னிக்கு, என்னைப் பொண்ணு பார்க்க வரப் போறாங்க. எப்படியும் மேரேஜ் முடிஞ்சதும், என் ஹஸ்பெண்ட் என்னை வேலைக்குப் போகவிடமாட்டார். குட் பை பாஸ்!''

கண்கள் மின்ன அவள் பேச்சை ரசித்தவன், அவள் இடையைச் சுற்றி வளைத்தான். ''ஹே ஏஞ்சல்! உதை விழும். என்னோட மனைவி ரொம்ப டேலண்ட்டட். அவளை வீட்ல முடக்கறது தப்பு. நீ தினமும் என்கூட ஆஃபிஸ் வர்ற.



உனக்கு இன்னும் அதிகமான பொறுப்பைக் கொடுக்கப் போறேன். உன் திறமை என்றும் துருப்பிடிக்கக் கூடாது. நீ இந்தப் ப்ரொஃபஷனை எத்தனை லவ் பண்றேன்னு எனக்குத் தெரியும். நீ... நீயாவே இருக்கறது தான் எனக்குப் பிடிச்சிருக்கு. ஈவ்னிங் முறையா பொண்ணு பார்க்க வரப் போறேன். டிஃபன் ரெடி பண்ணிடு. இன்னிக்கும் புடவையே கட்டு. என்ன...?'' குரல் குழைந்து அணைப்பு இறுகியது.

''பாஸ்! ஆஃபிஸ்ல என்ன இது? மேரேஜ் வரைக்குமாவது வீட்ல இருக்கேன். உங்க கை சும்மாவே இருக்கறதில்ல'' சிணுங்கினாள்.

''சிணுங்காதடி. உன்னோட இந்த ஸ்டார் மச்சம் என்னை இழுக்குது. அழகா இருக்க பார்பி!'' என்றதும், ''போங்க பாஸ்!'' அவனைத் தள்ளி விட்டாள்.

''நான் கொண்டு வந்து விடட்டுமா?''

''சிபி வந்திடுவான்.''

''என் வில்லனே அவன் தாண்டி...!'' அலுத்துக் கொண்டான்.

சிபியுடன் வீட்டுக்குச் செல்லும் வழியில் போன் செய்து ''தன்னு! நீ வீட்டுக்கு இப்பவே வந்திடு. உன் பெரியப்பா கூட, இவரும் எங்க வீட்டுக்கு வரார். எனக்குப் பயமா இருக்குப்பா. இங்க லேடீஸ் ஹெல்ப்பும் இல்லை. சீக்கிரமா வந்திடறியா? எனக்குச் சப்போட்டா இருக்கும். என் அம்மா இல்லாததை, இப்ப ஃபீல் பண்றேன் தன்னு... வந்திடுடா!'' மென்குரலில் கெஞ்சியதும், தான்யா உருகிப் போனாள்.

''நீ சொல்லணுமா? அசடு மாதிரி பேசாதே தேவி: உனக்கு நான் இருக்கேன். என்னோட ஜி.எம் ஒரு சிடுமூஞ்சி.

லீவ் கேட்டதும், ஒரு சின்ன வேலையை செஞ்சு முடிச்சுட்டு போகச் சொன்னது. அது கிடக்கட்டும். நான் உடனே கிளம்பறேன்.''

டிரைவ் பண்ணிக் கொண்டிருந்த சிபியும் நெகிழ்ந்து போனான். இது போன்ற சமயங்களில், ஒரு பெண்ணுக்குத் தாயின் அரவணைப்பு எத்தனை அவசியம் என்பதும் புரிந்தது. அவளை இடது கையால் அணைத்துக் கொண்டு, ''குட்டிம்மா! கஷ்டமா இருக்காடா? உன் ப்ரண்ட் என்ன சொன்னா? வருவாளா?''

''அவ ரொம்ப நல்லவண்ணா. அவ ஜி.எம் தான் ஏதோ வேலை கொடுத்திருக்காராம். ரொம்பச் சிடுமூஞ்சியாம். ஆனா, வந்திடுவா.'' சிபியின் முகம் விளக்கெண்ணெய் குடித்தது போல மாறியது. எதுவும் பேசாமல் வந்தான். சொன்னபடியே அரைமணி நேரத்தில் வந்து சேர்ந்தாள்.

''ஏண்டி போனில் அப்படிப் பேசின? நான் இருக்கேன் உனக்கு. உன் அம்மா இல்லாத குறையே தெரியாத மாதிரி உன் மேரேஜ் முடியற வரை உனக்குத் துணையா இருப்பேன். நான் உன் நாத்தனார் மட்டும் இல்லை. உனக்கு அண்ணியும் கூட. உன்னை விட்டுடுவேனா?'' என்று சகஜமாகப் பேசியவளைப் பார்த்து, திகைத்துப் போனாள்.

''என்ன தன்னு சொல்ற?''

''ம். என் நேரம். கையை நீட்டு. கோன் வாங்கிட்டு வந்திருக்கேன். வச்சு விடறேன். என்னத்தை சொல்றது... நான் லவ் பண்ற ஆளு அப்படி. சரியான தயிர்சாதம்டி அவன்! நல்லா வளர்த்தீங்க போ. என்ன முழக்கிற? உன் அண்ணனைத் தான் சொல்றேன். புரியலையா?''

நிஜமாகவே இந்த அதிர்ச்சியில் விழி பிதுங்கியது.



''சிபியா! அவனை எங்கடி மீட் பண்ணின? இங்க வந்தா கூட, நீ அவன்கிட்ட பேச மாட்டியே. அப்புறம் எப்படி?''

''சரியான டியூப் லைட் நீ. என் பெரியப்பா கன்சர்ன்ல தானே ஜாயின் பண்றதா சொன்னேன். உன் அண்ணன் தான் அங்க ஜி.எம். நான் ஆஃபிஸ் வர்றது பத்தி, உன்கிட்ட சொல்லவே இல்லையா?''

''எனக்குத் தெரியாதுப்பா. அப்ப... சிடுமூஞ்சின்னு சொன்னது...?''

''சாட்சாத் உன் அண்ணனையே தான். இப்ப அதுக்கு என்ன?''

''ஒண்ணுமில்லை. இது தெரியாம, விஷயத்தை அவன்கிட்ட சொல்லிட்டேன். சாரிப்பா.'' இப்போது தான்யா திடுக்கிட்டுப் போனாள்.

ஆனால், உடனேயே சமாளித்துக் கொண்டு, ''ம் போகுது போ. தெரிஞ்சா மட்டும் என்ன செய்வான்? டெக்ஸ்டைல் சம்பந்தமான பேச்சைத் தவிர, அவனுக்கு வேற எதுவுமே தெரியாது. கொஞ்சம் கூட ரொமாண்டிக் ஃபீலிங்கே வராத மனுஷன்டி உன் அண்ணன். உன் பேரண்ட்ஸ், நீன்னு குடும்பமே லவ் மேரேஜ் தான். ஆனா, ஒரு சின்னப் பார்வை? ம்! எனக்குக் கொடுத்து வச்சது அவ்வளவு தான். அதனாலதான், மொதல்ல உன் கல்யாணம் நடக்கட்டும்னு விட்டுட்டேன்.

நீ மட்டும் எனக்கு அண்ணியா வரலாம். நான் உனக்கு அண்ணியா வரக் கூடாதா? கல்யாணம் ஆனதும் முதல்ல ஹனிமூன் போயிடாதே! உன் அண்ணன்கிட்ட என்னைப்பத்தி எடுத்துச் சொல்லி கரெக்ட் பண்ணு. சீக்கிரமா என்னை மேரேஜ் பண்ண வை. தெரிஞ்சுதா?

கையை அசைக்காதே. இழுத்து விட்டுடும். நானும் ஜாடையா பேசித்தான் பார்க்கறேன். சாமியார் அசையணுமே. அழகா டிரஸ் பண்ணிட்டு போய் அவன் முன்னால் நின்னா கூட, அசைய மாட்டான். அன்னிக்குத் தான் ரொம்ப கடிப்பான்.

ஏன் தான்யா! காலையில வந்ததுமே மசமசன்னு நிக்கறீங்க? போய்... ஆர்டர் ஃபைலைக் கொண்டு வாங்க. அந்த ஏ.கே.எம். இன்டஸ்ட்ரிக்கு ரிமைன்டர் போடச் சொன்னேனே... என்னாச்சு? சுறுசுறுப்பா வேலை செய்ங்கன்னு... எரிஞ்சு விழறான். மேரேஜ் ஆகட்டும்... பார்த்துக்கறேன். என்ன முழிக்கற? என் மேரேஜை சொன்னேன்டி. இரு. ஃபேஸ் பேக் போட்டு விடறேன். கை காயற வர கொஞ்சம் அடங்கி உட்காரு. எனக்கு நிறைய வேலை இருக்கு.

எனக்கு எப்படி உன் அண்ணனோட ஸ்டார்ட் ஆச்சுன்னு குழம்புதா? நாம ப்ளஸ் டூ படிக்கறப்ப எல்லாம் உன் வீட்டுக்கு வருவேனில்லையா? அப்ப இருந்தே அவனைத் துரத்திகிட்டு இருக்கேன். சிக்கலை. படிக்கறான்னு விட்டுட்டேன். இனிமே பாரு... இந்தத் தன்னு யாருன்னு புரிய வைக்கிறேன். நான் சிபிகிட்ட வழியறதைப் பார்த்து, எங்க ஆபிஸ் ஃபுல்லா... மேட்டரைப் புரிஞ்சுகிட்டாங்க. ஆனா, சரியான டியூப்லைட்டுடி உன் அண்ணன். நிறைய தடவை சுவிட்ச் போட்டும் எரியலை. கஷ்டம்!'' என்ற தனுவை திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் தேவி.

'இரண்டு பேரும் என்ன செய்கிறார்கள்? மேலே வந்து ரொம்ப நேரமாயிற்றே' என்று பார்ப்பதற்காக மேலே வந்த சிபி, தான்யாவின் பேச்சைக் கேட்டு ஃப்ரீஸ் ஆனான்.



அவனால், தன்னுடைய உணர்வுகளை இன்னதென்று இனம் பிரிக்க முடியவில்லை. அவனுக்கும் தான்யாவின் மேல் சின்னதாக ஒரு ஈர்ப்பு இருந்தது. அடிக்கடி தன் வீடு தேடி வரும் தான்யாவை பார்த்தால், வாங்க என்பதோடு முடித்து விட்டு போய் விடுவான்.

ஆனால், பத்மினி டெக்ஸ்டைல்ஸில் கௌதமின் தங்கையாக வந்து வேலையில் சேர்ந்ததும் கொஞ்சம் வியப்பு ஏற்பட்டதோடு சரி. மெல்ல மெல்ல அவளின் சுட்டியான செயல்களால் கவரப்பட்டு, அவளை ரசிக்க ஆரம்பித்தான். ஆனால், அது வெளியே தெரியாதபடி கவனமாக தன் மனதை மறைத்தான். அதற்கு முதல் காரணம் அவள் தேவியின் உயிர்த்தோழி என்பதும், அடுத்து அவள் கௌதமின் தங்கை என்பதால் தயக்கம் மேலும் கூடிப் போனது. ஆனால், கொஞ்சம் விலகியே இருந்தான். இன்று தான்யாவின் பட்டாசுப் பேச்சில்... தான் அடைவது ஆனந்தமா... அதிர்ச்சியா என்று குழம்பி இறுதியில் ஆனந்த அதிர்ச்சி என்ற முடிவுக்கு வந்தான்.

'வாடி என் கப்பக் கிழங்கே! நான் உனக்குத் தயிர்சாதமா? என்ன கொழுப்புடி உனக்கு. என்கிட்ட தனியா மாட்டாமலா போயிடுவா? வா... உன்னைச் சட்னி பண்ணி தயிர்சாதத்துக்கு மேட்சா ஆக்கிடறேன்.' செல்லமாக கறுவினான்.

ஒரு வழியாக பேசிப் பேசி ஓய்ந்து போய், அலங்காரம் முடித்து இரண்டு பேரும் கீழே வர மாலை ஆறு மணியாகியிருந்தது. ஏப்ரனோடு அந்தச் சமையலறையி லிருந்து வெளியே வந்த தாத்தா, ''ஏன் குட்டிம்மா. மேக்கப் பண்ண இத்தனை நேரமா? கௌதம் அவர் அப்பாவோட

இரண்டு மணிநேரம் வெயிட் பண்ணி பார்த்துட்டு... இந்தப் பெண்ணே வேண்டான்னு, கோவிச்சுகிட்டு கிளம்பிப் போயிட்டார்!'' கண் சிமிட்டினார்.

அவரை முறைத்த தேவி, ''போயிடுவாரா? அதையும் பார்க்கலாம்'' என்றவள், ''ஏன் தாத்தா நீங்களே இத்தனைச் சிரமப்படணுமா? ஹோட்டல்ல சொல்லான்னா கேட்க மாட்டேங்கறீங்க.''

''இதில என்ன கஷ்டம் குட்டிம்மா. முதன்முதலா நம்ம வீட்டுக்கு வர மாப்பிள்ளைக்கு... என் கையால செஞ்சா திருப்தி'' அவர் பேச்சில் தேவி கண் கலங்க, அதைப் பார்த்து தன்னு அதட்டினாள்.

''எதுக்குடி இப்ப பைப்பைத் திறந்து விடற? என் அண்ணன் வர்றதுக்குள்ள மையெல்லாம் கரைஞ்சு போய்... சகிக்காது. உன்னை அடையாளம் தெரியாம, அவன் பயந்து ஓடியே போயிடுவான். அடங்கு. நானும் கொஞ்சம் பயந்த சுபாவம் தான் மேடம். அப்புறம் ராத்திரி நேரம் பயந்து போய் என் தூக்கம் போயிடும். நாளைக்கு ஆபிஸ்ல தூங்கி வழிஞ்சு, அந்தச் சிடுமூஞ்சிகிட்ட திட்டு வாங்கணும். என்னை விட்டிடு.''

தான்யாவின் முதுகில் ஓங்கி ஒரு அடி வைத்துவிட்டு, ''என்னடி நினைச்சுகிட்டு இருக்க? நானும் பார்த்துக்கிட்டே யிருக்கேன். வந்ததிலிருந்து, சிபியை மரியாதையில்லாமல் பேசற. ஜாக்கிரதை! அப்புறம் நானே போட்டுக் குடுத்துடுவேன்.''

''சரிம்மா தாயே! தப்பு தான். மன்னிச்சிடு. இப்ப நீ உன் ரூமுக்குப் போய் ஏசியைப் போட்டு உட்காரு. உங்க வழிக்கே நான் இனி வரலை. சரியா? நீ போ.''



# 9

**வி**ஸ்வநாதன் தன் மகன் கௌதமோடு வந்திறங்கினார். சிபியும் தாத்தாவும் இருவரையும் வரவேற்றனர். தாத்தா, விஸ்வநாதனுடன் சம்பிரதாயமாக பேசிக் கொண்டிருந்தார். கௌதமின் விழிகளோ, தன்னவளைத் தேடியது.

அதைப் புரிந்து கொண்ட தான்யா, ''அண்ணா! நீ எத்தனை தடவை சுத்திப் பார்த்தாலும், தாத்தா சிக்னல் கொடுத்த பிறகு தான், நான் போய் உன் ஆளைக் கூட்டிட்டு வருவேன். அதனால, நீ உன் ஃப்ரண்டோட மொக்கை போடறதைத் தவிர, வேற வழியில்லை'' கிசுகிசுத்தாள்.

கௌதமின் முகத்தில் வழிந்த அசடை வைத்தே, ஏதோ வில்லங்கமாகப் பேசியிருக்கிறாள் என்று கெஸ் பண்ணிய சிபிக்கு, சிரிப்பை அடக்க முடியவில்லை.

''என்னடா விஷயம்?''

''ஒண்ணுமில்லை சிபி. சும்மா தான். சமையல் மணம் வீட்டையே தூக்குது. யாரு டிஃபன் செஞ்சா? தேவியா?'' ஆர்வத்தோடு கேட்டவனை ஒரு பரிதாபப் பார்வையில் அடக்கி, ''ஏண்டா! நீ இன்னும் அந்த அளவு டீப்பா அவகிட்ட பழகவேயில்லை. சரிதானே? உன்னோட என்ஜினியரம்மா வுக்கு, சமையல் ரூம் எந்தப் பக்கம் இருக்குன்னு... பிளான்ல மட்டும்தான் அழகா ஸ்கெட்ச் போடத் தெரியும். மத்தபடி ப்ராக்டிகலா டைனிங் ரூமோட சரி. நீ நல்லா விதவிதமா செஞ்சு போட்டா, மூக்கைப் பிடிக்க நல்லா வஞ்சனையில்லாமல் ஒரு பிடி பிடிப்பா. உனக்குச் சமையல் தெரியும் தானே?'' என்று கர்ம சிரத்தையாகக் கேட்டான்.

கௌதம் நிஜமாகவே நொந்து போனான். ''என்னடா இடியைத் தூக்கி தலையில் போடற?''

''நான் போடலை மச்சான். நீயே வாலண்டியரா உன் இரண்டு கையலயும் பவ்யமா வாங்கித் தலையில் போட்டுகிட்ட. உன்னோட லவ்வை முந்திரிக் கொட்டையாட்டம் அவகிட்ட முதல்ல சொல்லிட்ட. அதுக்கு முன்னால என்னை நம்பியிருந்தா, இந்த ஆபத்திலயிருந்து... என் உயிர்த்தோழன்ங்கற பாசத்தில உன்னைக் காப்பாத்தியிருப்பேன். காலையில பெட் காஃபி கொடுத்து அவளை எழுப்பப் போறதே நீ தான். நல்லா ஞாபகம் வச்சுக்க. இதோ பார்றா. ஆபத்தே இன்னொரு கஷ்டகாலத்தோட சேர்ந்து வருது!''

இளஞ் சிவப்பு நிறம் சேலையில் அழகோவியமாய் பதுமை போல நடந்து வந்து தன் தந்தையின் பாதம் பணிந்த தேவியைப் பார்த்த கௌதம், கண் இமைக்கவும் மறந்து போனான். அவன் பார்வையில் சூடாகி சிவந்த கன்னங்கள், மை தீட்டிய கரிய பெரிய நயனங்கள், மிதமான அலங்காரம் என்று புதியதாய் பூத்த சிவப்பு ரோஜாவாய் ஜொலித்தாள். விஸ்வநாதன் அவளைக் கேட்ட கேள்விகளுக்கு, கௌதமின் முன்னால் பதில சொல்லவே தடுமாறிப் போனாள்.

தேவியைப் பற்றி சிபி சொன்னதெல்லாம் மறந்து போய், தேவியே மனம் முழுக்க நிறைந்தாள். அதைக் கவனித்த தான்யா கௌதமிடம், ''அண்ணா! நீ வேற ஷர்ட் ஏதாவது காரில் வெச்சிருக்கியா? இது ஃபுல்லா நனைஞ்சு போச்சு. மாத்திக்க!''

''இல்லையே தன்னு. நல்லாதான இருக்கு. நான் தண்ணியை கையில் தொடலை.''



''இது கண்ணுக்குத் தெரியாது. ஏன்னா, இது தண்ணியில்லை. நீ தேவியைப் பார்த்து விட்ட ஜொள்ளு. பாரு... பெரியப்பாகிட்ட பேச, அவ எப்படித் தடுமாறிகிட்டு இருக்கான்னு. ரொம்ப வழியாதே!''

''போடி!'' முறைத்தான்.

சமையலறை மேடையில் பிளேட்டில் ஸ்வீட்டை எடுத்து வைத்துக் கொண்டிருந்த தான்யாவின் மிக அருகில் சிபி... தான்யாவுக்கு உதறல் எடுத்தது.

அவனோ நிதானமாக அவளிடம், ''ஒரு ஸ்வீட் எடு!'' என்றான். அவள் புரியாமல் ''ம்'' என்றதும், ''ஸ்வீட் எடுன்னு உன்கிட்ட தானே சொன்னேன்?'' -மிரட்டினான்.

ஆபிஸில் கூட இந்தக் குரலில் பேசியதில்லை என்பதால், கொஞ்சம் மிரண்டு போனாள். தயக்கத்துடன் ஒரு ஸ்வீட்டை கையில் எடுத்ததும், ''ம். ஊட்டி விடு!''

அதிர்ச்சியில் உடலே நடுங்கியது. ''பாஸ்!''

''என்ன முழிக்கற? பாஸா... நானா? நீ பேசினதைக் கேட்டா... அப்படித் தெரியலையே! ஒரு தடவை கூட, நீ என்னை மரியாதை குடுத்துப் பேசவே இல்லை. அவன் இவன்னு ஏக வசனத்தில தானே பேசின. மறந்திடுச்சா? ஊட்டுன்னு சொல்றனில்ல!'' அவள் கை பற்றி ஸ்வீட்டை தன் வாயருகில் கொண்டு சென்றான்.

அவளைப் பார்வையால் விழுங்கிக் கொண்டே, ''நான் சாமியாரா? இருடி. என்னை எத்தனைக் கேவலமா திட்ட முடியுமோ, அத்தனைக் கேவலமா திட்டியிருக்க. உன்னை என்ன செய்யட்டும் சொல்லு? என்னைப் பத்தி என்ன தெரியும் உனக்கு? ம்! தினமும் நீ அழகா டிரஸ் பண்ணிட்டு வந்து நின்னா, நான் உன்னைப் பார்க்காம... கடிக்கிறேன்னு

சொன்ன தானே! இப்ப பார். நிஜமாவே உன்னை கடிக்கறேன்.''

அவள் முகம் நோக்கி குனிந்ததும் பயத்தோடு விழிகளை மூடிக் கொண்டாள். சிரிப்போடு அவள் விழிகளில் மென்மையாக இதழ் ஒற்றினான். குரல் குழைய, ''தனு! இப்ப சொல்லு. நான் தயிர் சாதமா? உன் வாய் கொஞ்சம் நீளம் தான். அதையும், நான்தானே அடக்கப் போறேன். கொஞ்சம் விட்டா, என் கழுத்தில நீ தாலி கட்டி கூட்டிட்டுப் போயிடுவ போல இருக்கு. உன் அண்ணன் என்னடி லவ் பண்றான்? அதெல்லாம் லவ்வா? இனிமே பாரு நான் உன்னை என்னவெல்லாம் பண்றேன்னு. எனக்கா ரொமான்ஸ் வராது? நீ என்னை டாவடிக்கறேன்னு... எனக்கு எப்பவோ தெரியும். கல்யாண வயசில தங்கச்சியை வச்சுகிட்டு நான் லவ் பண்ணினா.... அது தப்புன்னு தான் அடக்கி வாசிச்சேன். நான் உன்மேல எத்தனை ஆசை வச்சிருக்கேன்னு ஒரே ஒரு சாம்பிள் காட்டறேன்.'' அவளைச் சுவற்றில் சாய்த்து தன் வலிய கரங்களை இருபுறமும் ஊன்றி நின்றான்.

கண்களில் நீர் முட்ட, ''பாஸ்! ஹால்ல பெரியப்பா, தாத்தா. ஸ்...வீ...ட் கொடுக்கணும். நான் போறேன். விடுங்க!'' -கெஞ்சினாள்.

''அது! புருஷனை மரியாதையா பேசிப் பழகு என்ன? அப்பதான் இந்த மாமனுக்குப் பிடிக்கும். இன்னொரு விஷயம். அப்பப்ப... நான் சொல்றதைக் கேட்கணும். புரிஞ்சுதா? இப்ப விடறேன் போ.'' அவனின் அதிரடி பேச்சில் வெலவெலத்துப் போனாள்.

'அம்மாடி! என் பேச்சை முழுசா கேட்டுட்டான். இல்லல்ல! கேட்டுட்டார் போல இருக்கே. தொலைஞ்சேன். அது தெரியாம, எப்படியெல்லாம் பேசி வச்சிருக்கேன். அதிலயும் ஒரு நல்லது நடந்திருக்கு. துரைக்கு நான் சொல்லாமலே என் மனசை புரிய வச்சாச்சு. அவருக்கும் என்னைப் பிடிச்சிருக்குன்னு தெரிஞ்சதும், வானத்தில் பறக்கற மாதிரி இருக்கு.' மனம் முழுக்க சந்தோஷம் நிரம்பியது.



தாத்தா, ''சார்! ரொம்பச் சந்தோஷம். தேவி சின்னப் பொண்ணு. உலக அனுபவம் இல்லாம என் கைக்குள்ளயே பாதுகாப்பா வைத்து வளர்த்திட்டேன். வெகுளி. அவ கண் கலங்கினா எனக்குத் தாங்காது. அவளோட அம்மா, தேவி குழந்தையா இருக்கும் போதே அவளுக்கு நகை சோத்து வைக்க ஆரம்பிச்சா. இப்ப, தேவைக்கு மேலேயே இருக்கு. அவ போல இரண்டு மூணு இடமும் வாங்கிப் போட்டிருக்கோம். வேற ஏதாவது...''

''ஐயா! நான் உங்க பையன் மாதிரி. பேர் சொல்லி விஷ்வான்னு உரிமையா கூப்பிடுங்க. நாங்க உங்க பேத்தியை மட்டும் தான் கேட்டு வந்திருக்கோம். என் மகனோட சந்தோஷம் தான் எனக்கும். வேற எதுவும் வேண்டாம்'' என்றதும், தாத்தாவின் கொஞ்ச நஞ்ச பயமும் அகன்றது.

''சந்தோஷம் விஷ்வா! மனசு நிறைஞ்சு போச்சு. கௌதமின் அம்மாவுக்குத் தெரியாமல் இந்தக் கல்யாணம் முடிவு பண்றது ரொம்பத் தப்பு. எனக்குச் சம்மதிக்கவே கொஞ்சம் கூட மனசில்லை. இவங்க ரெண்டு பேரும் உயிரா விரும்பறாங்க. அவங்களைப் பிரிக்கக் கூடாதுன்னு தான் ஒத்துக்கறேன்.''

''ஐயா! சஞ்சலப்படாதீங்க. அவன் அம்மா ரொம்பப் பிடிவாதக்காரி. தான் நினைச்சதை சாதிக்கணும்னு அடமா இருப்பா. அதுக்காக, எந்த எல்லைக்கும் போகத் தயங்க மாட்டா. கோபம் வந்தா அவ்வளவு தான். ஆனா, கல்யாணம் முடிஞ்சதுன்னு தெரிஞ்சா... எத்தனைக் கோபம் வந்தாலும் சமாளிக்கலாம். அவளால ஒண்ணும் பண்ண முடியாது. கௌதம் மட்டும்தான் அவளை எதிர்த்து ஆர்க்யூ பண்ணுவான். அவன் பேச்சுக்கு மட்டும் தான் பத்மினி கட்டுப்படுவா. கவலைப்படாதீங்க. நான் பார்த்துக்கறேன்.''

டின்னர் முடிந்ததும், ஒரே வாரத்தில் முகூர்த்த நாளைக் குறித்தார்கள். கோவிலில் திருமணம் செய்து உடனே அதை பதிவு செய்யவும் திட்டமிட்டனர். கௌதமின் தாய் கனடாவிலிருந்து வந்ததும் அவரைச் சமாதானப்படுத்தி, ரிசப்ஷனைச் சிறப்பாக நடத்தி விடலாம் என்று முடிவு செய்தனர்.

''குட்டிம்மா! மாப்பிள்ளைக்கு வீட்டைச் சுற்றிக் காண்பிக்கலையா? தோட்டத்தையும் பார்க்கட்டும்.''

அவள் அறைக்குள் வந்த கௌதம், தேவியைச் சுற்றி வளைத்தான்.

''ஹே பார்பி டால்! நீ இன்னிக்கு நிஜமாகவே அப்படித்தான் இருந்த!'' ஆசையாக மேல் உதட்டிலிருந்த ஸ்டார் மச்சத்தில் இதழ் பதித்தான். ரூமைச் சுற்றிப் பார்த்து விட்டு, ''ரூம் ரொம்ப நீட்டா இருக்கு. ஆமாம். இதென்ன! டெட்டி பியர் யாரோடது? பொம்மை வச்சு விளையாட இங்க யார் இருக்கா? பக்கத்து விட்டு குழந்தையோடதா?'' புருவம் உயர்த்தி வினவினான்.

அதை ஓடிப் போய் எடுத்து தன் மார்போடு அணைத்துக் கொண்டவள், ''போங்க பாஸ்! இது என்னோடது. இவளுக்குச் சோனுன்னு பேர் வச்சிருக்கேன். நல்லாயிருக்கில்ல. நைட் இவளைக் கட்டிப் பிடிச்சிட்டு படுத்தால்தான் தூக்கம் வரும்.''



கௌதம் வியப்போடு, ''அப்ப நானு?'' என்று அவளைச் சிவக்க வைத்தான். பின் உள்ளங்கையில் வரைந்திருந்த மெஹந்தியை வருடி, ''பார்பி! தாத்தாவும், சிபியும் குட்டிம்மான்னு உன்னைக் கொஞ்சி கொஞ்சிக் கெடுத்து வச்சிருக்காங்க. ஒன்பது மாடி ஷாப்பிங் மால் டிசைனை அநாயாசமா வரைஞ்ச என் தேவியா இது? ம்! ரீ பேட். இந்த விஷயத்தில உனக்கு அறிவு வளரவே இல்லைடா. நம்ம குழந்தைக்குப் பேர் வக்கிற வயசாச்சு. இப்பப் போய் பொம்மைக்குப் பேர் வச்சு, அது கூட விளையாடிகிட்டு இருக்க. ம்! என்ன செய்யறது. உனக்கு நிஜ பாப்பாவே தரேன் விளையாட'' என்றதும் அங்கிருந்து ஓடப் பார்த்தவளை வளைத்துப் பிடித்தான்.

''எங்க ஓடறே? நம்ம ஆஃபீஸ் டைனிங் ஹால்ல உன் ஓட்டை வாயால தோட்டத்தைப் பத்தி பெரிய பெரிய லெக்சர் கொடுத்து எல்லார் காதிலயும் ரத்தம் வர வச்சியே. அதை நான் பார்க்க வேண்டாமா? வா... வந்து காட்டு.''

தோட்டம் என்றதுமே முகம் மலர, ''நிஜமா பாஸ்? என் கார்டன் ஃபுல்லா நான் தான் பார்த்துக்கறேன். வந்து பாருங்க. அப்ப தான், நான் சொன்னது புரியும்.''

உண்மையாகவே கார்டன் மிகவும் ரம்யமாக இருந்தது. பல வண்ணங்களில் விதவிதமான மலர்கள் பூத்துக் குலுங்கி இனிமையாக மணம் பரப்பிக் கொண்டிருந்தது. ஈரமான காற்று உடலைத் தழுவி சிலிர்க்க வைத்தது. அதன் அழகில்

லயித்து தன்னையே மறந்து போனான்.

மெச்சுதலாக அவளைப் பார்த்து, ''நல்ல ரசனை பார்பி உனக்கு. நிஜமாகவே உள்ளே நுழைந்ததும் அமைதியும் சந்தோஷமும், தானாகவே மனசுக்குள்ளே புகுந்திடுச்சு. கிரேட்! நம்ம வீட்டு கார்டன் ரொம்ப பெரிசு. ஆனா, இதோட அழகில பத்து பர்சென்ட் கூட இல்லை. இனி உன் திறமையை அங்கேயும் காட்டு. கார்டன்ல கொஞ்ச நேரம் இருந்தாலும் மனசே ஜில்லுன்னு ஆயிடுச்சு. ரியலி வொண்டர்ஃபுல்'!'' -மனதாரப் பாராட்டினான்.

சமையலறையை தான்யா ஒழுங்குபடுத்த, அவளுக்கு உதவும் சாக்கில் அவளையே சுற்றி வந்தான் சிபி.

''பாஸ்! இது சின்ன வேலை தான். நானே செஞ்சிடுவேன். நீங்க போய் அண்ணாகிட்ட பேசுங்க.''

''உன் அண்ணன் தேவியைத் தள்ளிகிட்டுத் தோட்டத்துக்குப் போயிட்டான். நான் என்ன பண்றது? இரண்டு பேரும் சேர்ந்து கிளீன் செஞ்சா சீக்கிரம் முடியுமில்ல.''

இருவரின் அருகாமையும் ஒரு வித மயக்கத்தை அளிக்க, ''சிபி! என்ன பண்ற?'' தாத்தாவின் குரல் அவர்களை மாய உலகிலிருந்து இழுத்து வந்தது.

''தாத்தா கிச்சன் க்ளீன் பண்ணிகிட்டு இருக்கேன்.''

''அப்ப தான்யா?''

''அவங்க தான் தாத்தா க்ளீன் பண்றாங்க. நான் அவங்களுக்கு ஹெல்ப் பண்றேன்.''

''என்ன ஹெல்ப்?''

''அது... ப்ரிட்ஜில மீதியானதை எடுத்து வைக்கிறேன்.''



''ஃப்ரிட்ஜ் டைனிங் ஹால்ல தானே இருக்கு. நீ அரைமணி நேரமா கிச்சன்லயிருந்து வெளிய வரவே இல்லையே.''

தான்யாவுக்கு வியர்த்து விட்டது. அதைப் பார்த்து டென்ஷனான சிபி, ''தாத்தா! சும்மா சும்மா கேள்வி கேட்டுட்டே இருக்காதீங்க. நீங்க கேட்கற ஸ்பீடுக்கு என்னால யோசிச்சு பதில் சொல்ல முடியலை!''

''ஏன் ராஜா அந்தளவு பொய்யை ஸ்பீடா யோசிக்க வரலையா?''

''இப்ப என்னங்கறீங்க தாத்தா? நாளைக்கு ஆஃபிஸ்ல அவங்க செய்ய வேண்டிய முக்கியமான வொர்க் பத்திச் சொல்லிகிட்டு இருந்தேன். போதுமா?''

''ஆனா, பார்த்தா அது மாதிரி தெரியலையே?'' சீண்டினார்.

''முடியல விட்டுடுங்க தாத்தா. இல்லேன்னா அழுதுடுவேன். உங்களுக்கு எது மாதிரி தெரியுதோ அது தான் நிஜம். ஆளை விடுங்க'' கையெடுத்துக் கும்பிட்டு விட்டு வெளியே ஓடியே போனான்.

சிக்கிக் கொண்ட தான்யா, ''தாத்தா!'' என்றாள்.

''தன்னு! நாளைக்கு அப்படி என்ன முக்கியமான வேலை உனக்கு? ம்!'' கண் சிமிட்டினார்.

''தாத்தா...''

''தன்னு பார்த்துகிட்டு தான் இருந்தேன். என் பேரனோட முகத்தில இத்தனைச் சந்தோஷத்தையே நான் இப்ப தான் பார்க்கறேன். அவன் அம்மா, அப்பா போன பிறகு தன்னோட ஃபீலிங்ஸ் எல்லாம் மறைச்சுகிட்டு, எங்களுக்காகவே வாழ

ஆரம்பிச்சுட்டான். அவனுக்காக ஒரு வாழ்க்கை இருக்குன்னு யோசிச்சதே இல்லை. அவனோட எல்லா விருப்பமும் தேவியைத் திருப்திப்படுத்தறதா மட்டும் இருக்கும். அவன் உன்கிட்ட சிரிச்சு பேசறதைப் பார்க்க ரொம்பச் சந்தோஷமா இருக்கு. முதல்ல குட்டிம்மா கல்யாணம் முடியட்டும். அப்புறமா உன் பெரியப்பாகிட்ட நானே பேசறேன். சீக்கரமா உங்க கல்யாணத்தையும் முடிச்சிடலாம். சரியாம்மா.''

அவர் பாதம் பணிந்த தான்யா, ''தாத்தா அவர் தான் என் வாழ்க்கைன்னு நான் எப்பவோ முடிவு பண்ணிட்டேன். எங்க மனசை புரிஞ்சுகிட்டதுக்கு தேங்க்ஸ்.''

''அசடு! தாத்தாவுக்கே தேங்க்ஸ் சொல்லுவியா. எதுக்கு அழுகை? கண்ணைத் துடை. என்னோட பேரப் புள்ளைங்க சந்தோஷம் தான் எனக்கு முக்கியம். இரண்டு நல்ல விஷயங்கள் நடக்கப் போகுது. ஹேப்பியா இரு. நான் விஷ்வாகிட்ட பேசிட்டு இருக்கேன். இன்னும் பத்து நிமிஷம் கழிச்சு போய்த் தேவியை கூட்டிட்டு வா. அவங்க கிளம்ப வேண்டாமா?''

தாத்தா பேசுவதைக் கேட்ட சிபியின் மனம் துள்ளியது. தான்யாவை இழுத்து அணைத்தான். ''தனு! ஐயாம் சோ ஹேப்பி! தாத்தா முடிவு செஞ்சுட்டா அதற்கு அப்பீலே இல்லை. இப்பவே நம்ம கல்யாணம் முடிஞ்ச ஃபீலிங் வந்திடுச்சு. யூ ஆர் மைன் டியர்!'' கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான்.

அவனைப் பிடித்து தள்ளியவள், ''அதெல்லாம் லைசென்ஸ் கிடைச்ச பிறகுதான். முதல்ல பொறுப்பான அண்ணனா, முதல்ல உங்க தங்கச்சி கல்யாணத்தை முடிக்கப் பாருங்க'' என்று சிட்டாகப் பறந்து விட்டாள்.



# 10

**நா**ட்கள் விரைந்தன. தாத்தாவுக்கும் தன் உயிரான பேத்தியைப் பிரியும் வேதனை. தங்கள் கலக்கம் அவளையும் தொற்றிக் கொள்ளும் என்பதால் அதை மறைத்து புன்னகையுடன் இருவரும் அவளையே சுற்றி வந்தனர். சிபி அவளைத் தினமும் ஷாப்பிங் அழைத்துச் சென்று உடைகளும் நகைகளும் வாங்கிக் குவித்தான். தாத்தா தினமும் அவளுக்குப் பிடித்த உணவு வகைகளை செய்து கொடுத்தார்.

சிபி, ''குட்டிம்மா! ரொம்ப நாள் ஆச்சு. இன்னிக்கு வெளியே போய்ச் சாப்பிடலாமா? உனக்குப் பிடிச்ச சைனீஸ் ரெஸ்டாரண்ட் ஓ.கே?''

''வேணாம் ப்ரோ! இன்னிக்கு வத்தக்குழம்பு சூப்பரா இருந்தது. அதே போதும். இன்னிக்கு மொட்டைமாடியில தான் டின்னர். சூடா சாதம் வச்சுக்கலாம். தாத்தா நமக்கு உருட்டிக் கொடுக்கட்டும். அப்படிச் சாப்பிட்டு ரொம்ப நாள் ஆச்சு.''

இரண்டு பெரிய கிண்ணங்களை நிறைய குழம்பும் தயிரும் பிசைந்து எடுத்துக் கொண்டு, அப்பளம் ஊறுகாய் சகிதமாக மாடிக்குச் சென்றனர். தாத்தா தன் இரு செல்லங்கள் கையிலும் சாதத்தை உருட்டிக் கொடுக்கக் கொடுக்க, அப்பளத்தைக் கடித்துக் கொண்டு சந்தோஷமாக பேசிச் சிரித்துக் கொண்டே உணவை முடித்தனர்.

''கீழே போலாமாடா?''

''இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே இருக்கலாம்'' அவர் மடியில் தலை வைத்துப் படுத்தாள்.

''தாத்து! உங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு நான் எப்படி இருப்பேன்?'' எனும் போதே கண்கள் நிறைந்து அவர் மடியை நனைத்தது.

அவள் தலையை வருடி, ''குட்டிம்மா! உன் மனசுக்குப் பிடிச்சவரோடு தானே வாழப்போற. ஹேப்பியா இருக்கணும். தாத்தா வளர்த்த பொண்ணு தானே. குடும்பம் நடத்தவே தெரியலைன்னு யாரும் சொல்ற மாதிரி நடக்காதே. பொறுப்பா இருக்கணும். தேவி அருமையான பொண்ணுன்னு பேர் வாங்கணும்.

கௌதம் தம்பி ரொம்ப நல்லவர். உன் மேல உயிரையே வச்சிருக்கார். அவர் மனசு கோணாம நடந்துக்கணும். உன் மாமியாரைத் உன்னோட அன்பால புரிய வை. தானாகவே ஏத்துக்குவாங்க.''

சிபியும், ''ஆமாடா குட்டி! அவங்க சமாதானம் ஆகறவரை உன் ஃபேஸை கண்லயே காட்டிடாதே. அப்புறம் டேஞ்சர் தான். எங்ககிட்ட காட்டற மாதிரி உன் டெரர் லுக்கை கௌதம்கிட்ட காட்டாதேடா பய புள்ள பயந்துடப் போறான்.

''போடா! பாருங்க தாத்தா! நான் ஏன் சமையல் செய்யணும்? தினமும் லேட்டா தான் எழுந்திரிப்பபேன். கிச்சன் பக்கமே போக மாட்டேன். நான் கண்டிப்பா ஆஃபிஸ் வரணும்னு பாஸ் சொல்லியிருக்கார். அதனால ரெண்டு பக்கமும் என்னால வேலை செய்ய முடியாது.''

''கஷ்டம் தான்!'' என்ற சிபியிடம், ''ஓ.எம்.ஜி. இன்னொரு ஐடியா ப்ரோ! மேரேஜ் முடிஞ்சு பாஸ் இங்கேயே



வரட்டும். எப்படித் தாத்தா! எல்லா ப்ராப்ளமும் தானா சால்வ் ஆயிடும்.''

''நான் இந்த ஆட்டத்துக்கு வரலை. கீழே போறேன்'' என்று சிபி எழுந்து கையை விரித்தான்.

திருமணத்திற்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. அன்று காலையிலிருந்து கௌதமின் போனை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்த தேவி அவனை அழைத்தாள்.

''என்ன பாஸ்! மணி ஒண்ணாகப் போகுது. உங்ககிட்டயிருந்து போனே காணோம். அதுக்குள்ள என்கிட்ட பேசி போரடிச்சுடுச்சா.

''ஹே! என்ன பேசறே? காலையில் நான் இன்னும் டிபனே சாப்பிடலை தெரியுமா? தாத்தா உன்னை ஆஃபீஸ் போக வேண்டான்னு சொன்னதும் வீட்ல உட்கார்ந்து ஜாலியா என்ஜாய் பண்ற. நீ வந்திருந்தாலாவது என் வயிற்றுக்கு ஏதாவது கிடைச்சிருக்கும். கேட்கக் கூட ஆளில்லை.

அவன் சாப்பிடவில்லை என்றதும் பதறிப் போனாள். ''சாப்பிடக் கூட முடியாம அப்படி என்ன முக்கியமான வேலை பாஸ்?''

''நம்ம ஆஃபீஸ் டோட்டலா செக்யூரிட்டி சிஸ்டம் லான்ச் பண்றாங்க. சேஃப்டி லாக்காஸ், சிசி கேமரா; அலாரம்ஸ்-ன்னு ஐந்து தளத்திலும் மும்முரமா வேலை நடந்துகிட்டு இருக்கு. நமக்கு இப்ப நிறைய பெரிய ப்ராஜெக்ட்ஸ் கமிட் ஆகியிருக்கு. அதனால இன்னும் கொஞ்சம் அட்வான்ஸ்டா இதெல்லாம் மாத்தி அமைக்க மேரேஜுக்குப் பிறகு பத்து நாளாவது ஃபிரீ டைம் கிடைக்கும். அதான் கொஞ்சம் பிசிடா. நீ லஞ்ச்

சாப்பிட்டாச்சா? இன்னிக்கு என்ன ப்ரோகிராம்? முடிஞ்சா ஈவினிங் மீட் பண்ணலாம்டா'' அவன் குரலில் களைப்பு.

அவன் சாப்பிடவில்லை என்றதுமே கேரியரில் லஞ்ச் எடுத்து வைத்தாள்.

''பாஸ்! மணி சாரை வீட்டுக்கு அனுப்புங்க. லஞ்ச் கேரியர்ல போட்டு வெச்சிருக்கேன். நீங்க சாப்பிட்டதும் தான் நான் சாப்பிடுவேன். அப்படி வயிற்றைக் காயப் போட்டு யாருக்காவும் சம்பாதிக்க தேவையில்லை. உங்ககிட்ட வேலை செய்யறவங்களை சூபர்வைஸ் பண்ணவே தேவையில்லை. பர்ஃபெக்டா செய்வாங்க. முதல்ல சாப்பிடுங்க.''

''பார்பி! இந்த அக்கறை தான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. லவ் யூ சோ மச். ஈவினிங் எங்கேயாவது போகணுமா?''

''ம். ஷாப்பிங் போகணும் அவ்வளவு தான்.''

''ம். நான் மணியை அனுப்பறேன்.''

மாலை ஆறு மணி. ஸ்கை வாக் காம்ளெக்சில் ஆரஞ்சு நிற சல்வார், தளரப் பின்னிய கூந்தல், காதலனைக் கைபிடிக்கும் மன நிறைவு, சந்தோஷம் முகத்திலும் பிரதிபலிக்க தான்யாவிடம் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டே ஒரு கடையில் காஸ்மெடிக்ஸ் தேர்வு செய்து கொண்டிருந்தாள்.

அங்கிருந்த இளைஞன் ஒருவன் ஏதோ வாங்கும் சாக்கில், இவர்கள் அருகிலேயே நின்று கொண்டிருந்தான். ஒரு அழகான பெண்ணைப் பார்க்கும் ஆர்வம் அவன் கண்களில் மின்னியது. உள்ளே நுழைந்த கௌதம், இதைப் பார்த்ததும் ரௌத்ரமானான். வேகமாக அவள் அருகே



சென்று தேவியின் தோளில் கை போட்டு உரிமையோடு, ''போகலாமா'' என்றதும் விதிர்த்துப் போனாள்.

இந்த நேரத்தில் கௌதமை இங்கே எதிர்பாராத ஆனந்த அதிர்ச்சியில் விழி விரிக்க, ''பாஸ்! நீங்க இங்க எங்க வந்தீங்க? சர்ப்ரைஸ் ஷாக்! உங்க வேலை முடிஞ்சுதா?''

''உன் கேள்விக்கெல்லாம் கார்ல பதில் சொல்றேன். என்னால கோபத்தைக் கன்ட்ரோல் பண்ண முடியலை. அவன் உன்னைப் பார்த்துகிட்டேயிருந்தான். கண் பெரிசா விரிஞ்சுகிட்டே இருக்கு. அவனை அடிச்சு நொறுக்கலாம் போல கோபம் வருது.''

''இது உங்களுக்கே ஓவரா தெரியலையா. அது இருக்கட்டும் எங்கே போறோம். தாத்தாகிட்ட சொல்லணும். தன்னு அந்தப் பக்கம் போனா. இருங்க அவளைக் கூப்பிடறேன்.''

''நான் ஒரு வார்த்தை பேசினா, நீ ஒன்பது வார்த்தை பேசற. தன்னு வீட்டுக்கு போயிட்டா. வா.''

''பாஸ்! அவ என்கிட்ட சொல்லவே இல்லை. தனியா எப்படிப் போவா?''

''ஷ் அப்பா. உன் பாசமலர் அண்ணன் வந்தான். இன்னிக்கு நம்ம மேரேஜ் நடக்கற கோயில்ல சில அரேஞ்ச்மெண்ட்ஸ் பத்தி குருக்கள்கிட்ட பேசணும். என் அப்பாவும், சிபியும் போறாங்க. தன்னுவை நம்ம வீட்டில விட்டுட்டு அப்பாவை கூட்டிட்டுப் போவான். என் சித்தப்பா, சித்தியெல்லாம் நேத்தே இங்கே வந்தாச்சு. அதனால உன் ஃப்ரண்ட் பத்திரமா வீடு போய் சேர்ந்திடுவா.''

''ம்!''

''தொண்டையே வறண்டு போச்சு. ஏதாவது ஜூஸ் வாங்கிட்டு போலாம்.''

''பாஸ்!! பாஸ்!!

''இன்னும் என்ன பார்பி?'' எரிச்சலானான்

''தாத்தா...!''

''தாத்தாகிட்ட உன்னைக் கூட்டிட்டுப் போக பாமிஷன் வாங்கியாச்சு. பத்திரமா உன்னைக் கொண்டு போய் விட்டுடுவேன். கார்ல ஏறுவதற்குள் உன் தாத்தாகிட்ட பேசிடு. அப்புறமா பேசக் கூடாது. சரியா.''

மறுபடி ஏதோ கேட்க ஆரம்பித்ததும், வேகமாக ஜூஸ் கார்னருக்குள் நுழைந்தான். தேவி செல்போனை எடுத்து தாத்தாவை அழைத்துப் பேசினாள். பின் தன்னுவிடமும் பேசுவதற்குள் கௌதம் வந்து சேர்ந்தான்.

காரில் ஏறியதும் ஜூஸை முழுவதுமாக குடித்து முடித்துவிட்டு, ''போகலாமா?'' என்றாள்.

''ம். மதியம் லஞ்ச் நல்லா இருந்ததா? மீதம் வைக்காம சாப்டீங்களா?''

''மீதமா? என் பசிக்கு அதுவே பத்தலை. தாத்தா தானே செய்தார்? அருமையா இருந்தது. என்னமே எனக்காக நீயே பார்த்து பார்த்து சமைச்சது போல பில்ட் அப் பண்ற'' குரலில் உல்லாசம்.

உண்மையிலேயே தேவியின் சமையல் தான். அதைச் சொல்ல மனமில்லாமல், ''நாம எங்கே போறோம் பாஸ்? சொல்லுங்க.''

''இன்னும் அஞ்சே நிமிஷம். தெரிஞ்சிடப் போகுது.''

அவன் தோள் மீது உரிமையோடு சாய்ந்து கொண்டு காரில் ஒலித்த பாடலில் லயித்துப் போனாள்.



*காத்திருந்தாய் அன்பே. எந்தன் காதல் நீதானே.*

*ஒரு லட்சம் விண்மீன். மழையாய் பொழிகிறதே.*

பாடலின் மொத்த வரிகளும், அவர்களையே நினைத்துப் பாடியதைப் போல உருகிப் போனாள்.

''பாஸ்! ஐ லவ் யூ!'' அவனோடு இன்னும் நெருக்கமாக ஒட்டிக் கொண்டாள்.

''பார்பி! நான் கார் ஓட்டிட்டு இருக்கேன். இன்னும் இரண்டு நாளைக்கு என்னை நல்ல பையனா இருக்க விடமாட்ட போல இருக்கு. அப்புறம் என்னைத் தப்பு சொல்லாதே'' செல்லமாக அவள் நெற்றியில் முட்டினான்.

# 11

**கா**ர் அண்ணாநகரில் ஒரு குட்டி பங்களாவின் முன் நின்றது.

''பாஸ்!''

''வெல்கம் ஹோம் பார்பி! இதுதான் நம்ம வீடு. உன்னோட சாம்ராஜ்யம். இன்னும் இரண்டு நாளில் இந்த வீட்டு மகாராணியா அடியெடுத்து வைக்கப் போற. எல்லோரும் பார்க்கறதுக்கு முன்னால உன்னைக் கூட்டிட்டு வந்து காண்பிக்க நினைச்சேன்.

கதவைத் திறந்தவன் இடைவரை குனிந்து, ''வாருங்கள் தேவியாரே!'' என்றதும், அவள் இதயத்தில் சிறகுகள் முளைக்க, வானத்தில் பறந்தாள்.

முகமெங்கும் மகிழ்ச்சிப் பூக்கள் பூத்திருக்க, ''உத்தரவு மகாராஜா! என்று அவன் கைப்பற்றி, நெஞ்சம் படபடக்க வலது காலை எடுத்து வைத்து உள்ளே சென்றாள். அவளது கையை விடாமல் வீடு முழுக்க சுற்றிக் காட்டினான்.

முகம் விகசிக்க, ''பாஸ்! ப்யூட்டி ஃ புல். வீடு ரொம்ப ரொம்ப அழகா இருக்கு. இந்த திங்க்ஸ் எல்லாம் எப்ப வாங்கினீங்க? எனக்குத் தெரியவேயில்லை.''

''உனக்கு சர்ப்ரைஸாக இருக்கட்டுன்னு சொல்லலை. சிபியும், நானும் தான் வாங்கினோம். பிடிச்சிருக்கா?''

''ரொம்ப... இது எல்லாத்தையும் விட உங்களை!'' தேவியின் கைகள் அவன் இடையைச் சுற்றியது. அவன் மார்பில் சுகமாக சாய்ந்து கொண்டாள்.

''லவ் யூ பார்பி! உன்கிட்ட இத்தனைப் பைத்தியமா மாறுவேன்னு நினைச்சுக் கூடப் பார்க்கல. ஆனா, என் மனசு முழுக்க நீதான். நீ மட்டும் தான். உன்னைத் தவிர யாருக்கும் இடம் இல்லை.''

''தேங்க்யூ பாஸ்! ஆரம்பத்தில என்னைத் திட்டினப்ப கூட என்னால உங்களை விட்டு விலக முடியலை. தினமும் திட்டும் போதாவது என்கிட்ட பேசுவிங்களேன்னு நினைப்பேன்''

அவளை இறுக அணைத்தவன், அவள் உச்சியில் இதழ் பதித்து, ''நான் லக்கிடா! எந்தப் பெண்ணுமே என்னை அடிமைப்படுத்த முடியாதுன்னு கர்வமா இருந்தேன். உன் அழகால நீ என்னை ஜெயிக்கல. உன் குணம் தான் என்னை உன்கிட்ட கட்டிப் போட்டுச்சு. நீ லீவ் எடுத்த போது தான் நான் உன்னை எந்த அளவு விரும்பறேன்னு புரிஞ்சுகிட்டேன். என்னோட பலமும், பலவீனமும் நீதான்.



உன்கிட்ட நான் தோத்துப் போயிட்டேன். அதில எனக்கு சந்தோஷம் தான். நீ வேணும் தேவி. என் வாழ்க்கை முழுக்க, நீ என் கூடவே இருக்கணும். இதை நம்ம கல்யாணத்துக்கு முன்னால உன்கிட்ட தனியா, அதுவும் நம்ம வீட்ல சொல்லு நினைச்சுத் தான் இங்க கூட்டிட்டு வந்தேன். ஐ லவ் யூ மை பார்பி டால்!'' அவளை அணைத்திருந்த வலிமையான கரங்கள் உணர்ச்சி வேகத்தில் மெல்ல நடுங்கியது.

கௌதமின் பேச்சைக் கேட்டதும், தேவியின் மனதில் பிரவாகம் பொங்கியது. முகம் சிவக்க, தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல், கரைகாணா காதலில் தேவியின் கரங்கள் அவன் கழுத்தை வளைத்து, தன் துடிக்கும் இதழ்களை அவன் கன்னத்தில் பதித்தாள். கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் மார்பில் தஞ்சமடைந்தாள். கௌதமும் உணர்ச்சி வசப்பட்டிருந்தான்.

சிறிது நேரம் மௌனத்தில் கழிய, ஃபிரிட்ஜிலிருந்த ஐஸ்கிரீம் எடுத்து அவளிடம் கொடுத்தவன், ''பார்பி! உனக்காக வாங்கி வைத்து விட்டு தான் வந்தேன். சாப்பிடு. டைம் ஆச்சு போகலாம். தாத்தா வெயிட் பண்ணுவார்.''

தேவி அவனுக்கும் ஊட்டி விட்டாள். இருவரின் மனதும் நிறைய, அமைதியாகவே வீடு திரும்பினர்.

திருமண நாளும் அழகாய் புலர்ந்தது. காஞ்சிப் பட்டில் தங்கச் சிலையாய் தயாரானாள் தேவி. அனைவர் மனமும் கனத்துக் கிடக்க, தாத்தாவின் பாதம் பணிந்த தேவியால் அழுகையைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. கதறி அழுதவளை, அணைத்துக் கொண்ட சிபியின் கண்களிலும் கண்ணீர்.

தான்யா சமாதானப்படுத்தினாள். ''தேவி! என்னப்பா!

எவ்வளவு சந்தோஷமான விஷயம் நடக்கப் போகுது. கண் கலங்கலாமா? தாத்தா கூட அழறார் பார்'' என்றவள், சிபியை அழைத்துக் கொண்டு ரூமுக்குச் சென்றாள்.

''திங்க்ஸெல்லாம் எடுத்தாச்சா? நீங்களே கலங்கினா எப்படி? என் அண்ணன் ரொம்ப நல்லவன். தேவி சந்தோஷமா இருப்பா. அண்ணன் கிளம்பியாச்சான்னு நாலு தடவை போன் பண்ணிட்டான். மாமா! நீங்க அழுதா நல்லாவே இல்லை. கொஞ்சம் சிரிங்க பாஸ்!'' என்று அவனை ஆறுதல் படுத்தியவள், அவசர முத்தம் ஒன்றைப் பதித்து விட்டுச் சென்றாள்.

சிபியின் இதழ்களில் சின்னப் புன்னகை எட்டிப் பார்த்தது.

அக்னி சாட்சியாக, நெருங்கிய அலுவலக நண்பர்கள் முன்னிலையில், தன் உயிரானவளின் சங்குக் கழுத்தில் மங்கல நாணைப் பூட்டி, அவளைத் தன் வாழ்வோடு இணைத்துக் கொண்டான். அனைவரிடமும் ஆசி பெற்ற பின் முறையாக திருமணத்தை பதிவும் செய்தனர். விருந்து முடிந்து, விஸ்வநாதன் மணமக்களைத் தன் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போக விரும்பினார்.

ஆனால், ''ஸாரிப்பா! அம்மா முதல்ல எங்கே மேரேஜை ஏத்துக்கட்டும். அவங்ககிட்ட சொல்லாம கல்யாணம் பண்ணியதே கில்டியா இருக்கு. அவங்க ஆசிர்வாதத்தோட, நம்ம வீட்டுக்கு வரோம். இப்ப அண்ணா நகர் வீட்டுக்குப் போகலாம். அம்மா வரும் வரை, நீங்களும் எங்க கூட இருங்கப்பா'' என்றான் கௌதம்.

மறுத்துப் பேச வழியில்லாமல், கௌதமின் பேச்சை ஏற்றுக் கொண்டார். புது வீட்டில் தேவி விளக்கேற்றி, பால்



காய்ச்சினாள். அதன் பிறகு, அவர்களை சிபி தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். இரவு உணவு முடிந்ததும், தான்யா தன் பெற்றோருடன் கிளம்பினாள்.

விஸ்வநாதன், ''ஐயா! நானும் கிளம்பறேன். உங்களுக்கு இன்னிக்கு ரெஸ்டே இல்லை. நல்லா தூங்கி எழுந்திருங்க. எங்க வீட்டு சமையல்காரம்மா ஒரு மாதத்துக்கு இங்க இருக்கட்டும். அங்க இரண்டு பேர் இருக்கறதால பிரச்சனை இல்லை. ரொம்ப சோர்வா தெரியறீங்க.''

''அதெல்லாம் இல்லை விஷ்வா! இன்னிக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கேன். என் பேத்திக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்சிடுச்சு. அதே மாதிரி, என் பேரனுக்கும் அவனுக்குப் பிடிச்ச மாதிரி அமைஞ்சா நிம்மதி. அது பத்திக் கூட, உன்கிட்ட பேசணும். இங்க சங்கரோட ரூம் கீழேயே இருக்கு. ஏ.சி யோட வசதியா தான் இருக்கு. இன்னிக்கு இங்கேயே படு. அங்கே போயும் தனியா தானே இருக்கணும்.''

தேவி சிம்பிளான ஷிபான் சேலையில் கழுத்தில் மின்னிய மஞ்சள் கயிறு தனி சோபையைத் தர, நாணம் பொங்க தன் அறைக்குள் நுழைந்தாள். அவள் வரவை எதிர்பார்த்து காத்திருந்த கௌதம்.

''பார்பி! நீ இனிமே எனக்குத் தான் என்பதில், உலகத்தையே ஜெயிச்ச மாதிரி சந்தோஷம். என்னை நிமிர்ந்து பாருடா'' அவள் கன்னத்தை இரு கைகளிலும் ஏந்தினான்.

நாணம் மேலிட கண்களை மூட, சிவந்த இதழ்களின் மீதிருந்த ஸ்டார் மச்சம் அவனைக் காந்தமாக இழுத்தன. இதுவரை தூய்மையான காதலை மட்டுமே பொழிந்தவன், இனி தான் உரிமையுள்ள கணவன் என்பதையும்

நிலைநாட்டினான். தேவி அவன் காதலில் கரைந்து அவனோடு ஐக்கியமானாள்.

திருமணம் முடிந்து இரண்டு நாட்கள், தேவி தன் வீட்டிலேயே கழித்தாள். அதில் ஒரு நாள் குட்டி விருந்தே சமைத்து மொட்டை மாடிக்கு எடுத்துச் சென்றனர்.

அன்று பௌர்ணமி நிலவொளியில் தேவதையாக மின்னிக் கொண்டிருந்த தன் மனைவியையே, கண் சிமிட்டாமல் பார்த்தான். தான்யாவும் வந்திருந்ததால் ஜாலியாக சிரித்தும் பேசிக் கொண்டே இரவு உணவை முடித்தனர். தாத்தா உறங்கச் சென்றார். தான்யாவை, விஷ்வநாதன் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். சிபியும் அவர்களுக்குத் தனிமை கொடுத்து விட்டு கீழே வந்தான்.

இதமான காற்று அவர்களைத் தழுவிச் சென்றது. நிலவை ரசித்துக் கொண்டிருந்த தன் மனைவியை தழுவி முத்தமிட்டு, ''பார்பி! இப்படி ஒரு திருப்தியான டின்னரை நான் சாப்பிட்டதே இல்லை. ஐ லைக் இட். நம்ம வீட்ல கூட அடிக்கடி இது மாதிரி அரேஞ்ச் பண்ணணும். லைஃப் பை இவ்வளவு சிம்பிளா சந்தோஷமா அனுபவிக்க முடியும்னு இப்ப தான் புரியுது. வெரி நைஸ். என் அப்பாவோட பேசற நேரத்தைத் தவிர, வீட்ல தனிமை தான் என்னைத் தின்னுட்டு இருந்தது. இப்பல்லாம் அந்த உணர்வே எனக்கு வர்றதில்லை. தேங்க்யூ சோ மச்'' அவள் மடியில் தலை வைத்து படுத்து அவள் இடுப்பை வளைத்துக் கொண்டான்.

புது மணத் தம்பதிகளுக்கே உரித்தான கொஞ்சல்களும், சீண்டல்களும் நள்ளிரவு வரை தொடர்ந்தது. திருமணம் முடிந்து நான்கு நாட்கள் சீராடி விட்டு, அண்ணா நகர் வீட்டுக்கு தேவி கிளம்பியபோது,



எல்லோர மனமும் கனத்துக் கிடந்தது.

தாத்தா மனதை மறைத்து, ''குட்டிம்மா! சந்தோஷமா கிளம்புடா. பொறுப்பா நடந்துக்க. இங்கே இருந்த மாதிரி விளையாட்டுத்தனமாக இருக்காதே. மாப்பிள்ளையை நல்லா கவனிச்சுக்க. ஒரு வாரம் நீ ஆஃபீஸ் போக வேண்டாம். புது இடம், வீட்டில் நல்லா பழகி அட்ஜஸ்ட் பண்ணிட்டு, அப்புறமா ஆஃபீஸ் போகலாம். சரியா. கொஞ்சம் சிரிடா. நடந்தா பத்தே நிமிஷத்தில உன் வீட்டுக்கு வந்திடலாம். சிபி ஆஃபீஸ்ல இருந்து வந்ததும் தினம் உன்னை வந்து பார்க்கிறேன்.''

''தாத்து! நிஜமாவே நான் இந்த வீட்டை விட்டுப் போகப் போறேன். என் மனதுக்குப் பிடிச்ச வாழ்க்கை தான். ஆனாலும், என்னை உங்ககிட்டயிருந்து பிரிச்சிருச்சே! உங்க முகத்தைப் பார்த்து கண் விழிச்சு, உங்க கையால காபி குடிச்சு, நீ ஊட்டற டிபனைச் சாப்பிடற சுகம், தினமும் எனக்கு இனி கிடைக்காது.

என் கார்டன், அதையும் ரொம்ப மிஸ் பண்ணுவேன். சிபி அண்ணா! டி.வி ரிமோட்டுக்கும் போட்டிப் போட உனக்கு ஆள் இல்லை. எப்ப வேணா நான் இங்கே வருவேன்'' சன்னக் குரலில் பேசியவளின் மன இறுக்கம் வெடித்துக் கிளம்ப, ''நான் உன் கூடவே இருக்கேன். ப்ளீஸ்!'' சிபியைக் கட்டிப் பிடித்து அழ ஆரம்பித்தாள்.

கௌதம் வேகமாக வந்து அவளை அணைத்தான். ''பார்பி! என்ன இது? நாம ஃபாரினா போறோம். சியர் அப் மை டியர்! தாத்தா ஒரு நிமிஷம் கண்ணை மூடுங்க'' அவள் கன்னத்தில் இதழ் ஒற்றி, அவளைத் தோளோடு சேர்த்தணைத்தான்.

பின் தாத்தாவிடம், ''தாத்தா ப்ளீஸ்! நீங்களும் எங்க கூட வாங்க. சிபி நீயும் தான். இரண்டு நாளாவது எங்க கூட இருந்தா, தேவிக்கு ஆறுதலா இருக்கும். அவ அழறதைப் பார்த்தா கஷ்டமா இருக்கு.''

சிபி, ''நாங்க எதுக்குடா உங்களுக்கு டிஸ்டர்பன்சா...?''

''ம், பேசாதே. கிளம்பு... மரகதம்மா நீங்களும் கிளம்புங்க'' உத்தரவிட்டான்.

முகம் மலர, தனக்காக பார்த்துப் பார்த்துச் செய்யும் காதல் கணவனை, ஆசையுடன் பார்த்தாள் தேவி. இரண்டு நாட்களும் கோயில், தீம் பார்க், மகாபலிபுரம் என்று தான்யாவையும் கூட்டிக் கொண்டு ஊரைச் சுற்றினார்கள். தாத்தாவும், விஸ்வநாதனும் வீட்டிலேயே ஓய்வெடுக்க, நால்வர் அணியும் உற்சாகமானது.

தாத்தா, ''விஷ்வா! சிபியும், தான்யாவும் விரும்பறாங்க. அவனைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. எங்க குட்டிம்மா இல்லாத தனிமையை, தான்யா தான் நிரப்பணும். நீ முதல்ல உன் தம்பிகிட்ட பேசு. சீக்கிரம் அவங்க மேரேஜும் முடிஞ்சா, நான் நிம்மதியா ஓய்வெடுத்துக் குவேன்.''

''என் தம்பிகிட்டயிருந்து எந்த எதிர்ப்பும் வராது. என் பேச்சை மீற மாட்டான். சீக்கிரமே பேசி முடிக்கறேன். இந்த ஒரு கல்யாணத்தையே பத்மினிகிட்ட பேசி சம்மதம் வாங்கறது கஷ்டம். அதனால அவ வரட்டும். இப்ப உறுதி பண்ணிட்டு, மேரேஜ் பத்மினி வந்ததும் வைத்து விடலாம்.''

எல்லோரும் கிளம்பிச் சென்ற பின், மறுநாள் காலை ஏழு மணிக்கு தேவிக்கு விழிப்பு வந்தது. 'இத்தனை நாளாக வீடே கலகலப்பாக இருந்தது. இனிமே நான் தான் எல்லாவற்றையும் சமாளிக்கணும். முதல்ல கார்டனைக் கொஞ்சம் மாத்தணும். ஓ.எம்.ஜி! மரகதம்மா தாத்தா வீட்டுக்குப் போயிட்டாங்க. இனி நான் தான் சமையலா? போச்சுடா' வலிமையான கரங்களைத் தன்னைச் சுற்றிப் படர விட்டு உறங்கும் கணவனையே விழியகலாது பார்த்தாள்.



'அவனின் அன்பு தான் தன்னைக் கட்டிப்போட்டு உயிராய் இருந்தவர்களை விட்டுப் பிரிந்து வரச் செய்திருக்கிறது' என்று எண்ணி நெகிழ்ந்து போனாள்.

அவன் நெற்றியில் முத்தமிட்டு விட்டு, மெதுவாக அவன் கையை விலக்கினாள். அடுத்து நொடியே அவன் கை வேகமாக இறுக்கி அணைத்தது.

''பார்பி! இன்னிக்குச் சண்டே தானே! என்ன அவசரம்? நைட் பூராவும் தூங்கலை. நீயும் தூங்கு.''

''மணி ஏழாச்சு பாஸ்! நான் போறேன். நீங்க தூங்குங்க.''

''நீ இல்லாம எனக்கு இங்க என்ன வேலை?'' அதற்கு மேல் பேசவே விடவில்லை.

குளித்து விட்டு காபியுடன் ஹாலிலிருந்த ஊஞ்சலில் வந்தமர்ந்தாள். அவளுக்கு மிகப் பிடித்தமான இடம். சூடான காபியை ரசித்துக் குடித்தாள்.

கௌதம் எழுந்து வந்து அவளை பின்னாலிருந்து அணைத்து, ''ரொம்ப வாசமா இருக்கடி செல்லம். யார்ட்லி மணம் என்னை மயக்குது. இது உன் உடம்பிலிருந்தே வர்ற மாதிரி எப்பவுமே உன் கூடவே இருக்கு. ம்! நாளையிலிருந்து ஆஃபீஸ் போகணும். நீ வேற ஒரு வாரம் வர மாட்ட.பார்பி! உனக்கு ஹனிமூன் போகலைன்னு கோபமா? காஷ்மீர் மாதிரி எங்கேயாவது நாலு நாள் ட்ரிப் அரேஞ்ச் பண்ணட்டுமா?''

''பாஸ்! எனக்கு உங்க கூட இருந்தா போதும். அதுவே சொர்க்கம். முதல்ல அத்தை வந்து என்னை ஏத்துக்கணுமே? அந்தப் பயம் தான் என்னைக் கொல்லுது.''

''ஹே! என்ன இது? நாம இப்ப சட்டபூர்வமான கப்பிள்ஸ். என் அம்மா சம்மதிக்கலைனா உன்னை விட்டுட முடியுமா? என்ன பேசற? உன்னை என்னால விட முடியாதுன்னு தான், மனசாட்சிக்கு விரோதமா என் அம்மாவுக்குத் தெரியாம, நம்ம கல்யாணத்தை நடத்த வேண்டியதாப் போச்சு.

அம்மா சம்மதிக்கலைன்னா நாம இதே வீட்டிலேயே இருக்கப் போறோம். அவ்வளவு தான். என் அப்பாவோட ஆதரவு என்னிக்கும் உண்டு. இன்னிக்கு என்ன பிளான்? நாளையிலிருந்து மெஷின் லைஃப் தான். எலெக்ஷன் டைம் வேற. சீக்கரமா வொர்க் முடிக்கணும். இப்பதான் மால் வொர்க் ஃபுல்ஸ்விங்க போகுது. வொர்க் அடுத்தடுத்து நிறைய ஆரம்பிக்க வேண்டியிருக்கு'' அவள் கையிலிருந்த காபியை பிடுங்கி சுவைத்தான்.

''காபி சூப்பரா இருக்குடா. கிச்சன் எங்கேன்னு தேடிக் கண்டு பிடிச்சுட்ட போலிருக்கு. நாட் பேட். டிஃபன் ஆர்டர் பண்ணிடலாமா?''

''ஆர்டரா? எதுக்கு?''

''உனக்குத் தான் அடுப்பே பற்ற வைக்கத் தெரியாதுன்னு சிபி பெருமையா பீத்தினானே?''

''ஓஹோ! அப்ப சரி தினமும் அவனையே மூணு வேளையும் கொண்டு வந்து தரச் சொல்லுங்க. நான் செஞ்சு போடறதெல்லாம் நல்லா மூக்குப் பிடிக்க மொக்குவான். உங்ககிட்ட தப்பா போட்டுக் குடுத்திருக்கான். இருங்க



அவனை?'' ஆவேசமாக செல்போனை எடுத்தாள்.

''போனாப் போகுது விடுடி செல்லம். இன்னேரம் தூங்கிட்டு இருப்பான் டிஸ்டர்ப் பண்ணாதே. பயபுள்ள ஏதோ ஒரு ஆர்வக் கோளாறுல வெடியைக் கொளுத்திப் போட்டுட்டான். பாவம்... பொழச்சுப் போகட்டும். ம்! ஆமாம் இன்னிக்கு என்ன டிஃபன்?''

தன் தமையனுக்குப் பரிந்து பேசுபவளைப் புன்னகையோடு முறைத்து, ''பருத்திக் கொட்டையும், புண்ணாக்கும்! போங்க சீக்கிரம் குளிங்க. பசி உயிர் போகுது. என் காபியையும் நீங்க பிடுங்கிட்டீங்க'' - சிணுங்கினாள்.

''சிணுங்காதேன்னு அன்னிக்கே சொன்னேன். நீ கேட்கலை. அப்புறம் இன்னொரு ரவுண்டு.''

முகம் சிவக்க அவனை பிடித்து தள்ளி, ''ரொம்பக் கெட்டப் பையன்டா நீ.''

குறும்பு மிளிர அப்பாவியான முகத்தோடு, ''இன்னொரு ரவுண்டு காபி போட்டா எனக்கு ஒரு டோஸ் குடுன்னு தானே கேட்க வந்தேன். நீ என்ன நினைச்சே?''

மேலும் சிவந்த முகத்தை அவன் தோளிலேயே புதைத்து கொண்டு, ''ஒண்ணும் நினைக்கலை. போங்க!''

திருமணமான பிறகு முதன்முறையாக கிடைத்த தனிமையை கௌதம் சொர்க்கமாக்கினான். அவளையே நாள் முழுவதும் குழந்தையாகச் சுற்றி வந்தான். அவனது காதலில் தேவி உலகையே மறந்தாள்.

ஆனால், மறுநாள் குளித்து ரெடியானதும், முற்றிலும் மாறிப் போனான்.

''பார்பி! டைம் ஆச்சு. என்னோட லேப்பும், ஃ பைலும் பிரீஃப்ல வெச்சாச்சா? கிளம்பறேன். மதியம், முடிஞ்சா

வந்திடுவேன். இல்லேன்னா போன் பண்றேன். கிளம்பட்டுமா?'' அவள் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு, ''இப்படிச் சோகமா முழிச்சா, நான் எப்படிடா நிம்மதியா கிளம்பறது? ஆஃபீஸ் போய் ஒன் வீக் ஆச்சு. நிறைய வேலை இருக்கு. உனக்கே தெரியும். சாரா மேடம் சில விஷயங்களைச் சமாளிக்க முடியாது. கொஞ்சம் சிரி. போயிட்டு நான் போன் பண்றேன்'' கௌதமும் மனமில்லாது தான் தன்னவளைப் பிரிய முடியாமல் கிளம்பியவனுக்கு, அன்று முழுவதும் வேலை நெட்டி முறித்தது.

மதிய உணவை மணி வந்து வாங்கிப் போனார். இரவு எட்டு மணிக்குக் களைத்துத் திரும்பியவனை, இறுக அணைத்துக் கொண்டாள்.

''ஐ மிஸ் யூ பாஸ்! தனியா வீட்ல என்னால இருக்கவே முடியலை. எத்தனை நேரம் தான் டி.வி. பார்க்கறது? நான் உங்க கூட ஆபீஸ் வரேன்''

அழுதிருப்பாள் போல. லேசாக முகம் சிவந்து பளபளத்தது. கௌதம், 'அவள் தோற்றத்தைப் பார்த்துப் பதறிப் போனான்.

''தேவி! என்னடா ஆச்சு? நீ இத்தனை ஃபீல் பண்ணுவேன்னு தெரிஞ்சிருந்தா, தாத்தாவை இங்க கொண்டு வந்து விட்டிருப்பேன்.''

''போன் பேசினேன். என்னை வந்து கூட்டிட்டுப் போகச் சொன்னேன். மறுத்திட்டார். நீ உன் வீட்டில இருந்து பழகணும்னு சொல்றார். அப்ப இனிமே அது என் வீடு இல்லையா?'' ஏக்கம் வழியக் கேட்டாள்.

அவள் கலைந்திருந்த கூந்தலை ஒதுக்கி, நெற்றியில் முத்தமிட்டு, ''தாத்தா சொல்றது சரிதானே கண்ணம்மா.



உன்னை அங்கே அனுப்ப எனக்கும் மனசே இல்லை. நீ எப்பவும் என் கூடவே இருக்கணுங்கற வெறி எனக்கு. அதனாலதான், ஆபீஸ்ல கூட சைட் வொர்க், பிசினஸ் லஞ்ச், மெட்டீரியல் பாச்சேஸ்னு எங்கே போனாலும் கூட்டிக்கிட்டே அலைஞ்சேன்.

ஒரு நாளைக்கு இருபத்தி நாலு மணி நேரம் கூடப் போதாது என்னும் அளவு ரொம்ப பிசியானவன் நான். மெண்டலாவும் ஃபிஸிக்கலாவும் நிறைய வேலை செஞ்சு களைத்து போய் வீடு திரும்பும்போது என்னை வான்னு சொல்ல இதுவரைக்கும் யாருமே இருந்ததில்லை. அப்பா ஹெல்த் ப்ராப்ளம் இருக்கறதால, சீக்கிரமா தூங்கப் போயிடுவார். அம்மாவை நான் தினம் பார்க்கச் சந்தாப்பமே இருக்காது.

பசியோடு வீடு திரும்பும்போது, டைனிங் டேபிள் மேல மூடி வைத்திருக்கிற பாத்திரங்கள் தான் வரவேற்கும். அதப்பார்த்து, நிறைய நாள் வெறுப்பாகி டின்னரை அவாய்ட் பண்ணிடுவேன். அன்னிக்கெல்லாம் ஐஸ்வாட்டர் மட்டும்தான் என் டின்னர்.

நம்ம மேரேஜ் ஒரு மேஜிக் மாதிரி என் லைஃப்ல வரமா வந்திருக்கு. நீ கையில ஒரு மந்திரக்கோலை வச்சு சுத்தின மாதிரி, எல்லாமே மாறிப் போச்சு. இன்னிக்கு நீ என்னைக் கட்டிப் பிடிச்சதும், களைப்பையும் மீறி மனசு முழுக்கச் சந்தோஷம்.

எனக்குன்னு ஒரு ஜீவன் வீட்ல காதலோடு காத்திட்டு இருக்குன்னு நினைச்சாலே சுகமா இருக்கு. என்னை உன் பிரியத்தால அடிமையாக்கி வைத்திருக்க கண்ணம்மா! இந்த சொர்க்கத்தை இழக்க நான் என்னிக்குமே தயாரா இல்லை.

ஐ லவ் யூ பார்பி'' என்ற போது இருவரின் கண்களும் பனிந்திருந்தன.

பாசத்திற்காக ஏங்கும் ஒரு சின்னக் குழந்தையாகத் தெரிந்தான். அவன் மனது புரிந்தவளாக, அவன் மார்பில் இதமாக சாய்ந்து கொண்டாள். அன்று இரவு உணவை முடித்ததும், ஏகாந்தமாக கிழக்குக் கடற்கரைச் சாலையில் லாங் டிரைவ் சென்றனா.

தோதல் பிரச்சாரமெல்லாம் ஓய்ந்து, அமைதியைத் தழுவிய சாலை, காரில் ஏசியின் மிதமான குளிர். அந்தச் சூழ்நிலையை அனுபவித்து எஃப்.எம் ஆன் செய்தாள்.

*யாரோ இவன் யாரோ இவன்,*
*என் பூக்களின் வேரோ இவன்*
*என் பெண்மையை வென்றான் இவன்*
*அன்பானவன்.*

பாடல் ஒலிக்க, ஏதோ ஒரு வித மயக்கம் சூழ, அவன் அருகே நெருங்கி தோள் சாய்ந்தாள்.

அவர்களின் இல்லம் காதல் வாழ்க்கையின் சொர்க்கலோகமாகத் திகழ்ந்தது. நெருக்கமான சமயங்களில், அவன் பொழிந்த அபரிதமான மென்மையான காதலில், உருகிப் போனாள். அடிக்கடி தாத்தாவைப் பார்க்கக் கூட்டிச் சென்றான்.

தேவியின் மலர்ந்த முகமும், உற்சாகமும் அவர்களுக்கு மன நிறைவைத் தந்தது. பத்மினி சென்னை திரும்பும் நாள் நெருங்கிக் கொண்டே வந்து, அவள் வாழ்வில் மிகப் பெரிய சோதனையைத் தந்தது.



# 12

தேவி கௌதமுடன் சேர்ந்த வேலைக்குச் செல்ல துவங்கியிருந்தாள். அங்கு சென்ற பின் அலுவலகமே கூடி மகிழ்ச்சியோடு வரவேற்று, சின்னதாக ஒரு விழாவையே ஏற்பாடு செய்திருந்தனர்.

சிந்து, ''தேவி மேடம்! பார்த்தீங்களா? எங்ககிட்ட ஒரு வார்த்தைக் கூட மூச்சு விடலை? பாஸ், மேரேஜுக்கு அழைத்த போது தான் தெரியும். மறைச்சிட்டீங்களே?'' என்று ஆதங்கப்பட, ரூபாவும் அதற்கு ஒத்து ஊதினாள்.

தேவி, ''சிந்து! ரூபா நீங்க முதல்ல என்னை மேடம்னு கூப்பிடறதை நிறுத்தினாதான் உங்க கூடப் பேசுவேன். சாரி! சாரி! என்னோட சிச்சுவேஷன்தான் உங்களுக்குத் தெரியுமே. அதுக்குப் பிறகும் என்கிட்ட கோபித்தா எப்படி? விக்ரம் சார்! நீங்களே சொல்லுங்க. பாஸோட அம்மா வந்து ஓ.கே சொல்ற வரை, எனக்கே நெர்வசா இருக்கு'' கண்கள் கலங்கியது.

சிந்து பதட்டத்துடன், ''தேவி! அழாதே. சும்மா கலாய்ச்சோம். எல்லாம் சரியாயிடும். நீ இல்லாமே ஆஃபீஸே சுத்த போர். வேலை செய்யவே பிடிக்கலை.''

''அதானே பார்த்தேன். இந்தப் பதினைந்து நாளா சிஸ்டமேடிக்கா வேலை நடந்துச்சு. என்ன அரட்டை? ஹலோ தேவி மேடம்! உங்களுக்கு இரண்டு வார வேலை பெண்டிங். கொஞ்சம் வந்த வேலையைப் பார்க்கறீங்களா?'' கௌதமின் குரல் கேட்டு அனைவரும் அவரவர் இடத்துக்குச் சிட்டாகப் பறந்தனர்.

தேவி, கௌதமைப் பின் தொடர்ந்தாள். அவளுடைய

தனி கேபின் அங்கிருந்து அகற்றப்பட்டிருந்தது. கௌதமின் டேபிளிலேயே தேவியின் இருக்கை தயாராக இருந்தது.

''என்ன பாஸ்! இது? என் கேபின்...''

''ஷ்... பார்பி! இனி உன் சீட் இதுதான். எனக்கு அடிக்கடி ஏதாவது பர்டிகுலர்ஸ் தேவைப்படும். வேற ஏதாவது கூட தேவைப்படும். நீ இங்க இருந்தா தான் வசதி'' கண்டிப்பான குரலில் ஒளிந்திருந்த குறும்பை, தேவியால் புரிந்து கொள்ள முடிந்தது.

''வேற ஏதாவதுன்னா?''

''டிசைன்ஸ், டிராயிங்க்ஸ், எஸ்டிமேட்ஸ்... அப்புறம் இது கூடத் தான்'' என்று, அவசரமாக அவள் கன்னத்தில் சின்ன முத்தம் பதித்து விலகினான்.

''பாஸ்! மணி சார்கிட்டச் சொல்லி, என் சேரை வெளியே போட்டுக்கறேன். நீங்க, வேலை பார்க்க என்னைக் கூட்டிட்டு வந்த மாதிரித் தெரியலை.''

''ஓ.கே. சரண்டர்! டீ டைம் வரை உன்னைத் தொட மாட்டேன். அந்தப் புது ப்ராஜெக்ட் அக்ரிமெண்ட் ரெடி பண்ணணும். லாயருக்குப் போன் பண்ணு. கொஞ்சம் டிஸ்கஸ் செய்ய வேண்டியிருக்கு'' என்று வேலையில் மூழ்கிப் போனான்.

பதினொரு மணிக்கு இரண்டு கப் பூஸ்ட் வரவழைத்து, அவன் தோள் தொட்டாள். ''பாஸ்! இந்தாங்க பூஸ்ட்.''

''என்னோட டீ?''

''இனிமே பூஸ்ட் தான்.''

''இதை விட அருமையான பூஸ்ட் நீ எனக்குக் குடுக்க முடியும்'' அவன் விழிகள் ஸ்டார் மச்சத்தில் நிலைத்தது.



சன்னமான குரலில், ''மணி சார்! வந்து என் சேரை வெளியே இழுத்துப் போடுங்க'' என்றதும், ''சரி, வேலையைப் பாரு. எங்க போயிடுவ? நைட் வச்சுக்கிறேன் கச்சேரியை'' அவளை முறைத்து விட்டு, வேலையைத் தொடர்ந்தான்.

அவர்களுக்குக் கிடைத்த ப்ராஜெக்ட் பற்றி அன்று இரவு தன் கைவளைவில் அவளை இருத்திக் கொண்டு விவாதித்தான். ''பார்பி! எல்லாமே ரொம்பப் பெரிய வொர்க். ஒரே சமயத்தில எல்லாத்தையும் மேனேஜ் பண்ண, ரொம்ப உழைக்க வேண்டியிருக்கும். ஓய்வே இருக்காது. ஆனா, நம்மை ப்ரூவ் பண்ண, இது ஒரு கோல்டன் ஆபர்சூனிட்டி. ஒரு சேலஞ்சா எடுத்துச் செய்யணும். இந்த நாலு ப்ராஜெக்ட்ஸ் மட்டும், வருணோட டை-அப் வெச்சுக்கலான்னு நினைக்கிறேன். சேர்ந்து செஞ்சா இன்னும் நல்லா வரும். அவனோட வொய்ஃப் ஹெல்ப் பண்ணுவாங்க.''

''வருண் அண்ணாவோட வொய்ஃப் மிருதுளா என் ஃப்ரண்ட். ஒரே காலேஜ். நம்ம மேரேஜ் போது தெரிஞ்சுகிட்டேன். அவ ரொம்ப சாஃப்ட்.''

''என் அப்பாவும், நமக்கு ஹெல்ப் பண்ணுவாரு. இந்த டீல் நமக்குக் கிடைச்சது நிறைய பேருக்குப் பிசினஸில் போட்டியைக் கிளப்பி விட்டிருக்கு. அவங்க எல்லோருமே பழைய ஆளுங்க. பிசினஸ் முதலைங்க. நான் கத்துக்குட்டி தான். அதனால என் கூடப் போட்டி போடறவங்களை எதிர்த்து நிற்கிற பலம் வேண்டும். அவங்க என்னை விழுங்க வரும் போதே, அவங்களை நான் தூக்கிச் சாப்பிடலேனா அவ்வளவு தான்! அப்பாகிட்ட இது பத்தி நிறைய பேசணும்.

நாளைக்கு வருவார். நீ இங்கேயே இருக்கியா?'' பதில் வராதது கண்டு குனிந்து பார்த்தான்.

அவன் மார்பில் முகம் பதித்து ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள். 'சரியான கும்பகர்ணி! இத்தனை நேரம் பேசினதே வேஸ்ட்! பாவம்! வேலை அதிகம். தூங்கட்டும்' என்று அவளுக்குப் போர்த்தி விட்டு, படுத்ததும் உறங்கிப் போனான்.

அன்று எலெக்ஷன். தேவி, ''அப்பா! இன்னிக்குப் ஃபுல்லா ஜாலி. நல்லா ரெஸ்ட் எடுக்கலாம். பாஸ்! இன்னிக்குத் தாத்தாவைப் பார்க்கப் போகலாமா? நைட் வரை இருந்துட்டு வரலாம். பார்த்து நாலு நாளாடுது.''

கௌதமும் ஒரு மாற்றம் வேண்டி அங்கு சென்றான். சிபிக்கு மகிழ்ச்சி தாளவில்லை. இருவரையும் பார்த்துப் பார்த்து உபசரித்தான்.

''அண்ணா! என்ன புதுப் பழக்கம்? என்னைக் கெஸ்ட் மாதிரி ட்ரீட் பண்ற. அப்புறம் நான் இங்கே வரவே மாட்டேன்'' பிகு பண்ணினாள்.

''சாரிடா! என் குட்டிம்மா கூட ரொம்ப நாள் கழிச்சு ஃபுல் டே இருக்கப் போற சந்தோஷத்தில, தலை கால் புரியலை. சரி... இன்னிக்கு சமையலை நீ செஞ்சிடு.''

கௌதம் பாய்ந்து வந்தான். ''உனக்கு என் மேல கொஞ்சமாவது இரக்கம் இருக்காடா. இன்னிக்கு ஒரு நாளாவது வாய்க்கு ருசியா நல்லதா சாப்பிடலாம்னு வந்தேன். நீ அதையும் கெடுக்கப் பார்க்கறியே? உனக்கு ஏண்டா இந்தக் கொலை வெறி?'' என்று தேவியின் முன்னாலேயே கேட்டு, வாங்கிக் கட்டிக் கொண்டான்.

வற்புறுத்தி தேவியை அழைத்துச் சென்று ஓட்டுப் போட வைத்தான். ''பார்பி! ஓட்டுரிமையை வேஸ்ட் பண்ணக் கூடாது. இது நம்ம கடமை. நீ போகலைன்னா தவறான வழியில அது பயன்படுத்திடுவாங்க'' என்றான். அன்று முழுவதும் இனிமையாகக் கழிந்தது.



தாத்தா, ''கௌதம்! தேவி எப்படிப்பா நடந்துக்கறா? இன்னும் விளையாட்டுத்தனமா தான் இருக்காளா? வீட்டு வேலைக்குக் கொஞ்சம் டிமிக்கி கொடுப்பா. ஒழுங்கா சமைக்கிறாளா?''

''எனக்கு எந்தக் குறையும் இல்லை தாத்தா. வெறும் வீடா இருந்தது, தேவி வந்த பிறகு தான் ஸ்வீட் ஹோமா ஆயிருக்கு. நான் ரொம்பச் சந்தோஷமா இருக்கேன். வீட்டையும் சமாளிச்சுகிட்டு, ஆபிஸ் வேலையும் செய்ய தேவிதான் கஷ்டப்படறா. அவளுக்கு ரெஸ்டே இல்லை. சின்னப் பொண்ணுதானே. வீட்ல சமையலுக்கும் மத்த வேலைக்கும் ஆள் வரச் சொல்லியிருக்கேன். ஆபீஸ்ல இவளோட ஹெல்ப் ரொம்பத் தேவையாயிருக்கு. தேவி எனக்குச் சுவாசம் மாதிரி. அவ இல்லாம என்னால் முடியாது தாத்தா. அதனாலதான், தனியா அவளை இங்க கூட அனுப்பறதில்லை.''

''கேட்கச் சந்தோஷமா இருக்கு. ஆனா, இரண்டு பேரும் சேர்ந்து அடிக்கடி வந்து இந்த தாத்தாவை பார்த்திட்டு போங்க. சிபியும், தங்கையைப் பிரிந்து ரொம்ப ஏங்கிப் போறான். அவனுக்கும் சீக்கிரம் ஏற்பாடு பண்ணணும். விஷ்வாவைக் கூப்பிட்டுப் பேசணும்.''

''அப்பா சொன்னார் தாத்தா. சித்தி, சித்தப்பா ரொம்ப நல்லவங்க. தன்னு அவங்களோட ஒரே செல்லம். அவ ஆசையை கண்டிப்பா நிறைவேத்துவாங்க. நான் பேசறேன்.

அம்மா வந்ததும் மேரேஜ் வெச்சிடலாம். அநேகமா அடுத்த வாரம் வந்திடுவாங்க.''

அவரின் முகமாற்றத்தைப் புரிந்து கொண்டு, ''உங்க மனசு புரியுது. பயப்படாதீங்க தாத்தா. நல்லதே நடக்கும். தேவிக்காக எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுப்பேன்'' சிபி அவனை அணைத்துக் கொண்டான்.

பத்மினி சென்னை வரும் நாள் நெருங்க நெருங்க, தேவியின் உற்சாகம் குறைந்து கலக்கம் சூழ்ந்தது. இரவு வீடு திரும்பியதும், இருவரும் லாங் - டிரைவ் போவது வழக்கமான ஒன்றானது. அவர்களின் சோர்வையும், களைப்பையும் போக்க, இந்தப் பயணத்தை விரும்பினர். மனம் விட்டுப் பேசி, ஒருவரையொருவர் இன்னும் அதிகமாகப் புரிந்து கொள்ளவும் உதவியது.

மறுநாள் மாலை, கௌதமின் தாய் வருவதாக இருந்தது. தேவி இரவு உணவையும் மறுத்து விட்டு, கௌதமின் கையணைப்பிலேயே இருந்தாள்.

''என்னடா? ரொம்ப யோசிக்காதே. நான் எப்பவும் உன் கூடவே இருக்கேன். வா வெளியே போயிட்டு வரலாம்'' வழியில் ஜூஸ் கார்னரில் நிறுத்தி அவளுக்குப் பிடித்த, 'வெனிலா மில்க் ஷேக்' ஆர்டர் செய்து, அவளை வற்புறுத்தி குடிக்க வைத்தான்.

''நைட் சரியாவே சாப்பிடலை. இது ஃபுல்லா நீதான் குடிச்சாகணும். எனக்கு ஆர்டர் பண்ணிட்டேன் வந்திடும். இருக்கற கொஞ்சூண்டு மூளையை ஏன் கசக்கற? நாளைக்கு நான் ஏர்-போர்ட் போறேன். அப்பாவும் வருவார். அங்க நம்ம வீட்ல தான் போய் விஷயத்தைச் சொல்லணும். நைட் சாப்பிட வந்திடுவேன். துணைக்கு சிபி, இல்லேன்னா



தான்யாவை வரச் சொல்றேன்'' விதவிதமாக ஆறுதல் படுத்தினான்.

காலை எழுந்ததுமே, ''பாஸ்! உங்களைக் கூப்பிடச் செல்லமா ஒரு பேர் செலக்ட் பண்ணிட்டேன்'' அவன் திகைத்துப் போனான்.

தினமும் இரவில் பலமுறை கெஞ்சியும், ''பாஸ்!'' என்பதைத் தவிர வேறு எதையுமே சொல்லமாட்டாள்.

'நீயே பேசு' என்பது போல அவளையே பார்த்தான். ''உங்க ஃபுல் நேம் கௌதம் பிரபாகர். அதிலிருந்தே, ஒரு பேரைச் செலக்ட் பண்ணிட்டேன். பிரபு! நீங்க 'என் பிரபு' தானே. மாற மாட்டீங்களே?''

அவள் தோள் பற்றி வேகமாக அருகில் இழுத்தவன், ''நீ என்ன பைத்தியமா? என்னடி ஆச்சு உனக்கு? நான் எதுக்கு மாறணும்? என் அம்மா வர்றது ஒரு சாதாரண விஷயம். அதுக்கு ஏன் இத்தனை அலட்டற? இத்தனை நாள் என் கூட இருந்தியே? ஒரு நாளாவது இப்படி உனக்கு நினைப்பு வர மாதிரி நான் நடந்திருக்கேனா? ஏன் உன்னையே வருந்திக்கற. நீ இப்படி இருந்தா என்னால நிம்மதியாவே இருக்க முடியலை. சாதாரணமா இரு.'' தேவியின் முகத்தை நிமிர்த்தி, ''இங்க பாரு. இப்பச் சொல்றதை நல்லா கேட்டுக்க. இந்த ஜென்மத்தில என் உயிர் என்கிட்ட இருக்கிற வரை, உன்னைப் பிரிய மாட்டேன். இந்த உலகமே எதிர்த்தாலும், நீ எனக்கு வேணும். உன்னை விட்டுப் போக மாட்டேன். இது நான் உனக்குப் பண்ற சத்தியம். என் வார்த்தைய நம்பறவ, என் சத்தியத்தை நம்ப மாட்டியா? இப்பவாவது சிரிச்சித் தொலை. உன் அழுமூஞ்சி நல்லாவே இல்லை'' அவள் இதழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

''இப்ப கிளம்பட்டுமா?''

''ம். தேங்க்யூ பிரபு! என்னைக் கோவில் வாசலில் இறக்கி விடுங்க. திரும்ப வரும்போது ஆட்டோவில் வந்திடறேன்'' சின்னதாகப் புன்னகைத்தாள்.

''பிரபுன்னு நீ கூப்பிடறதுக்கே ட்ரீட் வேணுமே. நைட் பார்க்கலாம். வா டைம் ஆச்சு. கிளம்பணும். லஞ்சுக்கு, அப்பாவும் வருவார். பிறகு இரண்டு பேரும் ஏர்-போர்ட் கிளம்பறோம்.''

கோவில் வாசலில் இறக்கி விட்டு, ''பத்திரமா வீட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும், எனக்குப் போன் பண்ணிடு. லஞ்ச் சிம்பிளா பண்ணு. சரியா?'' கைகளை லேசாக அழுத்தி விட்டு, மெல்லத் தலையசைத்தான்.

பிரகாரத்தில் நின்று கண்களை மூடிய போது, இதுவரை இருந்த சஞ்சலமெல்லாம் ஓடிப் போனது. அம்மனின் திவ்ய சொரூபத்தைப் பார்த்து மெய்மறந்து நின்றாள். கண்களில் கருணையும், முகத்தில் சாந்தமும், பிறை நிலவு போன்ற புன்சிரிப்புமாய்... உனக்கு நானிருக்கிறேன் என்பது போல இருந்த தோற்றத்தில் சிலிர்த்துப் போனாள். தாய் மடி வந்து சேர்ந்த நிம்மதியில் இதமாய் உணர்ந்தாள்.

நிம்மதியான மனதுடன் வீடு திரும்பி, தன் மாமனாருக்குப் பிடித்தவற்றை சமைக்கத் துவங்கினாள். மதியம் வீடு திரும்பிய கௌதம் கூட, அவள் முகத்தில் தெளிவைக் கண்டு ஆச்சரியமானான்.

''மாமா! நல்லா சாப்பிடுங்க. என் சமையல் எப்படி இருக்கு.''

''உன் சமையலுக்கு என்னம்மா? கௌதம் கொடுத்து வெச்சவன். இந்த ஒன்றரை மாசத்தில் ஒரு சுத்து பெருத்துப் போயிட்டான். நான் என்ன கெஸ்டா? வடை, பாயாசம்னு எதுக்கு இத்தனை ஐட்டம்? நீ ஒருத்தியா ஏன் இத்தனைக் கஷ்டப்படணும்?''

''எனக்குச் சிரமமே இல்லை மாமா. எத்தனை மணிக்குக் கிளம்பணும்?''

''ஆறு மணிக்குப் பிளைட்; நாலு மணிக்குக் கிளம்பினா போதும். கொஞ்ச நேரம், நான் கீழே இருக்கிற ரூமில் படுத்துக்கறேன்.''

சாப்பிட்டு விட்டு, சமையலறையை ஒழுங்குபடுத்தி விட்டு படுக்கையறையில் நுழைய, கௌதம் இரு கைகளையும் விரித்து அவளை அழைக்க, அவனைச் சரணடைந்தாள் தேவி. ''பிரபு!'' என்றவள், அவனை விடவே மாட்டேன் என்பது போல, இறுக அணைத்துக் கொண்டாள்.

''பார்பி! கொஞ்ச நேரம் தூங்கினா ரிலாக்ஸா இருக்கும்'' என்றவன், அவள் நெற்றியை மெல்ல வருடினான்.

அவள் முகத்தோடு முகம் வைத்து, ''ஏண்டி பயப்படறே? நான் என்ன செஞ்சா என்னை நம்புவன்னு சொல்லு. நான் ஏர்போர்ட் போகாம விடட்டுமா?''என்றான்.

அதைத் தலையசைத்து மறுத்தவள், ''என் பிரபு!'' என்றதற்கு மேல், எதுவும் பேசவில்லை... தன் கணவனையும் பேச விடவில்லை. சிபியை அழைத்து விவரத்தைச் சொல்லி, ''நீ தான்யாவை அழைச்சிட்டு தேவி கிட்டப் போ! அவ ரொம்பக் கலங்கிப் போயிருக்கா. நான் வர்ற வரை அங்கயே இருங்க. நான் சித்தப்பாகிட்டயும் சொல்லிடறேன்.''

தான்யாவை அழைத்து, ''தன்னு! என் கூடக் கிளம்பு. உன் பெரியம்மாவைக் கூப்பிட, கௌதம் போய்க்கிட்டு

இருக்கான். அவன் வர்ற வரை, தேவி கூட இருக்கணும்.''

உடனே கிளம்பி பின் சீட்டில் ஏறப்போனவளை முறைத்து, ''ஹலோ மேடம்! நான் ஒன்றும் உன் டிரைவர் கிடையாது. எஜமானி மாதிரி பின் சீட்டில் உட்கார்ந்துகிட்டு வேடிக்கை பார்த்துகிட்டு வரலான்னு நினைச்சியா? முன்னால் வந்து உட்கார்!'' -சுள்ளென்று எரிந்து விழுந்தான்.

''அப்பா... துர்வாசர் தோத்தார்! பக்கத்தில் நின்னிருந்தா, இரண்டு கிலோ சதையே காணமப் போயிருக்கும். தப்பிச்சேன்... கடவுளே!'' என்று புலம்பியவள், பதிலுக்கு முறைத்து விட்டு, முன்சீட்டில் ஏறி அமர்ந்து கதவை அறைந்து சாத்தினாள்.

''பார்த்து மேடம்! என்கிட்ட இருக்கிறதே, இந்த ஒரு கார் தான். அதிலயும், கதவைப் பேத்து எடுத்திராத!''

''மன்னிச்சிருங்க பாஸ்! இனி உங்க உலக மகா காரைத் தொடல. போதுமா?'' முறைத்தாள்.

''உனக்கு ஏண்டி இத்தனைக் கோபம்? முறைக்கிற?''

''யார்? நானா கோப்பப்பட்டேன்! பார்றா?''

''இல்லை தனு! தேவி டென்ஷனா இருக்களாம்.'' பயந்திருக்கா.

கௌதம் சொன்னதும் எனக்கும் அதே டென்ஷன்!''

''மாமா! சரியாயிடும். கவலைப்படாதீங்க. வழியில் அவளுக்குப் பிடிச்ச டெய்ரி மில்க்கும், ஐஸ்கிரீமும் வாங்கிட்டு போலாம். என் கூட பேசினா சரியாயிடுவா.''

அவன் அருகே நெருங்கி உட்கார்ந்து அவன் கைவிரல்களைத் தனதோடு கோர்த்துக் கொண்டான்.

''தேங்க்ஸ் தனு!''



# 13

அரைமணி நேரத் தாமதத்துக்குப் பிறகு வந்து சேர்ந்த பிளைட்டிலிருந்து, கம்பீரம் குறையாமல் வந்திறங்கிய பத்மினியைப் பார்த்து விஸ்வநாதன் புன்னகைத்தார்.

''என்ன அதிசயமா இருக்கு? இரண்டு பேரும் சேர்ந்து வந்திருக்கீங்க! ரொம்ப முக்கியமான விஷயமா இல்லேன்னா, கௌதமுக்கு டைமே இருக்காதே! என்ன விஷயம்? எனிதிங் இம்பார்டன்ட்?''

''வீட்ல போய்ப் பேசிக்கலாம். உன் பிசினஸ் ட்ரிப் எப்படி இருந்தது?''

''ஃபைன்! நிறைய கான்ட்ராக்ட்ஸ் சைன் பண்ணியிருக்கேன். இந்த ட்ரிப் ரொம்பத் திருப்தியா இருந்தது.'' அதன் பின்னர், கௌதமின் பிசினஸ் பற்றிப் பேச்சு தொடர்ந்தது.

வீட்டில் குளித்து ப்ரஷ் ஆகி டைனிங் டேபிளுக்கு வர, விஸ்வநாதனும் சாப்பிட உட்கார்ந்தார். அவருக்குப் பரிமாறியவர், ''கௌதம்! நீ சாப்பிடல?'' என்றார்.

''இல்லம்மா. எனக்குப் பசிக்கலை.நீங்க சாப்பிடுங்க.''

''ம். அப்புறம்! உன் வொய்ப் என்ன சொல்றா? டிஃபன் சாப்பிடாமா காத்துகிட்டு இருப்பாளா?''என்று தோசையை வாயில் போட்டுக் கொண்டே பத்மினி நிதானமாகக் கேட்கவும், இருவரும் அதிர்ச்சியின் உச்சத்துக்கே போனார்கள்.

''பத்மினி!'' என விஸ்வநாதன் ஆரம்பித்ததும், கை உயர்த்தித் தடுத்து விட்டு, ''நீங்க பேசாதீங்க! என்

மகனுக்குக் கல்யாணம் முடிஞ்சிருச்சுன்னு... மூணாவது ஆள் சொல்லித் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு. சரி, கௌதமுக்குத் தான் காதல் கண்ணை மறைச்சிடுச்சு. ஆனால், நீங்க? ம்! முப்பது வருஷம் சேர்ந்து வாழ்ந்திருக்கோம். என்கிட்ட ஒப்புக்காவது சொல்லணும்னு தோணலை இல்லையா? அப்படி நான் என்ன தப்பு செஞ்சேன்னு சொல்லுங்க.''

பத்மினி கேட்ட அத்தனைக் கேள்விகளும் நியாயமானதால், அவரால் பதில் பேச முடியவில்லை.

''அம்மா! சாரி. நாங்க செஞ்சது பெரிய மிகப் பெரிய தவறு தான். மன்னிச்சிடுங்க. ஆனா, தேவி ரொம்ப நல்ல பொண்ணு. என் ஆபிஸ்லதான் வொர்க் பண்றா. உங்க ஜி.எம் சிபிச் சக்கரவர்த்தியோட தங்கை.''

''ஏன் கௌதம்? என்கிட்டச் சொல்லலை. அதுக்கு எனக்குத் தகுதி இல்லைன்னு முடிவு கட்டிட்டியா?''

''அம்மா!''

''நான் ஸ்ட்ரிக்ட் தான். ஆனா, நம்ம வீட்டுக்கு இதுவரை ஏதாவது கெடுதல் செஞ்சிருக்கனா? தருணா பத்தி உன்கிட்டப் பேசிட்டுத் தானே போனேன்? என் அண்ணன் நான் ஊரிலிருந்து வந்ததும் நாள் குறிக்கலாம்னு சொல்லியிருந்தார். அவர் முகத்தில் எப்படி முழிக்கிறது? நம்ம அந்தஸ்துக்கு...''

கோபம் தலைக்கேறே, ''இது... இதுதான் உங்களை ஆட்டிப் படைச்சுகிட்டு இருக்கற இந்த அந்தஸ்து மோகம்தான்... நான் மறைக்கக் காரணமே. அவங்களும் வசதியானவங்கதான்'' -அவன் குரலும் உயர்ந்தது.

''என்ன வசதி? ம். அவங்க மொத்த வீடுமே நம்ம ஹால் அளவு கூட இல்லை. அவங்க வீட்டுப் பொண்ணு என் மருமகளா? நெவர்!''

''வீடு பெரிசா இல்லைன்னா என்ன? அங்க இருக்கிற எல்லார் மனசும் பெரிசு. ஒருத்தர் மேல ஒருத்தர் வச்சிருக்க பிரியமும், அன்பும் இந்த வீட்டில நான் பார்க்காத ஒண்ணு. யாருக்காவது ஒரு சின்ன தலைவலின்னா கூட துடிச்சுப் போற அக்கறை, இங்க இல்லவே இல்லை. கவர்னஸ் தானே என்னை வளர்த்ததாங்க? ஒரு காய்ச்சல் வந்தாக் கூட, அவங்க கேர்ல தான் இருந்தேன். வந்து எட்டிப் பார்க்ககூட உங்களுக்கு நேரம் இருந்ததில்லை!'' -குற்றஞ் சாட்டினான்.

''யாருக்காக நான் பிசினஸ்ல இறங்கினேன்? நான் யாருக்காகச் சம்பாதிக்கணும்? உனக்காகத் தானே கஷ்டப்படறேன்? எந்த அம்மா கோடிக்கணக்காகச் சம்பாதிச்சுக் கொடுக்கறான்னு சொல்லு'' பத்மினியின் குரலும் உயர்ந்தது.

''நான் உங்ககிட்ட பணம் வேணும்னு கேட்கவே இல்லையே அம்மா! பாசத்தைத் தானே கேட்டேன்? வெறுமையைத் தவிர இந்த வீட்ல என்ன இருந்தது? பணத்தால விலைக்கு வாங்க முடியாத சில விஷயங்களும், இந்த உலகத்தில இருக்கும்மா. எனக்கு அது மேல தான் விருப்பம்.''

எனக்கு அப்படிப்பட்ட வாழ்க்கை மேல தான் இஷ்டம். பெண்களை வீட்டிலயே முடக்கணும்னு நான் சொல்லலை. அலைஞ்சு திரிஞ்கிட்டு வீட்டு வர்ற ஆணுக்கு, வீடு நிம்மதியைத் தரணும். வீடு தான் சொர்க்கம்னு நினைப்பு வரணும். எங்க சுத்தினாலும் வீட்ல நமக்காக ஒருத்தி காத்துகிட்டு இருப்பாங்கற நினைப்பே நம்ம களைப்பைப்

போக்கிடும். எனக்கு அந்த மாதிரி வாழ்க்கைதான் வேணும்.

நீங்க எனக்காகப் பார்க்கற பொண்ணு பிசினஸ்ல ஜெயிப்பா. இன்னொரு பத்மினியா வரமுடிஞ்சவளா பார்த்துத் தான், நீங்க செலக்ட் பண்ணுவீங்க. ஆனா, அவ கூட வாழ்ந்தா, நான் வாழ்க்கையில தோத்துடுவேன்மா.

நான் விரும்பற மாதிரி வாழ்க்கையை, தேவி எனக்குக் கொடுப்பா. என் சந்தோஷம் கெடற மாதிரி நடந்துக்கவே மாட்டா. என் மேல உயிரையே வச்சுருக்கா.''

''ஏன் கௌதம்? நான் உன் மேல பாசம் வைக்கலியா? உனக்காகத் தானே இத்தனை அலையறேன்?''

''யாருக்கும்மா வேணும் உங்க பணம்? அது ஒரு லெவலுக்கு மேல வெறும் பேப்பர்தான்மா. அதை யார் வேணும்னாலும் சம்பாதிக்க முடியும். ஆனா, தாயன்பை... அம்மா மட்டும் தான் கொடுக்க முடியும். அதை நீங்க, எனக்கு விவரம் தெரிஞ்சதிலிருந்து கொடுத்ததே இல்லை! ஒரு வாய் சாப்பாடு ஊட்டினதில்லை!''

''நான் வளர்ந்த மாதிரி, ஏக்கத்தோட என் குழந்தைகள் வளரக்கூடாது. அதனாலதான், எனக்குப் பிடிச்ச வாழ்க்கையை, நானே அமைச்சுக்கிட்டேன். உங்களைக் கேட்காம... உங்களுக்குச் சொல்லாம, என் மேரேஜ் நடந்தது வேணா தப்பா இருக்கலாம். ஆனா, நான் பண்ணினது தப்பில்ல. மனப்பூர்வமாகத்தான் இதைச் செஞ்சேன். அப்பா என்கிட்ட பிரியமா இல்லாம இருந்திருந்தா, என் லைப் எப்பவோ முடிஞ்சிருக்கும். எனக்கு இந்தச் சொத்து வேண்டாம். பிசினஸ் வாரிசா நீங்க யாரை வேணா ஏத்துக்கங்க. எனக்குத் தேவி மட்டுமே போதும்! அவ கூடப் பேசினா, நான் சொல்றது சத்தியம்னு உங்களுக்கே புரியும்.



இரும்பா இருந்த என்னையே இளக வைச்சுட்டா. நீங்க எப்பச் சொல்றீங்களோ... அப்ப நான் அவளைக் கூட்டிட்டு வரேன்.''

கௌதமின் பேச்சு பத்மினியின் உள்ளத்தில் எரிமலையை வெடிக்க வைக்க, பதில் பேசாமல் தன் அறைக்குச் சென்று விட்டாள். விஸ்வநாதன் கூட கௌதமின் ஆதங்கத்தில் பேச்சிழந்து போனார். தனது மகனது மனதில் எத்தனைப் பெரிய பள்ளம் விழுந்திருக்கிறது என்ற துயரம் மேலோங்க, அவனது தலையை வருடினார்.

''கௌதம்! உன் மனசில் இத்தனைக் கஷ்டத்தை போட்டு அடக்கி வைத்திருந்தாயா? சாரிடா! நீ பேசினதைக் கேட்டதும், நான் கூட உன்னைச் சரியா பார்த்துக்கலையோ-ன்னு மனசு தவிக்குது.''

உன் அம்மாவுக்கு, யோசிக்கக் கொஞ்சம் டைம் கொடுப்போம். கண்டிப்பா, நல்ல முடிவாதான் எடுப்பா. டென்ஷனாகாதே! நீ சொல்லாமல் செஞ்சது, அவளுக்கு ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருக்கு. ரெண்டு நாள் யோசித்தா, அவளே இறங்கி வருவா. பிரஸ்டிஜ் பார்க்கறவதான்! ஆனா, கெட்டவ இல்லை. அவளோட மனசாட்சியே, அவளை நல்ல முடிவை எடுக்க வைக்கும். நீ டிஃபன் சாப்பிடு கௌதம்.''

சோர்வடைந்த குரலில், ''இல்லப்பா. தேவி சாப்பிடாம, எனக்காக வெயிட் பண்ணுவா. அதோட, நாம கிளம்பிவந்து ஐந்து மணி நேரமாச்சு. ஒரு போன் கூட நான் அவளுக்குப் பண்ணலைன்னு, தவிச்சுப் போயிருப்பா. சிபியும், தான்யாவும் அங்கதான் இருப்பாங்க. இனி, தான்யா விஷயம் வேற பேசணும்! சரிப்பா கிளம்பறேன். அம்மாகிட்டச்

சொல்லிடுங்க. தான்யா நைட் அங்கயே இருக்கட்டும். காலையில, சீக்கிரமா நான் கொண்டு வந்து விடறேன்.

தேவியின் எண்களைச் செல்போனில் ஒற்றியபடியே காரை எடுக்க, ''பிரபு!'' என்ற குரல் கேட்க, அது லேசாக நடுங்கியதோ என்று தோன்றியது.

''சாரிடா! நடுவிலே என்னால உனக்குப் போன் பண்ண முடியலை. வந்துட்டே இருக்கேன். நீ சாப்பிட்டியா?''

''நீங்க என்னை விட்டுட்டு, அங்க சாப்பிட மாட்டீங்கன்னு தெரியும் பிரபு. வெயிட் பண்ணிட்டு இருக்கேன். வாங்க!'' அண்ணாவும், தன்னுவும் சாப்பிட்டுட்டு டிவி பார்த்துகிட்டு இருக்காங்க. டிரைவ் பண்ணிக்கிட்டே பேசிகிட்டு இருக்கீங்களா? மொதல்ல கட் பண்ணுங்க. நேர்ல பேசலாம். ஐயாம் ஓ.கே.! டென்ஷன் இல்லாம மெதுவா டிரைவ் பண்ணுங்க!'' என்றவள், உடனே கட் பண்ணி விட்டாள்.

''இந்த... இந்த அக்கறையைத் தான் நான் எதிர்பார்க்கிறேன். ஐ லவ் யூ பார்பி!'' -புன்முறுவலோடு காரின் ஸ்பீடைக் குறைத்தவனின் மனம் லேசானது. கார் உள்ளே நுழைந்ததும் கதவைத் திறந்த தேவியின் விழிகள், கௌதமின் முகத்தை வேகவேகமாக ஆராய, அவளின் குழந்தைத்தனமான செயல் கௌதமுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

அவளது தோளைச் சுற்றி கையை போட்டுக் கொண்டு, ''என் பார்பிக்கு இப்ப என்ன தெரியணும்? அதைத் தெரிஞ்சுக்க நீ நிறைய லஞ்சம் கொடுக்கணுமே! தெரிஞ்சுதா?'' என்றதும் முகம் மலர்ந்தாள். தான் நினைத்தது போல பெரிய ப்ரச்சனையில்லை என்பதாலேயே, அவன் இயல்பாக இருக்கிறான் என்ற நினைப்பு நிம்மதியைத் தந்தது.



''எனக்கு எந்த விஷயமும் தெரிய வேண்டாம். அதுவுமில்லாம, லஞ்சம் கொடுக்கிறதும் தப்பு...! வாங்கறதும் தப்பு...!'' என்றவள், அவனை முறைத்து விட்டு உள்ளே ஓடினாள்.

அவள் டிஃபன் எடுத்து வைப்பதற்குள் சிபியிடம் சுருக்கமாக விஷயத்தைத் தெரிவித்தான். ''அண்ணா! நான் தேவியோட ஸ்கூட்டியிலேயே போயிடறேன். டைம் ஆச்சு. கிளம்பறேன்!''

சிபி அவளை முறைத்தான். ''ஏண்டா கௌதம்! கூட்டிட்டு வந்தவனுக்கு, கொண்டு போய் விடத் தெரியாதா? உன் தங்கச்சியைக் கொஞ்சம் சொன்ன பேச்சைக் கேட்கச் சொல்லுடா. கிளம்பச் சொல்லு. வீட்ல தாத்தா வேற என்ன ஆச்சோன்னு, கவலையோட தூங்காம வெயிட் பண்ணிகிட்டு இருப்பார். இவளை டிராப் பண்ணிட்டுப் போயிடறேன்.''

''சரி'' என்றான் கௌதம்.

''ஏண்டி என் கூட வர அத்தனை யோசிக்கிற? வரும்போதும் பின்னால ஏறப் போன! உன் மனசில் என்ன இருக்குன்னு என்கிட்டத் தெளிவாச் சொல்லிடு'' என வழியில் தான்யாவிடம் கடித்தான்.

''எதுக்கு மாமா உங்களுக்கு இத்தனைக் கோபம்? ம்! உங்க கூடப் போறேன்னு, நானா வாலண்டியரா எப்படிச் சொல்றது? அதான், லேசா சின்ன பிட்டைப் போட்டேன். அப்பத்தான் என் அண்ணன், உங்க கூட அனுப்பி வைப்பான். அதுக்குள்ள... மூக்கு மேல கோபம் வந்து குதிக்கீறீங்க?

என் மனசில என்ன இருக்குன்னு, உங்களுக்கு நிஜமா தெரியாதா மாமா? ம். என் ஒவ்வொரு செல்லிலும் சிபிச் சக்கரவர்த்தி மஹாராஜா தான் இருக்கிறார். போதுமா? கை நீட்டி அவளைத் தன் அருகில் இழுத்து, ''இது மட்டும் போதும்டி!'' என்றான் உல்லாசமாக.

குளித்து வந்த கௌதமின் தேவையறிந்து உணவு பரிமாறினாள். பின்பு, படுக்கையில் தேவியைத் தன் ஆளுமைக்குள் கொண்டு வந்த கௌதம், ''பார்பி! என்ன நடச்சுன்னு கேட்கவே இல்லையே? உனக்குத் தெரிய வேண்டாமா?''

''வேண்டாம் பிரபு! எனக்கு எதுவுமே தெரிய வேண்டாம். என் பிரபு என்னை விட்டுப் போகமாட்டார்ங்கற சந்தோஷம் மட்டும் போதும். ஐ லவ் யூ பிரபு!'' -அவன் மார்பில் ஒடுங்கினாள். நடந்தது அனைத்தையும் ஒளிக்காமல் அவளிடம் சொல்லி விட்டு, நான் பேசினது சரிதானே பார்பி?'' என்றான்.

அவன் கேசத்தை விரல்களால் அளைந்த தேவி, ''தப்பு பிரபு! பெத்தங்ககிட்ட, நீங்க அப்படிப் பேசியிருக்கக் கூடாது. அவங்க மனசு ரொம்பக் கஷ்டப்படும் பிரபு. அவங்க உங்ககிட்ட காட்றது வேற மாதிரியான அன்பு. உங்களுக்குக் கோடி கோடியாக பணம் சம்பாதிச்சு வைக்க நினைச்சி, சொத்தைக் குவிச்சிருக்காங்க.

அதுக்காக, அவங்க குடும்பத்தையே விட்டுக் கொடுத்திட்டாங்க. உங்களுக்கு அது புடிக்கலைன்னு, அவங்க மனசு நோகாம எடுத்துச் சொல்லியிருந்தா, ஏத்துக்கிட்டு ருப்பாங்க. ஆனா, தப்பு பண்ணீட்டிங்க!

என்னைப்பத்தி உயர்வர்கவும், அவங்களைப் பத்தி



மட்டமாகவும் பேசிகிட்டு வந்துட்டது, அவங்க ஈகோவைப் பாதிச்சிருக்கும். அந்தக் கோபத்தை, கண்டிப்பா என்கிட்டதான் காட்டுவாங்க. இப்பத்தான் எனக்குப் பயமா இருக்கு. நான்தான் உங்களை அப்படிப் பேசத் தூண்டியதா நினைப்பாங்க. போங்க பிரபு! இந்த மேட்டரை இன்னும் கொஞ்சம் சாஃப்டா ஹேண்டில் பண்ணியிருக்கலாம்.''

தனது தாயிற்காக பரிந்து பேசியவளையே விழியகலாது பார்த்தான். ''இந்த அன்பு தான் பார்பி... என்னை அப்படிப் பேச வெச்சது. இதுக்காக... எப்படிப் பேசினாலும் தப்பில்லை!'' ஆவேசமாக அவள் முகம் நோக்கிக் குனிந்தான். இருவருக்குமே, அன்று மறக்க முடியாத இரவாகிப் போனது.

ஒரு வாரமானாலும், பத்மினியிடமிருந்து எந்த ரெஸ்பான்சும் இல்லை. அலுவலக வேலைகள் மட்டும் தொடர்ந்து கொண்டிருந்தன. ஒரு மிகப் பெரிய நிறுவனத்திற்காக ஐநூறு வீடுகள் கட்டும் ப்ராஜெக்ட் ஒன்று கிடைத்திருந்தது. அதற்கு வேறொரு கம்பெனியிலிருந்து மறைமுகமாக மிரட்டலும் வந்தது. டெண்டரை வாபஸ் வாங்கச் சொல்ல. அதை அலட்சியப்படுத்தி அந்த வாய்ப்பை ''விஷ்வா பில்டர்ஸ்'' நிறுவனமே பெற்றது. அதற்கான மீட்டிங் ஒன்றுக்காக கௌதம் பாம்பே செல்ல வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகிப் போனது.

அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, பத்மினியிடமிருந்து கௌதமுக்கு அழைப்பு வர, வீட்டுக்குச் செல்ல மனமின்றி, டெக்ஸ்டைல் யூனிட்டிலேயே அவரைச் சந்தித்தான்.

''ஏன்! சாருக்கு வீட்டுக்கு வர முடியாதோ?'' என,

''இல்லைம்மா. இனிமேல் அங்கு வருவதானால், தேவியோடு தான் வருவேன். என்ன விஷயம்னு சொல்லுங்க. எதுக்குக் கூப்பிட்டீங்க?''

''ரொம்ப அவசரமோ?''

''சொல்லுங்கம்மா'' -எரிச்சலை அடக்கிக் கொண்டான்.

''நான் ஒரு நிறுவனம் மூலமா, அவங்க குடும்பத்தைப் பத்தி விசாரிச்சேன். மரியாதையான பேமிலியானாலும், வசதிக் குறைவு தான் ஒரே நெகடிவ் பாயிண்ட். எனக்கு நீ ஒரே பையன்றதால, உன் ஆசையையும் நான் யோசித்துப் பார்க்கணும். அதனால், நான் இந்த மேரேஜை அக்சப்ட் பண்ணிக்கறேன். இன்னும் பத்து நாள்ல ஒரு கிராண்ட் ரிசப்ஷன் அரேஞ்ச் பண்ணணும். அது என்னோட பொறுப்பு. அதுவரை நீங்க அந்த வீட்லயே இருங்க. ரிசப்ஷன் முடிஞ்சதும் நேரா இங்க வந்திடலாம். இதைச் சொல்லத் தான் கூப்பிட்டேன்'' என்ற பத்மினியின் கூர்மையான விழிகள், கௌதமின் முகத்தை ஆராய்ந்தது.

கௌதம் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனான். இத்தகைய திருப்பத்தை அவன் எதிர்பார்க்கவேயில்லை. வேகநடை நடந்து, அன்னையின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

''தேங்க்ஸ்மா. தேங்க்யூ சோ மச்! தேவி நிஜமாகவே ரொம்ப ரொம்ப நல்லவம்மா. அவ கூடப் பழகினா, நீங்களே புரிஞ்சுக்குவீங்க. அவ இதைக் கேட்டா சந்தோஷத்தில் குதிப்பா. அன்னிக்கு உங்ககிட்ட நான் பேசினதைக்கூட தப்புன்னு, என்கிட்டச் சண்டை போட்டா தெரியுமா! அவளை இங்க கூட்டிட்டு வரட்டுமா? அவளைப் பார்த்தாலே பாதி கன்வின்ஸ் ஆயிடுவீங்க.''



சின்னப் பையன் போல பத்மினியின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்கள் மின்ன ஆர்வத்துடன் பேசிய இந்தக் கௌதம், அவருக்கு ரொம்பப் புதிதானவன். பத்மினி கூட கொஞ்சம் நெகிழ்ந்து போனார்.

''வேணாம் கௌதம். சஸ்பென்ஸா இருக்கட்டும்! நான், ரிசப்ஷன் அன்னிக்குத்தான் என் மருமகளைப் பார்ப்பேன். சரி, நீ கிளம்பு!'' என்றவர், மறந்தும் தேவி என்ற பெயரை உச்சரிக்கவே இல்லை.

தன் தாயின் கன்னத்தில் முத்தமிட்டு, ''தேங்க்ஸ் மா!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

''எந்தச் சென்டிமென்டால உன்னை அந்தப் பொண்ணு பிடிச்சு வெச்சிருக்காளோ, அதே சென்டிமென்டாலயே... உன்னை அவகிட்டயிருந்து பிரிப்பேன். அதுவரைக்கும், நான் உன்கிட்ட இதே மாதிரிதான் நடிக்கணும் கௌதம். என்னை ஜெயிக்க யாராலும் முடியாது!'' -கோபத்தில் ஜொலித்த பத்மனியின் முகத்தைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது.

# 14

சிபியின் கேபினுக்குச் சென்ற கௌதம், அவன் தோள் பற்றி உலுக்கினான்.

''சிபி! அம்மா தேவியை ஏத்துக்கிட்டாங்க. ரிசப்ஷனை அம்மாவே அரேஞ்ச் பண்ணுவாங்கன்னு, இப்பத்தான் என்னைக் கூப்பிட்டுச் சொன்னாங்க. ரொம்ப ஹேப்பியா இருக்கு. உடனே போய், தேவிகிட்ட இதைச் சொல்லணும்.''

முதன்முறையாக பூவையும், ஸ்வீட்டும் வாங்கிச் சென்ற

கௌதம், ஸ்வீட்டை அவள் வாயில் திணித்து, அவளைத் தூக்கிச் சுற்றி, ''ஓ மை பார்பி! அம்மா கன்வின்ஸ் ஆயிட்டாங்க!'' என்று நடந்ததை விவரித்தான்.

தேவி சந்தோஷம் தாளாமல், காலையிலிருந்தே தன்னைப் பிடித்திருந்த டென்ஷனெல்லாம் வடிய, அவன் மார்பில் சாய்ந்து கதறினாள்.

அவன் மனம் புரிந்தவனாக அவள் முகமெல்லாம் முத்திரையிட்டவன், ''நீ என்னோட அதிர்ஷ்டமா வந்தவ! அம்மா என்கிட்ட முதல்தடவையாக பிரியமா பேசினாங்க தெரியுமா? நீ வந்த பிறகு, எல்லாமே நல்லதாக நடக்குது. உனக்கு என்ன வேணும்னு சொல்லு... தரேன்.''

''எனக்கு... நீங்க! நீங்க மட்டும்தான் வேண்டும்!'' என அவனை நோக்கி விரலை நீட்டினாள். அவள் உச்சியில் தலை சாய்த்து, ''அந்த வரம்... உனக்கு மட்டும் தான்டி செல்லம்!'' என்றான் கொஞ்சலாக.

எல்லாரும் மகிழ்ச்சியில் திளைக்க, விஸ்வநாதன் மட்டும் யோசனையில் ஆழ்ந்தார். அவர் அறிந்திருந்த பத்மினி, அவ்வளவு சீக்கிரம் இறங்க வரச் சான்ஸே இல்லை என்பதை உணர்ந்திருந்தார். இதில் வேறு ஏதாவது விஷயம் இருக்குமோ என்று சந்தேகப்பட்டார்.

அதிகாலை ஐந்து மணிக்குப் பிளைட்டைப் பிடிக்கத் தயாராகி வெளியே வந்தவன், ''பார்பி! கிளம்பறேன்டா. நீ இன்னிக்கு முடிஞ்சா ஆபிஸ் போ. இல்லேன்னா காலையில் ஆபிஸ் கிளம்பறதுக்குள்ள சிபியை வந்து கூட்டிட்டுப் போகச் சொல்லு.''

''இந்தக் காபியைக் குடிங்க. நான் லஞ்ச் முடிச்சுட்டு, மூணு மணிக்குப் போறேன். அந்த டிசைனை பைனலைஸ் பண்ண, ஒரு டூ அவர்ஸ் இருந்தா போதும். சிபி அண்ணாவோட போய் தாத்தாவைப் பார்க்கறேன். நைட் நீங்க நேரா அங்க வந்திட்டா, சேர்ந்து வீடு திரும்பலாம்.''



''பரவாயில்லையே! சோனு கூட விளையாடிகிட்டு இருந்த பார்பி, செல்லம் கொஞ்சமா வளர்ந்துட்டா போலிருக்கு. சோனுவை நம்மோட குட்டிப் பாப்பாவுக்கு விளையாடக் குடுத்திடலாம். அவளுக்கு மதுமதின்னு பேர் கூட வெச்சிட்டேன்.''

அவள் இடையில் கை போட்டு அருகில் இழுக்க, சிவந்த முகத்தை மறைத்துக் கொண்டு, ''போங்க பிரபு! சீக்கிரம் போயிட்டு வாங்க. நான் காத்திருப்பேன்!'' என்றாள் மனதில் கலக்கத்துடன்.

முதன்முதலாக கௌதம் தன்னைப் பிரிந்து வெளியூர் செல்வதால் இருக்கும் என்று சமாதானமடைந்தாள். அவன் காரில் அமர்ந்து கையசைத்ததும், குனிந்து அவன் இதழ்களை முத்தமிட்டாள்.

திகைத்துப் போய் தேவியைப் பார்த்து நம்ப முடியாமல், ''பார்பி!'' என்றான் கௌதம்.

''மறுபடி என்னைப் பார்க்கிற வரை, உங்களுக்கு என் பரிசு!'' -கண்ணைச் சிமிட்டினாள்.

''ம். என் தேவியாருக்கு இன்னிக்கு என் மேல ரொம்பக் கருணை வந்திருக்கு! நைட் வந்து கவனிச்சிக்கிறேன், பை டார்லிங்!'' என்று ஒரு முத்தத்தைப் பறக்க விட்டு, காரைக் கிளப்பினான்.

அவளுக்கோ, காரணமேயில்லாமல் அழுகை முட்டிக் கொண்டு வர படுக்கையில் விழுந்து தலையணையில் முகம் புதைத்து அழுது தீர்த்தாள். இனி, அவனைத் தான்

பார்க்கவே போவதில்லை என்பதை அவள் உள்ளுணர்வே அறிவித்ததோ என்னவோ? இனிக்கும் நினைவுகளோடு ஏர்போர்ட் சென்ற கௌதம், மறக்காமல் சிபியை அழைத்து விபரம் தெரிவித்தான்.

ஏழுமணிக்கு சிபி போன் பண்ண, ''நீ ஆறு மணிக்குக் கிளம்பியதும், ஈவினிங் வந்து என்னை பிக் அப் பண்ணிக்கோ'' என்றாள்.

மாலை ஐந்தரை மணிக்கு எல்லோரும் கிளம்ப, ''தேவி! நீயும் கிளம்பு. உன்னைத் தனியா விட்டுட்டுப் போனா பாஸ் என்னைக் கோவிச்சுக்குவார்'' என்றார் தாரா.

''இல்லை மேம். இன்னும் அரைமணிலேயே கிளம்பிடுவேன். விக்ரம் சார் என் கூட இருப்பார். நீங்க போங்க. பாஸ் ஏர்போர்ட் போயிட்டு இருக்கார்.''

''தேவி! நீங்க வேலை முடிஞ்சதும் எனக்குக் கால் பண்ணுங்க. நான் இப்ப வந்திடறேன்'' என்ற விக்ரம் பைக்கை ஸ்டார்ட் பண்ணும்போது, பத்மினியின் கார் உள்ளே நுழைய, விக்ரமுக்கு அபாயமணி அடித்தது.

''பாஸ் இல்லாதபோது இங்கே என்ன வேலை? தேவி வேற தனியா இருக்காங்க!'' என்று நினைத்தவன், அவருக்குத் தெரியாமல் அவரைப் பின்தொடர்ந்தான். மனம் ஏனோ பதட்டத்தில் ஆழ்ந்தது.

''பரவாயில்லை. நான் நினைச்சதை விட அழகா தான் இருக்க! அதான், என் பையன் மயங்கிட்டான்!'' திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்து, வந்திருப்பது கௌதமின் தாய் பத்மினி என்று புரிந்ததில் வேகமாக எழுந்தாள் தேவி.

''அத்தை! என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க.'' -குரலில் பதட்டம்.



''ச்சே! எழுந்திரு முதல்ல. நல்லா டிராமா போடற! கௌதம் வேணும்னா மயங்கலாம். ஆனா, என்னை யாரும் அசைக்க முடியாது. சரி... எதுக்காக என் பையனை வளைச்சுப் பிடிச்சிருக்க? எல்லாத்துக்கும் ஒரு விலையிருக்குன்னு எனக்குத் தெரியும். அவனை விட்டுப் போறதுக்கு... நான் என்ன செய்யணும்னு சொல்லு. உன்னை மாதிரி ஆளுங்ககிட்ட நான் பேசறதே இல்லை. என்ன பண்றது? சொல்லு'' -மிரட்டினாள்.

''அத்தை! என்னைத் தப்பா புரிஞ்சுகிட்டீங்க. ரெண்டு பேரும் ஒருத்தரையொருத்தர் மனப்பூர்வமாக விரும்பறோம். எனக்கு எதுவும் வேண்டாம்'' என்ற தேவியின் குரல் தடுமாறியது.

''ஏய்! ஒரு தடவை சொன்னா புரியாதா? கௌதமோட உயரம் என்னன்னு உனக்குத் தெரியுமா? அவன் பக்கத்திலேயே சேர் போட்டு... அவனுக்கு ஈக்வலா உட்கார்ந்து வேலை செய்யற அளவுக்கு, உனக்குத் துணிச்சல் ஆயிடுச்சா?''

''நீங்க இந்தக் கல்யாணத்தை ஏத்துக்கிட்டதா...''

''அவனை நம்ப வெச்சேன். நீ கேம் ஆடற மாதிரி, நானும் ஒரு சின்ன டிராமா போட்டேன். ரிசப்ஷனுக்கு எல்லா ஏற்பாடும் நடக்கும். ஆனா, நீ அதுக்கு முன்னால, அவனை விட்டு விலகிப் போயிடணும். ஏதாவது ஒரு ரீசன் சொல்லி நீயா விலகிப் போனா, யாருக்கும் எந்த நஷ்டமும் இல்லை.''

''இதுக்கு நான் சம்மதிக்க மாட்டேன். அவர் என்னைப் பிரிஞ்சிருக்க மாட்டார். நான்... நானும் அவரை விட்டுட்டுப் போக முடியாது. எனக்கு உங்க பணம் வேண்டாம்.'' -குரல் திக்கியது.

''நிறுத்து! இங்க பார். உனக்கு இன்னும் ஒரு வாரம் டைம் தரேன். அதுக்குள்ளே நீ விலகிடணும். எங்கே போறதுன்னு நீயே முடிவு பண்ணிக்க. இல்லைன்னா... உன்னை பாரினுக்குக் கூட அனுப்பி, அங்கயே செட்டில் பண்ண... எல்லா ஏற்பாடும் நானே பண்றேன். இனி அவனை மறந்திடு.''

''என்னால முடியாதே. ப்ளீஸ்! எங்களை வாழ விடுங்க!''

''கௌதமுக்கு, அற்புதமான வாழ்க்கை காத்துகிட்டு இருக்கு. நீ விலகினா, அவனை ஈசியா என் வழிக்குக் கொண்டு வந்திடுவேன்.''

''வேண்டாம். இப்படிப் பேசாதீங்க. என் கௌதமுக்கு இது தெரிஞ்சா, கண்டிப்பா உங்களை வெறுத்திடுவார். எங்களை விட்டுடுங்க.''

''என்னையே மிரட்டறியா? பிசினஸ்ல, பெரிய பெரிய சவால்களையே சந்திச்சு... ஈஸியா ஜெயிச்சிருக்கேன். எனக்கு, நீ ஒரு கொசு மாதிரி. ஜாக்கிரதை. நசுக்கிடுவேன்! உன்னை மாதிரி ஒரு மிடில் கிளாஸ் பொண்ணு கூட கௌதம் வாழக்கூடாது. அவன் ரேஞ்சே தனி. ஒரு வாரத்தில் நீ சரியான முடிவெடுக்கணும். கண்டிப்பா எடுப்ப! புரியுதா? இல்லேன்ன... நீ உன் அண்ணனையும், தாத்தாவையும் இழக்க வேண்டியிருக்கும். நான் சொல்றது புரியுதா? இப்பக் கூட, சிபிக்கு ஒரு மணி நேரம் நகர முடியாதபடி வேலை குடுத்துட்டுத்தான் வந்தேன். இப்ப அவன் வரமாட்டான்.

அது மட்டுமில்ல. உன் முடிவுனால கௌதமுக்கு என்னால ஆபத்து வரக் கூடாதுன்னு வேண்டிக்க. கௌதம்கிட்டயோ... இல்லை... வேற யார்கிட்டயோ... நான் மிரட்டினதைச் சொல்லணும்னு நினைச்சா... நான் என்ன செய்வேன்னு... சொல்ல மாட்டேன்... செஞ்சு காண்பிப்பேன். புத்திசாலியா நடந்துக்க! உன் டிமாண்ட்ஸ் என்னன்னு சொன்னா, அதைக் கண்டிப்பா நிறைவேத்தறேன். கண்ணைத் துடைச்சிட்டு, இப்ப வீட்டுக்குக் கிளம்பு. போ!'' அதிகாரமான குரலில் அலட்சியத்தோடு எச்சரித்துவிட்டு, வந்த வேகத்தில் கிளம்பினார் பத்மினி.



சிசி கேமராவை ஆப் செய்யப் போன விக்ரம், மானிட்டரில் நடந்ததைப் பார்த்து அதிர்ச்சியில் நிலை குலைந்து போனான். தன் நிலையே இப்படியென்றால், தேவியின் நிலைகண்டு பயந்து போனான். நடந்த முழு நிகழ்வையும் சி.டி.யில் பதிவு செய்து எடுத்துக் கொண்டு, உடனே யாருக்கோ போன் செய்தான்.

''முதலாளி! நீங்க நினைச்ச மாதிரியே நடந்திடுச்சு. தேவி தனியா கதறி அழுதிட்டு இருக்காங்க. நான் சிபி சாருக்குப் போன் செய்யவா? கௌதம் சார் ஒன்பது மணிக்குத் தான் வருவார். இப்ப டிராவல்ல இருப்பார்.'' -பதறினான்.

''நீங்க இங்க வரவேண்டிய நேரம் வந்திடுச்சு. தேவியோட நிலைமை மாதிரி யாருக்கும் வரக்கூடாது. இப்ப அவங்களுக்கு ஆறுதல் சொல்லக்கூட இங்கே யாருமில்லை. மனசு பதறுது. நான் நீங்க வரும்வரை அவங்களுக்குத் துணையா இருக்கேன்.''

''..........''

''ம். சரிங்க முதலாளி. சி.டி பத்திரமா இருக்கு. சரி, பார்த்துக்கலாம். நான் போய்ப் பார்க்கறேன்.''

அழுது ஓய்ந்து போய், டேபிள் மேலேயே

மயங்கியிருக்க, விக்ரம் அவள் மயக்கத்தை தெளிய வைத்து, ''தேவி! என்ன ஆச்சு? உடம்பு சரியில்லையா? கிளம்புங்க. சிபி சாருக்குப் போன் பண்ணட்டுமா?'' என்றான்.

''வேண்டாம் விக்ரம் சார். சிபி இப்ப வந்திடுவான். எனக்குக் கொஞ்சம் தலைவலி. பீவரிஷா இருக்கு. நான் ஃபேஸ் வாஷ் பண்ணிட்டு வந்திடறேன்'' என்றவள், கௌதமின் பர்சனல் ரூமுக்குள் நுழைந்தாள்.

அங்கும் ஒரு பாட்டம் அழுது ஓய்ந்து விட்டு, ''பிரபு! நாம ஏமாந்துட்டோம். உங்கம்மா மனசாட்சியே இல்லாம பேசறாங்க. கொலை செய்வேன்னு கூசாம மிரட்டறாங்க. எனக்குப் பயமா இருக்கு பிரபு. சீக்கிரம் வாங்க. நாம யாருக்கும் தெரியாம, எங்கேயவாது போயிடலாம். எனக்கு நீங்க வேணும்!'' என்று புலம்பிக் கொண்டே வெளியில் வந்தவள் அங்கிருந்த ஐ.டி. வண்டி காரின் சாவியை எடுத்துக் கொண்டு வேகமாக வெளியேறினாள்.

காரில் ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்த பிறகுதான், தேவியைக் கவனித்து விட்டு பதறி வெளியே ஓடி வந்தான் விக்ரம்.

''எங்கம்மா கிளம்புற? வெயிட் பண்ணு தேவி! நான் காரை ஒட்டறேன் எங்கே போகணும்னு சொன்னா, நான் கொண்டு போய் விடறேன். தலைவலியோட நீங்க காரை ஓட்ட வேண்டாம். இல்லேன்னா, சிபி சார் வர்ற வரைக்கும், இங்கேயே இருங்க!'' -கெஞ்சினான்.

''இல்ல விக்ரம் சார். நான் நம்ம பாஸைப் பார்க்கப் போறேன். சிபி அண்ணாகிட்டச் சொல்லிடுங்க. இரண்டு பேரும் சேர்ந்து நைட் அங்க வர்றதா சொல்லுங்க. நான் உடனே ஏர்போர்ட் போகணும்!'' கார் சீறிப் பாய்ந்தது.



விக்ரம், ''முதலாளி! தேவி நான் சொல்வதைக் கேட்காம, காரை எடுத்துட்டு ஏர்போர்ட் போறேன்னு வேகமாக கிளம்பிப் போயிட்டு இருக்காங்க. கார் ஓட்டி அதிகமாக ப்ராக்டிஸ் வேற இல்லை. பயமா இருக்கு'' என்றான்.

''......''

''வெளியே தான் நிற்கிறேன்.''

அப்போது புயல் போல ஒரு கார் வந்து நிற்க, அதன் முன் சீட்டில் விக்ரம் தாவி ஏற, கார் பறந்தது. காரில் இருந்தவரிடம் சி.டி.யை ஒப்படைத்து விட்டு, விபரத்தைத் தெரிவித்தான். அங்கிருந்த மடிக்கணினியில் சி.டி யை ஓடவிட்டவரின் முகம் பயங்கரமாக மாறியது.

''நான் தப்புப் பண்ணிட்டேன் விக்ரம். நான் மொதல்லயே வந்திருக்கணும். சீக்கிரமாக போய் தேவியைப் பிடிக்கணும்!''

தேவி பேய் வேகத்தில் காரை ஓட்டினாள். அவள் மனம், பத்மினியின் முகத்தில் தெரிந்த குரோதமும், கொலை வெறியையும் நினைத்துப் பார்த்து நடுங்கியது. ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த கைகள் நடுங்கின. சிட்டி லிமிட்டை தாண்டுவதற்கு முன்பே கௌதமை அழைத்தாள்.

''ஹாய் பார்பி! கரெக்டா வெளியே வந்ததும் உன் போன். சிபி கூட வீட்டுக்கு போயாச்சா? எனி திங் இம்பார்டன்ட்? இன்னிக்குக் காலையிலிருந்தே உன்னைப் பார்க்காததே... எனக்கு உன்னை ரொம்ப நாள் பார்க்காதது மாதிரி இருக்கு. இனி உன்னை எங்க போனாலும் கூட்டிட்டுத்தான் போகணும்னு முடிவு பண்ணிட்டேன். முடியலைடா!'' குரலில் தாபம் வழியப் பேசியதைக்

கேட்டதும், தேவிக்கு விம்மல் வெடித்தது.

''பிரபு! நீங்க... என்... பிரபு தானே? நீங்க சொல்றது நிஜம் தானே? என்னை எந்தக் காரணத்துக்காகவும் விட்டுட மாட்டீங்கல்ல. எனக்கு நீங்க வேணும் பிரபு. நீங்க இல்லாம போனா, செத்திருவேன்.'' - விம்மினாள்.

''ஏய் பார்பி! என்ன பேசற? அழற மாதிரி இருக்கு. எங்கே இருக்கே?'' - பதட்டமானான்.

''உங்களுக்கு ஒண்ணும் ஆகக் கூடாது. அண்ணாவும், தாத்தாவும் பாவம் பிரபு. எனக்காக அவங்க கஷ்டப் படணுமா? ஆனா, உங்களை விட்டுட்டு... நான் எப்படி இருப்பேன்? அதுக்குப் பதிலா, என் உயிர் போனால் கூட...''

''ஏய் பார்பி! ஏன் பைத்தியம் மாதிரி உளர்றே? சிபிகிட்ட முதல்ல போனைக் குடு. என்ன நடந்துச்சு? யாராவது உன்னை மிரட்டினாங்களா? சொல்லு. ரொம்பப் பயந்து போயிருக்க. சிபியை பேசச் சொல்லு. எங்கே அவன்?''

''சிபி பேச மாட்டான். அவன் என்கூட இல்லை. நான் உங்களைப் பார்க்க ஏர்போர்ட் வந்துகிட்டு இருக்கேன்.''

திடுக்கிட்டுப் போனவனுக்கு, ''தனியாவா? எதில?'' -படபடப்பு கூடியது.

''நம்ம கல்யாணம் ஆகி ஐம்பது நாள் ஆனதுக்கு, எனக்கு ஒரு கார் பிரசன்ட் பண்ணியிருங்கல்ல. அதில தான்... நானே ஒட்டிட்டு வரேன்.''

''ஏய் கண்ணம்மா! நான்தான் வந்திருவேனே! இப்பொ என்ன அவசரம்? சரி. போனை வை. கார் ஒட்டும்போது போன் பேசக் கூடாதுன்னு சொல்லிட்டு, நீயே அதைச் செய்யலாமா?''



''இல்லை. உங்களைப் பார்க்கிற வரை, போனை வைக்க மாட்டேன். நீங்க என் கூட பேசிகிட்டே இருங்க.'' அவளின் தேம்பல் கேட்டதும் துடித்துப் போனான்.

''டென்ஷன்ல கார் ஓட்டினா, சரி வராது கண்ணம்மா. காரை ஓரமா நிறுத்திட்டு என்கிட்ட பேசிகிட்டு இரு. அரைமணியில வந்திடறேன்டா. ப்ளீஸ்டா! என் செல்லம்-ல? சொன்ன பேச்சைக் கேளுடா!'' -ஏறக்குறைய கெஞ்சினான்.

ஏதோ பெரிதாக நடந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான். என்றாலும், துளி கூட பத்மினியைப் பற்றி சந்தேகமே எழவில்லை.

''மாட்டேன் பிரபு. நான் உடனே உங்களைப் பார்க்கணும். ஐ லவ் யூ பிரபு. எனக்கு உங்க சொத்து வேண்டாம். பணத்துக்காக, உங்களை நான் லவ் பண்ணலை. அதை நீங்க நம்பறீங்க தானே? விக்ரம் சாரும், சிபியும் எனக்குக் கால் பண்ணிக்கிட்டேயிருக்காங்க. பிரபு! நாம தனியா எங்கேயாவது போயிடலாம். இனி சென்னைக்கு வரவே கூடாது. உங்களை என்கிட்டயிருந்து யாரும் பிரிக்க முடியாது பிரபு. ஐ லவ் யூ சோ மச்! ஆ! ஐயோ! லாரி வருதே பிரபு!'' டமால் என்ற சத்தத்துடன் தொடர்பு அற்றுப் போக, கௌதம் நிலைகுலைந்து போனான்.

''பார்பி! கண்ணம்மா... என்ன ஆச்சு? பேசுடா. கார் எங்க வருது? ப்ளீஸ் பேசுடி. உனக்கு ஒண்ணும் ஆகாது... ஆகக் கூடாது. ஐயோ! பேச மாட்டேங்கறியே பார்பி!'' பைத்தியம் போல காரைப் பறக்க விட்டான்.

அரை மணி நேரம் கழித்து, சற்றுத் தூரத்தில் அவனது கார் எரிந்து கொண்டிருக்க, தீயணைப்பு வண்டி அதை

அணைக்க முயற்சி செய்வதைப் பார்த்து மூளை செயல் இழக்க, கார் கட்டுப்பாடின்றி ஓடி விபத்துக்குள்ளானது.

விக்ரம் போன் செய்து சிபிக்கு விவரம் தெரிவித்ததும், பறந்து சென்று காரை எடுத்தான்.

''விக்ரம் சார்! நானே வர்றதா தானே சொல்லி யிருந்தேன். பத்மினி மேடம் சில் கான்பி டென்ஷியல் பைல்ஸை சரிபார்க்கற வேலையைக் குடுத்திட்டதை போன் பண்ணிச் சொல்ல, ''நோ ப்ராப்ளம். மெதுவா வாங்கன்னு சொன்னா? அதுக்குள்ள ஏன் அவசரமா ஏர்போர்ட் போறா?'' -எதுவும் புரியாமல் விக்ரமைக் கேட்டான்.

''தேவி மேடம் ஒரு பெரிய சதி வலையில மாட்டியிருக்காங்க... பாவம்...! என்பது தெரிந்தும், அதைச் சொல்ல முடியாமல், ''நான் அங்கே தான் பாஸ் போறேன். நான் கிளம்பி கொஞ்ச நேரம் ஆச்சு. நீங்க மெதுவா வாங்க!'' என்று சொன்னதில் ரிலாக்ஸ் ஆன, சிபி தேவியை செல்லில் அழைக்க, நம்பர் பிசியாக இருந்தது.

விக்ரமின் கார் விபத்து நடந்த இடத்தை அடையும் போதே, ''முதலாளி! அதோ நம்ப தேவியோட கார் ஆக்ஸிடென்ட்ட ஆகியிருக்கே!'' என்று பதறினான்.

லாரி வந்து நேருக்கு நேராக மோதியதில் முன்புறக் கண்ணாடி முழுவதும் உடைந்து முகம் முழுக்க கண்ணாடித் துகள்கள் படிந்ததில், அதிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. கைகளால் கண்களை மூடியிருந்தால் கண்ணுக்கு மட்டும் அதிகக் காயமில்லை. இமைகளில் மட்டும் காயமிருந்தது. முதன் முதலாகப் தேவியை பார்க்கும் பெரியவருக்கு, அவளிருந்த கோலம் நெஞ்சை அடைத்தது.



''தேவி! மேரா பேட்டா!'' என்று கதறியவரை அறிந்து கொள்ள தேவிக்கு உணர்வில்லை.''

''விக்ரம். . தேவிக்கு.தேவி.''

''பயப்படாதீங்க முதலாளி. பல்ஸ் இருக்கு. மயக்கமா தான் ஆகியிருக்காங்க. உடனே ஹாஸ்பிட்டல் கொண்டு போகணும்.''

அவரின் ஒரே ஒரு போன்காலில், அந்தப் பிரபலமான மருத்துவமனையிலிருந்து அனைத்து வசதிகளுடன் கூடிய கேரவன், விபத்து நடந்த இடத்துக்கு விரைந்து வந்தது.

''விக்ரம்! இனி நான் சொல்றபடி செஞ்சுட்டு, ஹாஸ்பிட்டலுக்கு வா.'' என்று கட்டளையிட்டுவிட்டு, தேவியுடன் விரைந்தார். பெரியவர் சொல்வதைக் கேட்கக் கேட்க, விக்ரமின் விழிகள் விரிந்து கொண்டே போனது.

''சிபி வந்துகிட்டு இருக்கான். இங்க வந்து சேருவதற்குள், நான் சொன்னது நடந்தாகணும். ஆனந்த் உனக்குத் துணையா இப்ப வந்திடுவான். நான் சொன்னத பர்பெக்டா செஞ்சு முடிச்சிடு!'' கேரவனில் ஏறியதும் வண்டி புறப்பட்டது. அவர் குரலிலிருந்த உக்கிரம் விக்ரமைப் பொசுக்கியது.

# 15

அவர் விக்ரமிடம் பேசி விட்டு கேரவனுக்கு வருவதற்குள், தேவிக்கு முதலுதவி செய்ய ஆரம்பித் திருந்தனர். உள்ளே பிரபலமான அந்த மருத்துவரின் கீழ், நகரின் மிக முக்கியமான நான்கு மருத்துவ மூளைகள், சீப்

போட்ட உத்தரவை நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். பல்ஸ் குறைந்திருந்ததால், உடனடியாக செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு சிகிச்சை தொடர்ந்தது.

உணர்வற்ற நிலையில், தேவி மிகவும் ரகசியமாகவும், பாதுகாப்பாகவும் நகரின் நம்பர் ஒன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள்.

இன்று வரை நடந்ததை அறிந்த அந்தப் பெரியவரின் முகம் கோபத்தில் பயங்கரமாக மாறியது. தன் உதவியாளாகளை அழைத்து அடுக்கடுக்காய் ஆணைகளைப் பிறப்பித்தார். அதன்படி காரினுள் வேறு ஒரு உடல் கிடத்தப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டது. சிபி வந்து சேரும்போது கார் ஜெகஜோதியாக எரிந்து கொண்டிருக்க, அதைப் பார்த்த சிபியின் மூளைக்கு ரத்தம் வேகமாகப் பாய்ந்தது.

''குட்டிம்மா! செல்லம்!'' என்று காரை நோக்கிப் பாய்ந்தவனை ஆனந்தும், விக்ரமும் தாங்கிப் பிடிக்க, அவர்களின் கைகளிலேயே மயங்கிச் சரிந்தான். இந்த உலகத்துக்கு முன் தேவி இறந்த காலமாகிப் போனாள்.

கௌதம் லேசாகக் கண்விழித்தான். உணர்வு வந்தாலும் கை, கால்களை அசைக்க முடியவில்லை.

''பார்பி! பார்பி!'' என்று அவன் அரற்றியதைக் கேட்டு, அவன் காலடியில் தலைசாய்த்துப் படுத்திருந்த சிபி, எழுந்து அவனருகே விரைந்தான்.

''கௌதம்! விழிச்சிட்டியாடா? எப்படி இருக்கே? எங்களைப் பதற வெச்சுட்டடா? இனிமேலும் ஒரு இழப்பை என்னால தாங்க முடியாது. நீ மயக்கமாகி பத்து நாளாகுதடா!'' என்ற சிபியின் கண்கள் வீங்கிச் சிவந்து, தலை கலைந்து, பல நாள் பட்டினி கிடந்தவன் போல சோர்ந்திருந்தான். கௌதமின் கண்களைப் பார்த்தவனின் நெஞ்சம் விம்மியது.



கௌதமின் கண்கள் சுற்றும் முற்றும் தேடியது. ''என் பார்பி எங்கேடா? அவளுக்கு அடி எதுவுமில்லையே? நல்லா இருக்கா தானே?''

சிபி ஒரு நொடி தான் தயங்கினான். ''அவளுக்கு இனி எதுவும் ஆகாதுடா. வீட்லதான் இருக்கா. நீ ரெஸ்ட் எடு!'' -குரல் தடுமாறியது

''பொய் பேச உனக்கு வரலை சிபி. என் பார்பி என்னை இந்த நிலைமையில விட்டுட்டு, ஒரு இஞ்ச் கூட நகர மாட்டா. அவளுக்குப் பலமா அடிபட்டிருக்கு அப்படித் தானே...? சொல்லுடா எங்கே இருக்கான்னு? அவ என்னை விட்டுப் போகமாட்டாளே... சொல்லுடா!'' குரல் உயரக் கத்தினான்.

''கௌதம்! நீ கத்தினா உன் உடம்பு என்னாகும். ப்ளீஸ். அவளைப் பார்க்கலாம். உனக்கு கை, கால் ரெண்டும் பிராக்சர் ஆகியிருக்கு. நீ இப்ப இருக்கிற நிலைமையில் அசையவே கூடாது. அவ வருவா... அமைதியா இரு. நீ சொன்ன மாதிரி அவளுக்கும் லேசா காயம். அதனாலதான், அவ வீட்ல இருக்கா. மிரட்டி வீட்ல விட்டுட்டு வந்திருக்கேன். லேசான அடிதான்.''

''லேசாவா? நான் நம்ப மாட்டேன். நான் அவகிட்டப் பேசணும். ம். போன் எங்கே? நானே அவளோட பேசினாதான் நம்புவேன். உன் போனையாவது குடுடா.''

''இரு கௌதம். டாக்டரைக் கூப்பிடறேன்.''

''நீ எதுக்குடா அவரைக் கூப்பிடணும் நான் போன்

தானே பேசறேன்னு சொன்னேன். என்னாச்சுடா? என் பார்பிக்கு என்னாச்சு?''

அதற்குள் வந்த டாக்டர், அவன் உறங்குவதற்காக ஊசி போடவும், புலம்பிக் கொண்டே ஆழ்ந்த உறக்கத்தில் போனான். சிபி அவன் கால்களைப் பிடித்து கதறத் தொடங்கினான்.

''கௌதம்! குட்டிம்மா போயிட்டாடா. குட்டிம்மா போயிட்டாடா!'' வீட்டில் தாத்தாவின் நிலையோ கவலைக் கிடமாக இருந்தது. வீட்டிலேயே அவருக்குச் சிகிச்சை தரப்பட்டுக் கொண்டிருந்தது. விஸ்வநாதன் அவருக்குத் துணையாக அங்கேயே தங்கியிருந்தார். விக்ரமின் மூலம் ஓரளவு விபரம் அறிந்த அவர், பத்மினியின் மேல் ஏற்பட்டிருந்த அளவு கடந்த வெறுப்பில், வீட்டை வீட்டு வெளியேறினார்.

எந்தக் கவலையும் இல்லாமல் தன் தாத்தா, சிபி இருவரின் அரவணைப்பிலும் பட்டாம்பூச்சியாய் துள்ளித் திரிந்த ஒரு குழந்தையை, அநியாயமாய் கொலை செய்த குற்றஉணர்ச்சி அவருக்கு. பத்மினி அங்கே போய்ப் பேசியிராவிட்டால், இந்தத் துக்கமே நடந்திருக்காது என்பதை அறிந்ததால், கூனிக் குறுகிப் போனார்.

எழுபது வயது முதியவருக்கு இத்தகைய துக்கத்தை ஏற்படுத்த, தன் குடும்பமே காரணமாய் இருந்திருக்கிறது என்பதால், உணவையும் வெறுத்தார். தன் மகனை பார்த்துக் கொள்ளும் பொறுப்பை சிபியிடம் ஒப்படைத்துவிட்டு தாத்தாவிற்கு உறுதுணையாய் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டு இங்கேயே தங்கிவிட்டார்.

அதீத குற்றவுணர்ச்சியில் பத்மினியின் உள்ளம்



நடுங்கியது. தேவியை கொஞ்சம் அதட்டி பயமுறுத்தினால், கௌதமை விட்டு விலகிப் போய்விடுவாள் என்று மட்டுமே நினைத்துதான் பத்மினி அங்கே சென்றதே. தேவியின் அமைதியும், அழகும் கோபத்தைத் தூண்ட, இந்த அழகு தானே கௌதம் என்னை எதிர்க்கக் காரணம் என்ற அதீதக் கோபத்தில், அன்று வார்த்தைகளைக் கண்டபடி சிதற விட்டுவிட்டார். கொஞ்சம் மிரட்டிப் பார்க்க நினைத்தாரே ஒழிய, தேவியைப் பழிவாங்கும் எண்ணம் இல்லவே இல்லை என்பதை இப்போது சொன்னால், குழந்தை கூட நம்பாது என்பதும் புரிந்தது.

தான் செய்தது இமாயலயத் தவறு என்பது புரிந்த போது, காலம் கடந்திருந்தது. விஸ்வநாதன் தன் உதவியாள் மூலம் பத்மினி, கௌதமைப் பார்க்கச் செல்ல தடை விதித்திருந்தார். இப்போது இருக்கும் மனநிலையில் அதை மீற முடியாமல், அறைக்குள்ளேளே முடங்கினாள். அவளது கோபம், ஆணவம், கர்வம், துணிச்சல் எல்லாமும் தேவியின் மறைவில் ஒடுங்கிப் போனது.

கௌதமுக்கு நினைவு திரும்பிய பிறகு, மூன்று நாட்களுக்கு மேலாக அவளைப் பற்றிக் கேட்டு நச்சரித்த எந்தக் கேள்விக்கும் முறையான பதில் வரவில்லை. தேவியோடு பேசவோ, அவளைப் பார்க்கவோ முடிய வில்லை என்றதும், நான்காவது நாள் அமைதியானான். வெறித்த பார்வையும், பலத்த மௌனமும் சிபியைப் பயமுறுத்தியது. தேவியின் மறைவை உணர்ந்து அனுபவித்து அழக்கூட முடியாத நிலையில் சிபி தவித்தான். கௌதமின் நிலைத்த பார்வையில், சிபி தான் அரண்டு போனான்.

''டாக்டர்! சிபிக்கு தேவியைப் பற்றி ஏதோ சந்தேகம் வந்திருக்கு. காலையிலயிருந்து யார்கிட்டேயும் அவன் பேசலை. அவன்கிட்ட உண்மையைச் சொல்லணும் டாக்டர்... அதுவும் சீக்கிரமா.'' என்றான்.

''இதை நான் சொல்ல முடியாது. மனவியல் நிபுணர் இன்று மாலை ஏழு மணிக்கு வந்து அவரிடம் பேசுவார் அதன் பிறகு கௌதம் நார்மலாகி விடுவார். காலில் ஹேர்லைன் ப்ராக்சர் என்பதால், இனி மெதுவாக நடக்க வைக்க பிஸியோதெரபிஸ்ட் உதவி செய்வார். கையில் கட்டு பிரிக்க ஒரு மாதமாகும். இப்போதைக்கு அவர் மனது... அவர் மனைவியின் மறைவை ஏற்றுக் கொண்டால், எல்லாமே சரியாகிவிடும்'' என்றார் டாக்டர்.

அன்று மாலையில் அந்த அனுபவம் வாய்ந்த மனவியல் நிபுணர் கௌதமின் அறைக்குள் நுழைந்தார். சிபியை வெளியேறச் சொல்லிவிட்டு கதவைத் தாளிட்டார். பின் மென்மையாக அவனிடம் பேச்சுக் கொடுத்தவர், தேவியின் மறைவை மெதுவாக அவனிடம் எடுத்துச் சொன்னார்.

ஆனால், அவனிடம் எந்த ரியாக்ஷனும் இல்லை. கத்தல், புலம்பல், அழுகை... ஏன் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடவில்லை. தனது மௌனம் சிறிது கூட கலையாமல் டாக்டரை ஏறிட்டு விட்டு, மெல்ல எழுந்து சுவரைப் பற்றிக் கொண்டு ஜன்னலருகே நின்று, இருட்டை வெறித்தான். அந்த டாக்டரே அவனின் அமைதி கண்டு திகைத்துப் போனார். அடுத்து என்ன செய்வதென்று அவருக்கே தெரியவில்லை.

சிறிதுநேரம் கழித்து, செய்வதறியாது விழித்துக் கொண்டிருந்த டாக்டரின் புறம் திரும்பினான். ஒரு கையில் கட்டு போடப்பட்டிருந்ததால், வலது கையை மார்பின் மேல் வைத்து, நன்றியுரைப்பது போல் தலையசைத்து வழியனுப்பி வைத்ததான்.

வெளியே வந்த டாக்டர், ''ஐயாம் சாரி சிபி! மிஸ்டர் கௌதம் அசையவே இல்லை. இந்த மாதிரி ஒரு பேஷண்டை நான் பார்த்ததேயில்லை. அவர் வாய்விட்டு அழணும். ஏன்... ஒரு துளி கண்ணீர் சிந்தினாக் கூட, அவர் சரியாயிடுவார். இந்த மௌனம் தான் எங்களை ரொம்பப் பயமுறுத்தது. ரொம்ப இறுகிப் போயிருக்கார். மேலும் தேவியோட மரணத்தைப் பற்றி, ஏற்கனவே தானே கெஸ் பண்ணியிருக்கார் போல இருக்கு!''

அதனாலதான், அவர் நார்மலுக்கு வரலை. கொஞ்சமாவது எமோஷனலா பீல் பண்ணினா தான் சரியாவார். இப்போதைக்கு அவரை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்.டேப்லட் குடுத்தா தூங்கிடுவார். காலையில் வரேன்!'' -சிபியின் தோள்தட்டி சமாதானப்படுத்திவிட்டுச் சென்றார்.

ஜன்னலருகே நின்றிருந்த கௌதமை அணைத்துக் கொண்ட சிபி, அழுகையை கட்டுப்படுத்த முடியாதவனாய் ''கௌதம்! நம்ம குட்டிம்மா இனி இல்லைடா. நானே உன்னை விட்டுட்டு எல்லாத்தையும் முடிச்சுட்டேன். ஏண்டா இப்படி இருக்க? அழுடா! நல்லா அழுதுடு!'' என்றபடி தோளில் குத்தினான்.

சிபியின் அழுகை கூட அவன் காதுகளை எட்டவில்லை போலும். உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் திறன் கூட செயல்படாது, அவன் மூளை மரத்துப் போயிருந்தது. பார்பியை..., தன் உயிரானவளை

முதன்முதலில் பார்த்த நினைவுகள் மட்டுமே அவனைச் சூழ, மருந்துகளின் தாக்கத்தில் மெல்ல உறக்கத்தைத் தழுவினான். மேலும் ஒரு வாரம் சென்றது. சிபியைப் பார்த்து புன்னகை புரியும் அளவுக்கு முன்னேற்றம். ஆனால், தேவியைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

''சிபி! இவரை நாளைக்கு டிஸ்சார்ஜ் செய்திடலாம். கொஞ்சம் கவுன்சிலிங் தேவைப்படுது. வாரம் ஒரு முறை வந்து பார்த்தால் போதும். என் ரூமுக்கு வாங்க. மெடிசின்ஸ் பத்திச் சொல்றேன்.'' என்றார் டாக்டர்.

மறுநாள் சிபி, ''கௌதம்! வாடா. முதல்ல நம்ம வீட்டுக்குப் போகலாம். கையில கட்டு பிரிக்கிற வரை, நீ எங்க கூட இரு. தாத்தாவுக்கும் ஆறுதலா இருக்கும். மாமா கூட, நம்ம வீட்ல தாத்தாவுக்குத் துணையா இங்கேயே இருக்காங்க.''

கௌதமின் நெற்றி சுருங்கியது. உன்னை நம்ம வருண் பேமிலியில் எல்லாரும் வந்து பார்த்திட்டுப் போனாங்க. அவங்க எல்லோருமே டாக்டர்ஸ். உன் ட்ரிட்மெண்ட் பத்தி இங்க சீப்கிட்ட அங்கிள் பேசினார். தன்னு தான் அழுதுகிட்டே இருக்கா!'' என்ற போதே சிபியின் குரலில் கரகரப்பு.

''போகலாமா டா?''

முதன்முறையாக கௌதம் வாய்திறந்தான். ''சிபி! நான் எங்க வீட்டுக்குப் போகணும்.''

''உன் அப்பாவே எங்க கூட இருக்கார்.''

''நான், என் அண்ணா நகர் வீட்டைச் சொன்னேன். என்னை அங்கே கொண்டு போய் விடு. இப்ப நான் எங்கேயும் வரலை.''



**''இல்லைடா. நீ தனியா...''**

**''சிபி! என் போனைக் குடு. கால்டாக்ஸியை வரச் சொல்லி நானே போய்க்குவேன்!'' -முரட்டுத்தனமாக மறுத்துப் பேசினான். சிபி அவன் பேச்சைத் தட்ட முடியாதவனாய், கௌதமைக் கூட்டிக் கொண்டு கிளம்பினான். விஸ்வ நாதனுக்குத் தகவல் தெரிவித்தான். வீடு போய் சேர்ந்ததுமே, கௌதமின் விழிகளில் ஒரு துடிப்பு.**

**சிபி கதவைத் திறந்து, ''வாடா!'' என அவனது கைகளைப் பற்றி அழைத்துச் சென்று சோபாவில் உட்கார வைத்து விட்டு, தண்ணீர் குடிக்கச் சொன்னான். அதன்பின் சிறிது நேரம் மௌனத்தில் கழிய, கௌதம் முகம் இறுக மெல்ல எழுந்து, தன் படுக்கையறையை நோக்கிச் சென்றான். உள்ளே பார்வையை ஓட விட்டுத் திரும்பியவன் பார்வையில், படுக்கை மேலே தேவி அவசரமாகக் கிளம்பும்போது மாற்றிய சேலையைப் படவே, அதைக் கையில் எடுத்தான்.**

**இதழ்கள் துடிக்க, கலக்கத்துடன் அதை இறுகப் பற்றி அதில் முகம் புதைத்தான். அதிலிருந்து தேவி உபயோகிக்கும் யார்ட்லி சென்டின் மைல்டான நறுமணம் அவனைத் தாக்க, சரிந்து கட்டிலில் அமர்ந்தான். அப்போது தான் தேவியின் இழப்பை முழுவதுமாக உணர்ந்து, சின்னக்குழந்தை போல தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.**

**அவன் குரல் கேட்டு ஹாலிருந்து ஓடி வந்த சிபி, கௌதமை நெஞ்சோடு அணைத்துக்கொண்டு ''அழாதடா!'' என்று அவன் கண்ணீரைத் துடைத்தான். இருவருமே ஒருவரின் கண்ணீரில் மற்றவர் ஆறுதலைத் தேடினர். இது**

நாள் வரை மிகப் பெரிய பாரமாய் மனதில் அழுத்திய துயரமெல்லாம், கண்ணீராய் வெளிப்பட்டது. அப்போது தான் தான்யாவுடன் வந்திறங்கிய விஸ்வநாதனும், தன் மகனின் துயரத்தை ஆற்ற வழி தெரியாது திகைத்து நின்றார். தொழில் துறையில் புரிந்த அத்தனை சாதனைகளும் பயனற்றுப் போய், தொழிலதிபர் என்ற அடையாளங்கள் எதுவுமின்றி, தன் காதல் மனையிவின் இழப்பில் முழுவதுமாக தன்னைக் கரைத்துக் கொண்டிருந்தான். தான்யாவோ, தன் அண்ணனைப் பார்க்கவே முடியாமல் வேதனை மண்ட, பெரியப்பாவின் தோளில் சாய்ந்து விம்மினாள். சிறிது நேரத்தில் தானே சமாதானமாகி, தான்யாவைப் பார்த்து, ''தன்னு! கொஞ்சம் தண்ணி கொண்டு வாடா!'' என்றான்.

சிபியின் கைகளை அழுத்தி, ''சிபி! இனிமேல் என் பார்பி என்னோடு மட்டும்தான் இருப்பா. என்கூட மட்டும் தான் பேசுவா. இனிமே ஒரு நொடி கூட, என்னை விட்டு அவளால போக முடியாதுடா. அவளை என் இதயத்தில் நிரந்தரமாக லாக் பண்ணி வெச்சுட்டேன். உண்மையா சொல்லப் போனா, அந்த விபத்து எனக்கு நடந்திருக்க வேண்டியது தெரியுமா? அவ தனியா கார் ஒட்டிட்டு வர்றது தெரிஞ்சு, நான் தான் பேயாய் காரை அத்தனை ஸ்பீடா ஓட்டிட்டு வந்தேன். அவ எப்பவுமே வேகமா ஓட்ட மாட்டா. ஆனா, அவ தீடீரென எதுக்காக என்னைப் பார்க்கத் துடிச்சான்னு தான் எனக்குப் புரியலை!

அன்னைக்கு, அவ மனது சங்கடப்படற மாதிரி ஏதோ நடந்திருக்கு. அவ பேசினதே கோர்வையா இல்லை. என்னை உடனே பார்க்கத் துடிச்சா. உனக்கு ஏதாவது தெரியுமா?



உன்கிட்ட என்ன பேசினா?'' பொறுமையாகத் தன் சந்தேகங்களை ஒவ்வொன்றாகக் கேட்டுவிட்டு, சிபியின் பதிலுக்காகக் காத்திருந்தான்.

பத்மினியின் விஷயம் சிபிக்கும் தெரியாது என்பதால், ''விதி தான்டா காரணம். விட்டுடு! இனிமே குட்டிம்மாவைப் பற்றி மறந்திடு. அவ உன் ஆபிஸில் சேரவே இல்லைன்னு நினைச்சுக்கோ. நீ கேட்ட எந்தக் கேள்விக்கான பதிலும், சத்தியமா எனக்குத் தெரியாது. பத்மினி மேடம் அன்னிக்கு என்கிட்ட ஒரு முக்கியமான வேலையை ஒப்படைச்சதால, உடனே என்னால கிளம்ப முடியலை. அதுக்குள்ளே, தேவி இந்த அவசர முடிவெடுத்திட்டா! நடந்து முடிஞ்சதைப் பத்திப் பேசி, இனிமே என்னடா ஆகப் போகுது? விடு. அவ விதி முடிஞ்சுது. இப்படி உன்னை என்னால பார்க்க முடியலைடா. என்னோட பழைய கௌதம் எனக்கு வேணும். தேவியோட நினைவுகளை அழிச்சுடுடா.''

சிபியைப் பார்த்து மென்மையாகச் சிரித்த கௌதம், ''ஏன் சிபி நீ இன்னும் தேவியை மறக்கலை? ம். அது உன்னால என்னிக்குமே முடியாதுடா. என் பார்பி என் உயிரில்... உணர்வில் ஒண்ணா கலந்திட்டாடா. அவ பாதுக்காப்பா எனக்குள்ளே இருக்கா. அந்த பார்பிக்காக நான் வாழப்போறேன். இனி, அதுதான் என் லைப். இனிமே எனக்கு ஒண்ணும் இல்லை. நீ கிளம்பு. அப்பா! நீங்களும், தன்னுவைக் கூட்டிட்டுப் போங்க.'' என்றான்.

''சிபி! தாத்தாவை நினைச்சாதான் என் இதயத்தில ரத்தம் வடியுதடா. பார்பியை என்னோடு கூட்டிட்டு வரும்போது, ''என் உயிர் இருக்கறவரை அவளைச் சந்தோஷமா வைத்துக் கொள்வேன்னு ப்ராமிஸ் பண்ணினேன். ஆனா, என்னால

முடியலை. இனி அவர் முகத்தில் எப்படி விழிப்பேன்? உடலால மட்டும் இல்லாம, மனதளவிலயும் ரொம்பத் தளர்ந்து போயிருப்பார். நீ தான் நல்லா கவனிச்சக்கணும். இன்னும் கொஞ்ச நாள் அவர் கூடவே இரு. என் மனசு சரியானதும், நான் வந்து தாத்தாவைப் பார்க்கறேன், எல்லாரும் கிளம்புங்க.''

''நீ புத்தனாடா? எல்லோரையும் கிளப்பிட்டு, தனியா நீ இங்க என்ன செய்யப் போற? நான் உன் கூடத் தான் இருக்கப் போறேன்.''

''என்னை விட, தாத்தாவுக்குத் தான் உன் துணை அவசியம் சிபி. ப்ளீஸ் கிளம்புடா.''

விஸ்வநாதன் முடிவாக, ''சிபி! நீ கிளம்பு, நாம போகலாம். தான்யா கௌதம் கூட கொஞ்ச நாள் இருக்கட்டும். வேளா வேளைக்குச் சமைத்து, மருந்து மாத்திரையெல்லாம் கொடுக்க, அவ இருந்தா தான் வசதி. நீ தினமும் வந்து பார்த்துக்க. கௌதம்! நீ இப்ப ஆபிஸ் வரவேண்டாம். நான் போய்ப் பார்த்துக்குவேன். வருண், உனக்குப் பதிலா தினமும் வந்து கவனித்துக் கொள்ளப் போறான். இதை நாங்க பேசி முடிவு செஞ்சாச்சு. நீ கட்டு பிரிக்கிறவரைக்கும், கம்ப்ளீட் ரெஸ்டில் இரு.''

''சாரிப்பா. என்னால உங்க எல்லோருக்கும் சிரமம். சிபி! நீயும், வருணும் என் பிரண்டா கிடைச்சது, என் அதிர்ஷ்டம். தேங்ஸ்டா!'' என்று நெகிழ்ந்து போனான்.

சிபி இருவருக்குமே டிஃபன் வாங்கிக் கொடுத்து விட்டு, ''காலையிலேயே வரேன். வந்து, தேவையான காய்கறிகள் வாங்கிக் கொள்ளலாம்'' என்றபடியே, விஸ்வநாதனை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.



தான்யாவை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

அவன் சென்றதும், தான்யா சமையலறைக்குள் நுழைந்தாள். கௌதம் படுக்கையறையிலிருந்தே ஜன்னல் வழியாக கண்ணுக்குத் தெரிந்த உலகத்தைப் பார்த்தான். அதில் எந்த உயிர்ப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. என் பிரிய பார்பி இல்லாத உலகம், எனக்கு இனிமேல் எப்போதும் இப்படித்தான் இருக்கும் என்று நினைத்தவனின் முகத்தில் துயரப் புன்னகை தளும்பியது.

# 16

அவனிடமிருந்த வலிமையும், இளமையும் ஆரோக்கியத்தை விரைவாகவே மீட்டுத் தந்தது. ஆனால், மனதின் வலியை மட்டும் எந்தச் சிகிச்சையாலும் குணப்படுத்த முடியவில்லை. கண்களில் நிரந்தரமாக வெறுமையும், சோகமும் வந்து குடியேறியது. மனதை மறைத்து மற்றவர்களுக்காகச் சிரித்துப் பேசவும் செய்தான்.

மறுநாள் காலை ஏழு மணிக்கே தேவையான பொருட்களோடும், காய்கறிகளோடும் சிபி வர, தான்யா தான் கதவைத் திறந்தாள். அவனைக் கண்டு முகம் மலர்ந்து, ''வாங்க மாமா! அண்ணா தூங்கறான். நானும் எழுப்பலை. காபி தரட்டுமா?'' என ஆர்வமாகக் கேட்டவளை நிமிர்ந்தே பார்க்காமல் ''வேண்டாங்க தான்யா! இப்பத் தான் வீட்ல குடிச்சேன்!'' என்றதும், அவனை ஆழ்ந்து பார்த்தாள்.

''மரியாதை பலமா இருக்கு. ஏன் மாமா?''

''ப்ளீஸ்! இனி என்னை மாமான்னு கூப்பிடாதீங்க.

எதிர்காலம் இல்லாத உறவை, உரம் போட்டு வளர்க்க வேண்டாம். நீங்க நெனைச்சது நடக்கப் போறதில்லை. நான் கல்யாணமே பண்ணிக்க மாட்டேன். கௌதமும், தாத்தாவும்தான் இனி என் வாழ்க்கை. என் நண்பனுக்கு இல்லாத வாழ்க்கை, எனக்கும் தேவையில்லை தான்யா. நான் சொல்வதைச் சரியாப் புரிஞ்சுக்கங்க...''

நான் மாமாகிட்ட சொல்றேன். நல்ல மாப்பிள்ளையா பார்த்து மேரேஜ் பண்ணிக்குங்க. என் கூட வாழறதில, எந்தச் சுகமும் உங்களுக்கு இருக்காது. ப்ளீஸ்! இனிமே இனிமே...'' என்றதற்குமேல், அவனாலும் பேச முடியவில்லை.

ஆரஞ்சு வண்ணச் சேலையில், நெற்றியில் குங்குமம் துலங்க எளிமையாய், அமைதியாய் வந்து நின்ற தான்யா, ''இந்தாங்க மாமா! காபி குடிங்க. அண்ணாவைப் போய் எழுப்பறேன். டிஃபன் ரெடியா இருக்கு. இங்கேயே சாப்பிடலாம் ...'' என்றாள்.

''உங்ககிட்ட தான் தான்யா பேசிக்கிட்டு இருந்தேன். நான் சொன்னது காதில் விழலையா?''

''எல்லாம் விழுந்தது. தேவையில்லாத பேச்சை நான் மைண்ட் பண்ணறதில்லை. என் உயிர்த்தோழியோட இழப்பிலிருந்து, நானும் இன்னும் வெளியே வரலை. நான் என் மேரேஜ் பத்தி, கனவுல கூட இப்ப நினைக்கலை.''

''உங்களை மாதிரி, உடனடியாக எல்லாவற்றையும் மறக்க என்னால முடியாது. எப்பவுமே, நீங்கதான் என் கணவரா மனசில பதிஞ்சு போய்ட்டீங்க. உங்களை மாமான்னுதான் கூப்பிடுவேன். நீங்க இனிமே கல்யாணம் செய்யப் போறதில்லைங்கறது உங்க முடிவு. அதை நான் தடுக்க மாட்டேன். உங்களை, எதுக்கும் வற்புறுத்தவும் போறதில்லை. அதே மாதிரி, என் விஷயத்திலயும் நீங்க நுழைய முடியாது மாமா. இந்தப் பேச்சை இதோட விடுங்க. உங்களை எந்த விதத்திலயும், எதற்காகவும் நான் வற்புறுத்த மாட்டேன். நான் அண்ணனைக் கூட்டிட்டு வரேன்!''



அமைதியான குரலில் தன் முடிவைத் தெரிவித்துவிட்டு தேவி தான்யா சென்று விட்டாள். இது அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த கௌதமும் ஒரு முடிவுக்கு வந்தான்.

சிபியிடம், ''வாடா! வந்து ரொம்ப நேரமாச்சா? டேப்லட் சாப்பிடறதால, ரொம்பத் தூக்கம் வருது. இன்னிக்கு ஆபிஸ் போகலாம்ன்னு இருக்கேன்.''

''விளையாடறீயா? இன்னும் ஒரு மாசத்துக்கு நீ வீட்டை விட்டுப் போகக் கூடாது. வருண். விக்ரம் வந்து உன்னைப் பார்ப்பார். அவரும் இருபது நாட்கள் விடுப்பிற்குப் பிறகு, நேத்துதான் வேலையில் ஜாயின் பண்ணியிருக்கார். ஏதோ அவசரம்னு ஊருக்குப் போயிட்டாராம். இன்னிக்குப் பத்து மணிக்கு வந்து, டெய்லி வொர்க் பத்தி உன்கிட்ட டிஸ்கஸ் பண்ணிக்குவார். சரியா? நல்லா சாப்பிட்டு, நல்லா தூங்கி ரெஸ்ட் எடு! நான் கிளம்பறேன்.''

இனி வேலைக்குச் செல்ல மாட்டேன் என்று விக்ரம் சிங் அந்தப் பெரியவரிடம் ஆத்திரமாகச் சொன்னதும், ''விக்ரம்! உன் வேலை இன்னும் முடியலை. நான் சொல்ற வரைக்கும், அங்கேயே எப்போதும் போல் போய் வந்து கொண்டு இரு!'' என்ற உத்தரவிட்டிருந்தார். அவர் சொன்ன முதல் வேலையை நிறைவேற்றவே, கௌதமைப் பார்க்க விக்ரம் வந்ததே!

''வா விக்ரம்!'' என்ற காந்தக் குரலில் கவரப்பட்டு கௌதமைப் பார்த்த விக்ரம், திடுக்கிட்டுப் போனான்.

அவனையும் அறியாமல் ''பாஸ்!'' என்றவனின் கண்கள் கலங்கின. கடினமான முகம், சோர்வடைந்த கண்கள், கவனமில்லாமல் தேர்ந்தெடுத்து அணிந்த உடைகள், ஷேவ் செய்யப்படாத இளந் தாடி, என்று அவனுடைய சோகம் கௌதமின் ஒவ்வொரு அசைவிலும் மிளிர்ந்தது.

''எப்படி இருக்கீங்க பாஸ்?''

''இருக்கேன். என் உயிரைத் தொலைச்சிட்டு... இடமா இன்னும் எத்தனைக் காலத்துக்குத் தான் இந்த வேதனையாவது தெரியலை. உட்கார்! அன்னிக்கே நானும் பார்பியோட போயிருக்கணும். தெரியலை... நான் ஏன் இன்னும்...''

''பாஸ்! அப்படிப் பேசாதீங்க. நீங்க எங்களுக்காக இருக்கணும். உங்க ஆதரவில, ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்துகிட்டு இருக்கு. அவங்க எல்லோருமே உங்க குடும்பம் தான். நம்ம ஆபிஸ்ல, எல்லோரும் உங்க மேல ரொம்ப பிரியம் வைத்திருக்காங்க... விசுவாசமாகவும் இருக்காங்க. நீங்க வர்ற வுரைக்கும் ஆபிஸ் சாரா மேடம் கன்ட்ரோல்ல நல்லபடியா நடக்கும். கவலையே படாதீங்க! நீங்க இங்கே இருந்தெ ஆர்டர் போடுங்க பாஸ்... செஞ்சு முடிச்சிடறோம். வருண் சார், சிபி சார் இரண்டு பேரும், தினமும் சைட்டுக்கு வந்து பார்க்கறாங்க.''

தன் ஊழியர்களையும், நண்பர்களையும் நினைத்து கௌதம் கர்வமாக உணர்ந்தான்.

''நண்பன் வெற்றி பெறும்போது, அவன் என் நண்பன்! என்று பெருமை கொள். அவனே தோல்வியும் துயரமும் அடையும்போது, நான் உன் நண்பன்! என்று அவன் அருகில் நில் என்பது போல, எதையும் எதிர்பாராமல், எனக்குத் தெரியாமல் உதவி செய்யும் உங்களைவிட, எனக்கு வேறு என்ன வேண்டும் விக்ரம்? தான்யா! விக்ரமுக்குக் காபி கொடும்மா'' என்றவன், விக்ரமுடன் சேர்ந்து நடக்க வேண்டிய வேலைகளைப் பற்றி விவாதித்தான்.



பின்பு அந்த வாரத்தில் ஒரு நாள் தாத்தாவை நேரில் சென்று பார்த்தான். அந்தச் சந்திப்பின் போது தாத்தாவையும், கௌதமையும் பார்த்த அத்தனை பேரும் நெகிழ்ந்து போயினர். நலிந்த அவரின் தோற்றத்தைப் பார்த்ததுமே, கௌதமின் கண்கள் பொங்கி விட்டன. மறைத்து வைத்த துயரமெல்லாம், அந்த முதியவரின் மடியில் கண்ணீர் முத்துக்களாய்ச் சிதறின. கௌதமின் முதுகை வருடிய தாத்தா, ''போதும் கண்ணா! மனசால நீ அதிகமாக நொந்து போயிருக்க. கொஞ்சம் கொஞ்சமா உன்னை நீயே தேற்றிக்க வேணும்!'' என்று தேற்றினாலும், அவரது கண்களிலும் மலையளவு சோகம் இருந்தது.

பெரியவரிடம், ''முதலாளி! கௌதம் சாரைக் கண்கொண்டு பார்க்க முடியலை. சாப்பாடு, தூக்கம் எதுவுமில்லாமல், ஆளே பாதியாய்ப் போயிட்டார். அவரோட அப்பாவும் வீட்டை விட்டு வெளியேறி, சிபி சார் வீட்ல இருக்கார். கௌதம் சாருக்கு, அவங்க அம்மா மேல சந்தேகம் இருக்கு. ஹாஸ்பிடலில் இருந்து வீடு திரும்பியதும், ஆபீஸ் வாட்ச்மேனைக் கூப்பிட்டு விசாரிச்சிருக்கிறார். கடைசியாக பத்மினி மேடம் வந்ததும், அவருக்குத் தெரிஞ்சு போச்சு. அவங்க எங்க பாஸைப் பார்க்க ஹாஸ்பிடலக்கு வரக் கூடாதுன்னு பெரிய பாஸ் ஆர்டர் போட்டிருந்தாங்க என்றான் விக்ரம்.

''விக்ரம்! நாளைக்கு நீ சி.டி.யோட ஒரு காப்பியை

எடுத்து, கௌதம்கிட்ட கொடுக்கப் போற. இனிமே அந்தம்மாவுக்கு... ஜென்மத்துக்கும்... பையன்கிட்ட பேசற சந்தர்ப்பமே வரக் கூடாது. இது ஒண்ணே போதும். தனிமைதான் நாம அவங்களுக்குக் கொடுக்கப்போற தண்டனை. அதுவே கொஞ்சம் கொஞ்சமா, அவங்களை அழிக்கப் போகுது!'' அவர் கண்களில் அத்தனை குரூரம். அதையும் மீறி, தேவியின் நிலைகண்டு வருத்தம்.

மறுநாள் மாலை விக்ரம், ''பாஸ்! கட்டை எப்பப் பிரிப்பாங்க? உங்ககிட்ட முக்கியமான விஷயம் ஒண்ணு சொல்லணும்'' என்றான்.

''அதுக்கும், கைக் காயத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை விக்ரம். நீ சொல்ல வந்ததை, இப்பவே சொல்லலாம்.''

''பாஸ்! ஆக்ஸிடென்ட் நடந்த அன்னிக்கு, பத்மினி மேடம் ஈவினிங் நம்ம ஆபிஸ் வந்தாங்க. நான் மட்டும் தான் இருந்தேன்!'' என்றவனின் பேச்சு நின்றது.

அவனையே கூர்ந்து பார்த்து, ''மேலே சொல்'' என்பது போல தலை அசைத்ததும்.

''பாஸ்! இந்தச் சிடியைப் போட்டுப் பார்த்தா, உங்களுக்கே தெரியும். எனக்கு மனசு கஷ்டமாயிடுச்சு. தேவியை முடிந்த வரை தடுத்துப் பார்த்தேன். முடியலை!'' என்றவளின் குரலிலிருந்த வருத்தம் அவனை யோசிக்க வைத்தது.

விக்ரம் கிளம்பிச் சென்றதும் சி.டியை எடுத்துக் கொண்டு, ''தான்யா! நான் கொஞ்ச நேரம் தூங்கறேம்மா. சிபி வந்தா மேலே வரச் சொல்லு'' என்றான்.

கதவைத் தாளிட்டு வந்து டி.வியை ஆன் பண்ணி,



சி.டியை ஓட விட்டான். பத்மினி உள்ளே வந்து பேசியதை ஆரம்பித்திலிருந்து பார்த்தவனது முகம் சிவந்தது. நெற்றி நரம்புகள் புடைக்க, கண்களில் ரத்தம் தான் வழிகிறதோ எனும் அளவுக்கு உணர்ச்சி வசப்பட்டான். ஆவேசத்தில் உடலே நடுங்கியது. அரைமணிநேரம் கழிந்தும் கூட தன் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், கார் சாவியை எடுத்துக் கொண்டு வேகமாக வெளியேறினான். கையில் கட்டோடு காரை ஸ்டார்ட் பண்ணிய பிறகு தான், தான்யா வெளியே ஓடி வந்தாள். அவன் சென்ற வேகத்தைப் பார்த்து பதறிப் போய் சிபியை அழைத்தாள்.

பல முறை முயற்சித்த பிறகே எடுத்த சிபி, ''என்ன தான்யா! நான்தான் ஏற்கனவே உங்ககிட்ட பல முறை...'' என்பதற்குள்,

''ஐயோ மாமா! நம்ம விசயத்தை விடுங்க. கௌதம் அண்ணா திடீர்னு கோபமா வெளியே கிளம்பிப் போயிருக்கார்.''

''என்ன? எதில போயிருக்கான்.''

''நான் கார் சத்தம் கேட்டு வெளியே வர்றதுக்குள்ளே, கார் வேகமா பறந்திடுச்சு. அண்ணா முகத்தைப் பார்க்கவே அத்தனை பயங்கரமா இருந்தது... அத்தனைக் கோபம்! தூங்கறேன்னு சொல்லிட்டு ரூமுக்குப் போனார். அதனால, கொஞ்சம் அசால்டா இருந்துட்டேன்! அவர் வெளியே போவார்னு, நினைச்சுக் கூடப் பார்க்கலியே!'' - பரிதவித்தாள்.

''உடனே வர்றேன். பதட்டப்படாம இருங்க.''

முழங்காலில் தலையைப் புதைத்து சோபாவில் அமர்ந்திருந்தவளைப் பார்த்ததுமே, அள்ளி அணைத்து

ஆறுதல் கூற விழைந்த மனதைக் கட்டுப்படுத்தினான்.

குரல் கரகரக்க, ''தான்யா!'' என்றழைத்தான்.

அவன் குரல் கேட்டதும் வேகமாக எழுந்த தான்யா, அவன் விலகலை எண்ணியவளாய் தயங்கி நின்றாள். அடிவாங்கிய குழந்தையொன்று தாயின் அரவணைப்புக்காக ஏக்கத்துடன் பார்ப்பது போல் அவளது தோற்றமிருக்க, தாள முடியாதவனாய் இரு கைகளையும் விரித்தான்.

அழுகையோடு ஓடி வந்து தஞ்சமடைந்த தான்யாவால், ''மாமா!'' என்பதற்கு மேல் பேசவே முடியவில்லை.

அவளை அணைத்து அவள் உச்சியில் கன்னம் பதித்த சிபி, ''தனு! ஏண்டி என்னை காதலிச்ச? நான் ராசியே இல்லாதவன். பெத்தவங்களை இழந்தேன். என் அம்மாவா பாசத்தைப் பொழிந்த தங்கையும் போயிட்டா. என்னை விட்டுப் போயிடு தனு! உனக்கு நான் வேண்டாம்; நீ நல்லா இருக்கணும்டி.''

''உங்களை விட்டுப் போனா, எப்படி மாமா நல்லா இருப்பேன்? என்னோட ஒவ்வொரு செல்லிலும் நீங்க தானே இருக்கீங்க?''

அவளைச் சோபாவில் அமர்த்திவிட்டு, ''சரிடா. முதல்ல கௌதமுக்கு என்ன ஆச்சுன்னு சொல்லு'' என்றான்.

''தெரியலை மாமா! அண்ணா தூங்கறேன்னு சொன்னார்... விக்ரம் சார் ஏதோ ஒரு சி.டி. கொடுத்தார். அதை எடுத்துகிட்டு மாடிக்குப் போனார். நான் டிஃபன் செய்ய கிச்சன் போயிட்டேன். திடீர்னு கார் சத்தம் கேட்டு வெளியே வருவதற்குள், அத்தனை வேகமா ஒட்டிட்டுப் போறார். செல்போனைக் கூட எடுத்திட்டுப் போகலை. பயமா இருக்கு மாமா.''



''மாடிக்குப் போன பிறகுதான் அப்செட் ஆகியிருக்கான். நான் போய் பார்த்திட்டு வரேன். நீ இங்கேயே இரு.''

மாடியில் டிவி ஆப் செய்யப்படாமல் இருக்க, ஏசியும் ஓடிக் கொணடிருந்தது. டி.வி.டி.யில் சி.டி. பெயர் எழுதப்படாமலிருக்க, அதை ஓட விட்டுப் பார்த்தவனது தலையில் இடி இறங்கியது. கண்கள் இருள சோபாவில் அமாந்தவனது மனநிலையை, அவனாலேயே கணிக்க முடியவில்லை. டிவியையே வெறித்துக் கொண்டு அமர்ந்தவன், அங்கிருந்த தண்ணீரை எடுத்துப் பருகினான்.

கார் ஹார்ன் சப்தம் அவன் கவனத்தைக் கலைக்க, பால்கனியில் வந்து பார்த்தான். கௌதமின் கார் தான்; உடனே கீழே இறங்கி, வெளியே ஓடினான். கதவில் இடித்து நின்ற காரிலிருந்த கௌதம், கார் கதவைத் திறக்க முயற்சி பண்ணிக் கொண்டிருந்தான்.

''வாடா!'' என்றபடி குனிந்து கதவைத் திறந்து அவன் கைகளைப் பற்றியவன் அதிர்ந்து போனான். கௌதம் மது அருந்திருந்தான்.

''கௌதம்! குடிச்சியாடா? ஏண்டா இப்படிப் பண்ற? உனக்கு என்ன ஆச்சு?''

தடுமாறினாலும் அவன் கைகளைக் கோர்த்துக் கொண்டே கௌதம், ''சிபி! வந்துட்டியா. இனிமே என் கூடப் பேசாதே... பழகாதே! நான்... எங்க குடும்பமே... ரொம்பக் கெட்டவங்கடா. நீ ரொம்ப நல்லவன். என்னைப் பத்தி தெரிஞ்சா காறித் துப்பிடுவே. என் பார்பியோட சாவுக்கு யார் காரணம் தெரியுமாடா?

தெரிஞ்சா... உனக்கும் என்னை மாதிரியே நெஞ்சு வெடிச்சிடும் தெரியுமா? வேண்டான்டா! உனக்குத் தெரிய

வேண்டாம். அதோட, உனக்கு இந்தக் கௌதமோட ப்ரண்ட்ஷிப்பும் வேண்டாம். போயிடு! என் கூடப் பேசினா, உனக்கும் ஏதாவது ஆபத்து வந்திடும். மிஸஸ் பத்மினி... அதான் உன்னோட எம்டி இருக்காங்களே... அவங்க நம்ப வெச்சு என்னைக் கழுத்தறுத்துட்டாங்கடா!

என் சந்தோஷத்தை... என் பார்பியை... பேசி நோகடிச்சுட்டாங்க. அந்த டென்ஷல தான், அவ தாறுமாறா கார் ஓட்டியிருக்கா. பாவம்டா சிபி. என் பார்பி சாகும்போதும் ஐ லவ் யூ சொன்னாடா. என்னோட தான் கடைசியா பேசினா. போன்ல முத்தம் கொடுத்தாடா. ஐ மிஸ் ஹர்! என்னை மன்னிப்பியாடா. வேண்டாம்... என்னைக் கொன்னுடு! நான் என் பார்பிகிட்டயே போறேன்!'' -குமுறினான்.

கௌதமை இடையில் கைபோட்டு அணைத்து வந்து கட்டிலில் படுக்க வைத்த சிபி, ''தனு! கொஞ்சம் கஞ்சி வைத்து கொண்டு வா.'' என்றான். கௌதமுக்கு அதைப் புகட்டி, தர வேண்டிய மருந்துகளையும் கொடுத்தவன், அவன் தூங்கும் வரை அருகிலேயே இருந்தான்.

''தனு! நான் கிளம்புறேன். அவன் தூங்கட்டும். அவன் காலையில எழறதுக்குள்ளே நான் வந்திடுவேன். அப்புறமா பேசிக்கலாம். எனக்கும் நிறைய யோசிக்கணும். காதல் கசிய நின்றவளை அருகில் இழுத்து, தயக்கங்களை களைந்தவனாய் அவள் பிறை நெற்றியில் இதழ் பதித்து ''டேக் கேர் -டா'' என்றான்.

காலையில் கௌதம் எழுவதற்கு முன்னே சிபி வந்து சேர்ந்தான். தான்யா கொடுத்த காபியைச் சுவைத்துக் கொண்டிருக்கும்போதே நெற்றியைக் கையில் பிடித்துக் கொண்டே எழுந்த கௌதம், சிபியைப் பார்த்துத்



தலைகுனிந்தான். சிபி எதுவுமே பேசவில்லை. ஆனால், கௌதமையே தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் பார்வையே கௌதமைத் துளைக்க, தலைகுனிந்து ''சாரிடா!'' என்றான்.

''எதுக்கு சாரி? ம். போதை ஏத்திக்கிட்டா உனக்கு எல்லாம் சரியாயிடுமா? சொல்லு... யாருக்குத் தான்டா துயரம் இல்லை? எனக்கு என் குட்டிம்மான்னா பிறந்ததிலிருந்தே உயிர். தோளிலும் மார்பிலும் தூக்கி வளர்த்தேன். என் தாத்தாவுக்கு...? அப்ப, எல்லாருமே தண்ணி போட்டுக்கலாமா... சொல்லு? காலேஜ்ல... ஏன், பாரின்ல படிச்ச போது கூட... டிரிங்க்ஸ் யூஸ் பண்றவங்க கூட நீ பேசவே மாட்ட! ஏன் இப்படிப் பண்ற? உன்கிட்ட இதை எதிர்பார்க்கலைடா.'' -தவறு செய்த சிறுவனைக் கண்டிக்கும் தொனியிருந்தது சிபியின் குரலில்.

''மிஸஸ் பத்மினி...''என்று கௌதம் ஆரம்பிக்கும் போதே, ''வேண்டாம். சொல்லாதே! அந்தச் சி.டி.யை நானும் பார்த்துட்டேன்'' என்றான் சிபி.

''சிபி!'' -குரலில் டன் டன்னாய் அதிர்ச்சி இருந்தது. ''அதைப் பார்த்துமாடா பேசாம இருக்க? அவங்க மேலே உனக்குக் கொலை வெறி வரலையாடா?''

''இல்லை.''

''சிபி! ஏண்டா... அவங்க பண்ணின...''

''போதும் கௌதம். என்னால அவங்க் மேல கோபப்பட முடியலை. ஏன்னா, அவங்க உன்னைப் பெத்தவங்க! ஒரு தாயா... அவங்க உனக்கு நல்லதுன்னு நினைச்சிருக்காங்க. தேவியை உன் வாழ்க்கையிலிருந்து விரட்ட, சும்மா

பயமுறுத்தியிருக்காங்க. ஆனா, விளைவு இப்படி இருக்கும்னு... கண்டிப்பா யோசித்திருக்க மாட்டாங்க.''

''சிபி! உன்னளவுக்கு பெருந்தன்மையா, என்னால இருக்க முடியலை. இனி, எனக்கு அப்பா மட்டும் தான். அவங்க பேசின பேச்சு, என் மனதை அறுக்குதுடா. நீ எல்லாத்தையும் மறந்து, அங்க வேலைக்குத் திரும்பவும் போகப் போறியா?''

''அது மட்டும் இல்லை கௌதம். கோபம் இல்லை. ஆனா, நிறைய வருத்தம் இருக்கு. இனி, என்னால அவங்ககிட்ட வேலை செய்ய முடியாது.''

''பின்ன என்னடா செய்யப் போற?''

''நீயெல்லாம் என் பிரண்டா கௌதம்? உன் கன்சர்ன்ல எனக்கு வேலை குடுக்க மாட்டியா? நீ என்னடா குடுக்கிறது? நாளையில இருந்து விஷ்வா பில்டர்ஸ்ல தான் என் டியூட்டி. நானே இந்த வேலையை எடுத்துக்கிட்டேன். நீ சொல்லவே வேண்டாம்.''

''சிபி!'' என்றபடி அவனை அணைத்துக் கொண்ட கௌதம், ''கடவுள்... அம்மா, மனைவி என்ற இரண்டு விஷயத்திலயும் என்னைத் தண்டிச்சுட்டார். ஆனா, பிரண்ட்ஸ் விஷயத்தில முழுசா கருணை வெச்சிட்டார். நீயும், வருணும் எனக்குக் கிடைச்சது என் அதிர்ஷ்டம்.''

''அந்த அதிர்ஷ்டத்தை நீயே தொலைச்சிருவ போல இருக்கு. பசியில எனக்கு உயிரே போயிடும்டா. சீக்கிரமா வந்தா டிபனைச் சாப்பிடலாம்.''

''இதோ! ஒரு நொடியில குளிச்சிட்டு வந்திடறேன்'' என்றவன், டவலோடு பாத்ரூமுக்குள் ஓடினான்.



# 17

மருத்துவக் குழுவின் தீவிரச் சிகிச்சையின் பலனாக இருபது நாட்களுக்கும் பின் தேவி, ''பிரபு!'' என்றாள்.

அவளின் ஒற்றைச் சொல்லுக்காக தவமிருந்த பெரியவர், கண்கள் கசிந்துருக, ''தேவி! மேரா பேட்டா!'' என்று அவள் கேசத்தை வருடினார்,

குரல் வந்த திசையில் கழுத்தைத் திருப்ப முயன்று, ''ஆ! வலிக்குதே. பிர...பு யார்... என்கிட்டப் பேசியது? நா...ன் எங்...கே இருக்...கேன்? பிரபு! கிட்ட வாங்...க. என் கண்ணில், ஏன் கட்டுப் போட்டிருக்கு? பிர...பு!'' என்று நைந்த குரலில் முனகிவிட்டு மீண்டும் மயக்கமானாள்.

கண்களில் நீர் கசிய, அந்த முதியவர் டாக்டரை அழைத்தார்.

''அவங்க பேசினாங்களா? சீக்கிரமா காயம் ஆறுகிற மாதிரிதான் ட்ரீட்மெண்ட் கொடுத்துகிட்டு இருக்கோம். அதுக்குப் பிறகுதான் என்ன செய்யறதுன்னு முடிவு பண்ணணும். அவங்க முகம் முழுக்க கண்ணாடித் துகள்கள் ஏறியிருந்தது. அதை ரிமூவ் பண்ணியாச்சு. காயம் இருக்கு.பேஷண்டோட முகத்தில, அறுபது சதவிகிதத்துக்கு மேலே டேமேஜ் ஆகியிருக்கு. ப்ளாஸ்டிக் சர்ஜரி தேவைப்படும். அதனால, முழுவதும் குணமாக நீண்ட நாள் சிகிச்சை தேவைப்படும். அவங்க ஹஸ்பெண்ட் வந்துட்டாரா? முதல்ல, அவருக்குத் தான் இன்பார்ம் பண்ணணும்.

''இல்லை டாக்டர். அவர் இந்த ஆக்ஸிடென்டுக்கு முன்பாகவே பாரின் போயிட்டார். இந்த விஷயமே அவருக்குத் தெரியாது. அவர் மிகப்பெரிய பிசினஸ் கான்ட்ராக்ட் சைன் பண்ணத் தான் போனார். தேவியைப் பற்றித் தெரிஞ்சா, அதை டிராப் பண்ணிட்டு உடனே கிளம்பிடுவார். நான் இருக்கேன்... எதுவா இருந்தாலும் நான் பார்த்துக்குவேன்!'' என்று ஆங்கிலமும் ஹிந்தியும் கலந்து பேசினார்.

''இவங்க பேரண்ட்ஸ்...''

''அவங்க ஒரு ஏர் கிராஷ்ல இறந்துட்டாங்க. நான் தாத்தா தான். மாப்பிள்ளை வரும் வரை, நான் மட்டும் தான் இவளுக்கு எல்லாமே. எத்தனை கோடி செலவானாலும் பரவாயில்லை டாக்டர். தேவி பழைய மாதிரி ஆகணும்'' என்றவரின் குரல் தழுதழுத்தது.

''ரிலாக்ஸ் சார். டென்ஷன் ஆகாதீங்க. உங்க ஆதங்கம் புரியுது. எங்களால முடிஞ்ச பெஸ்ட் ட்ரீட்மெண்ட்டைத் தான் இப்பக் குடுத்துட்டு இருக்கோம். ப்ரீச் கேண்டி ஹாஸ்பிட்டல் பிளாஸ்டிக் சர்ஜன் டாக்டர்.மோகன் தாமஸ், ரொம்ப பேமசான சர்ஜன். தினம் ஒரு கன்ட்ரிக்குப் பறந்துகிட்டு இருக்கிறவர். அவர் நாளைக்கு வருவார். மேல என்ன ட்ரீட்மெண்ட் பண்ணலான்னு, அவர் டிசைட் பண்ணுவார்.'' டாக்டர் அவர் கையை ஆதரவாகப் பற்றி அழுத்தினார்.

மறுநாள் வந்து சேர்ந்த டாக்டர்.மோகன் தேவியைப் பரிசோதித்து விட்டு, ''டாக்டர்.சிவக்குமார்! மிஸஸ்.தேவிக்கு பேஸ்ல சிக்ஸ்டி பர்செனட் டேமேஜ் ஆகியிருக்கு அவங்களைப் புல்லா சரிப்படுத்த, பல மாதங்கள் ஆகும்.



முகத்தில் காயம் கொஞ்சம் ஆறினதும் அவங்களை என் ஹாஸ்பிட்டலுக்கு ஷிப்ட் பண்ணிடலாம். எனக்கு அடிக்கடி இங்க வரமுடியாது. அங்க என் ஜூனியர்ஸ் இருக்காங்க. ஐ வில் டேக் கேர் ஆப் ஹர்! ப்ளீஸ் டோண்ட் வொரி. ஐ கேன் க்யூர் இட்!'' என்றார்.

டாக்டர் சென்றதும் தேவியின் அருகில் சென்று அமர்ந்தவரின் கண்களில் அத்தனை வேதனை. முகமே தெரியாத அளவுக்கு பெரிய கட்டு. மெல்ல அவள் கைகளை வருடிக் கொண்டு ஏதோ யோசனையில் இருந்தவரை, அப்போது தான் வந்த விக்ரம் சிங் பார்த்தான்.

''முதலாளி!''

''வா விக்ரம்!''

''டாக்டர் வந்து பார்த்துட்டுப் போயாச்சா?''

''ஆச்சு விக்ரம். முழுவதுமாக குணமாகிடும்னு நம்பிக்கையா சொல்றார். ஆனா, பல மாதங்கள் ஆகும்ன்றார்.''

''எத்தனை வருஷமானாலும், தேவிம்மா சரியானா போதும் சாப்! அப்புறம் சி.டி.யை எங்க பாஸ் பார்த்துட்டு, ரொம்ப எமோஷனல் ஆயிட்டார். டிரிங்ஸ் சாப்டுட்டு வீட்டில் ரொம்ப ரகளை. சிபி சார் தான் வந்து, சமாதானப் படுத்தியிருக்கார்.''

''சி.டி. விஷயம்.''

''சிபி சாருக்கும் தெரிஞ்சிருச்சு, ஆனா, அதைப் பொருட்படுத்தல. எங்க பாஸ்தான் ரொம்பக் கோபப்பட்டிருக்கார். இனி எனக்கு அப்பா மட்டும்தான்னு தெளிவா சொல்லிட்டார்.''

''நான் மொதல்ல அந்தம்மாவைப் பழிவாங்கணும்னு முடிவு செஞ்சேன். ஆனா, மன்னிச்சுட்டேன். அவங்க், கணவனையும் மகனையும் பிரிஞ்சு தனியா வாழறதே, பெரிய தண்டனை. அதுவே அவங்களை கொஞ்சம் கொஞ்சமா திருத்திடும்.என் தேவிக்குச் செய்ய வேண்டியதைப் பார்க்கணும். இன்னும் இருபது நாள்ல பாம்பே கூட்டிட்டுப் போயிடறேன். அங்க தங்குவதற்கு எல்லா ஏற்பாடும் ரெடி பண்ணச் சொல்லிட்டேன். ட்ரீட்மெண்ட் முடியறவரை அங்கதான் இருக்கணும்.''

''முதலாளி! நான்...?''

'' நீ இன்னும் கொஞ்ச காலம் இங்கதான் இருக்கணும். சிபியும், கௌதமும் உன் பொறுப்பு. தேவி இன்று கண் விழித்ததும், ''பிரபு''ன்னு மட்டும் தான் ஜெபம் மாதிரி சொன்னா. இந்தச் சூழ்நிலையில, அவங்க ரெண்டு பேருக்கும் சப்போர்ட்டா நீ இரு. தினமும் உன்னைக் கான்டாக்ட் செய்வேன்.

மறுநாள் காலை கண் விழித்ததும் தேவி, ''ஹலோ? பிர...பு... எங்கே இருக்கீங்க? சிபி அண்ணா. இது எந்த இடம்? என் கண்ணில ஏன் கட்டுப் போட்டிருக்கு... ப்ளீஸ்! யாராவது பதில் சொல்லுங்க!'' என்றவளின் கைகள் பிடிமானம் தேவி காற்றில் அலைந்தது.

''மேரா பேட்டா! அப்படியே படுத்திரு. ட்ரிப்ஸ் போட்டிருக்காங்க. கையை அசைக்காதே.''

''யார் சார் நீங்க? என்னை வழியில பார்த்துக் காப்பாற்றி, ஹாஸ்பிடலில் சேர்த்திருக்கீங்களா? ரொம்ப தேங்க்ஸ்! என் செல்போன் எங்கேயோ மிஸ் ஆயிருச்சு.

என் ஹஸ்பெண்ட் நம்பர் சொல்றேன். அவர் எண்ணுக்கு ஒரு கால் பண்ணிக் குடுங்க ப்ளீஸ்! இனிமே அவர் வந்து பார்த்துக்குவார். என்னால பெயின் தாங்க முடியலை. ரிங் போனதும் செல்லைக் குடுங்க ப்ளீஸ்!'' தொடர்ச்சியாகப் பேசிக் கொண்டே போனவளின் அருகில் சென்று, ஆதரவாக அவள் கையைப் பற்றினார்.



சட்டெனக் கையை உதறி, ''விடுங்க சார்! எனக்கு இதெல்லாம் பிடிக்காது. ஹாஸ்பிடல்ல தானே இருக்கேன்? சிஸ்டர்! டாக்டர்!'' என்று கத்தினாள்.

''அமைதியா இருடா குட்டிம்மா. நான் உனக்கு எல்லாம் சொல்றேன். டென்ஷன் ஆகாதே. எத்தனை நாள் கழித்து, இன்னிக்குத் தான் கொஞ்சம் தெளிவா பேசற. இன்னிக்கே நிறையப் பேச வேண்டாம். ரெஸ்ட் எடு.''

''எத்தனை நாளா? என்ன சொல்றீங்க? என் பேர் குட்டிம்மான்னு, உங்களுக்கு எப்படித் தெரியும்?'' -குரலில் படபடப்பு.

''மேரே பியாரி! நான் ஜஸ்வந்த் சிங் ஜோதா. உன்னோட தாத்தா!'' என்று ஆரம்பித்ததும்,

''பொய்! நீங்க யார்? என்னைக் கடத்திட்டு வந்திருக்கீங்களா? என் பிரபுவுக்குத் தெரிஞ்சா அவ்வளவு தான்! என்னை அவர்கிட்ட விட்டுடுங்க; நான் உங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்!'' என்று மிரட்டலாகப் பேசினாள்.

அசையக் கூட முடியாத நிலையிலும் தன்னை மிரட்டும் தேவியைக் கண்டு மெல்லப் புன்னகைத்தவர், ''என் இளவரசி... என் செல்லப் பேத்தியை, நான் ஏன் கடத்தணும்? ம்! உரிமையோட தான், இங்க கூட்டிட்டு வந்து அட்மிட் செய்தேன்'' என்றார்.

''பொய் பேசாதீங்க. குரலைக் கேட்டா, ஏதோ பெரிய மனுஷன் மாதிரி தெரியுது. என் தாத்தா பேர் கிருஷ்ணமூர்த்தி.''

''ஆமாடா. அது உன் அப்பா வழித் தாத்தா. நான், உன் அம்மா நந்தினி தேவியின் அப்பா -ஜஸ்வந்த் சிங் ஜோதா. ஜோத்பூரிலிருந்து வந்திருக்கேன்.

''நான் நம்ப மாட்டேன். டாக்டர் எங்கே? அவர்கிட்டப் பேசணும். நான், என் வீட்டுக்குப் போகணும். சிபி, தாத்தா, பிரபு எல்லோரும் என்னை தேடிக்கிட்டு இருப்பாங்க.''

''நான், நிஜமாகவே நந்தினியைப் பெத்தவன் தாண்டா. சத்தியம்... நம்பு!''

அப்போது உள்ளே வந்த விக்ரம், ''தேவி!'' என்றதும்.

''யார்? யார்? விக்ரம் சாரா? தெய்வம் போல வந்தீங்க! யாரோ ஒருத்தர், என் தாத்தான்னு சொல்றார். உங்க பேச்சைக் கேட்காம காரை ஓட்டிட்டு வந்து, ஆக்ஸிடெண்ட் ஆயிருச்சு. பிரபுவுக்குத் தெரியுமா? அவங்க யாருமே ஏன் வரலை? நான் எங்க இருக்கேன்?''

''நான், உன் சிபி மாதிரி தேவிம்மா. நான் சொல்வதை நம்புவாய் தானே? நான் பேசி முடிக்கிறவரை அமைதியா இரு. நீ டென்ஷன் ஆகாம இருக்கிறது ரொம்ப முக்கியம். ஆக்ஸிடெண்ட் ஆன நிமிடம் முதல், இப்போது வரை, தேவிக்கு நடந்த அனைத்தையும் சொன்ன விக்ரம்,

''நிஜம் தான் தேவிம்மா. இவங்க உன் தாத்தா. ஜோத்பூரில் பெரிய ராஜ பரம்பரையைச் சேர்ந்தவர். ராஜா! பிரம்மாண்டமான சமஸ்தானத்துக்குத் தலைவர். உங்க அம்மா நந்தினி தேவி, அவங்களோட திருமணத்துக்குப் பிறகு உன் தாத்தாவோட தொடர்பே இல்லாம போனதால



தான், உனக்கு அவரைப் பத்தி எந்த விவரமும் தெரியலை. ஆனா, நான் சொல்றது எல்லாம் சத்தியம்! உன்னையும், சிபியையும் பாதுகாக்கத் தான், முதலாளி என்னை இங்கே அனுப்பினார். அதனாலதான், நான் இங்கே வேலையில் சேர்ந்தேன். சிபி ஆபீசில் வேலை செய்யற ஆனந்த் கூட, உன் தாத்தா சொல்லித் தான் வந்தான். எங்க ஜோத்பூர்ல, அவர் ஒண்ணு சொன்னா, நாங்க அத்தனை பேரும் உயிரைக் குடுக்கவும் தயங்க மாட்டோம். முதலாளின்னா... எங்களுக்குத் தெய்வம்!''

சில நிமிடங்கள் பலத்த மௌனம். விக்ரம் வந்து பேசியதில், ஜஸ்வந்த் சிங் நிம்மதியானார். தேவியே மௌனத்தைக் கலைத்து, ''விக்ரம் அண்ணா. அப்படிக் கூப்பிடலாம் தானே? எனக்கு விபத்து நடந்து எத்தனை நாளாச்சு?''

''இன்றோடு இருபத்தியொரு நாள்.''

''பிரபு, சிபி, தாத்தா... இவர்கள் என்னைத் தேடவே யில்லையா? இந்த விஷயம் அவர்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது தேவிம்மா. உன் தாத்தாவைப் பற்றி, அவங்க யாருக்கும் தெரியாது. ஆனா, ஆக்ஸிடெண்ட் ஆனது மட்டும் தெரியும்.''

''பின்னே?''

''சொல்றேன். நீ பத்மினி மேடம்கிட்ட பேசிட்டுக் கிளம்பியதும்...'' என்றதுமே, தேவி விக்ரமின் கையை இறுகப் பற்றினாள். அவள் உடலே நடுங்கியது.

அவள் கையை மெல்லத் தட்டிக் கொடுத்த விக்ரம், ''ரிலாக்ஸ் ஆக இருக்கணும் தேவி! அதனாலதான், நான் இப்ப உனக்கு எதுவும் தெரிய வேண்டாம்னு நினைத்தேன்.

கொஞ்சம் சரியாகட்டும். பிறகு பேசிக்கலாம். உன்னோட முகத்துல பலமா அடிபட்டிருக்கு தேவிம்மா. அதனால, உனக்கு அதிர்ச்சி தரக் கூடிய விஷயங்களைச் சொல்லக் கூடாது. உன் கண்ணில இருந்து கண்ணீர் வராம பார்த்துக்கணும். அதான், நாங்க நடந்தது எதையும் சொல்லாம இருக்கோம்.''

''அண்ணா! அங்க எல்லோரும்...''

''நல்லா இருக்காங்க தேவிம்மா. இந்த ஆக்ஸிடென்ட் அவங்களை அப்செட் பண்ணியிருக்கு.''

''என்னை வந்து பார்க்கவே இல்லையே! பிரபு, சிபி கூட என்னை வந்து பார்க்கலை தானே?''

சிறிது நேர பலத்த மௌனத்துக்குப் பிறகு, ''நீ உயிரோட இருக்கிறதே, அவங்க யாருக்கும் தெரியாதும்மா'' என்றான் விக்ரம்.

''அண்ணா!'' என்ற தேவியின் குரல் நடுங்கியது.

அவள் கையை தட்டிக் கொடுத்து, ''ஆமாம்மா! உன்னை இழந்திட்டதா, நம்ப வெச்சிருக்கோம். அதுக்கும் ஒரு பலமான காரணம் இருக்கு.''

''அப்படின்னா, நான் இனிமே அவங்களைப் பார்க்கவே முடியாதா?''

'' உனக்கு ஒரு பெரிய ட்ரீட்மெண்ட் காத்திருக்கு. அது முடிய இரண்டு வருஷம் கூட ஆகலாம். அது வரைக்கும், நீ எங்க முதலாளி சொல்றதைக் கேட்டுக்கம்மா. அதற்குப் பிறகு, அவரே உன்னை அவங்ககிட்ட சேர்த்து விடுவார். என் பேச்சில் உனக்கு நம்பிக்கை இருக்கு தானே?''

''ம்... ம்.''



''இப்ப உனக்குத் தேவை கட்டாய ஓய்வு. உன் தாத்தாவும் தூங்கி இருபது நாளுக்கு மேலாகுது. அவர் வயதுக்கு, இது ரொம்ப ஸ்ட்ரெய்ன். நீ நிம்மதியா சந்தோஷமா இருக்கேன்னு தெரிஞ்சாதான், அவரும் நிம்மதியா ரெஸ்ட் எடுப்பார். உனக்கு இங்கே எந்தக் குறையும் இல்லாம, நாங்க பார்த்துக் கொள்வோம். இன்னும் சில நாட்களுக்குப் பிறகு, பாம்பே போயிடலாம். இப்பத் தூங்கும்மா!'' என்று தேவியின் மனது சமாதானம் ஆகும் வரை பேசி, அவளைத் தூங்கச் செய்தான்.

அவள் உறங்கியதும் ஜஸ்வந்த் சிங் அவள் முகத்தை வருடி, ''விக்ரம்! என் ஏஞ்சல் என்னை ஏத்துக்குவாளா? என்னைத் தாத்தான்னு கூப்பிடுவாளா?'' என்றார்.

''கவலைப்படாதீங்க முதலாளி! தேவிம்மா கண விழிச்சதும், உங்களைக் கண்டிப்பா தாத்தான்னு கூப்பிடுவா.''

மறுநாள் காலை கண் விழித்ததும், ஜஸ்வந்த் தேவியின் அருகே வந்து அமர்ந்தார். காற்றில் கைகளைத் துழாவிய தேவி, ''விக்ரம் அண்ணா! வந்திட்டீங்களா?'' என்றாள்.

''நான் தாத்தாடா. உன் தாத்தா! விக்ரம் பத்து மணிக்கு வருவான். அவன் சொன்னதை நம்பற தானே?''.

''ஆமாம்...'' என்று மெல்லத் தலையசைத்த தேவியின் கைகளைப் பற்றி, ''தேவிம்மா. மேரா பேட்டா! நிஜம்மா, நான் உன் தாத்தா தான். புத்தி கெட்டுப் போய், இத்தனை வருஷமா உங்களைப் பிரிஞ்சு பெரிய தண்டனையை அனுபவிச் சுட்டேன். தப்பு தான்! என்னை மன்னிச்சிடுடா. என் மகளோட மரணம்தான், என்னைச் சிந்திக்க வெச்சுது. அவ ரொம்பப் பிடிவாதக்காரி. அவ காதலை ஏத்துக்க மறுத்த என்னை,

கடைசி வரை பார்க்காமலே போய்ச் சேர்ந்துட்டா.

ஆனா, என் பேரப் பிள்ளைங்களாவது எனக்கு வேணும்னுதான் ஓடி வந்திருக்கேன். ஆசையா உங்களை அங்கே என்னோடு கூட்டிட்டுப் போக நினைக்கும்போது, என்னென்னவோ பெரிய விஷயமெல்லாம் நடந்திருச்சு. நடந்த எல்லாத்தையும் நான் உனக்குச் சொல்றேன். முதல்ல உன் ஹெல்த் இம்ப்ரூவ் ஆகட்டும். என்னோட இளவரசி நீ... இனி உன்கிட்ட எதுவும் மறைக்க மாட்டேன். சிபியும், கௌதமும் என் பாதுகாப்பில் கொண்டு வந்திட்டேன். இனி அவங்களுக்கு எதுவும் ஆகாது. அதுக்கான எல்லா ஏற்பாட்டையும் விக்ரம் பக்காவா செஞ்சு முடிச்சிட்டான்.''

கனிவான அவரது குரலும், பேச்சிலிருந்த மென்மையும், நேர்மையும், கண்ணியமும் அவளை மௌனியாக்கியது. ஆதரவு தேடும் சிறு குழந்தையாய், அவர் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள். ஜஸ்வந்தின் மனம் குளிர்ந்து கண்கள் கசிந்தது.

மேலும் பதினைந்து நாட்கள் உயர்தர சிகிச்சை அளிக்கப்பட்டது. மனோரீதியாக அவளை டாக்டர். செலினா மேற்படிச் சிகிச்சைக்குத் தயார்ப்படுத்தினார். அதன் விளைவாக அவளது மன நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு, எந்த விதமான சூழ்நிலையும் எதிர்கொள்ளும் அளவுக்கு மனத் திடத்தைப் பெற்றாள். தினமும் விக்ரமுடன் பேசியதில், மனம் இன்னும் தெளிவானது.

தனக்காக, தன்னுடைய நலனுக்காக பார்த்துப் பார்த்து இத்தனை உதவிகளையும் செய்த தாத்தாவின் கரங்களைப் பற்றி, ''தாத்தா! ப்ளீஸ். என்னை மன்னிச்சிடுங்க. எனக்காக என்னவெல்லாம் செஞ்சிருக்கீங்கன்னு விக்ரம் அண்ணா



சொன்னார். தேங்க்ஸ் தாத்தா! ஆனா, என் வீட்டில என்னோட இழப்பை... முக்கியமா என் பிரபு... சிபி...'' என்றவள், அதற்கு மேல் பேச முடியாமல் விசும்பினாள்.

''நீ இப்ப அழவே கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார். பிசிக்கலாவும், மென்டலாகவும்... நீ இப்ப ரொம்ப வீக்கா இருக்க. உனக்குக் கம்ப்ளீட் ரெஸ்ட் தேவை. உன் கௌதமைத் தான் கன்ட்ரோல் பண்ணவே முடியலை. ரொம்ப துடிச்சு போயிட்டார். உன் கார் எரிஞ்சுகிட்டு இருக்கறதைப் பார்த்து அவர் காரும் இடிச்சு, அடிபட்டு மயங்கிட்டார். ஒரு வாரம் ஹாஸ்பிடலில் தான் இருந்தார். நீ இறந்திட்டடங்கற விஷயம், ரொம்ப நாள் வரை அவர் மைண்ட்ல பதிவாகாம, பிரமை பிடிச்சமாதிரி தான் இருந்தார். உன் தாத்தாவும் பெட்ல தான் இருக்கார். சிபி தான் தன் அத்தனைத் துயரத்தையும் அடக்கிட்டு, இரண்டு பக்கமும் அல்லாடிகிட்டு இருக்கான்.''

''ஏன் தாத்தா? உண்மையைச் சொல்லிடலாமே. எதுக்கு மறைக்கணும்? இதனால, அவங்களுக்கு எத்தனை மனக் கஷ்டம்?''

''உண்மைதான். கௌதமின் அம்மா பேசியதைக் கேட்டு, கொதிச்சுப் போயிட்டேன். நீ இப்ப இருக்கிற நிலைமையில் உன் பாதுகாப்பு ரொம்ப முக்கியம். உன் ட்ரீட்மெண்ட் முடிய இரண்டு வருஷம் கூட ஆகுமாம். கௌதமுக்கு, தொழில் முறையில் எதிரிகளும் அதிகம். அதனால நீ உயிரோட இருக்கிறது, யாருக்கும் இப்பத் தெரிய வேண்டான்டா. உனக்கும் அதுதான் நல்லது.

நம்ம சமஸ்தானத்தின் ராஜகுமாரி நீ...! ஜோத்பூரில் எத்தனை பெரிய அரண்மனை உன்னோடது தெரியுமாடா.

என்னோட கோடிக்கணக்கான சொத்துக்கும், நான் நடத்திகிட்டு இருக்க நூற்றுக்கணக்கான பிசினசுக்கும், நீயும், சிபியும் தான் வாரிசு. உங்களுக்கு இல்லாத எதுவும், என்கிட்ட இனி இல்லை. இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்க. உன் ட்ரீட்மெண்ட் முடிஞ்சு... ஒரு ராஜகுமாரியா... அந்தப் பத்மினி முன்னால உன்னை நிறுத்துவேன். எந்த அந்தஸ்தைக் காரணம் காட்டி உன்னை மிரட்டினாங்களோ, அதைக் காட்டியே அவங்க வாயை அடைக்கணும். அப்பத் தான் என் மனசு ஆறும்.''

''ஆனா, தாத்தா, பிரபு, சிபி, தாத்தா எல்லாம்... எதுக்காக என் பிரிவை நினைச்சு வருத்தப்படணும்? அவங்க எல்லோரும் பாவம் தானே!''

''கண்டிப்பா. ஆனா, இந்த ஆக்ஸிடெண்ட், ஏறக்குறைய தற்கொலை மாதிரி. உன் உயிரைப் பத்தியே கவலைப்படாம காரை ஓட்டியிருக்க. அதுக்குப் பத்மினியோட பேச்சு தான் காரணம். உன்னை விரட்ட, சிபியையும், கௌதமையும் கொல்லக் கூடத் தயங்க மாட்டேன்னு சொன்னதை, என்னால ஜீரணிக்கவே முடியலை. அவங்க முன்னால பல படிகள் உயர்த்தித் தான், உன்னைக் கொண்டு போய் நிறுத்துவேன்.

இப்போதைக்கு, பத்மினி வீட்டை விட்டு வெளியே வரலை. அது ஏன்னு யாருக்கும் தெரியலை. ஒருவேளை, நீ அங்க போனதும் திரும்ப அவங்க கோபப்பட்டு என்ன செய்வாங்கன்னு தெரியாது. உன் ஹெல்த் இப்ப ரொம்ப முக்கியம். நீ இல்லைன்னே அவங்க நினைக்கட்டும். அதுக்கப்புறம் உன்னைப் பார்த்தா டபுள் சந்தோஷமா இருக்கும். அதுவரை நீ என்னோட பேத்தியா மட்டும் இருடா.



ரொம்பநாள் கழிச்சு, பொக்கிஷமா நீ எனக்குக் கிடைச்சிருக்க. அதை நான் யாரோடயும் ஷேர் பண்ண விரும்பலை. இது கொஞ்சம் சுயநலம் தான்; ஆனா, எனக்கு வேற வழி தெரியலை!'' -குரல் கரகரக்க தன் ஏக்கத்தைக் கொட்டினார்.

தன் கரங்களை நீட்டி அவர் கைகளைப் பற்றிய தேவி, ''சரி தாத்தா. நீங்க சொல்றமாதிரியே நடந்துக்கறேன். ஆனா, அவங்க எல்லோரையும் பத்திரமா பார்த்துக்கங்க. இனிமே இது பத்திப் பேச மாட்டேன். உங்களைப் பார்க்கணும்னு ஆசையா இருக்கு. என் கண்ணில் அடிபடவே இல்லையே! பின்னே... ஏன் இன்னும் கட்டுப் போட்டிருக்காங்க?''

''தெரியலையே தேவிம்மா. இன்னும் இரண்டு நாளில் மும்பை போகலான்னு டாக்டர் சொல்லிட்டார். அங்கதான் உன்னோட ட்ரீட்மெண்ட் தொடங்கப் போகுது. டாக்டர்.மோகன் தாமஸ், பிரீச் கேண்டி ஹாஸ்பிட்டலில் எல்லா ஏற்பாடும் செய்திடுவார். கை, கால்ல க்ரீப் பேண்டேஜ் போட்டிருக்கு. கண்ணில அடிபடாதது... கடவுள் புண்ணியம். ஆனா, முகம் முழுக்க கண்ணாடி ஏறி, புண்ணாகியிருக்கு. அதுதான் மேஜரா சரி பண்ண வேண்டியிருக்கு. நான் இருக்கேன்; சரி பண்ணிடலாம். இது பத்தியெல்லாம் நீ நினைக்க வேண்டாம். உனக்குப் பொழுது போக ஒரு வழி இருக்கு. தினமும் எனக்கு நீ தமிழ் சொல்லித் தரப் போற. சரியாடா? ஆனா, இத்தனை அழகா ஹிந்தி பேச, எங்க கத்துகிட்ட? ஃப்ளுயண்டா பேசுறியே!''

''தாத்தா! அம்மாதான் சொல்லித் தந்தாங்க. அம்மா எப்படி அத்தனை அழகா ஹிந்தி பேசுவாங்கன்னு இப்பப் புரியுது. தாய்மொழி இல்லையா...? ஆனா, உங்களைப் பத்தி ஒரு வார்த்தை கூடப் பேசினதில்லை. ஏதாவது கேட்டா,

பேச்சை மாத்திடுவாங்க.''

''பிடிவாதம்டா. நான் அவளையும், உன் அப்பாவையும் ஏத்துக்கலைன்னு என் மேல கோபம்... அத்தனைக் கோபம். என் பிடிவாதம், அவளுக்கும் இருக்கும் இல்லையா? அதுதான் எங்களை வெறுத்துட்டா. போனது போகட்டும். தமிழ் டியூஷனை நாளைக்கே ஆரம்பிக்கலாமா?''

ஒரு புன்சிரிப்போடு சம்மதித்தவள், ''ஆனா, தாத்தா. என் பிரபு என்னை விட அழகா ஹிந்தி பேசுவார். ஏன்... கவிதையே எழுதுவார். அதுமட்டுமில்ல... பிரெஞ்ச், ஜெர்மன் கூட நல்லா தெரியும். ஹி இஸ் வெரி டேலண்டட்.... தெரியுமா?'' குரலில் உற்சாகம் பொங்கப் பேசிக் கொண்டே போனவளைப் பார்த்து முகம் மலர்ந்தார்.

தேவியிடமிருந்து, பிரபுவின் மேல் உள்ள பிரேமையை விலக்கவே முடியாது என்பதை ஜஸ்வந்த் நன்றாகப் புரிந்து கொண்டார்.

# 18

மறுநாளிலிருந்து தமிழ் டியூஷன் ஆரம்பமானது. பழைய குழந்தைத்தனமும், குறும்புத்தனமும் கொண்ட தேவியாக மாறினாள். அவ்வப்போது வீட்டு நினைவு வரும்போது மட்டும், தனிமையை நாடுவாள். அதை மாற்ற, போராட வேண்டியிருந்தது.

இரண்டு நாட்கள் கழித்து, ஒரு சிறிய ரக தனியார் விமானத்தில் சகல மருத்துவ வசதிகளோடு, ப்ரியங்கா தேவியின் வாழ்க்கை மும்பையை நோக்கிப் பயணித்தது.



பிளாஸ்டிக் சர்ஜன் மோகன் தாமஸ், மனவியல் நிபுணர் டாக்டர்.செலினா இருவரும் தேவியிடம் தங்களது சிகிச்சையைத் துவங்கினர். சிறிது நாட்களிலேயே ஹாஸ்பிடலில் அவளுக்கு உதவி செய்த அத்தனை பேரும் அவளிடம் அளவில்லாத அன்பு செலுத்தினர்.

தன் கண்களால் யாரையும் பார்க்க முடியாமல் போனாலும், தன் குரலால் எல்லோரையும் தேவி வசியப்படுத்தியிருந்தாள். விக்ரம் அடிக்கடி வந்து தேவியைப் பார்த்துச் சொல்வான். சிபியைப் பற்றியும், பிரபுவைப் பற்றியும் பேசுவான். அவன் சொல்வதைக் கேட்டு, அன்று முழுவதும் தேவி உற்சாகமாக இருப்பாள்.

டாக்டர்.மோகன் தாமஸ் இப்போது தேவியின் மிக நெருங்கிய நண்பராகி விட்டார். அவர்களுக்குள் நல்ல புரிதல் இருந்தது.

''ஹாய் ப்ரண்ட்! ஹவ் ஆர் யூ? இன்னிக்கு என்ன டிஃபன் சாப்பிட்ட? ம்!''

''பூரி.''

''ஓ! குட். உன் கைக் காயம் ஆறிருச்சு. இப்ப கட்டைப் பிரிச்சிடலாம்.''

'தேங்க்யூ அங்கிள்! இனி பழைய மாதிரி இருக்குமா? விரல் தழும்பு?''

''நோ வே. முன்னை விடவே அழகா இருக்கப் போகுது. டோண்ட் வொர்ரி, மை டியர் ஏஞ்சல். அப்புறம், இன்னொரு சர்ப்ரைஸ் உனக்கு. இருபது நாட்களில் நீ இந்தப் புதிய உலகத்தைப் பார்க்கப் போற! இதுக்கு முன்ன மும்பைக்கு வந்திருக்கியா?''

''நோ அங்கிள். இது தான் பர்ஸ்ட் டைம்.''

''அப்ப, மும்பையோட அத்தனை வொண்டர்ஸையும் நீ பார்க்கப் போற. நீ பெரிய ஆர்க்கிடெக்ட்னு, உன் தாத்தா பெருமையா சொன்னார். இங்க இருக்கற பில்டிங் எல்லாம், உன் கண்ணுக்கு நல்ல விருந்தா இருக்கும். உனக்கு அசிஸ்ட் பண்ண, ஒரு நல்ல ப்ரண்டை உனக்கு அறிமுகப்படுத்தறேன். அவ எப்பவும் உன் தேவைகளைக் கவனிச்சுகிட்டு உன் கூடவே இருப்பா. மிஸ்.இந்து... தமிழ்நாடு தான். ஷி இஸ் வெரி கைண்ட் அண்ட் டேலண்டட்... அண்ட் எ டாக்டர் டூ!'' என்றவர், பேசிக் கொண்ட அவளைப் பரிசோதித்தார்.

''பேபி! இந்த ஹாஸ்பிடல் அட்மாஸ்பியர் உனக்கு வேண்டான்னு, உன் தாத்தா பீல் பண்றார். அதுக்காக, உனக்கு ஜுகு பீச் பக்கமா ப்யூட்டிஃபுல்லா ஒரு பங்களாவையே வாங்கி ரெடி பண்ணியிருக்கார். படா ஆள் தான். இந்த மாதிரி தாத்தா இருக்கும்போது, எதை வேண்டுமானா பேஸ் பண்ணலாம். கண் கட்டைப் பிரிச்சதும், நம்ம ட்ரீட்மெண்ட் அங்க கன்டின்யூ ஆகும்.

ஒரு பக்கா ஆபரேஷன் தியேட்டரே அங்க ரெடியாகுது. கைக் கட்டைப் பிரிச்சாக் கூட, ரொம்ப ஹெவியா வெயிட் தூக்க வேண்டாம். புல் ரெஸ்ட், ஹெல்தி புட், ஹேப்பி மைண்ட்.... இது தான் நான் ப்ரிஸ்க்ரைப் பண்ற மெடிசின்ஸ்! அதை நீ ஸ்ட்ரிக்டா பாலோ பண்ணனும். நான் தினமும் உன்னை அங்கு வந்து பார்ப்பேன். ஓ.கே. டேக் கேர். நாளைக்கு இந்துவை கூட்டிட்டு வரேன்.''

தேவியின் வயதையொத்த இந்துவை ரொம்பவுமே பிடித்துப் போனது.



''ஹாய் தேவி! இங்க ஹிந்திக்கு நடுவில நீ சிக்கித் திணறிக்கிட்டு இருக்கீங்கன்னு டாக்டர் சொன்னார். கவலைப்படாதீங்க! சலிக்கச் சலிக்க, இனி தமிழ் பேச நான் வந்துட்டேன். எனக்கும் தமிழ் பேச ஆள் கிடைக்காமதான் தவிச்சுகிட்டு இருந்தேன். இனி இரண்டு பேரும் சேர்ந்து கலக்கலாம்... சரியா? தினமும் சுவாரஸ்யமான அரட்டையில் பொழுது இனிதே விரைய, அன்று டாக்டர் அவள் கண்கட்டை அவிழ்க்கப் போவதாகச் சொன்னார்.

''ஹாய் ஏஞ்சல்! இப்பக் கட்டைப் பிரிக்கப் போறேன். கண்ணை மெதுவா திற. டிம் லைட் தான்.... அதனால மங்கலா தான் தெரியும். உனக்குக் கண்ல எந்த அடியும் படவே இல்லை இமையில மட்டும் சின்னதா ஸ்டிச் பண்ணியிருக்கு. அது கூட ஓ.கே தான். மெதுவா என்னைப் பாரு டார்லிங். நான் எப்படி இருக்கேன்? பாலிவுட் ஹீரோ மாதிரியான்னு சொல்லு?''

தன் சிப்பி இமைகளை விரித்து வெண்ணிற கோட்டில் முகம் மலர நின்ற டாக்டரைப் பார்த்து புன்னகைத்தாள்.

''நாட் பேட் அங்கிள். ஹீரோவுக்கு அப்பா ரோல் வேணா, தாராளமா கொடுக்கலாம். என்... என் தாத்தா... அ...வரைப் பார்க்கணுமே!''

டாக்டரின் கண் அசைவில் நர்ஸ் வெளியே சென்று, ஜஸ்வந்த் சிங்கை அழைத்து வந்தாள். ஆறடிக்கும் அதிகமான உயரத்துடன் எஸ்.வி. ரங்காராவ் தோற்றத்தில், கண்களில் ஆர்வம் பொங்க அருகில் வந்தவரை பாய்ந்து அணைத்துக் கொண்டாள் தேவி.

''தாத்தா... தாத்தா! தேங்க்யூ சோ மச். எத்தனை வருஷமா உங்களை மிஸ் பண்ணியிருக்கேன்... சாரி! என்

முகம் சரியாயிடுமான்னு பயமா இருக்கு. சிபி அண்ணா... பிரபு...'' பேச முடியாமல் கண்கள் மழையாய் பொழிந்தன.

அவளின் அணைப்பும், தாத்தா...! என்ற பாசக் குரலும் அந்த முதியவரை நிலைகுலையச் செய்தது. ஆனாலும், கண நேரத்தில் தன் கம்பீரத்தை மீட்டெடுத்து, அவள் கண்ணீரை மென்மையாகத் துடைத்தார்.

''மேரே பச்சே! என் இளவரசி கண்ணீர் சிந்தினா... என் மனசு தாங்காதுடா. என் பியாரி பேட்டிக்காக, எதை வேண்டுமானாலும் செய்வேன். உனக்குச் சரியாகாம எப்படிப் போகும்? ம்!

நம்ம டாக்டர் எத்தனை பேமஸ் தெரியுமா? அவரோட ஒரு நாள் அப்பாயின்ட்மென்டுக்காக, ஒரு வருஷம்கூட காத்திருக்காங்க. என் செல்ல பேத்தியோட கேஸை அவர் கையில் எடுத்ததுமே, எனக்கு முழு நம்பிக்கை வந்திடுச்சு. அவர் பிரம்மா மாதிரி! உனக்கு முழுசா ஒரு புதிய ஜனனமே கொடுக்கப் போறார். இனி நீ அழவே கூடாது. இன்னும் இரண்டு நாளில், நம்ம வீட்டுக்குப் போயிடலாம். உனக்கு முழுசா குணமாகும்டா. என் வார்த்தை மேல நம்பிக்கை வை!'' அவளைத் தோளோடு அணைத்து ஆறுதல்படுத்தியவரின் கரங்களும் உணர்ச்சி வசப்பட்டதில், மெல்ல நடுங்கியது.

புதிய வீட்டின் அழகை பார்த்துப் பார்த்து மலைத்துப் போனாள் தேவி. ''தாத்தா! பீச் பக்கத்தில இத்தனை ஆடம்பரமான லைப்ல.... நான்.... நினைச்சுப் பார்க்கவே முடியலை தாத்தா! பங்களாவும், தோட்டமும் வெரி மார்வலஸ்! நாம பீச்சுக்குப் போகலாமா?''

''இல்லை குட்டிமா. டாக்டர் பர்மிஷன் குடுத்தா தான் எதுவுமே; அவர் வந்ததும் கேட்கலாம். நம்ம கார்டன்ல போய்ச் சுத்திட்டு வா. இந்துவை கூட்டிட்டுப் போ. அங்க உனக்காகத் தான் ஊஞ்சல் வாங்கிப் போட்டிருக்கேன்.''

இந்துவோ, ''தேவி! நிஜமா என் க்ளோஸ் ப்ரண்ட் கூட பிக்னிக் வந்த மாதிரி இருக்கு. ஐ என்ஜாய் திஸ் அட்மாஸ்பியர் வெரி மச்! இதுக்கு நான், டாக்டருக்குத் தான் தேங்க் பண்ணணும்!'' என்று குதூகலித்தாலும், தேவியின் உடல் நிலையையும் கண்காணிக்கத் தவறவில்லை.

டாக்டர். மோகன், ''ஹாய் மை ப்ரிட்டி கேர்ள்! ஹவ் ஆர் யூ? பீலிங் பெட்டர் நௌ?'' என்று கேட்டார்.

''மார்னிங் அங்கிள். ப்ரிட்டியா...? இந்த மூஞ்சியா...? ஜோக் அடிக்காதீங்க! கண்ணாடியில பார்த்தேன். முகமே இல்லாதவ நான்! நல்லவேளையா, தாத்தா என் பிரபு கண்ல படாம என்னை இங்கக் கூட்டிட்டு வந்திட்டார். இந்த மூஞ்சியைப் பார்த்து அருவெறுத்துப் போயிருப்பார்'' என்றவளின் குரல் தழுதழுத்தது.

''உன் பிரபு... உன் அழகை மட்டும் விரும்பியிருந்தா, நீ சொல்றதை நான் நம்புவேன். ஆனா, இத்தனை நாள் அவரைப் பத்தி நீ பேசினதைக் கேட்ட பிறகு, அவர் உன்னைத் தான் நேசிச்சிருக்கார்... உன் அக அழகை, குணத்தை! நீ எப்படியிருந்தாலும்... நீ அவரோட வொய்ப் தானே?

இந்த பேண்டேஜைப் பார்த்து பயந்துட்டியா பேபி? திஸ் இஸ் ஒன் ஆப் த ட்ரீட்மெண்ட். தட்ஸ் ஆல். இதுக்கு பேர் பேஸ் மாஸ்க் கம்ப்ரஷன். இது பொல்யூஷன்ல இருந்தும், மத்த டிஸ்டர்பன்ஸ்ல இருந்தும் உன் முகத்தை பாதுகாப்பா வெச்சிருக்கு. ஸ்கார்ஸ் வராம இருக்கவும் தான்,

இலாஸ்டிக் துணி மாதிரி இதைப் போட்டிருக்கோம். டோண்ட் வொர்ரி!

ட்ரீட்மெண்ட் முடிஞ்சதும் பார்... உன் அங்கிளோட திறமையை! எனக்கு ஒரே பயம். பாம்பேல இருக்க ஹீரோஸ், ப்ரொடியூசர்ஸ், டைரக்டர்ஸ் பார்த்தா... உடனே உன்னை பாலிவுட்டுக்குக் கொத்திட்டுப் போயிடுவாங்க தெரியுமா? அத்தனை அழகா உன்னை மாத்தப் போறேன்.

''போங்க அங்கிள்! கேலி பண்ணாதீங்க.'' அவர் கை தன் பாட்டுக்கு வேலையைச் செய்து கொண்டேயிருக்க டாக்டர். மோகன், ''ரியல்லா தான் டார்லிங்! என் பேஷண்ட்ஸ்ட் யாரையும், இத்தனை அழகா மாத்தினதே இல்லைன்னு சொல்வாங்க பார். உன் பேஸ் ஸ்ட்ரக்ச்சர் பார்த்து, கம்யூட்டர்ல அதுக்கு மேட்ச் ஆகற மாதிரி சில சேஞ்சஸ் செய்து வெச்சிருக்கேன். போதுமா பார். உன் ஐடியா எப்படி இருக்குன்னு, எனக்கும் தெரிய வேண்டாமா? சொல்லு பார்க்கலாம்.''

தாத்தா புன்னகையோடு இருவரின் பேச்சையும் ரசித்துக் கொண்டிருந்தார். தான் கொண்டு வந்திருந்த மடிக்கணினியை உயிர்ப்பித்து தேவியை அழைத்தார். தயக்கத்துடன் அங்கு வந்து பார்த்தவளின் விழிகள், சந்தோஷத்தில் மலர்ந்தன.

''ஓ.எம்.ஜி. இது என் பேஸா! நிஜமாகவா அங்கிள்? ரொம்ப அழகா இருக்கே! ஆ...னா... மூக்கு இன்னும் கொஞ்சம் ஷார்ப்பா வேணும். என் பிரபு, சிபி இரண்டு பேருமே, என்னைக் கிண்டல் பண்ணிக்கிட்டே இருப்பாங்க.

அப்புறம் டாக்டர்... என் உதட்டு மேல இருக்கிற ஸ்டார் மச்சம்... அது அப்படியே இருக்கட்டும்!'' என்று சொல்லும் போதே, குரல் குழைந்து போனது.



கௌதம் அதைப் பார்த்தவுடனே கிளர்ந்து போய் பதித்த முத்தங்களின் நினைவில் முகம் செம்மையுற, கன்னம் சூடானது. பேண்டேஜை வருடிய விரல்கள், யாரும் அறியாமல் விழி நீரைச் சுண்டியது. பிரபுவின் நினைவில் எதையும் பேச முடியாமல், கணிணியை மூடி வைத்துவிட்டு, தனிமையை நாடிச் சென்றாள். அவளின் மனநிலை புரிந்து டாக்டரும், அவளின் தவத்தைக் கலைக்க விரும்பாமல் விடை பெற்றுக் கிளம்பினார்.

முறையான சிகிச்சை தொடர்ந்து கொண்டேயிருந்தது. முகத்தில் சின்னச் சின்னதாக நிறைய ஆபரேஷன்கள் செய்யப்பட்டது. ரைனோப்ளாஸ்டரி என்ற மூக்கை அழகுபடுத்தும் சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது. ஸ்கின் டோனர் கிடைத்ததால், ஸ்கின் மாற்றுச் சிகிச்சை எளிதாகச் செய்யப்பட்டது. தொடர் சிகிச்சையால் தேவியின் உடலும், மனமும் தளர்ந்து போனது. அவள் மனம் சோர்வடையும் போதெல்லாம், ஜஸ்வந்த்சிங் அவளை வற்புறுத்தி பீச்சில் காலாற நடக்க வைப்பார். இந்துவும் அவர்களோடு கலந்து கொள்வாள். தேவியின் கைகளைப் பற்றியபடி சிறுவயது சம்பவங்களை சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டே சின்ன வாக் போவார்கள். பிரபுவைப் பற்றி, வீட்டைப் பற்றி பேச ஆரம்பித்ததுமே, அவளின் சோர்வெல்லாம் பறந்து போகும். வீடு திரும்பும்போது பழைய தேவி மீண்டிருப்பாள்.

டாக்டர் மோகன் அவளின் விருப்பப்படியே மெல்ல மெல்ல அவள் முகத்தை மாற்றியமைத்தார். அவருடைய முழுத்திறமையும் சிகிச்சையில் பூரணமாக வெளிப்பட்டது.

இதனிடையே நடந்த சம்பவங்களின் பாதிப்பிலிருந்து

மீளவும், புதிய முகத்தை மனோரீதியாக ஏற்றுக் கொள்ளவும், மிஸஸ்.செலினா வாரம் ஒரு முறை வந்து அவளிடம் பேசிச் செல்வார். அதனால் மனதளவில் ஸ்ட்ராங் ஆனாள். அவளுடைய தாழ்வுணர்ச்சி அவளை விட்டு விலகி ஓடிப் போனது. ஆரோக்கியமான உணவுப்பழக்கமும், தேவையான ஓய்வும், அவள் படித்த தன்னம்பிக்கையூட்டும் புத்தங்களும், இந்துவின் உற்ற தோழமையும், அவளின் கம்பீரத்தை மீட்டுத் தந்தது.

மாதங்கள் உருண்டோட வருடங்கள் நகர்ந்தன. அவள் வெளியுலகை தொடர்பு கொள்ளும் நாளும் இனிமையாக விடிந்தது.

''ஹாய்! குட் மார்னிங் மை டியர் ஏஞ்சல்! இன்னிக்கு உன்னோட ட்ரீட்மென்ட் கம்ப்ளீட் ஆகுது. பிளாஸ்டர், பேண்டேஜ் எல்லாத்துக்கும் பெரிய குட்பை சொல்லும் நேரம் வந்தாச்சு. ஜஸ்ட் டூ அவர்ஸ். இந்த ஆபரேஷன் தியேட்டர்ல, ஒரு பெரிய பாலிவுட் ஸ்டார் ஜனனம் செய்யப் போறா.

அப்புறமா, அந்த ஸ்டன்னிங் ப்யூட்டிகிட்டப் பேச... நான் தான் அப்பாயின்ட்மென்ட் கேட்டு கியூல நிக்கணும்!'' என்று பேசிக் கொண்டிருந்தவரின் கைகள், துரிதமாகத் தன் வேலையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தன. அவரது அற்புதமான பத்து விரல்கள் செய்த மாய வித்தையைக் காண, தேவியும் படபடப்போடு தயாரானாள்.

கட்டை முழுவதுமாக அகற்றிய பின், இரண்டு முழு வருடங்களுக்குப் பிறகு, அந்த அறையிலிருந்த ஏசியின் குளிர் அந்தப் பேரழகியின் முகத்தை ஆசையோடு ஸ்பரிசித்தது. அதில் உடல் சிலிர்க்க கண்களை மூடிக் கொண்டாள். அவள் கன்னத்தைத் தட்டிய டாக்டரின் கரங்களை கெட்டியாகப் பற்றிய தேவி, ''அங்கிள்! ரொம்பப் பயமா இருக்கு'' என்றாள்.

''ஹே! உன் முகத்தை நீ பார்க்கவே இல்லை. அதுக்குள்ள பயந்தா எப்படி? முன்னாலயே உனக்குத் தெரிஞ்சுடுச்சா? இதை, நான் இல்ல உன்னைப் பார்த்துச் சொல்லணும். கம். ஆன்!'' வேடிக்கையாகப் பேசிக் கொண்டே அவளது கைகளைப் பற்றி அங்கேயிருந்த கண்ணாடியருகே அழைத்துச் செல்ல, தேவி கண்களைத் திறக்கவேயில்லை. ஏசியிலும் கைகள் வியர்வையில் பிசுபிசுத்தன.

''மை டார்லிங்! கொஞ்சம் கண்ணைத் திறந்து பாரேன்.''

உடல் மெல்ல நடுங்க, தேவி மெதுவாகக் கண்களைத் திறந்தாள். தன் கண்முன் தெரிந்த உருவத்தைக் கண்டு ஆனந்தத்தில் அதிர்ந்து போய், கண்களில் நீர் பெருக, உருவம் மங்கலானது. வேகமாகத் திரும்பி டாக்டரை அணைத்துக் கொண்டு, விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

''அச்சச்சோ! என் ட்ரீட்மெண்ட் சரியில்லை போலவே. உன் முகம் அத்தனைக் கோரமாகவா இருக்கு? என் மேல் எனக்கிருந்த நம்பிக்கையே போச்சு!'' -டாக்டர் கேலி செய்தார்.

மிளகாய்ப் பழம் போல சிவந்த மூக்கை உறிஞ்சிக் கொண்டே, ''போங்க அங்கிள்! தேங்க்யூ. தேங்க்யூ சோ... சோ மச்! இது நான் தானா? நம்பவே முடியலை! எனக்கு இத்தனை அதிர்ஷ்டமா?''

''உனக்கா? உன் பிரபுவுக்குத் தான் அத்தனை

அதிர்ஷ்டமும். என்ன உன் சப்பை மூக்கு போயிடுச்சா? இனி, பிரபு உன்னை விட்டு ஒரு இஞ்ச் கூட நகர மாட்டார்.''

முகம் முழுக்கக் குங்குமமாய் சிவக்க, ''நான் எப்படி இருந்தாலும் அவருக்குப் பிடிக்கும். இனிமே, ட்ரீட்மெண்ட் அவ்வளவு தானா அங்கிள்?'' என்று கேட்டவளின் குரலிலிருந்த குழந்தைத்தனம் அவரை ஈர்க்க, அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டார்.

''யெஸ் மை சைல்ட்! என்னோட பார்ட் முடிஞ்சது. ஃபர்ஸ்ட் ஒரு பேஷண்டாத் தான் உன்னை மீட் பண்ணினேன். அப்ப நான், பிளாஸ்டிக் சர்ஜன்ற ஒரு டேலண்டட் ரோபோட்டா தான் இருந்தேன். ஆனா, உன்னோட பழக ஆரம்பிச்சதும், உன்னை மாதிரி ஒரு பெண் குழந்தை எனக்கு இல்லாமப் போச்சேன்னு ரொம்ப ஏங்கினேன். எனக்கு இரண்டும் பசங்க தான். அதனால, தேவி எனக்கு எப்பவுமே ஸ்பெஷல். என் பொண்ணு மாதிரி. எப்பவுமே நீ என் ஏஞ்சல். இனி தினம் உன்னைப் பார்க்க முடியாதுன்னு நினைச்சா தான் கஷ்டமா இருக்கு.

ஆனா, உன்னால எனக்குள்ள நிறைய மாற்றங்கள் வந்திருக்கு. இனிமே என் ப்ரொபஷன்ல ஒரு உயிர்ப்பு இருக்கும். ஆல் இஸ் வெல் தேவி! நீ எப்ப வேண்டுமானாலும், என்னைக் கூப்பிட்டுப் பேசலாம்... வந்து பார்க்கலாம். டேக் கேர் டார்லிங். உன் பிரபுவோட நூறு வருஷம் நீ சந்தோஷமா வாழணும். உன் முகத்தில... புருவத்துக்கு மேலே சின்னக்கோடு மாதிரி இருக்கிற தழும்பை, திருஷ்டிக்காக அப்படியே இருக்கட்டும்னு உன் தாத்தா சொன்னார். கெமோ ப்ளாஜ் அப்ளை பண்ணினா, உன் பேஸ் இன்னும் கிளியர் ஆயிடும்.



இங்கேயே இருக்கிற காஸ்மெடிக்ஸ் கிளினிக்ல இருந்து, என் டாக்டர் உன் முகத்தில மீதம் இருக்கிற சின்னச் சின்ன குறைகளைச் சரி செஞ்சிடுவார். அதன்பிறகு, என் ஏஞ்சலோட ரேஞ்சே தனி! நான் இப்ப லண்டன் போக வேண்டியிருக்கு. நிறைய சர்ஜரீஸ் பெண்டிங். திரும்பி வந்ததும், ஐ வில் மீட் த பிரின்சஸ்'' என்று அவள் கன்னத்தில் தட்டினார்.

ஜஸ்வந்த், இந்து, அவர் வீட்டில் சமையல் செய்யும் சமேலி மூவரும் தேவியைப் பார்த்து மலைத்துத் தான் போனார்கள். இந்து. ''தேவி! எங்க டாக்டர் ஒரு அற்புதத்தையே காட்டிட்டார். நீ மிஸ்.மெட்ராசா வருவேன்னு நினைச்சேன். ஆனா, உன்னைப் பிரபஞ்ச அழகியாக்கிட்டு போயிட்டார். ரொம்ப ரொம்ப அழகா இருக்க!'' என்று அவள் கன்னத்தில் முத்தமிட்டாள்.

ஜஸ்வந்த் சிஸ் மௌனமாக அவளருகில் வந்து அவள் உச்சந்தலையில் கைவைத்து, ''நல்லாயிருடா!'' என்றார். சமேலியோ தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்த, குட்டி விருந்தே தயார் செய்து விட்டாள்.

அதன் பிறகு காஸ்மெடிக் கிளினிக்கிலிருந்து டாக்டர்.வித்யா வந்தார். அறிவு சுடர் விடும் கண்கள், நீட்டான தோற்றம், மென்மையான பேச்சு என்று இருந்தவரிடம், தேவி ஈஸியாக ஒட்டிக் கொண்டாள். முப்பதுகளின் முடிவில் இருந்தவர் பேச ஆரம்பித்ததுமே, தேவிக்கு ஒரு வித நெருக்கம் தோன்றியது. தங்கு தடையின்றி வித்யாவிடம் தன் மனதை முழுவதுமாக திறந்து காட்டினாள்.

''வித்யாக்கா! எனக்கு... சிபி, தாத்தா என்னோட பிரபு

எல்லோரும் தான் என் உலகமா இருந்தாங்க. ஆனா, நான் அங்கே திரும்பிப் போனா அவங்க உயிருக்கே ஆபத்தாயிடுமேன்னு தான் எனக்குப் பயமா இருக்கு. ஆனா, அவங்களைப் பார்க்காம என்னால இருக்க முடியாது. என்ன செய்யறது?'' எனக் குரல் நடுங்க வினவினாள்.

அவளைத் தோளோடு அணைத்த வித்யா, ''தேவி ரொம்ப தைரியமான பொண்ணுன்னு இந்து சொன்னாளே. நீ பயப்படற அளவுக்கு ஒண்ணும் ஆகாது. கொலை, மிரட்டல் எல்லாம் பார்த்து மிரண்டு போற அளவுக்கு, உன் தாத்தாவும் சாதாரண ஆள் கிடையாது. அவரோட பலம் என்னன்னு, ஜோத்பூர் போனா நீயா தெரிஞ்சுக்குவ.

இதெல்லாம் ஒரு விஷயமே இல்லை. உன் பிரபு உன்னை விட்டிடுவாரா? தேவையில்லாத பயப்படறதை, முதல்ல நிறுத்து. அதுவுமில்லாம, உன்னோட தோற்றமே முழுசா மாறியிருக்கு. உன் பிரபுவுக்கே இப்ப உன்னைப் பார்த்தா அடையாளம் தெரியாது. நானும் இன்னும் சில மாற்றங்களைச் செய்யப் போறேன். நீ என்ன செய்யணும்னு, உன் தாத்தா உனக்கு சொல்வார். டோண்ட் வொர்ரி!''

அதன் பிறகு வித்யாவின் வேலை துவங்கியது. அவளது கருவண்டுக் கண்களுக்கு, நீல நிற கான்டாக்ட் லென்ஸ் வேண்டும் என்று தேவியே தேர்ந்தெடுத்தாள்.

''தேவி டியர்! உன் ஹேர் ரொம்ப அழகு தான். ஆனால், இத்தனை நீளமான கூந்தல், நீ தேர்ந்தெடுக்கப் போகும் ஆடைகளுக்குப் பொருந்தாது. கொஞ்சம் குறைத்திடலாம்... என்ன?''

வீட்டில் சுத்தமான தேங்காய் எண்ணெய் பூசி, பார்த்துப் பார்த்து பேணி வளர்த்த கேசத்தை பாதியாகக் குறைத்த



போது, மனம் வலித்தது. இழந்த கேசத்தை பத்திரப் படுத்தினாள். லேசாகப் பொன்னிறம் கலந்த ப்ரௌன் நிறக் கூந்தல் லேயர் லேயராக கட் செய்யப்பட்டு அவள் முதுகு வரை அலையாகப் படர்ந்து பரவியதே, புதிய அழகைத் தந்தது. மும்பையின் அதிநவீன கண்ணியமான ஆடைகள் அவளது வார்ட்ரோபில் குடியேறின. தேவி ப்யூட்டிஷியனின் கைவண்ணத்தில் புது மெருகுடன் ஜொலித்தாள்.

அலையலையாக காற்றில் மிதந்த பிரௌன் நிறக் கூந்தல், நீல நயனங்கள், மாசுமருவில்லாத பளிங்கு முகம், நளினமான நடை, சிறிதே மாறுபட்ட குரல்... என்று அவள் தோற்றமே முற்றிலும் மாறியிருந்தது. முறையான யோகா பயிற்சியும் ஆரோக்கியமான உணவு முறைகளும் அவள் உடலை மெலிய வைத்து சற்றே உயரமானவளாகக் காட்டியது. மும்பையின் மிக அழகான மாடல் போல புதிய ஜனனம் எடுத்தாள். ஆனாலும், உதட்டில் ஸ்டார் மச்சமும், கன்னத்தில் விழுந்த குழியும், அவளது பழைய தோற்றத்தின் மிச்சங்களாக அவளிடமே தங்கியிருந்தது.

இந்த இரண்டரை வருட இடைவிடாத சிகிச்சையின் பலனாக, விபத்தின் சுவடு கூட தெரியாதபடி மாறிப் போனாள். ஜஸ்வந்த் சிங்கிடம் இருந்த செல்வாக்கும், அளவற்ற செல்வமும் தேவிக்கு இதை சாத்தியமாக்கி யிருந்தது. சிகிச்சையின் போதே தேவியின் ஆர்வம் முழுக்கக் கட்டிடக் கலையில்தான் என்பதைப் புரிந்து கொண்ட ஜஸ்வந்த், அவள் எண்ணங்களைத் திசைதிருப்ப அதை ஒரு ஆயுதமாக்கினார். இன்டீரியர் டிசைனிங்கில் ஸ்பெஷலைஸ் செய்ய ஊக்குவித்தார். வீட்டிலேயே, அதற்கான முறையான பயிற்சி அளிக்கப்பட்டது.

ஒய்வு நேரங்களில் பல விதமான டிசைன்கள் அவள் கை வண்ணத்தில் உருவானது. விஷ்வா பில்டர்ஸில் துவங்கப்பட்டிருந்த ஷாப்பிங் மால் வேலையின் அனைத்து இன்டீரியர்சும், அவளது புதிய கற்பனையில் அழகான வடிவம் பெற்று பாதுகாக்கப்பட்டது. இடைவிடாத முறையான பயிற்சியும், தேவையான சான்றிதழ்களும் பெற்ற தேவி, இன்டீரியர் டெக்ரேஷன் துறையில் சாதிக்க தன் பெயரைப் பதிவு செய்தாள்.

மும்பையில் அவளது அனைத்து தேவைகளும் நிறைவேறிய பின், தன் தாத்தாவுடன் ஜோத்பூர் பயணமாள். அவளது படிப்பினாலும், திறமையாலும், தைரியமும், தன்னம்பிக்கையும் கூடிப் போக, புதிய தோற்றத்துடன் அந்த அரண்மனையில் காலெடுத்து வைத்தாள்.

## 19

**ஜோ**த்பூர் அரண்மனையின் வெளிப்புறத் தோற்றத்தி லேயே தேவி தன் மனதை இழந்தாள். அதன் பொலிவும், தோற்றமும், கம்பீரமும் தேவியை தன் வசமிழக்கச் செய்தது. சீருடையணிந்த பணியாளர்கள் இவர்கள் வரவுக்காக காத்திருந்தனர். சமேலி ஓடிச் சென்று ஆரத்தி சுற்றி நெற்றியில் திலகமிட்டு தேவியை வரவேற்றாள்.

தன் தாத்தாவின் கரம் பற்றி உள்ளே நுழைந்த தேவி, ஹாலில் நுழைந்ததும் பிரமித்துப் போனாள். ஒரு பெரிய மாநாடே நடத்தும் அளவில் பெரிதாயிருந்த ஹாலில்



பதித்திருந்த டைல்கள், அவள் இதுவரை பார்த்தேயிராத வண்ணங்களில் ஜொலித்தன. எங்கும், எதிலும் தூய்மை! ஹாலிலிருந்த தூண்களின் வேலைப்பாடு, ஹாலை அலங்கரித்த விலையுயர்ந்த சோபாக்கள், ஷாண்டிலியர்கள், மிதமான ஏ.சி, ஹாலிலிருந்து இருபுறமும் வளைந்து சென்ற சிகப்புக் கம்பளமிட்ட படிக்கட்டுகள்... என்று பார்க்கப் பார்க்க கண்கள் பூத்துப் போயின.

பல படங்களில் வரும் பிரம்மாண்டத்தை, சின்னதாக்கியிருந்தது இந்த அரண்மனை. அவளுக்கு, தான் தங்கியிருந்த மும்பை பங்களா ஞாபகம் வந்தது. இதோடு ஒப்பிடும்போது அதன் எளிமை அவள் கவனத்துக்கு வர, பேச்சிழந்தாள்.

''ராஜபரம்பரையைச் சேர்ந்த தன்னுடைய தாத்தா, எனக்காக எத்தனை எளிமையாக வந்து தங்கியிருந்தார். என்மேல் வைத்த பிரியம் தானே காரணம்?'' என்ற நினைவில் கண்கள் பனிக்க, அவரை அணைத்துக் கொண்டாள்.

''தாத்தா! எனக்காகத் தானே இத்தனை பெரிய இடத்தை விட்டுட்டு சிம்பிளா என் கூட இருந்தீங்க. உங்களை நான் ரொம்பவே சிரமப்பட...''

''வைக்கலை தேவிம்மா. எத்தனை வசதி இருந்தாலும், உன்னைப் பார்க்கிற வரை வறண்டு போன வெறுமையான வாழ்க்கையைத் தானே வாழ்ந்துகிட்டு இருந்தேன்? என்னோட பெரிய செல்வம், பொக்கிஷம், சந்தோஷம் எல்லாமே... நீதான் கண்ணு! நிம்மதியான தூக்கமே, உன்னைப் பார்த்த பிறகு தான் எனக்குக் கிடைச்சிருக்கு. அந்தஸ்தைத் தேடி நான் ஓடிய தெல்லாம் போதும். இனி

நீயும், சிபியும், உன் தாத்தாவோடு இங்கேயே வந்து என் கூடவே இருந்தா போதும்'' என்றவரின் முகத்தில் அத்தனை மகழ்ச்சி இருந்தது.

தேவியின் வரவிற்குப் பின் தான், இத்தனை வருடங்களாக எத்தனைச் சுகங்களைத் தான் இழந்திருக் கிறோம் என்பதை ஜஸ்வந்த் நினைத்துப் பார்ட்தார். தன் ஒரே மக்ளின் மீது வைத்த பாசம் உண்மையானதாக இருந்தால், அவளது சந்தோஷத் திற்காக, அவளது விருப்பப்படியே திருமணம் செய்து வைத்திருக்க வேண்டும்.

அப்படி நடந்திருந்தால், தன் மனைவியை இத்தனைச் சீக்கிரத்தில் இழந்திருக்க வேண்டியதில்லை. மருமகனிடம் நிம்மதியாக எல்லாப் பொறுப்பையும் ஒப்படைத்திருக் கலாம். பேரக் குழந்தைகளோடு ஆனந்தமானதொரு வாழ்வை வாழ்ந்திருக்கலாமே என்ற தவிப்பு, அவரை வாட்டியது. அதுவே தேவியன் மீது அபரிமிதமான பாசத்தைப் பொழிய வைத்தது. அதில், தேவியும் திக்குமுக்காடிப் போனாள்.

''மேரே பியாரி பச்சே! உனக்கு என்ன வேணும் சொல். இத்தனை வருஷங்களா உனக்குச் செய்யாததை எல்லாம், இப்பச் செய்யறேன். என்னால உனக்குத் திருப்பித் தர முடியாதது உன் அம்மா, அப்பா தான். வேற எதை வேண்டுமானாலும், நீ என்கிட்ட தாராளமா... தயங்காம கேள்; நான் செய்யறேன்!'' என்ற முதியவரின் குரலில், தேவி நெகிழ்ந்து போனாள்.

''உங்க பிரியம். அது மட்டும் எனக்குப் போதும் தாத்தா. ஓ.எம்.ஜி! என் அம்மா, அப்பா மட்டும் இல்ல... சிபி, தாத்தா, பிரபு இவங்களைப் பிரிஞ்சும் கூட சந்தோஷமா இருக்க, உங்க அன்பு மட்டும்தான் தாத்தா காரணம். இத்தனைப் பாசத்துக்கும் சிபி அண்ணாவும் உரிமை உள்ளவன். இந்த ரெண்டு வருஷமா, நான் அவங்களைப் பத்தி உங்ககிட்ட கேட்கவில்லை. அவங்களைப் பத்தி உங்களுக்குத் தெரியுமா?'' என்ற தேவியின் கண்கள் அவர் கூறப்போகும் பதிலுக்காக, ஆவலுடன் அவரையே பார்த்திருந்தன.



ஜஸ்வந்த் சிங் ஜோதா எல்லோரைப் பற்றிய விவரங்களை, அவ்வப்போது முழுதாக அறிந்து கொண்டிருந்தார். விக்ரம் மூலமாக, தேவையான தகவல்கள் வந்துகொண்டு தான் இருந்தன. ஆனால், தேவியிடம் அதைக் கூறாது விட்டிருந்தார்.

''தேவிம்மா! வர்ற சண்டே, விக்ரம் இங்கே வரப் போறான். அவன் வந்து... நீ கேட்கிற, கேட்க மறந்த அத்தனை விஷயங்களையும் சொல்வான். சரியா? இப்ப, இந்தத் தாத்தாவுக்குப் பசிக்குது. நம்ம பங்களாவில உன்னோட முதல் விருந்து ரெடி. போகலாமா?''

தன் அழகான பேத்தியை தோளில் கை போட்டு அழைத்துச் சென்று, கர்வத்தோடு தன் மக்களிடம் அறிமுகம் செய்தார். தேவி வந்ததையொட்டி அனைவருக்கும் மிகப் பெரிய விருந்தொன்று பின்புறமிருந்த மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வந்த அனைவரும் தாத்தாவிடம் காட்டிய பணிவையும் மரியாதையையும் கண்டு வியந்து போனாள். அதோடு, கள்ளங்கபடமில்லாமல் அவளிடம் வந்து வாழ்த்தி, அவள் அழகைப் பாராட்டியபோது கூச்சத்தில் சிவந்து போனாள்.

அன்றிரவு, ''தேவிம்மா! இந்த அறையில், உனக்கு எல்லா வசதியும் செய்து இருக்கு. வேற ஏதாவது தேவைன்னா சொல்லு. இது உன் அம்மா நந்தினி தேவியோட அறை.

அதைக் கலைக்காம அப்படியே வெச்சிருக்கேன். ரொம்ப டயர்டாயிட்ட.... போய்ப் படுடா. உன் உதவிக்கு சமேலி கூட இருப்பா. குட் நைட்!'' என்றார்.

அறைக்குள் நுழைந்ததும் தன் தாயின் கரங்களுக்குள் வந்து சேர்ந்த நிம்மதி. நந்தினி உபயோகித்த ஒவ்வொரு பொருளையும் ஆசையோடு வருடினாள்.

''அம்மா! இவ்வளவு பெரிய அந்தஸ்து, அதிகாரம், இளவரசி பட்டம்... எல்லாத்தையுமே அப்பாவுக்காக உதறித் தள்ளியிருக்கீங்க. அப்படீன்னா உங்களுக்கு, அப்பா இது எல்லாத்தையும் விட பெரிய பொக்கிஷம்னு தானே அர்த்தம்? நான் ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணியிருக்கேன். அதான், உங்க மகளா வந்து பிறந்திருக்கேன்! நம்ம வீட்டில அத்தனை வேலையையும், அப்பாவும், நீங்களுமா பகிர்ந்துக்குவீங்க. ச்சே!-ன்னு ஒரு நாள் கூட முகம் சுளிச்சதில்ல. அப்பா மேல நீங்க வைத்த காதல் பூரணமா ஜெயிச்சிருக்கு. அதுதான் உங்க ரெண்டு பேரையும் பிரிக்காம, ஒண்ணா கொண்டும் போயிடுச்சு.

அம்மா! நானும் என் பிரபு கூட அதே மாதிரி வாழணும். நீங்கதான் தெய்வமா இருந்து அதுக்கு வழிகாட்டணும் என்றவள், தன் தாயின் போட்டோவை மார்போடு அணைத்துக் கொண்டாள். கண்கள் சோர்ந்து போய் தாமாகவே உறக்கத்தை தழுவியது.

அன்றும் காலை எழுந்ததும், தன் தாயின் முகத்தில்தான் கண்விழித்தாள். ''குட் மார்னிங் மை ஸ்வீட் மா! ஐ லவ் யூ சோ மச்...!'' என்று மலர்ந்த முகத்தோடு அன்றைய நாளைத் துவங்கினாள்.

ஹாலில் நுழைந்ததும் அவளுக்கு முன்னரே தயாராகி



அமர்ந்திருந்த தாத்தா, ''குட்மார்னிங் குட்டிம்மா! நல்லா தூங்கினியா? சாப்பிடப் போகலாமா?'' என்று இருகரம் நீட்டி ஆவலோடு, அவளை அணைத்துக் கொண்டார்.

சுற்றிலும் பணியாளர்கள் புடைசூழ, நூறு பேர் சாதாரணமாக அமரக் கூடிய அந்த டைனிங் டேபிளில், தாத்தாவும், பேத்தியும் மட்டுமே உணவருந்தினர். நாம இன்னியிலிருந்து, இங்க சுற்றிப் பார்க்கப் போறோம். எங்கே போகணும்னு நீயே சொல்லு என்று ஊக்கப்படுத்தினார். அதன் பிறகு சலிக்கச் சலிக்க தாத்தாவுடன் ஊர் சுற்றினாள்.

அன்றைய தினம் தேவிக்கு மிக முக்கியமான நாளாக விடிந்தது. விக்ரம்சிங் சில மாதங்களுக்குப் பிறகு தேவியைப் பார்க்க வருவதாக இருந்தான். தேவி எழுந்ததுமே படபடப்பாக உணர்ந்தாள். குளித்துவிட்டு தன் அறையிலேயே காபியைப் பருகிக் கொண்டிருந்தபோது தாத்தாவிடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

''முன்னி! சீக்கிரமா ரெடியாகி என் ரூமுக்கு வாடா. உன் விக்ரம் பையா வந்தாச்சு. சுடச் சுட சென்னை நீயூஸ் ரெடி!''

பத்தே நிமிடங்களில் தாத்தாவின் அனுமதி பெற்று அவர் அறைக்குள் நுழைந்தபோது, தேவியின் கால்கள் துவண்டன. உள்ளே நுழைந்ததும் அவள் கண்கள் விக்ரமைத் தேடி அலைந்தது.

''குட் மார்னிங் தாத்தா!''

''வெரி குட் மார்னிங். இன்னிக்கு சௌத் இண்டியன் டிஃபன் தான். சமேலிக்கு நீயும், இந்துவும் நல்லா டிரெய்னிங் குடுத்திருக்கீங்க. நான் வாக்கிங் போன போதே வாசம் மூக்கை துளைச்சுது. வா முதல்ல டிஃபன்; அப்புறமா தான் எல்லாம்.''

''விக்ரம் அண்ணா?''

''அவன் ரெடியாகி ஹால்ல இருக்கான். வா!'' தேவியின் கைகள் டிபனை அளைந்தது. உணவு தொண்டையில் இறங்க மறுக்க, கண்களாலேயே கெஞ்சி உணவை மறுத்து விட்டு, ஜூஸ் மட்டும் குடித்து விட்டு எழுந்தாள்.

''நீ ஹால்ல விக்ரம் கூடப் பேசிகிட்டு இருடா. வர்றேன்! கால்கள் பின்ன ஹாலுக்குச் சென்றவளைப் பார்த்து, பேப்பர் படித்துக் கொண்டிருந்த விக்ரம் திகைத்துப் போனான். அவளை அடையாளம் காண முடியாமல் எழுந்து நின்றான்.

இதையறியாது தேவி அவனருகில் வந்து, ''அண்ணா! எப்படி இருக்கீங்க?'' என்றதும், அந்தத் திகைப்பு அதிர்ச்சியானது.

''நீ... நீ...ங்...க?''

இப்போதுதான் தன்னை அவருக்கு அடையாளமே தெரியவில்லை என்று புரிந்தது.

''அண்ணா! என்னைத் தெரியலையா? பூச்சாண்டி மாதிரி பேண்டேஜோட பார்த்தால் தான், என் முகம் தெரியுமா?''

''எங்க தேவிம்மாவா இது? அடையாளமே தெரியலை! ஏதோ ஷூட்டிங் நடக்குது. பாலிவுட் ஸ்டார் யாரோ வந்திருக்காங்கன்னு நெனைச்சுட்டேன்.''

முகம் வெட்கத்தில் சிவக்க, ''போங்கண்ணா! நான் சென்னையிலிருந்து வந்தபிறகு, ஒருதடவை தான் மும்பை வந்தீங்க. பிறகு ஏன் வரலை?'' என உரிமையாகக் கோபித்தாள்.

''எனக்குச் சென்னையில வேலை அதிகம்மா. கௌதம் சார் இந்த ஒன்றரை வருஷமா தான், பிசினசை ஒழுங்கா



கவனிக்கறார். அதுவரை சிபி சாரும், நானும் தான் சாரா மேடமோட ஹெல்ப்போட யூனிட்டை நடத்த வேண்டியிருந்தது. பாஸோட ப்ரண்ட் வருண் சார், டெக்னிகலா எல்லா ஹெல்ப்பும் செஞ்சார். விஷ்வா பில்டர்ஸ்ல, இப்ப நிறைய புது ப்ராஜொக்ட்ஸ் வந்து குவிஞ்சிருக்கு.''

''அண்ணா! தாத்தா எப்படி இருக்காங்க?''

''அவர் இருக்கார்... அவ்வளவு தான்! இப்ப அவரோட நடமாட்டமே முடங்கிப் போச்சு. பாவம்... உன் நினைப்பில அவர் பாதியா ஆயிட்டார். விஷ்வா சார், அவர் கூடவே இருக்கார்.''

காலச் சக்கரம் இரண்டு வருடங்கள் பின்னே பயணித்தது.

**கௌ**தமிடம் பேசிச் சென்ற சிபி, மறுநாளிலிருந்து சாராவுக்கு உதவியாக விஷ்வா பில்டர்ஸுக்குச் செல்ல ஆரம்பித்தான். வருண் சிபிக்கும் ப்ரண்ட் என்பதால், நல்ல புரிதலோடு வேலையைப் பகிர்ந்து கொண்டான். சிபி வந்தது, வருணுக்கும் உதவியாக இருந்தது.

''தேங்க்ஸ் சிபி! நீ என் வேலையைப் பாதியா குறைச்சிட்ட. பாவம்டா கௌதம்... அவனுக்கு இப்படி ஒரு இழப்பு வந்திருக்க வேண்டாம். உன் தங்கையோடு ரொம்ப ரொம்பச் சந்தோஷமா இருந்தான். அவனைச் சீக்கிரமா பழைய கௌதமா பார்க்கணும்டா.''

''ஆமாம் வருண். அவங்க அம்மா பத்தித் தெரிஞ்சதிலிருந்து, குடிக்க ஆரம்பிச்சுட்டான். தினமும் மதுவின் துணையில்லாம தூங்கறதில்ல. அவனோட தங்கை தான்யாதான் கொஞ்சம் கன்ட்ரோல் பண்ணி வெச்சிருக்கா.''

''நானும் அவனைப் போன வாரம் பார்த்துப் பேசினேன் சிபி. வேலையில் அவன் மனசைத் திருப்ப, என்னாலான எல்லா முயற்சியும் செய்யறேன். நீ அவனை விட்றாதடா... பார்த்துக்க!''

''கண்டிப்பா. அது என் கடமைடா. அவன் என் ஃப்ரண்ட் மட்டும் இல்லை; என் மச்சானும் கூட. அவனைத் திரும்ப நல்லபடியா மாத்தறது என் பொறுப்புடா.''

தினமும் இரண்டு வேளையும் கௌதமுடன் வந்து பேசிச் செல்வான். தான்யா கௌதமுக்குத் துணையாக அவனுடனே தங்கிக் கொண்டு, அவனை ஒரு தாயைப் போல கவனித்துக் கொண்டாள்.

சிபி கௌதமின் வீட்டுக்கு வரும் போதெல்லாம் தான்யாவின் பார்வை ஆவலோடு அவன் மீது படியும். அதைக் கண்டும் காணாமல் மாடியேறி கௌதமின் ரூமுக்குள் நுழைந்து விடுவான். அவளை உதாசீனப் படுத்துவது போல் நடந்து கொள்வது மனதை வலிக்கச் செய்தாலும், அதுவும் அவளது நன்மைக்காகத் தான் என்று, தன்னையே சமாதானப்படுத்திக் கொள்வான்.

காலையில் போதையின் பிடியிலிருந்து வெளிவந்து சுயநினைவுக்கு வந்ததும், கௌதம் தங்கையிடம் புலம்புவான். ''தன்னு! நான் ரொம்ப மோசம். என்னை விட்டுப் போயிடு. தினமும் நான் குடிக்கக் கூடாதுன்னு தான் நினைக்கிறேன். ஆனா, என் பார்பியோட பிரிவை என்னால தாங்க முடியலைடா. அதை மறக்கத் தான் குடிக்கிறேன். ஆனா... முடியலை!''

''அண்ணா! இந்தப் பழக்கம் மட்டும் வேண்டாம். யாருக்குத் தான் துயரம் இல்லைன்னு சொல்லுங்க.



தாத்தாவுக்கு... இந்த வயசில தேவியோட மறைவை தாங்கிக்கிற தெம்பிருக்கா? அவர் மனசு ஒடிஞ்சு போய் கிடக்கிறார். அவருக்கு இல்லாத வருத்தமா... சிபிக்கு, அவர் தங்கை மேல பாசம் இல்லாமலா போச்சு? உங்களுக்காக, தன்னோட அத்தனைச் சோகத்தையும் மறைச்சு வச்சிருக்கார். உங்க பிசினஸ்ல எந்த தொய்வும் வரக்கூடாதுன்னு, நேரம் காலம் பார்க்காம உழைக்கிறார். இதெல்லாம், உங்க கண்ணுக்குத் தெரியலையா! ஏண்ணா இப்படி?

பெரியம்மா, தன் அந்தஸ்தைக் காரணம் காட்டி தேவியை மிரட்டியதற்கு, நீங்க பதிலடி கொடுக்க வேண்டாமா? அதைவிட அதிகமா தொழில்ல முன்னேறிக் காட்டுங்க. அதுதான் தேவிக்காக நீங்க செய்ய வேண்டிய கடமை. பிசினஸ்ல உங்களை மிஞ்ச யாருமில்லைன்னு அவங்களுக்குப் புரிய வையுங்க. உங்களைக் கெஞ்சிக் கேட்கறேன். இந்தப் பழக்கத்தை விட்டிடுங்க. உங்க உடம்பு பாதியா மெலிஞ்சு போயிடுச்சு. உங்களைப் பார்த்து பெரியப்பா ரொம்ப வேதனைப்படறார். அண்ணா ப்ளீஸ்! நான் சொல்றதைக் கேளுங்க.'' என்று கண்ணீர் மல்க வேண்டினாள்.

அவளையே விழியகலாது பார்த்து விட்டு, கனிவோடு அவள் தலையை வருடினான். ''புரிஞ்சிருச்சுடா. இனிமே நான் என்ன பண்ணணும்னு புரிஞ்சிடுச்சு. இனிமே உன் அண்ணன் குடிக்க மாட்டான். நாளையிலிருந்து நான் ஆபீஸ் போறேன். டிஃப்பன் எடுத்து வைம்மா. நான் குளிச்சிட்டு வந்திடறேன்.''

''தேங்க்ஸ் அண்ணா!'' என்ற தான்யா, முகம் மலர சமையலறைக்கு விரைந்தாள்.

அன்று முதல் கௌதம் மாறிப் போனான். தன் பார்பியின் இழப்பையே உரமாக்கி, வெறியுடன் தன்னைப் பிசினஸில் ஈடுபடுத்திக் கொண்டான். உற்ற தோழமையும் கை கொடுக்க, வெற்றிகள் குவிந்தது.

சிபியின் ஒத்துழைப்போடு சிகரங்களைத் தொட முடிந்த கௌதமுக்கு, மனம் முழுக்க வெறுமையாகத் தான் இருந்தது. தொடர்ந்து பல கான்ட்ராக்டுகளில் சைன் பண்ணினான். வாரம் ஒரு முறை தாத்தாவையும், விஸ்வநாதனையும் சென்று பார்ப்பான். தாத்தாவின் மடியில் தலைவைத்து ஆறுதல் தேடுவான்.

தாத்தாவும் குச்சியாய் மெலிந்த கையினால் கௌதமின் முதுகை வருடி, ''கௌதம்! மனசைத் தேத்திக்கப்பா. நடந்ததெல்லாம் ஏதோ ஒரு காரணத்துக்காகத் தான். பிறப்பும், இறப்பும் பிரம்ம ரகசியம். அதைப் பத்தி யோசிக்கவே கூடாது. இந்த உலகத்தில நாம தருமர் மாதிரி, அடுத்தவங்ககிட்ட இருக்கிற நல்ல விஷயங்களை மட்டும் எடுத்துக்கணும். மத்ததை ஒதுக்கித் தள்ளிடணும். தோல்வியும், துயரமுமா இருக்கிறவ னுக்கு, இருபது வயசிலேயே உடம்பு கனக்கும். பாரம் மனசில் தான் இருக்கு... வயசில இல்லை!

அதுல தூய எண்ணங்களையும், சந்தோஷங்களையும் மட்டும் நிரப்பி வைத்திருந்தா, உடம்பும் லேசாகி... காத்து மாதிரி பறக்கும். மனதை எதுக்கும் தளர விடாதே கௌதம். இனி உன் வாழக்கையில நடக்கறது, நல்லதா நடக்கும்.

''பார்பி மட்டும்தான் தாத்தா என் வாழ்க்கை. அதையே இழந்துட்டேன்... இனி என்ன இருக்கு? இனி என் வாழ்க்கையில் நல்லதா நடக்க எதுவும் இல்லை.''



பதில் பேசாது அவனை அணைத்துக் கொள்வார். மேலும் ஆறு மாதங்கள் கடந்தன. தான்யாவின் பெற்றோர் விஸ்வநாதனை அணுகி அவள் திருமணம் பற்றி பேசினர்.

விஸ்வநாதன், ''சிபி! என் தங்கை தான்யாவுக்கும், உனக்கும் சீக்கிரமா திருமணத்தை முடிக்க நினைக்கிறேன். ஐயாகிட்டப் பேசிட்டேன். அவருக்கு சம்மதம் தான். சீக்கிரமா, அடுத்து முதல்ல வர்ற முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை வச்சுக்கலாம். என்ன சொல்ற? என்றார்.

''மாமா! என்ன சொல்றீங்க? நான் தான்யா மேல உயிரையே வெச்சிருக்கேன். ஆனா, என் தங்கையை இழந்த உடனேயே திருமண வாழ்க்கைக்கு நான் தயாரா இல்லை. இன்னும் இரண்டு வருஷம் போகட்டும்.''

''இரண்டு வருஷமா? என் தம்பி உடனே திருமணம் என்கிறானே?''

''சாரி மாமா. என்னால முடியாது. அவர் கேட்கறதிலயும் நியாயம் இருக்கு. எனக்காக தான்யா காத்திருக்க வேண்டாம். வேற நல்ல வரனாய்ப் பார்த்து முடிச்சிடுங்க. எனக்குக் கல்யாணமே வேண்டாம். நானும் அவகிட்டப் பேசறேன்.''

கௌதம் குளித்துக் கொண்டிருக்க, தான்யா சிபியிடம் காபியை நீட்டினாள்.

''தேங்க்ஸ்.''

''ஏன் மாமா இப்பவெல்லாம்... என்கிட்டயிருந்தது விலகிப் போறீங்க? நான் என்ன தப்பு செஞ்சேன்?''

''நீ ஒரு தப்பும் செய்யலை. எல்லாம் என் தலையெழுத்து! உனக்கு... உன் வீட்ல மாப்பிள்ளை பார்க்கப் போறாங்க. நீ எந்த மறுப்பும் சொல்லாம ஒத்துக்க! உன் லைஃபை பாழ் படுத்திக்காதே!''

''மாமா!'' அதிர்ந்தவள் விழிகளை காணும் தைரியமின்றி, ''இனி மாமான்னு கூப்பிடாதே தனு. அந்தத் தகுதி எனக்கில்லை.''

''நீங்க எதுக்குச் சொல்றீங்கன்னு புரியது மாமா! ஆனா, நீங்க, என் கழுத்தில் ஒரு மஞ்சள் கயிரை மட்டும் கட்டுங்க. வேற எதுவும் வேண்டாம். உங்க உரிமைக்காரியா, உங்க கூட இருந்தாலே போதும்.''

பதில் பேசாமல் எழுந்து மாடிக்குச் சென்று விட்டான். இவர்கள் பேசுவதை முழுவதுமாகக் கேட்ட கௌதம், சிபி சென்ற பின், ''தன்னு! அழாதேம்மா. அவன் மடையன். புரியாமப் பேசறான். இத்தனை நாளா என்னைப் பத்தி மட்டுமே நினைச்சுகிட்டு, முட்டாளா இருந்திருக்கேன். என் தங்கையை மறந்திட்டேன். சிபிகிட்ட நான் பேசறேன். உன் மனசுக்குப் பிடித்த வாழ்க்கைதான், உனக்குக் கிடைக்கும். சிபிதான் உன் புருஷன்!''

இரவு வீட்டுக்கு வந்தவனிடம் சிபி- தான்யா திருமணம் பற்றி வலியுறுத்திப் பேசினான். வெகு நேர விவாதத்துக்குப் பிறகு, ''சரிடா! உனக்காக ஒத்துக்கறேன். ஆனா, அதுக்குப் பதிலா நீயும் என்கிட்ட ஒரு ப்ராமிஸ் பண்ணித் தரணும். என் ப்ரண்டோ லைப் இதோட முடியக்கூடாது. வேற கல்யாணம் பண்ண, நீயும் சம்மதிக்கணும். அப்பதான் நீ சொல்றதைக் கன்சிடர் பண்ணுவேன். நானே என் தங்கை மாதிரி ஒருத்தியை, உன் முன்னால் நிறுத்தறேன்.''

முதலில் தான்யாவின் வாழ்வு மலர வேண்டும் என்பதற்காக, கௌதம் தன் மனதை மறைத்து, ''என் பார்பி மாதிரி பொண்ணா? அவளே மறுபடி பிறந்து வந்தா-தான்டா ஆச்சு. தான்யாவுக்காக நீ சொல்றதை



ஏத்துக்கறேன். ஆனா, என் மனது இவதான் என் துணைன்னு சொல்லணும். எனக்குப் பிடிக்கணும். அப்ப... என் பார்பி மேல ப்ராமிசா, நானே சம்மதம் சொல்வேன். அதுவரை யாரும் இது பத்திப் பேசவோ... கம்பெல் பண்ணவோ கூடாது!'' என்ற சிபி, அரை மனதாகச் சம்மதித்தான்.

பத்மினி எளிதில் சம்மதிக்கவில்லை. தான்யாவின் பெற்றோரிடம் தன் எதிர்ப்பைத் தெரிவித்தாள். கௌதம்தான் எல்லாரிடமும் பேசி திருமணத்தை முடிவு செய்தான். விஸ்வநாதனிடம், ''அப்பா! அவங்களை இதில தலையிட வேண்டாம்னு சொல்லுங்க. இது என் தங்கையோட வாழ்க்கை. அதிலும் புகுந்து... அவ லைஃபையும் நாசம் பண்ண நினைச்சா... நான் சும்மா இருக்க மாட்டேன்!'' என ஆவேசமாகப் பேசியவனை ஆறுதல்படுத்தினார்.

சிபி-தான்யா திருமணம் வெகு எளிமையாக எந்த ஆடம்பரமும் இல்லாமல் அமைதியாக நடந்து முடிந்தது. அவர்களை சிபியின் வீட்டில் விட்டுவிட்டு தன் வீட்டுக்கு வந்த பின், தனிமை அவனைக் கொன்று தின்றது. தன் படுக்கையறையிலிருந்த தேவியின் புடவையைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு, கட்டிலில் சாய்ந்து கண்களை மூடினான்.

மூடிய இமையை மீறி கண்ணீர் வழிய, ''எனக்கேன் இத்தனைப் பெரிய தண்டனை? நான் என்ன பாவம் செய்தேன்? சின்னஞ்சிறு பூப் போல, என் பார்பி நெருப்பினூடே எத்தனைத் துடித்திருப்பாள்? காலம் முழுக்க என்னைக் கண்ணீர் சிந்த விட்டு விட்டாயே கண்ணம்மா! நீயின்றி இந்த உலகத்தில்... எனக்கு மட்டும் என்ன இருக்கு?

இன்று உன் அண்ணன் திருமணம்... உன் உயிர்த் தோழியோடு! நீயிருந்தால் இத்தனை சிம்பிளாகவா நடந்திருக்குமா கண்ணம்மா? சீக்கிரமா நானும் உன்னைப் பார்க்க வந்திடறேன். ஐ லவ் யூ பார்பி!

## 20

பூஜைறையில் விளக்கேற்றிய தான்யா முகம் முழுக்க நிம்மதி பரவ, ''தெய்வங்கள் சாட்சியா, நான் இந்த வீட்டுக்கு வாழ வந்திருக்கேன். என்னால இந்த வீட்டில சந்தோஷம் திரும்ப வரணும். அதுக்குத் துணையாக, நீங்க எப்பவும் என் கூட இருக்கணும். என் மாமா முகத்தில் சிரிப்பைத் திரும்பக் கொண்டு வரணும்!'' என மனமுருக வேண்டினாள்.

''நீ நெனச்சதெல்லாம் கண்டிப்பா நடக்கும் தன்னு. உன்னால சிபி வாழ்வு மலரணும்!'' என்று அவளை ஆசீர்வதித்தார் தாத்தா.

அன்று இரவு, ''தனு! இது நீயா விரும்பித் தேர்ந்தெடுத்த வாழ்க்கைதான் இது. நான் இப்படியேதான் இருப்பேன். என்னைத் தப்பு சொல்லாதே! பெட்ல வேணா... ஒரு ஓரமா நீ படுத்துக்கலாம்'' என்று சிபி சொல்ல, தான்யாவுக்குச் சிரிப்பு பொங்கியது.

''ஒகே பாஸ்! உங்க தாராள மனசுக்கு ரொம்ப நன்றி. உங்க தேவையையெல்லாம் நிறைவேத்திட்டு, நான் என் ப்ரண்ட் ரூமிலேயே படுத்துக்கறேன். வீணா எதுக்கு வம்பு?''

சிபி திடுக்கிட்டான். தான்யா தன்னுடன் சுற்றிக் கொண்டு இருப்பதே சுகமளித்தது. மனதுக்கு இதமாகவும் இருந்தது. அவள் வேறு ரூமில் படுப்பதா?



''ஏய்! என்ன நினைச்சுகிட்டு இருக்க?'' மாமா, தாத்தாவுக்குத் தெரிஞ்சு என் பேரைக் கெடுக்கவா? ஒழுங்கு மரியாதையா, இங்கேயே படு! ம்'' என்று உறுமிவிட்டுப் படுத்து, கண்களை மூடினான். அவள் அருகில் படுக்க, மல்லிகையின் மனம் கமழ அவள் அருகாமை தந்த நிம்மதியில் ஆழ்ந்து உறங்கினான்.

தான்யாவின் கரம் பற்றிய சிபியின் வாழ்வில் மெல்ல வசந்தம் வீசத் தொடங்கியது.தான்யாவின் உண்மையான நேசம் தாத்தாவையும் தேற்றி, மெல்ல இயல்பு நிலைக்குத் திருப்பியது. கௌதமும், தான்யாவுக்காக தினமும் சிபியின் வீட்டுக்குச் சென்று வர ஆரம்பித்தான். தேவி ஓடியாடிய இடங்களில் சுற்றித் திரிந்து மன ஆறுதலைத் தேடினான். அங்கிருந்த தோட்டத்தில் சென்று அமர்வது, அவனது விருப்பமான வழக்கமாக மாறியது.

தான்யாவின் பொறுமையும், அன்பும் சிபியின் மனதை மெல்ல மாற்றியது. ஒரு காதல் கணவனாக தன் உரிமையை நிலைநாட்டினான். தான்யா கௌதமை மாமாவாக்கினாள். வீட்டில் ஆனந்தம் மெல்ல அடியெடுத்து வைத்தது. லேபர் பெயின் எடுத்து, தான்யாவை ஆஸ்பிட்டலில் சேர்த்தார்கள். சிபியை விட அதிக டென்ஷனோடு, கௌதம்தான் குறுக்கும், நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான்.

''ஏன் சிபி! நல்லபடியா குழந்தை பிறந்ததடும் தானே? கண்டிப்பா என் பார்பி தான் எனக்குக் கிடைப்பா பாரு. டாக்டர் ஏன் இன்னும் வெளியே வரலை?''

''கௌதம்! அமைதியா இருடா. குழந்தை பிறந்ததும் அவர்களே வெளியே வருவாங்க.''

சொர்க்க வாசல் திறப்பது போல கதவு திறந்தது. வெண்ணிறத் துவாலையில் குண்டு கன்னங்களும், கருவிழிகளும் அடர்ந்த கேசமும், ரோஜா இதழ்களுமாகக் குழந்தையை ஏந்தி வந்த டாக்டரை... தேவதூதனைப் போலப் பார்த்த கௌதம், இரு கைகளையும் நீட்டி கோவில் பிரசாதத்தை வாங்குவது போல பத்திரமாகக் குழந்தையை அள்ளிக் கொண்டான்.

அவன் கைகளில் ஏறியதுமே, உறக்கத்திலேயே தன் செப்பு இதழ்களை விரித்து அழகாகப் புன்னகைத்த அந்த மலரைப் பார்த்தவனது கண்கள் பொங்கியது. தன் பார்பி தேவதையைப் போலவே உதட்டில் ஸ்டார் மச்சத்துடன், குட்டி ரோஜாவாக அவர்களின் தோட்டத்தில் மலர்ந்திருந்தாள்.

டாக்டர், ''சிபி! வாழ்த்துக்கள். உங்க வீட்டுக்கு மகாலட்சுமி வந்து சேர்ந்திருக்கா.''

''தான்யா?''

''மயக்கம் தெளியலை. இன்னும் அரைமணியில் ரூமுக்கு ஷிப்ட் பண்ணிடுவோம். போய்ப் பார்க்கலாம். அவங்களும் நல்லா இருக்காங்க.''

பிஞ்சு பாதங்களில் விரலைத் தொட்டு முத்தமிட்ட கௌதம், ''பாருடா சிபி! என் பார்பி என்கிட்டயே வந்துட்டா. இனிமே நான் எதுக்குமே கவலைப்படமாட்டேன்டா. எனக்கு இவ மட்டும் போதும்!'' உணர்ச்சி வயப்பட்டு குழந்தையை அணைத்துக் கொண்ட கௌதமைப் பார்த்து, சிபியின் கண்களும் கலங்கின.

''இந்தாடா ஸ்வீட். இனிமேலாவது நீ சந்தோஷமா இருந்தா, அதுவே போதும். உன்னோட வேதனையைத் தீர்க்கவே, என் தங்கையே திரும்ப உன் கையில் கிடைச்சிருக்கா. இனி, இவ உன் பொறுப்பு.'' கௌதமின் தோள்களை அணைத்து, குனிந்து தன் செல்ல மகளை முத்தமிட்டான்.



தான்யாவை தனியறைக்கு அழைத்து வந்ததும், அவளது நெற்றியில் இதழ் பதித்து, ''தேங்க்ஸ்டி கண்ணம்மா. வலியில ரொம்ப கஷ்டப்பட்டுட்ட. உன்னைத் திரும்ப பார்க்கிறவரை, என் உயிரே என்கிட்ட இல்லை. நம்ம பொண்ணு இந்த உலகத்தைப் பார்த்ததுமே, கௌதமை மாத்திட்டா. அவன் முகத்தில் பார்... எத்தனைச் சந்தோஷம்? இது என்னிக்கும் நிலைச்சிருக்கணும்டா. தனு! நம்ம என் மகளைப் பார்த்தியா. அப்படியே தேவி தான்!'' கன்னத்தில் விழற குழியும்... உதட்டு மச்சமும்! தேவிம்மா பிறந்தபோது தாத்தா என்னை உட்காரச் சொல்லி, மடியில் அவளை வைத்தார்கள். அந்த ஞாபகம் தான் வருது. நம்ம பாப்பா... அச்சு அசல் அதே மாதிரி இருக்கா.'' தான்யா அவன் கைகளைப் பற்றி கன்னத்தில் பதிக்க அயாவில் கண்கள் தாமாக மூடிக் கொண்டன. உதட்டில் மட்டும் மாறாத புன்னகை.

வீட்டுக்கு வந்ததும் குழந்தையின் அருகில் பொழுதைக் கழிப்பதே கௌதமின் முழு நேர வேலையானது. தேவியிடம் சொன்னது போல ''மதுமதி'' என்று பெயரிட்டு சீராட்டினான். குழந்தைக்கு பால் புகட்டும் நேரம் தவிர, அவன் கைகளிலேயே வளர்ந்தாள் மதுமதி. கௌதமின் உலகமே மது தான். ஆபிஸ் நேரம் போக, நாள் முழுதும் குழந்தையுடனே கழித்தான்.

''தன்னு! பாப்பாவுக்கு ட்ராப்ஸ் குடுக்கணும். எடு!''

''சிபி. டயப்பர் எடுத்துக் குடுடா.''

''தாத்தா! குட்டிம்மா தூக்கத்தில கூட என்ன அழகா சிரிக்கிறா பாருங்க. அப்படியே என் பார்பி தான்.''

''மதுக்குட்டி! மாமா கையைக் கெட்டியா பிடிச்சுகிட்டயா? மாமா உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன்டா.''

''டேய் சிபி! அந்தக் கேமிராவை எடு. என்னோட மது குப்புற விழறா.''

''தன்னும்மா! வீட்ட நல்லா துடைக்கணும். பாப்பா கீழே கிடக்கிறதை வாயில் போடப் பாக்கறா. என்ன அழகா தவழறா பாரு.''

''மது டார்லிங்! மாமா கையைப் பிடிச்சு நடங்க பார்க்லாம். குட் கேர்ள்.''

''இந்தக் குட்டி சைக்கிள் என் செல்லக் குட்டிம்மாவுக்கு. மாமா ஒட்டக் கத்துத் தரேன் என்ன?''

''சிபி! டிபனை என்கிட்டக் குடுடா. செல்லம், நான் ஊட்டுனா தான் ஒழுங்கா சாப்பிடுவா. நீ போய், உன் வேலையைப் பாரு.''

''தன்னு! இங்கே ஓடி வாயேன். என் தங்கம்... என்னை மாமான்னு கூப்பிடறா பாரு! அம்மா, அப்பா சொல்றதுக்கு முன்னால, மாமான்னு சொல்லிட்டா... என் பட்டுக்குட்டி. என் பார்பி!''

''தன்னு! டிபனைத் தட்டில் போட்டு கையில் குடு. நான் இங்கேயே சாப்பிடறேன். என் மடியில் மது நல்லா தூங்கிட்டா... அசைஞ்சா எழுந்திடுவா. இன்னிக்குத் தோட்டத்தில் செம ஒட்டம்... சரியான வாலு!''



''சிபி! நானும் குட்டியும் காரில் ரவுண்ட் போறோம். தேடாதே.''

கௌதமின் உலகமே மது தான். கொஞ்சம் நடக்கத் துவங்கியதும், அவளைத் தான் போகுமிடமெல்லாம் தூக்கிக் கொண்டே திரிந்தான். மதுமதியின் வரவிற்குப் பிறகு, வீட்டின் சோகம் புறந்தள்ளப்பட்டு, குழந்தையின் மழலை சங்கீதமாய் வீட்டையே நிறைத்தது. பழைய கௌதமை மதுமதி மீட்டெடுத்தாள்.

கௌதமின் சந்தோஷம் பார்த்து தான்யா, ''அண்ணா! உன் வாழ்க்கையைச் சீர் செய்ய வேண்டிய கடமை, எங்களுக்கும் இருக்கு! ஒரு முறையாவது உன் திருமணம் பற்றி யோசிக்கக் கூடாதா? ப்ளீஸ்! நீயும் சந்தோஷமா லைப்ல செட்டிலாகணுங்கற ஆசை, எங்களுக்கும் இருக்காதா? நீ சரின்னு சொன்னா, நான் மீதியைப் பார்த்துக்கறேன். உனக்குப் புடிச்ச மாதிரி ஒரு பொண்ணை...''

''தன்னும்மா! என் லைப் முழுக்க நிம்மதியா சந்தோஷமா இருக்கத்தான், நீங்க வரம் குடுத்த மாதிரி மதுவை என்கிட்ட கொடுத்திருக்கீங்க. என் வாழ்க்கை இப்ப அடிக்கரும்பாய் இனிக்குது. இதுக்கு மேல என்ன தேவை? மனம், நிறைவா இருக்கும்மா.''

''இனிமே எந்தப் பொண்ணும் என் மனசுக்கு நெருக்கமா வரவே முடியாது. இப்ப நான் சந்தோஷமா இல்லைன்னு, யார் சொன்னா? என் பார்பி என் கூடவே தான் இருக்கா... என் சொர்க்கமா! இது, சொன்னாப் புரியாது. ஐயாம் வெரி வெரி ஹேப்பி. என்னைப் பற்றி கவலைப்படாதே''

எங்களுக்குப் பொண்ணு பிறந்திருந்தா, நம்ம மதுபோல் தான் இருப்பா. இப்பவும் அவளை என் மகளா தான் நினைக்கிறேன். எனக்கு இந்த லைஃபே போதும். இந்தப் பேச்சை இத்தோட விடு. இல்லைன்னா... நான் வேற மதுவைத் தேடிப் போக வேண்டியிருக்கும்.

உனக்கு இங்க என்ன வேலை? கிளம்பு. என் பார்பி எழுந்ததும், நாங்க இன்னிக்குச் சினிமாக்குப் போகப் போறோம். கோச்சடையான் எங்களை டிஸ்டர்ப் பண்ணாதே. சிபி இன்னும் வரலையா? அவனை நேரா இங்க வந்து, உன்னைக் கூட்டிட்டுப் போகச் சொல்றேன். நீ வீடு பூட்டி சாவியை எடுத்துட்டுப் போயிடு. என்கிட்ட வேற சாவி இருக்கு. மது இன்னிக்கு என்கூடவே படுத்துக்குவா. நாளைக்கு சண்டே தானே? நானே காலையில் அங்க வந்திடறேன்.''

மது எழுந்ததும் அவளை வாரி அணைத்து முத்தமிட்டு, ''என் செல்லம்மா... வேற டிரஸ் போட்டுக்கலாமா? மாமாவும், நீயும் ஒரே கலர் டிரஸ். சினிமாவுக்கு ரெடியா... போகலாமா?'' அவளைக் காரில் அமர வைத்து சீட் பெல்ட் போட்டு விட்டு, மறுபறம் வந்து காரைக் கிளப்பினான்.

''மதுக்குட்டி! அம்மாவுக்கு பை சொல்லுடா. போனாப் போகுதுன்னு ஒரே ஒரு பிளையிங் கிஸ் குடுத்துடு.'' தான்யா அவர்களை வழியனுப்பி விட்டு ஒரு பெருமூச்சோடு வீட்டை ஒழுங்குபடுத்த ஆரம்பித்தாள்.

விக்ரம் தனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லி முடித்ததும், ஒரு வார்த்தை கூட பேச முடியாத அளவுக்கு தேவி உறைந்து போயிருந்தாள்.

தன்னைப் பிரிந்து தன் சொந்தங்கள் படும் துயரம்



கண்டு நெகிழ்ச்சி, பிரபுவைப் பிரிந்து ஏக்கம், சிபி-தான்யா திருமணம் புரிந்த மகிழ்ச்சி, தாத்தாவைப் பார்க்க வேண்டுமென்ற தவிப்பு எனப் பலவிதமான உணர்ச்சிகளால் சிக்குண்டு தவித்தாள். தாத்தாவிடம் கண்களாலேயே அனுமதி பெற்று அறைக்குள் நுழைந்தாள்.

தலையணையில் முகம் புதைத்து, தன் துயரமெல்லாம் பீறிட்டுக் கிளம்ப, ஆற்றுவாறும் தேற்றுவாறும் இன்றி கதறி அழ ஆரம்பித்தாள். தன் மனதை அழுத்திய பாரமெல்லாம் கண்ணீராய்க் கரைய, தன் இழப்பை எண்ணி வாய்விட்டு அழுதாள். கண்களும் மனமும் சோர்ந்து போய் உடல் தளர அப்படியே உறக்கத்தைத் தழுவினாள்.

ஐஸ்வந்த் சிங் அவளை அழவிட்டு விட்டு அமைதியாக அமர்ந்து விட்டார். அப்போது தான் அவளது மனபாரம் குறையும் என்பதே அவர் கணிப்பு. அதே போல தூங்கி எழுந்ததும் மனம் லேசாக, தேவி தன் நிலை கண்டு வெட்கினாள். மாலை நான்கு மணியாகியிருந்தது. ஐயோ! மதிய உணவு நேரம் தாண்டி விட்டதே. தாத்தா என்ன செய்தாரோ? என்னை விட்டுவிட்டு ஒரு நாள் கூட சாப்பிடமாட்டாரே என்று பதறிப் போய் வெளியே ஓடி வந்தாள். ஐஸ்வந்த் சிங் சோபாவில் கண்மூடி சாய்ந்திருந்தார்.

கீழே அமர்ந்து அவர் மடியில் தலை சாய்த்து, ''சாரி தாத்தா! தூங்கிட்டேன். லஞ்ச் எத்தனை மணிக்குச் சாப்பீட்டீங்க?''

அவளின் ஓய்ந்து போன தோற்றம் பார்த்து உருகி, ''உன்னை விட்டுட்டு நான் எப்ப பேட்டா சாப்பிட்டிருக்கேன்? என் செல்லப் பேத்தி பட்டினி கிடக்கும்

போது, எனக்குச் சாப்பாடு உள்ளே இறங்குமா? ஆனா, எனக்கு சுகர் இருக்கே பேட்டா. அதனால, உன்னை விட்டுட்டு, நான் ஜூஸ் மட்டும் குடிச்சேன். பசிக்குதுடா... சாப்பிடலாமா?'' வெள்ளையாய்ச் சிரித்தவரின் கால்களைக் கட்டிக் கொண்டாள்.

''என்னால எல்லாருக்கும் ரொம்பக் கஷ்டம் இல்ல தாத்தா? அண்ணாவுக்கு மேரேஜ் ஆனது ரொம்பச் சந்தோஷமா இருக்கு. எங்க தன்னுவே ரொம்பக் குறும்பு. அவளுக்கு ஒரு குட்டிப்பாப்பான்னா, நம்பவே முடியலை. நான் இருக்கும் போதே என் அண்ணாவை ரொம்ப ஆட்டி வைச்சா. தாத்தா பத்திக் கேட்டதும்தான் நிம்மதியா இருக்கு. என் ப்ளேஸ்ல இருந்து, கண்டிப்பா எல்லாரையும் நல்லா பார்த்துக்குவா.''

என் பிரபுதான் பாப்பாவக்கு மதுமதின்னு பேர் செலக்ட் பண்ணியிருப்பார். எங்க குழந்தைக்கு நாங்க வைக்க நினைச்ச பேர். ம்! பாப்பா போட்டோ விக்ரம் அண்ணா கொண்டு வந்தாங்களா? மதுக்குட்டி என்னை மாதிரி தான் இருக்காளாம். சர்ப்ரைஸ் இல்ல? பிரபு மட்டும்... என் பிரபு மட்டும்... தனியா இருப்பார். பாவம் இல்ல தாத்தா?''

அவள் தலையை வருடி, ''அழாதே முன்னி. சரி பண்ணிடலாம். உனக்கு அவங்களைப் பார்க்கப் போகணும் தானே?'' என்றவரின் விழிகளில் தெரிந்த ஏக்கம், தேவியை இல்லையென்று தலையாட்ட வைத்தது.

ஆனாலும், அவள் மனம் புரிந்தவராய், ''புரியது கண்ணு. போகலாம்... இரண்டு பேரும். சிபியையும் பார்க்கணும். இத்தனை பிசினஸும் அவன் வந்துதான் நடத்தணும். அவனைப் பேசிச் சரிக் கட்டணும். உன்னை,



உன் பிரபு கூட சேர்த்து வைக்கணும். என் பேத்தி அழுமூஞ்சியா இருந்தா, நல்லாவே இல்லை!'' பேத்தியைப் பிரியப் போகும் சோகம் அவர் குரலில் தெரிய, அவரை அணைத்துக் கொண்டாள் அவள்.

''தாத்தா! இப்ப எதுவும் முடிவு பண்ண வேண்டாம். நான் யோசிக்கணும். ப்ளீஸ்! எனக்கு டைம் வேணும்.''

இரவு முழுவதும் யோசித்துக் கொண்டே இருக்க, விடியும் வேளையில் தான் கண் அசந்தது.

ஒரு வாரம் கழித்து,'' என்னடா! என்ன பண்ணலாம்னு சொல்லு. யோசித்து முடிவு செஞ்சாச்சா?'' என்றார் அவர்.

''தாத்தா! நான் அவங்க எல்லோரையும் பார்த்து இரண்டரை வருஷம் ஆகுது. பார்க்கவும் ரொம்ப ஆசையா இருக்கு. ஆனா, என் பிரபு கூட சேர்ந்து வாழறதை நினைச்சா, ரொம்பப் பயமா இருக்கு. அவங்க அம்மா... அவங்க அம்மா அன்னிக்கு என்கிட்டப் பேசியதை நினைச்சா, இப்பக்கூட நடுங்குது. அத்தனைக் கொலை வெறி அவங்க கண்ல. நான் திரும்ப அங்க போறதால அவங்க யாருக்கும் கஷ்டம்னா கூட, என்னால தாங்க முடியாது. வேண்டாம் தாத்தா. இப்பத் தான் அங்க கொஞ்சம் கொஞ்சமா சந்தோஷம் வந்திருக்கு. நான் போனா, அவங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்திடுமோன்னு பயமா இருக்கு. அதுவும்... எங்க குட்டி தேவதை மது... என் பிரபு! நான் உங்களோட இருந்திடறேன்... வேண்டாம்... நான் இல்லாம அவங்க வாழப் பழகிட்டாங்க தானே?'' என ஏக்கம் வழியக் கேட்டாள் தேவி.

''என் கூட இருக்கிறதை விட சந்தோஷம், எனக்கு வேற எதுவுமே இல்லைடா. ஆனா, உனக்கு வாழற வயசு.

கௌதமும் உன் நினைப்புல காலத்தை ஓட்டிட்டு இருக்கார். நீங்க இரண்டு பேரும் ஒண்ணா சேரணும். உன் ட்ரீட்மெண்ட்டும் கம்ப்ளீட்டா முடிஞ்சுது. இனி ஒரு பயமும் இல்லை. பத்மினியம்மா மிரட்டறது எல்லாம், எனக்கு ஒரு விஷயமே இல்லை. நீ எந்தக் காலத்தில் இருக்கே? பழைய சினிமாவில் வர்ற மாதிரி பயப்படற. இதுக்காக, காலம் முழுக்க நீ ஒளிந்து வாழ முடியுமா? உங்க யார் மேலயும் நகம் கூடப் படாம, என்னால பார்த்துக்க முடியும்.

அந்தம்மா மிரட்டினது மாப்பிளைக்குத் தெரிஞ்சிடுச்சு. அதனால. கௌதம் அவங்க கூட பேசறதையே நிறுத்திட்டார். அவங்க பேரைக் கூட சொல்றது இல்லையாம். கொஞ்ச நாள் அதே திமிரோட, எதையும் சட்டை பண்ணாம பிசினஸைப் பார்த்துகிட்டு தான் இருந்திருக்காங்க. ஆனா, நாளாக நாளாக அவங்களால முடியலை தனிமை அவங்களை வாட்டியிருக்கு. உன் மாமானரும் அங்க போகிறதில்லை. பிரஷர், சுகர்னு நிறைய ப்ராப்ளம்ஸ். டாக்டர் அட்வைஸ்படி, இப்ப வீட்லதான் இருக்காங்க. அதனால, உன் மேல கோபப்படவே மாட்டாங்க. நீ தைரியமா அங்க போகலாம். முதல்ல... உன்னை யாருக்கு அடையாளம் தெரியப் போகுது? விக்ரம் கூட உன்னைக் கண்டு பிடிக்க முடியாம, திணறிட்டான்.

''ஆனா, தாத்தா! என் பிரபு ரொம்ப ஷார்ப். என் மேல துளி சந்தேகம் வந்தா கூட, உண்மையைக் கண்டு பிடிச்சிடுவார். நாம சொல்லவே வேண்டாம்.'' என்றவளின் கண்களில் பெருமை மின்னியது.

சிரிப்பை அடக்கியபடி, ''அப்படியா! அப்பச் சரி. உன் பிரபுவோட ஷார்ப்னஸ்க்காக ஒரு டெஸ்ட் வைக்கலாம். ஒரு



மாதம், அவர் பார்வையில் படற மாதிரி இரு. உன்னைக் கண்டு பிடிச்சிடுவாரான்னு பார்க்கலாம். அப்ப நான் ஒத்துக்கறேன்... அவர் உன் மேல வெச்ச நேசம் தூய்மையானதுன்னு.''

ரோஷம் மேலிட, ''போங்க தாத்தா! பிரபு என் மேல் வைத்த பிரியத்தைச் சந்தேகப்படாதீங்க. நான் ப்ரூவ் பண்ணிக் காட்டறேன். நீங்க ஒரு மாதம், என் கூடவே தான் இருக்கணும். ஆனா, அவரை அறிமுகம் செஞ்சுகிட்டு பேசிப் பழக, வலுவா ஒரு காரணம் வேணுமே!'' என்றவள், அன்று முழுவதும் அதைப் பற்றியே யோசித்தாள்.

''தாத்தா! ஒரு ஐடியா! என் க்ளோஸ் ப்ரண்ட் சென்னையில் தன் ஹஸ்பெண்டோட ஒரு பெரிய நிறுவனத்தை சக்ஸஸ்ஃபுல்லா நடத்திக்கிட்டு வரா. இதே இன்டீரியர் கம் ஆர்க்கிடெக்சர் தான். அவகிட்ட கேட்டா, கண்டிப்பா எனக்கு உதவி செய்வா. என் பிரபு, ''விஷ்வா பில்டர்ஸ்'' ஆரம்பிக்கறதுக்கு முன்னால, அதில தான் பார்ட்னரா இருந்திருக்கார். வருண் அண்ணாவை நல்லாத் தெரியும். அவ போன் நம்பர் மட்டும் என்கிட்ட இல்ல.''

''அது விக்ரம்கிட்ட சொன்னா, உடனே கிடைச்சிடும். நீ பேசலாம்.''

அதன்படியே தன் தோழியோடு அலைபேசியில் தொடர்பு கொண்டாள். மிருதுளாவுக்கு தேவியுடன் பேசியதில் மகிழ்ச்சி... வியப்பு... ஏன்... அதிர்ச்சியும் கூட!

''தேவி! நம்பவே முடியலை. நீ உயிரோட தான் இருக்கிறன்னு, ஏன் கௌதம் அண்ணாகிட்ட சொல்லலை? அவர் ரொம்ப ரொம்ப டிப்ரஸ் ஆகியிருக்கார். ஏன்... வருண் மாமா தான் உங்க ஆபிஸ் வொர்க்கையும் சேர்த்துப்

பார்த்துக்கிட்டார். அண்ணா இப்பதான் ஒரு வருஷமா கொஞ்சம் நார்மல் ஆகியிருக்கார். என்னப்பா ஆச்சு?''

தேவி நடந்த விபரங்கள் அனைத்தையும், மிருதுளாவிடம் மறைக்காமல் பகிர்ந்து கொண்டாள்.

''பிரபு ஆக்சிடென்ட்ல சிதைஞ்சு போன என் முகத்தைப் பார்த்து மிரண்டு போயிருப்பார். கடவுள் புண்ணியத்தால... சரி பண்ண முடிஞ்சது. ஆனா, அடையாளமே டோட்டலா சேஞ்ச் ஆயிடுச்சு. ஆனா, என் மூச்சுக் காத்து பட்டாலே, அவர் என்னைக் கண்டுபிடிச்சிடுவார். அதுக்காக, கொஞ்ச நாள் நான் என் அடையாளத்தை மறைத்து, அவர்கிட்ட வேலை செய்யணும்பா ப்ளீஸ். வருண் அண்ணாகிட்ட சொல்லி, எப்படியாவது நீதான் இதுக்கு ஹெல்ப் பண்ணணும். பேசறியா மிது?

''நீ ஏண்டி என்னை அத்தனைக் கெஞ்சணும்? நீ வேலையிலே சேர்ந்தாச்சுன்னு நினைச்சுக்கோ. இங்கே என்னோட டெசிஷன் தான் பைனல். எனக்கு இப்ப டெலிவிரி டைம். அதனால, அவருக்கு உன் ஹெல்ப் கிடைக்கிறது. எனக்குத் தான் சந்தோஷம். சீக்கிரமா சென்னை வந்து சேரும் வழியைப் பாரு. நான் ஆபிஸ் போகாததால, அவர் சிரமப்படறார்.''

மிருதுளாவின் உடல் நிலை பற்றியும் விசாரித்து விட்டு, போனை வைத்த பிறகு தான், தேவியின் மனம் லேசானது.

''தாத்தா! என் ப்ரண்டுக்கு டெலிவிரி டைம். அதனால, என் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கா. சீக்கரம் கிளம்பணும். அங்க போய் எங்க தங்கறது?''

''அதெல்லாம் என் வேலை முன்னி. நீ டிரஸ் பேக் பண்ணு. இன்னொரு விஷயம்... கௌதம் பேட்டா கண்டுபிடிக்கிற வரை, நீ ஐஸ்வந்த் சிங்கோட பேத்தியா மட்டும் தான் இருக்கப் போற. தெரியுதா? தேவிங்கற பேரைச் சொல்லி, உன்னை அங்கே கூப்பிட முடியாது. உனக்குப் புது பேரும் வைக்கணும். நீயே டிசைட் பண்ணு.''

இரவு முழுவதும் யோசித்தவள், காலையில், ''தாத்தா! இந்தப் புதிய உருவம், புதிய முகத்துக்கு பேர் ரிஷிபாலா. இனிமேல், நான் ரிஷிபாலா.'' என்றாள்.

## 21

**செ**ன்னையில் கால் பதித்த தேவி... (நோ! நோ! இனிமேல் நமக்கும் ரிஷிபாலா தான்!) உணர்ச்சி மயமானாள். இரண்டரை வருடங்களுக்குப் பிறகு சொந்த மண்ணுக்கே திரும்பியதில், கண்கள் கசிய ஐஸ்வந்த் சிங்கின் கையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள். கை மெல்ல நடுங்கியது.

''பேட்டா ரிலாக்ஸ்! ஒண்ணும் இல்லை. முதல்ல நம்ம வீட்டுக்குப் போகலாம்.''

''நம்ம வீடா?''

''ம், மேடம் ரிஷிபாலாவுக்கு, இங்க பங்களா ரெடியா இருக்கு.''

விமான நிலையத்திலிருந்து இவர்களை அழைத்துப் போக கார் தயாராக இருந்தது. பளபளவென்று சருமம் பளிங்காய் மின்ன, நீல நயனங்கள் அலைபாய, தன் அழகை வியந்து பார்ப்பவரை லட்சியமே பண்ணாமல் விரைந்தாள்.

அந்த ஏர்போர்ட் வளாகத்தில், ''ஹே! வாட் எ ப்யூட்டி

டா! ஸ்டன்னிங்! இல்லடா...? இவங்க ஒரு சினிமா ஸ்டார்னு நினைக்கிறேன். ஸ்க்ரீன்ல வந்து தமிழ்நாட்டையே கலக்கப் போறாங்க பாரு!'' என ஏதோ ஒரு இளைஞன் பேசிய பேச்சு காதில் விழும் முன்னரே, காரில் ஏறியிருந்தாள். அந்த இம்போர்ட்டட் கார் சாலையில் வழுக்கிக் கொண்டு விரைந்தது.

பெசண்ட் நகர் பீச் அருகேயிருந்த அந்தக் குட்டி பங்களாவில் இவர்கள் வந்து சேருவதற்கு முன்னரே, சமேலி வந்து சேர்ந்திருந்தாள். மாடியில் ரிஷிபாலா தங்கும் அறையும் தயாராக இருந்தது. ஏதோ பேருக்குக் கொறித்து விட்டு படுக்கையில் விழுந்த பின்னரும், படபடப்பு அடங்கவில்லை.

தான் பிறந்து வளர்ந்த ஊர், தன் உயிரான தாத்தா, சிபி, தான்யா, சுவாசத்தோடு கலந்து வியாபத்திருக்கும் பிரபு, தங்கள் வீட்டின் புது வரவான மதுக்குட்டி... என்று யோசித்துக் கொண்டே வந்தவளின் நினைவில், பத்மினியின் வெறி கொண்ட கண்கள் மிரட்டவும் வியர்த்துப் போனாள். எழுந்து குளிர்ந்த நீரைப் பருகிய பின்னரும், பயம் அடங்கவில்லை. அன்று இரவு தூக்கத்தைத் தொலைத்தாள்.

மறுநாள் தன் தோழியை அழைத்தவள், ''நான் சென்னை வந்துட்டேன் மிது!'' என்றாள்.

''ஓ. ஏர்போர்ட்டிலயே இருப்பா. கார் அனுப்பறேன்.''

''இல்லை மிது. நான் நேத்தே வந்துட்டேன். தாத்தா இங்கே எல்லாமே அரேஞ்ச் பண்ணிட்டார். உன்னை வந்து பார்க்க எப்ப வசதியா இருக்கும்னு சொல்லு. நான் வரேன்.''

''உடனே கிளம்பி வா. லஞ்சுக்கு நீயும், தாத்தாவும் நம்ம



வீட்டுக்கு வந்திடுங்க. நான் தாத்தாகிட்ட சொல்றேன். போனை அவர்கிட்ட குடு'' என்றவள் அவரையும் அழைத்து விட்டு அட்ரஸ் சொன்னாள்.

முழு வெண்ணிற சுடிதாரில், பென்ஸ் காரில் வந்து இறங்கிய ரிஷிபாலாவின் அழகில் ஒரு கணம் திகைத்த மிது, தயக்கத்துடன், ''வாங்க!'' என்றாள்.

தாய்மையின் அழகு ஜொலிக்க தன்னை வரவேற்ற மிருதுளாவைப் பார்த்ததும் அவளிடம் விரைந்த ரிஷிபாலாவை, மிதுவின் குரல் தடுத்து நிறுத்தியது.

''வாங்க தாத்தா! அத்தை உள்ளே தான் இருக்காங்க. கூப்பிடறேன். ஒரு நிமிஷம்!'' என்று மென்மையாகப் பேசியவளைப் பார்த்து முகம் பூரிக்க தலை சாய்த்து புன்னகைத்தாள் ரிஷிபாலா.

''ஹே மிது! என்னை அடையாளம் தெரியலையா?'' நான் தாண்டி தேவி... அலையஸ் ரிஷிபாலா. ஓ.எம்.ஜி. தப்பிச்சேன். தாத்தா! பாருங்க... என் பிரெய்ன் பாக்ஸே என்னை அடையாளம் கண்டுபிடிக்கலை. ஸ்கூல் , காலேஜ் எல்லாம் சோத்து, பத்து வருஷத்துக்கு மேல ஒண்ணா படிச்சிருக்கோம்!'' என்றவள், உணர்ச்சிவசப்பட்டு மிதுவை அணைத்துக் கொண்டாள்.

மிதுவால் நம்பவே முடியவில்லை. அவளைச் சற்றே தள்ளி நிறுத்தி ஆராய்ந்தாள். ''தேவி! நீயாடி இது? நம்பவே முடியலை! ஓ காட். உன் பேஸ் அடையாளமே தெரியாம, மாறிப் போயிருக்கு. டோட்டலா சேஞ்ச் ஆகியிருக்கு. நீ சிரிக்கும்போது உதட்டைச் சுழிக்கறியே... அது தான் தேவின்னு கொஞ்சம் சொல்லுது. அப்புறம் இந்த மச்சம்... மற்றபடி நீ ரிஷிபாலாவே தான். வெரி ப்யூட்டி புல்!

உன்னோட நீல விழிகள். அப்பா...! வாயால பேச நினைக்கறதை, கண்களே பேசிடுது!'' அவர்களிடம் பேசிக் கொண்டே, ''அத்தை! கொஞ்சம் வெளியே வாங்க. யார் வந்திருக்கான்னு பாருங்க.''

''என்ன மிதும்மா? யார்?'' என்று கேட்டுக் கொண்டே வெளியில் வந்த சுமித்ரா, பெரியவரைப் பார்த்ததுமே வணங்கி, ''வாங்க! மிது சொன்னா... நீங்க வருவீங்கன்னு. வாம்மா தேவி! நீ ரொம்ப அழகா, லட்சணமா இருக்கே!''

''தாங்க்ஸ் ஆன்ட்டி. மிது கூட இப்ப ரொம்ப அழகா இருக்கா. என்னுது தான் இரவல்!'' எனத் துயரம் தோய்ந்த குரலில் பேசிய தேவியின் கைகளைப் பற்றினார் சுமித்ரா.

''அப்படிச் சொல்லாதேம்மா. உனக்கு இது மறுஜென்மம்னு நெனைச்சு, சந்தோஷப்படு. கௌதம் இந்த வயதில் அளவுக்கு மீறி வேதனைப்பட்டுட்டார். இனியாவது, அவர் மகிழ்ச்சியா உன்னோடு வாழறதைப் பார்க்கணும். அதுக்காக, நாங்க என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத் தயாரா இருக்கோம்.''

''தேவி! ஜூஸ் எடுத்துக்க.''

ஜஸ்வந்த் சிங்கிடம் பொதுவாகப் பேசிய சுமித்ரா, ''டைம் ஆச்சு. அவரும், வருணும் வர லேட்டாகும். நீங்க வாங்க. லஞ்ச் ரெடி!'' என்றார்.

உணவருந்தி முடித்ததும், ''நீயும் என் பொண்ணு மாதிரி தான். விபத்துக்குப் பிறகு தேவியோட மனநிலை ரொம்ப மோசமா இருந்தது. இத்தனை நாளும் இவளுக்குக் கௌதமின் நினைப்பைத் தவிர வேறு எதுவுமே இல்லை. அவளோட சிகிச்சைக்காகத் தான், அவளை இங்கேயிருந்து தனிமைப்படுத்தி கூட்டுகிட்டுப் போயிட்டேன். இவ கூட



அந்த நிலைமையில கௌதம், சிபி, பத்மினி, இப்படி யாரோடவும் அவள் தொடர்பு கொள்ள வேண்டான்னு நினைச்சேன் சுமித்ரா. ஆனா, இதை செயல்படுத்த, நான் பட்ட வேதனை கொஞ்ச நஞ்சமில்லை.

பத்மினியால தன் குடும்பத்துக்கு ஏதாவது ஆபத்து வந்திடுமோன்னு பயந்து தான், அவங்களைப் பிரிஞ்சு இந்த ட்ரீட்மெண்ட்டை அக்செப்ட் பண்ணிக்கிட்டா. இப்ப முழுவதுமாக குணமான பிறகு, அவங்களைப் பிரிச்சு வைக்க என்னாலும் முடியலை. அதனாலதான் கூட்டிக்கிட்டு வந்தேன். அவ கௌதம் கூட சந்தோஷமா வாழ்ந்தா, அது தான் எனக்கு நிம்மதி.''

புத்மினி எதிர்பார்க்கிற அந்தஸ்தும், செல்வமும்... பல மடங்கு அதிகமாக என்கிட்ட இருக்கு. இப்பவே அதைக் காண்பித்து இவங்களை சோத்து வைத்திடுவேன் ஆனா, கௌதம் இவ மேல காட்டும் அன்பை எனக்குப் புரிய வைக்கப் போறாளாம் தேவி. அதுக்குத் தான் இந்த ஐடியா பண்ணியிருக்கா. எனக்கு இதில இஷ்டமில்ல. ஒரு மாதம் டைம். அதுக்குள்ள கௌதம் இவளைக் கண்டு பிடிக்கலைன்னா, நான் போய்ப் பேசறேன். அதுவரைக்கும் எங்க முன்னியை நீங்க பார்த்துக்கணும். நானும் கூடவே இருப்பேன்.''

''கண்டிப்பா. வருண் நேத்து தான் என்கிட்டப் பேசினான். முடியப் போற ஷாப்பிங் மால் ப்ராஜக்ட்டுக்கு, ஒரு இன்டீரியர் டிசைனர் அவசரமா தேவைன்னு கௌதம் கேட்டிருக்கார். வருண்கிட்டப் பேசிட்டு, மிதுவே தேவியை கான்டாக்ட் செய்வா. சரியா தேவி?''

''தேங்க்ஸ் ஆன்ட்டி.''

ஜஸ்வந்த் சிங் மாலை வந்து தேவியை கூட்டிச் செல்வதாக் கூறி விடைபெற்றார். அதன் பிறகு தோழிகளுக்குப் பேச நிறைய விஷயம் இருந்தது. கடந்த கால நினைவுகளை மனம் விட்டுப் பகிர்ந்து கொண்டனர்.

இரண்டு நாட்கள் கழித்து வருணிடமிருந்து அழைப்பு வந்தது.

''தேவி! நல்லாயிருக்கியாம்மா? மிது சொன்னா... நான் கௌதம்கிட்டப் பேசிட்டேன். நீ என்னோட வொர்க்கரா, நாளைக்கு அங்கே போய் ஜாயின் பண்ணப்போற. ஷார்ப்பா பத்து மணிக்கு இங்கேயே வந்திடு. நான் கூட்டிட்டுப் போறேன் ஓ.கே வா? நானே உன்னை அறிமுகப்படுத்தி, விட்டுட்டு வரேன். கௌதமோட லைஃப் சரியானா அதுவே போதும். அவன் ரொம்ப கஷ்டப்பட்டுட்டாம்மா. இனியாவது அவன் சந்தோஷமா, நிம்மதியா இருக்கட்டும். மிது பேசாறாளாம். காலையில வந்திடும்மா.''

இரவு முழுக்க பல்வேறு நினைவுகளால் அலைக் கழிக்கப்பட்டு, தேவியின் உறக்கம் தொலைந்து. மறுநாள் அதிகாலையிலெயே எழுந்து குளித்து பூஜையை முடித்து விட்டு சோபாவில் அமர்ந்திருந்த ஜஸ்வந்தின் மடியில் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

அவளைப் பார்த்து நெகிழ்ந்து போனவராய் ''மேரே பியாரி குடியா! பயப்படாதேடா. எவ்ரிதிங் வில் பி ஆல்ரைட். உன் விக்ரம் அண்ணா... உன் கூடவே இருக்கப் போறான். சிபியும் அங்கே தான் இருப்பார். எழுந்திரு. டைம் ஆயிடும். கிளம்ப வேண்டாமா?''

முதல்ல தலையைக் காய வை. ரொம்ப ஈரமா இருக்கு பார். உட்கார். உன் கௌதம்கிட்டத் தானே போகப் போற!



சியா அப்'' -துவட்டினார்.

''சாரி தாத்தா. கொஞ்சம் நெர்வசா இருக்கு. இப்பப் பரவாயில்லை. நான் போய் டிரஸ் மாத்திட்டு வந்திடறேன்.''

அடர் ஊதா நிறத்தில் சின்னச் சின்னதாக வெண்ணிறப் பூக்கள் சிதறியிருந்த சுடிதாரில் வெளியே வந்தவளைப் பார்த்து, ''தட்ஸ் மை பேபி. குட்! வா, டிஃபன் சாப்பிடப் போகலாம்'' என்று அவளுக்கு சில அட்வைசும் செய்து, தங்கள் காரிலேயே மிருதுளாவின் வீட்டிற்கு அனுப்பி வைத்தார். தேவியே, தாத்தாவை வர வேண்டாமென்று சொல்லிவிட்டாள்.

''விஷ்வா பில்டர்ஸ்'' என்ற பெயர்ப் பலகையோடு கம்பீரமாக எழும்பி நின்ற அந்தக் கட்டிடத்தின் முன் வருண் காரை நிறுத்தியதும், தேவியின் இதயம் தாறுமாறாகத் துடிக்கத் துவங்கியது. அவளைப் பார்த்து லேசாகப் புன்னகைத்த வருண், ''என்னம்மா! பயமா இருக்கா? உன் ஆபீஸ் தானே? தைரியமா, கீழே இறங்கு.''

காரைப் பூட்டி, சாவியை எடுத்துக் கொண்டு முன்னே சென்றவனை தேவி கால்கள் பின்ன பின்தொடர்ந்தாள். வருண் எம்.டி.க்கு சமமான அதிகாரம் உள்ளவனாதலால், ரிசப்ஷனி லிருந்த சிந்து பரபரப்புடன் எழுந்து காலை வணக்கம் சொன்னாள். அவள் பின்னே மிரண்ட கண்களுடன் உள்ள நுழைந்த ரிஷிபாலாவைக் கண்டதும், கண்ணகல, ''ஓ.எம்.ஜி. வாட் எ ப்யூட்டி!'' என்று திகைத்துப் போனாள்.

சிந்துவைக் கண்டதும் தேவி தன்னை மறந்து அவளருகில் சென்று, ''ஹாய் சிந்து! எப்படி இருக்கீங்க? உங்க குளோஸ்-அப் ஸ்மைல், கொஞ்சம் கூட மாறவே

இல்லை!'' என்று கூறியதும், சிந்து திகைத்துப் போனாள்.

''மேடம்!'' என்று சிந்து ஆரம்பித்த உடனேயே, தான் செய்த தவறு புரிந்தது.

''ஹே! ஐயாம் ரிஷிபாலா. புதுசா டிசைன் என்ஜினியரா ஜாய்ன் பண்ணப் போறேன். வருண் அண்ணா, எங்க பேமிலி ப்ரண்ட். அதனால, நான் இங்க வர்றதுக்கு முன்பே, உங்க எல்லாரைப் பத்தியும் என்கிட்டச் சொல்லிட்டார். அது தான், என்னை மீறி ரொம்பப் பழகின மாதிரி உரிமையெடுத்துப் பேசிட்டேன். சாரி!'' என்று அழகாகப் புன்னகைத்து சமாளிப்பதற்குள் வியர்த்துப் போனாள்.

''வெல்கம் டு அவர் விஷ்வா பேமிலி. இத்தனை அட்ராக்டிவான நீல விழிகளை, இவ்வளவு பக்கத்தில... இப்பத் தான் பார்க்கிறேன். வெரி ப்யூட்டிஃபுல். உங்களைப் புதுசா பார்க்கிற மாடிரியான ஃபீலிங்கே இல்லை. ஏதோ... ரொம்ப நாள் பழகின மாதிரி இருக்கு. ஐயாம் ஹேப்பி! சாரா மேடம் ஜி.எம். ரூம்ல தான் இருக்காங்க. பாஸ் கொஞ்சம் லேட்டா வருவார்.'' கொஞ்சம் கூட இயல்பு மாறாமல் பேசிய சிந்துவிடம் நன்றியுரைத்து விட்டு, சாராவைப் பார்க்கச் சென்றாள்.

உள்ளே சென்றதும் சாராவிடம் பேசிக் கொண்டிருந்த வருண், ''வா ரிஷிபாலா! மேடம்! இவங்க புதுசா உங்க கன்சர்ன்ல ஜாயின் பண்ணியிருக்கிற ரிஷிபாலா. என் க்ளோஸ் பிரண்டோட வொய்ப். எனக்கும் தங்கை மாதிரி. வெரி டேலண்டட்! கௌதம் வர இன்னும் லேட்டாகும் போல இருக்கு. நான் கொஞ்சம் அவசரமா வெளியே போகணும். அவன்கிட்ட போனில் பேசிக்கிறேன். நீங்க இவங்ககிட்ட வேலையைப் பத்தி டிஸ்கஸ் பண்ணிக்கங்க!''



என்று முறையாக இருவரையும் அறிமுகம் செய்து வைத்தான்.

பின் ரிஷிபாலாவிடம், ''நான் கிளம்பறேம்மா. மிதுவை ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு போகணும். வர்ஷிக்காவும் வெயிட் பண்ணுவா. நான் ஈவினிங் பேசறேன். பி கேர்புல்'' என்று மெதுவாகப் பேசிவிட்டுச் சென்றான்.

சாரா மேடம் கூட, ''உங்களை இதுக்கு முன்னால மீட் பண்ணின மாதிரி இருக்கு. நீங்க ஜாய்னிங் ரிப்போர்ட் கொடுத்திட்டு சார்ஜ் எடுத்துக்குங்க'' என்றார்.

சாரா விக்ரமை அழைத்து விபரம் சொல்ல, அவர் தேவியை அறிமுகம் இல்லாத ஒரு பார்வை பார்த்து விட்டு, அவளை அழைத்துச் சென்றான்.

''தேவிம்மா! ரொம்ப எக்ஸைட் ஆகாதே. பாஸ வர்றதுக்குள்ள கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்க. அப்பத் தான் எமோஷன் ஆகாம, அவர்கிட்ட நார்மலா பேச முடியும்!'' என்று எச்சரித்து விட்டு, அவளுடைய தனி கேபினுக்குக் கூட்டிச் சென்று வேலையை விளக்கினான்.

அங்கிருந்த மற்றவரிடமும் அவளை அறிமுகப் படுத்திவிட்டு அவளது வேலை பற்றிய குறிப்புகளைக் கொடுத்தான். பதினொரு மணியளவில் ஒரு கார் வேகமாக வந்து நிற்க, அதிலிருந்து இறங்கிய கௌதம் மின்னலென விரைந்து தன் அறைக்குள் நுழைந்திருந்தான்.

இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தன் காதல் கணவனின் தரிசனம் கிடைத்தது ஒரு நொடியே என்றாலும், தேவிக்கு மூச்சடைத்துப் போனது. உடல் நடுங்க, மெல்லிய இதழ்கள் துடிக்க, கண்கள் நிறைந்து பார்வை மங்கலானது.

வேகமாக அவளருகில் வந்த விக்ரம், ''தேவிம்மா! என்ன

இது? கண்ணைத் துடை. நீ ரொம்ப ஸ்டராங் ஆச்சே. நீ ஓ.கே. சொன்ன பிறகு தான், நான் உன்னை பாஸ்கிட்ட கூட்டிட்டுப் போவேன். உன்னது தனி கேபின்; அதனால பரவாயில்லை.''

அழுகையும், சிரிப்புமாக, ''சாரிண்ணா! அவரைப் பார்த்ததும், என்னையறியாம கண் கலங்கிடுச்சு. ரொம்ப இளைத்துப் போயிட்டார். ஷேவ் பண்ணாம, மேட்சா டிரஸ் பண்ணாம, இத்தனைச் சோகத்தோட ஒரு நாள் கூட இந்த மாதிரி என் பிரபுவைப் பார்த்தில்லை.''

''அது தான் நீ வந்தாச்சே! இனி எல்லாம் சரியாயிடும். பேஸ் வாஷ் பண்ணிட்டு வா... போகலாம். முதல்ல. இருந்ததைவிட, இப்ப எவ்வளவோ பரவாயில்லை''

''அண்ணா! பர்ஸ்ட், நான் உள்ளே போய் அவரை மீட் பண்றேன். அவர் முதன்முதலா என்னைப் பார்த்ததும், எப்படி ரியாக்ட் பண்றார்னு பார்க்கணும்'' என்றவளின் முகத்தில் மெலிதான வெட்கம் வந்தது.

''ம். நடத்துங்க மகாராணி, நான் பத்து நிமிஷம் கழித்தே உள்ளே வரேன்'' என்று அவள் நார்மலுக்கு வந்ததும், ஜாய்னிங் ரிப்போர்ட்டை கையில் கொடுத்து அனுப்பி வைத்தான். மெல்ல அவன் அறைக்கதவை தட்டினாள்.

## 22

**பி**ரபலமான விளம்பர மாடல் போல, இளந்தாடியுடன் மிகவும் கம்பீரமாக ஒரு கையில் ஃபைலுடனும், மறு கையில் செல்போனில் யாருக்கோ உத்தரவிட்டுக் கொண்டிருந்த கௌதமையே, தேவியின் விழிகள்



ஆசையோடு பருகிக் கொண்டிருந்தன. கௌதம் இவள் நுழைந்ததையே கவனிக்கவில்லை.

அலைபேசியின் தொடர்பை துண்டித்து விட்டு, ''யெஸ்?'' என்று அவளை நோக்கிய கௌதமின் கண்களில், டன் டன்னாக அதிர்ச்சி. கையிலிருந்த ஃபைல் நழுவி விழுந்ததைக் கூட உணராமல், கௌதமின் பார்வை அவள் மேல் படிந்து, ஒரு கத்தியின் கூர்மையுடன் அணுஅணுவாக ஆராய்ந்தது.

தோள்வரை காற்றில் அலைபாய்ந்த பிரௌன் நிறக் கூந்தல், நீல நயனங்கள், ஒப்பனையின்றி மின்னிய பளிங்கு முகம், சிவந்து துடித்த இதழ்கள் என்று ஆராய்ந்த கௌதமின் விழிகள், கடைசியில் ஸ்டார் மச்சத்தில் வந்து நிலைத்ததும்; ஸ்தம்பித்துப் போனான்.

முதலில் சுதாரித்துக் கொண்டது தேவியே! அவன் அருகாமைக்காக ஏங்கித் துடித்த மனதை அடக்க வழியின்றி, ''ஹலோ மிஸ்டர். கௌதம் பிரபாகர்! ஐயாம் ரிஷிபாலா!'' என்று வரவழைத்துக் கொண்ட தைரியத்துடன் அவனை நோக்கிக் கரம் நீட்டினாள்.

தன் முன்னே நீண்ட அழகான கரத்தைக் கண்டு கௌதம் திகைத்து நின்றது ஒரு நொடியே; மறுகணம் மூளையின் கட்டளைக்குக் காத்திராமல் கௌதமின் வலிமையான கரம் நீண்டு, ரிஷிபாலாவின் மென்மையான விரல்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டது. மிக நீண்ட கொடிய நாட்களுக்குப் பிறகான கௌதமின் ஸ்பரிசம், தேவியை மயக்கத்தில் ஆழ்த்தியது.

விக்ரமின் குரல், அந்த மோனத்தைக் கலைத்தது.

''பாஸ்! குட்மார்னிங். வருண் சார் அனுப்பிய டிசைன்

என்ஜினியர் ரிஷிபாலா. நார்த் இண்டியன். யு.ஜி. சென்னையில முடிச்சதால, தமிழ் நல்லா பேசுவாங்க'' என்ற விக்ரமின் குரலில் தன்னுள் இருந்த மாயை விலகி இயல்புக்குத் திரும்பிய கௌதம், அதன் பிறகு அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

மிக அலட்சியமாக, ''ஓ.கே. கேரி ஆன் விக்ரம். டேக் ஹர் டு த கேபின்'' என்று அவளைச் சட்டையே பண்ணாது ஒய்வறைக்குள் புகுந்து கொள்ள, விக்ரம் தேவியை ஏறிட்டான்.

தேவியிடம் எந்தக் கேபாமும் இல்லை. மாறாக இதழ்களில் புன்னகை. உன் எண்ணங்களை நான் புரிந்து கொண்டேன் என்ற சகஜ பாவம். தன் அறிமுகம் அவனிடத்தில் ஒரு சலனத்தை ஏற்படுத்தியிருந்தது நன்றகவே தெரிந்தது. அதனால், தேவியின் மனதில் ஏதோ ஒரு சந்தோஷமும், நிம்மதியும் இதமாகப் பரவியது.

கண்களை மூடி அமர்ந்திருந்த கௌதமின் உணர்வுகளோ, அதற்கு முற்றிலும் மாறாக இருந்தது. ரிஷிபாலாவை பார்த்த நொடியிலிருந்து, இனம் புரியாத தவிப்பு ஏற்பட்டிருந்தது. அது என்னவென்று அவனாலேயே பகுத்தறிய முடியவில்லை. அவளது நீல நயனங்கள், ஏதோ ஒரு ஏக்கத்தைக் கூறி, உரிமையை யாசித்தது போல் தோன்றியது. அவளைத் திரும்ப பார்க்க வேண்டும் என்று கிளர்ந்த ஆவலை முயன்று கட்டுப்படுத்தினான்.

விக்ரமை அழைத்து, ''இன்னும் ஒரு மாதத்திற்கு சிபியோட இடத்தில் நீதான் இருக்கப் போற. இன்னிக்கு அனுப்ப வேண்டிய டெண்டரை சாரா மேடமோட சேர்ந்து, நல்லா வெரிஃபை பண்ணிடுங்க. நான் ஏற்கனவே அவங்ககிட்ட டிஸ்கஸ் பண்ணிட்டேன். பெயிண்டர் வந்தா, நாளைக்கு வந்து பார்க்கச் சொல்லு. பொத்தேரி சைட்ல, கான்கீரிட் நாளைக்குப் ஃபிக்ஸ் பண்ணியிருக்கு. மேஜர் வொர்க். இன்னிக்கு ஈவினிங் நாலு மணிக்கு அங்க வந்திடு. சரி பார்த்திடலாம். நாம சைட்ல ரெடியா இருக்கணும்.''



வீடு வந்து சேர்ந்து உடைமாற்றியவன், டேபிளின் மேலிருந்த தேவியின் போட்டாவை மார்போடு அணைத்துக் கொண்டான்.

''இன்று உன்னையே பார்த்த மாதிரி ஒரு பீலிங் பார்பி! என்னோட உள்ளுணர்வு பொய் சொல்லாது. ரிஷிபாலா என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்றா. ஏன்னு தான் தெரியலை. ஐ லவ் யூ பார்பி!'' நினைவுகள் தாலாட்ட மெல்ல உறக்கத்தில் ஆழ்ந்தான்.

ஆபிஸ் முடிந்து வீடு திரும்பியவளுக்கு, வாய் ஓயாமல் கௌதம் புராணம் தான்.

''தாத்தா! அவர் என்னைப் பார்த்து அதிர்ச்சி அடைஞ்சுட்டார். என்னை முறைச்சுப் பார்த்தார். கண்டிப்பா கொஞ்சம் சந்தேகம் வந்திருக்கு. ஆனா, அவர் கொஞ்சம் இளைச்சு...'' என்று தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தாள்.

மறுநாளிலிருந்து ரிஷிபாலா புதிதாக ஒரு தோழமையை ஏற்படுத்திக் கொண்டு, அனைவரிடமும் சகஜமாகப் பழக ஆரம்பித்தாள். வழக்கம் போல லஞ்ச் டைமில் டைனிங் ரூம் கலகலப்பானது. ரூபா வாய் விட்டே வியந்தாள்.

''ரிஷிபாலா! நீ பேசுறதைக் கேட்க ஆச்சரியமா இருக்கு. எங்க பாஸ் வொய்ப் பேசுற மாதிரியே, நீங்க பேசறீங்க. உங்க

மேனரிசம், ஒரு சில சாயல்... எல்லாமே அப்படியே தேவியைப் போலவே இருக்கு. வொண்டர்புல்! எங்க ஏ.ஜி.எம் பார்த்தா, ரொம்பச் சந்தோஷப்படுவார்.''

''ஏ.ஜி.எம்?'' -விக்ரமைப் பார்த்தாள்.

''நம்ம பாஸோட மச்சான் சிபி சார் தான். இப்ப இங்க ஏ.ஜி.எம். ஒரு ட்ரெயினிங் அட்டெண்ட் பண்ண, பெங்களூர் போயிருக்கார். வர... ஒன் மன்த் ஆகும்.''

சிபியைப் பற்றிப் பேசியதும் மனம் நெகிழ மெல்லத் தலையசைத்தாள். தாத்தா, தன்னு, மாமனார், மது என எல்லோரையும் பார்க்க ஆவலாக இருந்தது.

டிசைன் என்ஜினியர் என்பதால், கௌதமின் அறையில் பணிபுரியும் வாய்ப்பு கிட்டவில்லை. வெளியே தனி கேபின் தான். தினமும் அவன் வரவை எதிர்பார்த்து கண்கள் அலைபாயும். கௌதம் உள்ளே நுழைந்ததும், ஒரே ஒரு நொடி அவள் மீது தழுவிச் செல்லும் பார்வைக்காக, தினமும் தவமிருந்தாள். விக்ரம் முயன்று அவள் கௌதமுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள சந்தாப்பங்களை உருவாக்கிக் கொடுத்தான்.

அன்றும், ''பாஸ்! நீங்க பாம்பேக்கு அனுப்ப வேண்டிய பேக்ஸ் மெசேஜ் இஸ் வெரி அர்ஜெண்ட். நான் சைட்ல இருக்கேன். மெசேஜ் ரிஷிபாலா மேடம்கிட்ட டிக்டேட் பண்ணிடுங்க. அவங்க ரெடி பண்ணி அனுப்பிடுவாங்க. நான் ஏற்கெனவே பேசிட்டேன். இன்னும் பைவ் மினிட்ஸ்ல வருவாங்க'' என்றான் விக்ரம்.

''தேவி! நீ எம்.டி. ரூமுக்குப் போ. அவர் சொல்ற மெசேஜை பாம்பேக்கு பேக்ஸ் பண்ணிடு. ரூபாவில் ஹெல்ப் யூ.''



உள்ளே நுழைந்தவனிடம், ''யெஸ் ரிஷிபாலா! திஸ் வொர்க் இஸ் வெரி அர்ஜெண்ட். அதனால...''

''பரவாயில்லை பாஸ். சொல்லுங்க!'' அவளையும் மீறி குரல் குழைந்து ஒலித்தது.

அவளின் குரலில் அதிர்ந்து போய் திரும்பியவனால் கண்களை விலக்க முடியவில்லை. தூக்கம் கலையாமல் சோர்ந்திருந்த நீல விழிகள், சற்றே கலைந்த கூந்தல், ரோஜா நிறச் சுடியில்.... உலக அழகிகளுக்குச் சவால் விடும் தோற்றம். என்றோ படித்த ஸ்லீப்பிங் ப்யூட்டி புத்தகத்திலிருந்து வெளியே குதித்த இளவரசிபோல், கௌதமின் கண்களுக்குத் தோன்றினாள் அவள்.

டிக்டேட் செய்து கொண்டே ரிஷிபாலாவின் அருகே வந்த போது, காற்றில் மிதந்து வந்த யார்ட்லியின் நறுமணம் அவனைத் தாக்கியதில், திகைப்பு கூடியது. இது அவளிடமிருந்தா... இல்லை... தனக்குள் புதைந்து போயிருக்கும் தன் உயிரில் கலந்த பார்பியிடமிருந்தா என்பதை உணர முடியாமல், வெகுவாகத் திணறிப் போனான்.

கௌதமின் பார்வையில் லேசாக முகம் சிவந்த ரிஷிபாலாவின் மனதில், ஏதோ ஒரு சுகம் இதமாகப் பரவியது. தன்னால் மட்டுமே பிரபுவின் கவனத்தைச் சிதறடிக்க முடியும் என்ற கர்வம்கூட எழுந்தது. என் பிரபு எனக்கு மட்டுமே உரியவன் என்ற உரிமையில், காதல் பெருகியது.

ரிஷிபாலாவின் பார்வையிலிருந்த ஏதோ ஒன்று, அவனை அசைத்தது. பல காலமாகப் பழகிய விழிகளின் பாஷையில், ஜென்ம ஜென்மமாய் தொடர்பிருந்ததைப்

போன்ற உணர்வு ஆட்கொண்டது. என் பார்பியை விடுத்து வேறு பெண்ணைப் பற்றிய சிந்தனை வருவதா என்று, தன்மீதே கோபம் கொண்டான் கௌதம்.

''இவள் ஆபத்தானவள்! இவளிடமிருந்து கொஞ்சம் விலகியே இருக்க வேண்டும்!'' என்று முடிவெடுத்த பிறகு கூட, தன் வேலையில் கவனத்தைக் குவிக்க மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது அவனுக்கு.

வழக்கம்போல் தான்யா, மதுவிடம் பேசிவிட்டு டின்னர் முடித்தபின்பே தன் வீட்டிற்குத் திரும்பினான். வழி நெடுக சிந்தனை ரிஷிபாலாவின் வருகையைப் பற்றியே இருந்தது. ஏதோ அவனுக்குப் புரியாத மர்மம் இருப்பதாகப் பட்டது. அவள் தன்னிடம் மிகவும் நெருங்கி வருவதை உணர்ந்தான். ரிஷிபாலாவின் கண்கள் வெளிப்படுத்திய நேசத்தில் குழம்பிப் போனான். உறக்கம் அவனை விட்டுப் பறந்தோடியது. மறுநாள் மதிய உணவு வேளையில் வீட்டுக்குக் கிளம்பி வெளியே வந்தபோது, டைனிங் ஹாலில் ஒலித்த குரலில், அதிர்ந்து போய் தயங்கி நின்றான்.

வாக்கிங் போவதைப் பற்றி ஏதோ பேச்சு எழுந்து, ஒவ்வொருவராக தங்கள் ஆதங்கத்தை கொட்டியபோது, ''ஓ.எம்.ஜி! டென்ஷன் ஆகாதீங்க ரூபா. வேலைக்குப் போற பெண்கள் காலையில வாக்கிங் போறது சிரமம்தான். ஆனா, தினமும் ஈவினிங் அட்லீஸ்ட் வாரத்தில் இரண்டு நாள் கோயிலுக்குப் போனால் போதும். எங்க தாத்தா எப்பவுமே இதைப் பத்திப் பேசுவார்.

அந்தக் காலத்தில பெண்களுக்குக் கோவிலுக்குப் போக மட்டும்தான் அனுமதி கிடைக்கும். வேற எங்கேயும் போக மாட்டாங்க. அதனால, பழமையான கோவில்கள்



எல்லாமே பெரிதா இருக்கும். மூணு முறை கோயிலைச் சுற்றி வந்தாலே, பெரிய வாக்கிங் போன பலன் கிடைச்சிடும்.

அதுவும், வெறும் காலோட பூமியில் நடக்கும்போது... அக்குபிரஷர் தெரபி கிடைக்கும். அதுவும் தெரிஞ்ச மனுஷங்ககிட்ட பேசிக்கிட்டே நடந்தால், மன அழுத்தம் குறைந்து, ரிலாக்ஸ் ஆயிடுவாங்க. ஆனா, இந்த அவசர உலகத்தில் நம்ம ஆபிஸ் உள்ளேயே ஒரு குட்டிப் பிள்ளையார் நம்மைத் தேடி வந்து உட்கார்ந்திருக்கார். கோயிலுக்குப் போற பழக்கமே குறைச்சுகிட்டு வருது.

அதனாலதான், நான் ஐ.டி. பீல்ட் வேண்டாம், நம்ம கற்பனைக்கும், அறிவுக்கும் தீனி போடுற, சவாலா இருக்கிற இந்த ஆர்க்கிடெக்சரைத் தேர்ந்தெடுத்தேன். ஐ லவ் திஸ் புரொஃபஷன் வெரி மச்!''

''ரிஷிபாலா! உங்க பேச்சைக் கேட்டா, நீங்க நார்த் இண்டியன்னு நம்பவே முடியலை. ரொம்ப அழகா தமிழ் பேசறீங்க!'' என்று வியந்தாள் சிந்து.

''நான் பாதி தமிழ் தான்; அப்பா தமிழ்... அம்மா தான் நார்த் இண்டியன்!'' என்று பேச்சு முடியாமல் தொடர, ரிஷிபாலாவின் பேச்சில் கௌதம் பரபரத்துப் போனான்.

''நோ! ஐ காண்ட் பிலிவ் திஸ். சம் திங் ராங். கண்டிப்பா இது அவளே தான்! என் உணர்வுகள் பொய் சொல்லாது. ஆனா, ஏன் ரிஷிபாலான்னு...'' அதற்கு மேல் யோசிக்க தைரியமின்றி காரைக் கிளப்பினான்.''

அன்றும் இரவு வீடு திரும்பியதும், இதுவரை தான் பிரித்துக் கூட பார்க்க விரும்பாத போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட், மற்றும் சில போட்டோக்களைக் கைகள் நடுங்க எடுத்துப் பார்த்தான் அதை ஊன்றிக் கவனித்ததும்,

நம்பமுடியாத சில அதிர்ச்சியான விஷயங்கள் புலப்பட்டன.

''ஹோ! இத்தனை நாளா எப்படி இதை மிஸ் பண்ணினேன்?'' என்று தன்னைத் தானே நொந்து கொண்டு, அலைபேசியை உயிர்ப்பித்தான்.

''விஜய் ஸ்பீக்கிங்.''

''நான் கௌதம்!''

''என்னடா இந்த நேரத்தில! ஒண்ணும் பிரச்சினை இல்லையே?''

''தெரியலைடா. நீ விசாரிக்கப் போற மேட்டர்ல தான், அதற்கான பதிலும் இருக்கு''

''குழப்பாதே கௌதம். விஷயத்தைச் சொல்லு.''

''நானே ரொம்பக் குழம்பிப் போய்த் தான் உனக்குக் கால் பண்றேன். உன்னோட ஹெல்ப் அர்ஜென்டா தேவை. காலையில, உன்னை எங்க மீட் பண்ணட்டும்?''

''ஹெல்ப்பா? ஆர்டர் போடுடா. காலையில ஷார்ப்பா எட்டு மணிக்கு உன் வீட்டுக்கு வர்றேன். வெளியே போய்ப் பேசலாம்.''

''தேங்க்ஸ் விஜய்!'' என்றவன் சிறிது நேரம் பொதுவாக பேசிவிட்டு போனை அணைத்தான்.

மறுநாள் விஜயைச் சந்தித்து தன் சந்தேகங்களை யெல்லாம் ஒன்று விடாமல் விளக்கினான். விஜயும் ஒரு வாரத்தில் பதில் சொல்வதாகக் கூறிவிட்டுக் கிளம்பினான்.

அந்த ஏழு நாட்களும், கௌதமிற்கு ஏழு வருடங்களாகக் கழிந்தது. அவ்வப்போது ரிஷிபாலாவின் செயல்கள் பார்பியை நினைவூட்டியது. அவன் தலைவலியில் சோர்ந்திருக்கும் நேரத்தில், தவறாமல் விக்ரம்



மூலமாக அவன் கைகளில் காபி வந்து சேர்ந்து விடும். உணவுவேளை தவறினால், பேக் செய்த லஞ்ச் அவனுடைய் ஓய்வறையில் காத்திருக்கும். இதெல்லாமே அவளின் கைக்காரியம் என்று தெரிந்தும், பதில் பேசாமல் சாப்பிட்டு முடிப்பவன், அவளிடம் பேச மாட்டான்.

அவளின் முகமாற்றமும், உடையும், சிறிய குரல் மாற்றம் மட்டுமே அவளை வித்தியாசப்படுத்திக் காட்டியது. அன்று காலையில் கௌதம் வேலையில் மூழ்கியிருந்த போது, அலைபேசி ஒலியெழுப்பி அவன் கவனத்தைக் கலைத்தது. அதில் ஒளிர்ந்த எண், அவன் பிரஷரை அதிகரித்தது. இதயம் வேகமாகத் துடிக்க, அதை உயிர்ப்பித்துவிட்டு, ''சொல்லு விஜய்!'' என்றான்.

அதன் பிறகு விஜய் பேசியதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த கௌதமின் முகம், பல விதமான பாவங்களைக் காட்டியது. ''ம்!'' என்று ஒலியைக் கூட எழுப்ப மறந்தவனாய், அசையாமல் அமர்ந்திருந்தான்.

விஜய் பேசி முடித்ததும், ''தேங்க்ஸ்டா. என்னோட லைஃபே உன்னால திரும்பக் கிடைச்சிருக்கு. உன்னோட ஒவ்வொரு வார்த்தையும், இறந்து போன மனசோட இருந்த என்னை உயிர்ப்பிச்சிருக்கு. காலம் முழுக்க உனக்கு நன்றிக்கடன் பட்டிருக்கேன்டா. உன்னை நான் அப்புறமா நேரில் வந்து பார்க்கறேன். என்னோட உணர்ச்சிகளைக் கொட்ட எனக்குத் தனிமை வேணும். ப்ளீஸ்டா!'' என்று தழுதழுத்தான்.

''எனக்கு ரொம்பச் சந்தோஷம் கௌதம். நல்லா ரிலாக்ஸ்டா இரு. உன் ப்ராப்ளமெல்லாம் செட்டில் பண்ணிட்டு, அப்புறமா என்னை வந்து பார்க்கலாம்.

அவசரமே இல்லை. என் அட்வான்ஸ் வாழ்த்துகள்டா. சிஸ்டர்கிட்ட கோபப்படாதே. அவங்ககிட்ட, இதுக்குச் சரியான ஒரு காரணம் இருக்கும். பீ ஹேப்பி. பை!''

கௌதம் சேரில் பின்னால் சாய்ந்து, மெல்லக் கண்களை மூடினான். அவன் முகம் ஆனந்தம், கோபம், ஆத்திரம், நிம்மதி என்று மாறி மாறி உணர்ச்சிகளை வெளிப்படுத்தியது. இறுதியாக இத்தனை வருட டென்ஷனும் வடிய, மூடிய விழிகளின் முனைகளில் வைரத்துளிகளாய் கண்ணீர் ததும்பி நின்றது.

யோசித்து ஒரு முடிவுக்கு வந்தவன், ''விக்ரம்! நான் அவசரமா மும்பை போக வேண்டியிருக்கு. ஒன் வீக்ல வந்திடுவேன். சாரா மேடமோட சேர்ந்து ஆபிசைப் பார்த்துக்க. எந்த சைட்லயும் வொர்க் தடைபடக் கூடாது. முக்கியமான விஷயமா இருந்தா மட்டும், என்னைக் கான்டாக்ட் செய். மும்பைக்கு இன்று நைட் டிக்கெட் புக் பண்ணிடு. தாஜ்ல ரூம் போடணும்'' என அடுக்கடுக்காய் உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டுக் கிளம்பினான்.

தன்னுவிடம் நேரிலேயே சென்று, ''தன்னு! அவசரமா மும்பை போகணும். மதுவை ஜாக்கிரதையா பார்த்துக்க. வெளியே விடாதே. விக்ரம் தினமும் வருவான். ஏதாவது உதவின்னா... தயங்காமச் செய்வான். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அத்தனைச் சீக்கிரமா முடிச்சிட்டுத் திரும்பிடுவேன். வந்ததும், உங்க எல்லோருக்கும் ஒரு குட் நியூஸ் காத்திட்டு இருக்கு!'' என்றான்.

''அண்ணா! மொதல்ல அந்த விஷயத்தைச் சொல்லிட்டு, அப்புறம் கிளம்புங்க. மதுவைச் சமாளிக்கிறது தான் கஷ்டம். தினமும் உங்களைப் பார்க்கலேன்னா ரகளை



பண்ணிடுவா. அவரும் ஊரில் இல்லை. எப்படிச் சமாளிக்கப் போறேனோ?'' என்றாள் ஆவலோடு.

கௌதமின் அருகில் ஓடி வந்த இரண்டு வயதுச் சொர்க்கத்தைக் கையில் ஏந்தி, அதன் குண்டான கன்னங்களில் முத்தமிட்டவன், ''மது டார்லிங்! மாமா சீக்கிரம் வருவேன். அதுவரை சமர்த்தா இருக்கணும். இங்கே பார்! உனக்காக... நிறைய டாய்ஸ், கலரிங் புக்ஸ், கிரேயான்ஸ்... ஓகே வா? அம்மாவைத் தொல்லை பண்ணமாட்டா என் குட்டிச் செல்லம். சரியா? மாமா வரும்போது, இவ்வளவு டாய்ஸ் வாங்கிட்டு வரேன். ஓ.கே வா?'' எனக் கொஞ்சி, கெஞ்சி மதுவைச் சமாதானப் படுத்திவிட்டுக் கிளம்புவதற்குள் ஒரு வழியாகி விட்டான். அதன் பின் தாத்தா, அப்பா என்று இருவரின் பாதம் பணிந்து விடைபெற்றான். தேவையான உடைகளைப் பேக் செய்து முடித்து விட்டு, தேவியின் புகைப்படத்தைக் கையில் எடுத்தான்.

''இத்தனை வருஷமா ஏண்டி என்னைப் பிரிஞ்சு, என்னைத் துடிக்க வைச்சிட்ட? உன்னால எப்படி என்னை விட்டு இருக்க முடிஞ்சது? நான் எதிர்பார்த்ததுதான் என்றாலும், ரிஷிபாலா தான் தேவின்னு விஜய் சொன்னதும்... ஒரு நிமிஷம் என் இதயம் நின்னே போச்சு! என் கண் முன்னாலேயே, வேற யாரோ மாதிரி ஏன் நடிக்கிற?'',

பெரிய அளவில் மெடிக்கல் ட்ரீட்மெண்ட் எல்லாம் நடந்திருக்கு. எத்தனைக் கஷ்டப்பட்டிருப்பே? ஏண்டா... ஏன்? இதெல்லாத்துக்கும் காரணத்தைத் தேடித் தான், மும்பை போறேன். வந்த பிறகு உன்னைச் சந்திக்கிறேன்''

என்றவன், குனிந்து மென்மையாக அதில் இதழ் ஒற்றினான்.

விஜயிடம் தனக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்துக் கொண்டு, வருணைத் தொடர்பு கொண்டு பேசினான். சிபியிடம் வேலை விஷயமாக மும்பை செல்வதாக மட்டும் கூறிவிட்டு, ஏர்போர்ட் கிளம்பினான்.

# 23

வெளியூரிலிருந்து திரும்பிய கௌதமின் முகத்தில், வசீகரம் கூடிப் போயிருந்தது. விமான நிலையத்தில் அவனை அழைத்துச் செல்ல வந்த விக்ரம், கௌதமைப் பார்த்து அதிசயித்துப் போனான். கௌதமிடம் சந்தோஷமும், நிம்மதியும், தெளிவும்... பார்த்தவுடன் கண்கூடாகத் தெரிந்தது.

வியப்பில் வாயடைத்துப் போன விக்ரமைப் பார்த்துப் புன்னகைத்து, அவன் தோளில் உரிமையாகக் கைகளைப் போட்டு அணைத்தான் கௌதம்.

''என்ன மேன்? நீ எங்கே இங்கே? வொர்க்கெல்லாம் எப்படிப் போகுது?'' என்று பேசிக் கொண்டே காரில் ஏறினான்.

ஃப்ரஷ்ஷாக கிளீன் ஷேவ் செய்த முகத்தோடு கச்சிதமாக உடையணிந்து வந்த கௌதமைப் பார்த்து, அலுவலகமே வாய் பிளந்தது. மலர்ந்த முகத்தோடு நிதானமாக அனைவருக்கும் காலை வணக்கம் சொன்னவனைப் பார்த்து நெகிழ்ந்தனர். கௌதமின் பார்வை ரிஷி பாலாவின் மேல் ஒரு நொடி அதிகமாகப் படிந்து மீண்டது.



அவளை அடிக்க வேண்டும்... இழுத்தணைத்து முத்தம் பதிக்க வேண்டும்... சண்டை போடவேண்டும்... கோபித்துக் கொண்டு அவளை உலுக்க வேண்டும்... என்று விதவிதமாக தனக்குள் எழுந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அதற்கு இன்னும் நேரம் இருக்கு என்ற முடிவில் மௌனமானான்.

ஆனால், அங்கு பணிபுரிந்த அத்தனைப் பேரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். இந்த உயிர்ப்பைத் தானே இத்தனை நாளாகத் தொலைத்திருந்தான்! ரூபா நேராக ஜி.எம்மிடம், ''குட் மார்னிங் மேம்! நம்ம பாஸ் இன்னிக்கு ஆளே மாறிப் போய் வந்திருக்கார். அவர்கிட்ட அத்தனை உற்சாகம்! பார்க்கவே சந்தோஷமா இருக்கு. ஊர்ல அப்படி என்ன மேஜிக் நடந்ததுன்னு தெரியலை!'' என்றாள்.

சாராவுக்கு, ரூபாவின் பேச்சு ஆவலைக் கிளப்ப, உடனே ஒப்புக்காக ஒரு ஃபைலை எடுத்துக் கொண்டு எம்.டி.யைச் சந்திக்கச் சென்றார். அவர் கண்களிலிருந்த ஆர்வமே விஷயத்தை வெளிப்படுத்திவிட்டது.

''ஹலோ! குட்மார்னிங் மேடம்! ஏன் இத்தனை டென்ஷன்? அதற்குள் என்னைப் பற்றி, உங்களுக்குத் தகவல் வந்திடுச்சா?'' பற்கள் பளீரிடப் புன்னகைத்தான்.

தன்னைக் கண்டு கொண்டானே என்ற கூச்சத்தில், ''நோ...நோ! ரூபா என்கிட்ட எதுவும் சொல்லவே இல்லை. இந்த பைலுக்காகத்தான்...'' என்றதுமே கௌதம் மனம் விட்டுச் சிரித்தான்.

அதைப் பார்த்துக் கனிந்தவர், உங்களை சிரித்த முகமாகப் பார்த்து எத்தனை நாளாச்சு! நீங்க எப்பவுமே இதே மாதிரி சந்தோஷமா இருக்கணும் பாஸ். நிஜமாகவே இந்த

பைலில் உங்க சைன் வேணும். இப்ப ஷாப்பிங் மால் இன்டீரியர்ஸைப் பார்க்க நானும், விக்ரமும் கிளம்பறோம்.

பிஃப்த் ப்ளோர் இன்டீரியர்ல, சில டவுட்ஸ் இருக்கு. ரிஷிபாலா மேடம்கிட்டப் பேசி, கிளியர் பண்ணணும். இன்னிக்கு நைட் அவங்களை வெளியே கூட்டிட்டுப் போய் டின்னரை முடிச்சுகிட்டே பேசிடறேன். நாளைக்கு லேண்ட் ஸ்கேப் ஆட்கள் வந்திடுவாங்க. கண்டிப்பா இன்னிக்கு அவங்ககிட்ட பேசியே ஆகணும்.''

கண்கள் மின்ன, ''ஓ! நோ ப்ராப்ளம். இன்னிக்கு நானே அவங்களை மீட் பண்றேனே! அவங்களோட டிசைன்ஸ் எல்லாமே புதுசாகவும், இம்ப்ரசிவாகவும் இருக்கு. ஜாயின் பண்ணிய பிறகு, அவங்ககிட்ட எதுவுமே பேச முடியலை. ஈவினிங் ப்ரீயா தான் இருக்கேன். ஐ வில் மீட் ஹர். பட்... நான் தான் பேசப்போறேன்னு சொல்லாதீங்க. அது ஒரு சின்ன சர்ப்ரைஸ் ஆக இருக்கட்டும்'' என்றவன், அந்த வேலை பற்றிய விபரங்களை சாராவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

''வரேன் ரிஷிபாலா மேடம்! நீங்களா... நானான்னு பார்த்திடலாம். உங்களுக்கு மட்டும் தான் நடிக்கத் தெரியுமா? ஈவினிங் உங்களை ஒரு வழி பண்ணிடறேன்'' என்று உற்சாகமானான்.

சாரா, ரிஷிபாலாவிடம் ஹோட்டலின் பெயரைச் சொல்லி, ஏழு மணிக்கு டிஸ்கஸ் பண்ணலாம் என்று மட்டுமே தெரிவித்திருந்தார்.

முதலில் வந்து சேர்ந்து ரிஷிபாலா தான். சாரா மேடம் வராததால், ரிசர்வ் செய்த டேபிளுக்குச் சென்று அமர்ந்தாள். உள்ளே நுழைந்ததுமே அவளைக் கவர்ந்தது அதன் சூழல் தான். அதிக ஆரவாரமின்றி ஒப்பன் பிளேசில் அமைதியாக, மெலிதான தென்றல் தவழ, அதன் பின்னணியில் இனிமையான இசையை அனுபவிப்பது, தனிப்பட்ட அனுபவமாக இருந்தது. காற்றில் மிதந்து வந்த இனிய நறுமணத்தை நுகர்ந்தபடி, செல்போனை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.



கௌதம் உள்ளே நுழையும் போதே அவளைப் பார்த்து விட்டான். உடலை இறுக்கிப் பிடித்த ப்ளூ ஜீன்ஸ், வெண்ணிற டெனிம் டாப், மெலிதான பிளாட்டின நகைகள், காதில் அணிந்திருந்த வைர டிராப்ஸ் அவளின் மெல்லிய தலையசைப்பில் கூட ஜொலித்தது! மெலிதான லிப்ஸ்டிக், புருவங்களுக்கிடையே ஒற்றைக் கல் ஒளிர்ந்தது.

இத்தனை நவீனமான உடையில் ரிஷிபாலாவை முதன்முதலாகப் பார்த்தும் கௌதம் மூச்சடைத்துப் போனான். ஒரு பெருமூச்சில் அத்தனை உணர்வுகளையும் கட்டுக்குள் கொண்டு வந்து, ''ஹலோ ரிஷிபாலா மேடம்! ஹியர் இஸ் கௌதம்!'' என்றான்.

அவள் காதருகே ஒலித்த மென்மையான காந்தக் குரலில் பதறி எழுந்தவளுக்கு, கையிலிருந்த செல்போன் நழுவியது. அதைக் கீழே விழாமல் லாவகமாகப் பிடித்தவன், ''ஹே! ஜஸ்ட் ரிலாக்ஸ்! என் குரல் அத்தனைப் பயங்கரமாகவா இருக்கு?'' என்றான்.

'இவர் எங்கே இங்கே! போச்சு. என் கட்டுப் பாடெல்லாம் பறந்திடும் போல இருக்கே! நான் தொலைஞ்சேன். சாரா மேடம் வரலையே!'' இதயம் தாறுமாறாகத் துடிக்க ஆரம்பித்தது.

''வெல்கம் மிஸ்டர்.கௌதம்! நான் உங்களை

எதிர்பார்க்கலை. அதனால கொஞ்சம் தடுமாறிட்டேன்'' என்று சமாளித்துக் கொண்டாள்.

''அடிப்பாவி! கௌதமா? நல்லாவே நடிக்கற. இனி பாரு''

''யெஸ் மிஸ்.ரிஷிபாலா! மிஸ் தானே நீங்க?'' அவன் அருகாமையினால். இயற்கைச் சூழலையும் மீறி நெற்றியிலும், மூக்கிலும் மினுமினுத்த வியர்வை வைரங்களாய் அவள் பளிங்கு முகத்தை மேலும் ஜொலிக்கச் செய்து வசீகரமாக்கியிருந்ததது.

பதிலை எதிர்பாராமல், ''நம்ம கன்சர்ன்ல நீங்க ஜாயின் பண்ணி டூ விக்ஸ் ஆகுது. உங்க டிசைன்ஸ் ரொம்ப இம்ப்ரசிவா இருக்கு. வெரி நைஸ் டிசைன்ஸ்! அதுக்காக, உங்களைத் தனியா சந்திச்சு தேங்க்ஸ் சொல்ல, நானே வந்துட்டேன். இந்த வொர்க் மட்டுமில்லாம, எங்களோட எல்லா ப்ராஜெக்ட்லயும் உங்களோட திறமையை நீங்க முழுசா வெளிப்படுத்தணும். விஷ்வா பில்டர்ஸ் ஆவலோட உங்களை எதிர்பார்த்துட்டு இருப்போம். எனிவே... தேங்க்யூ வெரிமச், பார் ஜாயினிங் அஸ்!'' என்றவன், அவள் விரல்களை மென்மையாகப் பற்றினான்.

நீளநீளமாக அழகான கியூட்டக்ஸ் அணிந்த விரல்கள். அப்படியே கடித்துச் சாப்பிட்டு விடலாம் போல! அவள் விரல்களைப் பற்றி உதட்டருகில் கொண்டு செல்ல மனம் தவித்தது. ''முன்பை விட இன்னும் அதிக மென்மை!'' அவனது முணுமுணுப்பு அவள் காதுகளை அடையும் முன்பே காற்றில் கலைந்து போனது.

விரல்கள் நடுங்க, மனம் தடுமாற, என்ன பேசுவது என்றே புரியாமல் இருந்தவளது கண்கள், எதிரே இருந்த



கண்ணாடி டம்ளரையே வெறித்தன.

''ஹலோ! கண்ணாடி டம்ளர் டிசைன்... நிஜம்மாவே ரொம்ப நல்லா இருக்கு. வேணும்னா, நானே இது மாதிரி வாங்கித் தந்திடறேன். சரியா?'' என்ற குரல், அவள் கவனத்தைக் கலைத்தது.

''ஹான்!'' என்று அவள் திடுக்கிட்டுக் அவனை ஏறிட்ட போது, அவனும் குறும்பு மிளிரும் புன்னகையோடு, அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஹலோ! என்ன வேணும்னு ஆர்டர் பண்ணிட்டா, இவர் கிளம்பிடுவார். ரொம்ப நேரமா வெயிட் பண்றார்.''

தயக்கத்துடன், ''அஸ் யூ விஷ்!'' என்றவளை ஆழ்ந்து பார்த்துவிட்டு, ''ஹலோ பிரதர்! முதல்ல தந்தூரி ஸ்டார்ட்டர் கொண்டு வாங்க. அப்புறமா...'' என்றவன், அவளுக்கு மிகவும் விருப்பமான லாலிபாப் சிக்கன், பிரைட் ரைஸ்... என்று ஆர்டர் சொன்னான்.

''இங்க ஸ்டார்ட்டர்ஸ் ரொம்ப நல்லாயிருக்கும்!'' என்று சொல்லும் போதே, அவர்களின் ஸ்பெஷல் ஐட்டமான 'வணக்கம் சென்னை' என்ற காக்டெயில், டேபிளுக்கு வந்தது. இஞ்சி, தேன், இளநீர் மற்றும் சாத்துக்குடியின் அருமைதான கலவையாக இருந்தது அது. கௌதம் ஆர்டர் செய்யச் செய்ய, ரிஷிபாலாவின் கண்கள் கலங்கிச் சிவந்தன.

அவள் மனது புரிந்தும், ''சாரி! என் மனைவிக்குப் பிடிச்ச மெனுவைத் தான் ஆர்டர் பண்ணினேன். ஏதாவது சேஞ்ச் செய்யறதா இருந்தா சொல்லுங்க... ப்ளீஸ்! அவளோட தான் இந்த மாதிரி வெளியே போய் பழக்கமே. அதோட சரி. இரண்டரை வருஷம் கழிச்சு, இப்பத் தான்

உங்க கூட வரேன். ஏதாவது ஆர்டரை மாத்திச் சொல்லணுமா? என்ன வேணும்?''

''நோ... நோ! எனக்கும் இதுவே ரொம்பப் பிடிச்சது தான்!'' என்றவளின் குரலில் மெல்லிய நடுக்கம் இருந்ததோ?

''எனக்கும் தெரியுமே!'' என்று கௌதமின் பதிலில் விழி விரித்தவளிடம், ''ஈஸி! பொதுவா லேடீஸ் சாய்ஸ் இதுவாகத் தானே இருக்கும்? அதைத் தான் சொன்னேன்!'' என்றதும்தான் அவள் நிம்மதியானாள்.

உணவு சர்வ் செய்யப்படும் வரையில், கொஞ்சம் சீரியசாகவே டிசைன்ஸ் பற்றி சாரா சொன்ன சந்தேகங்களை, அவளிடம் கேட்டுத் தெளிவு பெற்றான்.

லாப்டாப்பை விரித்து அவளருகில் நெருங்கி அமர்ந்தவனது வாய் தான் விவாதத்தில் ஈடுபட்டிருந்தது. அவன் கண்கள் முழு நேர வேலையாக அவளின் தோற்றத்தில் ஏற்பட்ட மாறுதலைத் தான் ஆராய்ந்து கொண்டிருந்தன.

நெற்றியில் அழகூட்டிய தழும்பு, சீராக்கப்பட்ட கூர் நாசி, உதட்டு மச்சம், மாசு மருவற்ற பளிங்குச் சருமம் என்று நிதானமாக அளவெடுத்தான். உணவு வந்ததும், பார்த்துப் பார்த்துப் பரிமாறினான். கடைசியாக அவன் பிரைட் ஐஸ்கீரிமை ஆர்டர் செய்ததும், இதழ்கள் துடிக்க அவனை ஏறிட்டாள்.

''பிரைட் ஐஸ்கிரீம்னு சொன்னதும், ஆச்சரியமா இருக்கில்ல? ரொம்ப நல்லாயிருக்கும். சூடான ஐஸ்கிரீமைப் பொரித்து... அது மேல முந்திரி, ஹனி எல்லாம் போட்டு, கொண்டு வருவாங்க. இதுவும் என் பார்பிக்குப் பிடித்த



மெனு. கையில எடுத்தா, கணக்குப் பார்க்காம உள்ள தள்ளுவா. சாப்பிட்டுப் பாருங்க. பிறகு விடவே மாட்டீங்க!'' என்றதும், இரண்டாவது முறையாகக் கண்களில் நீர் பெருகியது.

ஒரே ஒரு பீஸ் மட்டும் எடுத்துக் கொண்டு, மீதியை அவள் புறம் தள்ளினான். ''எனக்குப் போதும்; நீங்க சாப்பிடுங்க!''

வெளியே வந்ததும், ''ரிஷிபாலா! எதில வந்தீங்க? நான் உங்களை டிராப் பண்ணட்டுமா?'' என்றான்.

''நோ தேங்க்ஸ்! நான் கார்ல தான் வந்தேன்; எனிவே... இந்த டின்னரை என்னால மறக்கவே முடியாது! தேங்க்ஸ் அண்ட் குட்நைட்.''

''செல்ஃப் டிரைவிங்கா? பார்த்துப் போங்க. டென்ஷன் வேண்டாம். மெதுவா ஓட்டுங்க. என் பார்பி என்னை விட்டுப் போனதே, ரேஷ் டிரைவிங்ல தான்!'' என்றவனின் குரல் கரகரத்தது.

அந்தக் குரலில் மனம் பிசைய, மெல்லத் தலையை மட்டும் அசைத்து விட்டு, காரில் ஏறினாள் அவள்.

அவள் கைகளைப் பற்றி மென்மையாக அழுத்திய கௌதம், அதை விட மென்குரலில், ''குட் நைட்!'' என்றான். காரைக் கிளப்பியவளால் தொடர்ந்து ஓட்ட முடியவில்லை.

ஓரமாகக் காரை நிறுத்தி விட்டு, ''பிரபு! என் பிரபு! உன் பார்பியே நான்தான்டா. நான் பெரிய தப்பு செஞ்சுட்டேன். சாரிடா! உன்னை நெருங்க முடியாம... நான் தவிச்சுப் போறேன் பிரபு. ஸ்டியரிங் மேல் கவிழ்ந்து அழுகையை கட்டுப்படுத்த முடியாமல் விசும்பினாள். சிறிது நேரம் கழித்து, டிஷ்யூவால் கண்களைத் துடைத்துவிட்டு மெல்லக்

காரைக் கிளப்பினாள். அவளைத் தொடர்ந்து வந்தவன், அவளின் துயரம் கண்டு வேதனையுற்றான்.

''சாரிடா! இன்னும் ஒரு வாரம் பொறுத்திரு!'' என்று மனதோடு பேசி, வீடு வரை அவளைப் பின் தொடர்ந்தான். பத்திரமாக வீடு வந்து சேர்ந்ததை உறுதிபடுத்திக் கொண்ட பின்பே, தன் வீட்டை நோக்கிக் காரைச் செலுத்தினான்.

*''காத்திருந்தாய் அன்பே...*

*எந்தன் காதல் நீதானே!*

*ஒரு லட்சம் விண்மீன் மழையாய் பொழிகிறதே!''*

மெலிதாக ஒலித்த பாடல் வரிகளில் மனம் மயங்க, நிதானமாக வீடு வந்து சேர்ந்தான். கட்டிலில் மடித்து வைத்திருந்த தேவியின் சேலையை எடுத்து, மார்போடு அணைத்து சோபாவில் சரிந்து கண்மூடினான். இரண்டு முழு வருடங்களுக்குப் பிறகு மனம் நிறைய, நிம்மதியான உறக்கம் அவனைத் தழுவிக் கொண்டது.

# 24

அதன் பிறகு தொடர்ந்து வந்த நாட்களில் ரிஷிபாலாவைச் சகஜமாக அழைத்து அலுவலக விஷயத்தைப் பற்றிப் பேச கௌதம் தயங்கவே இல்லை. அவளின் அழகை, குழந்தைத்தனத்தை... சுவாரஸ்யமாய் அவளறியாமல் ரசிப்பது வழக்கமானது.

அன்று மாலை ஐந்து மணிக்கு அவளை அழைத்து, ''ரிஷிபாலா! இன்னிக்கு வில்லா கன்ஸ்ட்ரக்ஷன்ல சில



சேஞ்சஸ் இருக்கு. அங்க விசிட் பண்ணிட்டு, புதுசா கமிட்டான மல்டிபிளக்ஸ் தியேட்டர் இன்டீரியர்ஸ் பத்தி டிஸ்கஸ் பண்ண வேண்டியிருக்கு. ஷார்ப்பா ஏழுமணிக்கு இங்கேயே வந்து பிக்அப் பண்ணிக்கிறேன். வந்திடுங்க!'' என்றான்.

''நானா...!?''

வியப்பாக அவளை விழிகளால் ஆராய்ந்தவன், ''நீங்க தானே இங்கே டிசைன் என்ஜினியர்? ஏழு மணிக்கு வரேன்!'' என்றவன், பதிலை எதிர்பாராது கிளம்பி விட்டான்.

''மறுபடியும் இவரோட தனியாளாகப் போய், எப்படிச் சமாளிக்கிறது? அவர் என் பக்கத்தில் வந்தாலே, மனம் தடுமாறுதே!'' என்று தவித்தவள், 'நடப்பது நடக்கட்டும்; இனி வருவதை தைரியமாக எதிர்கொள்ளத் தயாராக வேண்டியது தான்' என்ற முடிவோடு, கணிணியை நிறுத்திவிட்டு வீடு வந்து சேர்ந்தாள்.

தாத்தா ஜோத்பூர் சென்றிருந்தார். சமேலியை அழைத்து, ''தீதி! நான் டின்னருக்கு வெளியே போறேன். விக்ரம் அண்ணா வருவார். அவருக்கு டிஃபன் செஞ்சிடுங்க. அவங்க வீட்டில் யாரும் இல்லை. ஊருக்குப் போயிருக்காங்க. நைட் நமக்குத் துணையா அண்ணா இங்கே தான் தங்குவார். மாடி ரூமை ரெடி பண்ணிக் கொடுங்க. நான் கிளம்பி வந்திடறேன்'' என்றாள்.

மரகதப்பச்சையில் குந்தன் வேலைப்பாடு செய்த அனார் சுடியில், சற்றே கவனம் எடுத்து தன்னை அழகு படுத்திக் கொண்டு வந்தவளைப் பார்த்து, ''தேவிம்மா! உன் பிரபு சார் கண்ணு வச்சிடுவார். ரொம்ப அழகு எங்க இளவரசி!'' என்றாள் சமேலி.

''போங்க தீதீ! உங்களுக்கு எப்பவும் இதே பேச்சு தான். என் பிரபுவைப் பார்த்தா தெரியும்... என்னை விட ஐம்முன்னு இருப்பார்'' என்று கன்னம் சிவக்க மொழிந்து விட்டு, டிரைவரோடு வந்து ஆபிசில் இறங்கிக் கொண்டாள்.

ஏழு மணிக்கு ஒரு நிமிடம் கூடத் தாமதம் செய்யாமல், கௌதமின் பென்ஸ் அவளருகில் வந்து நின்றது. கௌதம் அவளின் அலங்காரத்தைப் பார்த்து உற்சாகத்தில் மெல்ல விசிலடித்தான். அவளை முழுவதும் ரசித்துவிட்டு, கதவைத் திறந்து, ''கெட் இன்!'' என்றான்.

ஏறி அமர்ந்த பின் கௌதமைப் பார்த்த தேவியும் மூச்சடைத்துப் போனாள். அவனின் ஜீன்ஸ், முழு வெள்ளையில் சைனீஸ் காலர் வைத்த டீ- சர்ட்டும் தங்களின் திருமணம் முடிந்து நூறு நாட்கள் ஆனதற்காக தேவி வாங்கிப் பரிசளித்தது. அதை அணிந்து வந்த கௌதம், அன்று சந்தோஷ மிகுதியில் அவளைத் தூக்கிச் சுற்றி முத்தமிட்டதும் ஞாபகம் வந்தது. முகம் சிவக்க பார்வையைத் தழைத்தவளின் வெட்கம், கௌதமிற்கு முழுத் திருப்தியளித்தது.

''போகலாமா?'' என்றவனை ஏறிட்டுப் பார்க்காமலே, மெல்லத் தலையசைத்தாள்.

''ஹலோ! என்ன பீவரா? முகம் ரொம்பச் சிவந்திருக்கு!'' எனக் குறும்பு வழியப் பேசியவனிடம், ''நத்திங். நல்லாத் தான் இருக்கேன். தாத்தா ஜோத்பூர் போய் ஒரு வாரமாகுது. அது தான் டல்லா இருக்கு!'' என முனகினாள்.

அதன் பிறகு பலத்த மௌனமே அங்கு ஆட்சி செய்ய, சிடி பிளேயரை ஆன் செய்தான்.



*யாரோ இவன் யாரோ இவன்*
*என் பூக்களின் வேரோ இவன்*
*என் பெண்மையை வென்றான்*
*இவன் அன்பானவன்.*

இருவருக்கும் மிகவும் பிடித்தமான பாடல் ஒலித்ததும், ரிஷிபாலாவின் கண்கள் உடைப்பெடுத்தது.

லாங் டிரைவ் போகும்போது அவன் தோள் சாய்ந்து கண்மூடி ரசிக்கும் பாடல்களில் இதுவும் ஒன்று. கைக்கெட்டும் தூரத்தில் அவனிருந்தும், தோள் சாய முடியாமல் விலகியிருக்க நேர்ந்ததை எண்ணி மனம் வலிக்க, கன்னத்தில் வழிந்த நீரை அவனறியமால் சுண்டினாள். கௌதம் கூட அவளைச் சீண்டும் மனநிலையில் இல்லை.

காரின் வேகம் கூடியது. பயணம் தொடர்ந்து கொண்டேயிருந்ததில், ரிஷிபாலா, ''பாஸ்! நாம எங்கே போகிறோம்?'' எனவும், அவளைப் பார்த்து மெல்லச் சிரித்தான்.

''இந்த கார் எங்கே நிற்கப் போகுதோ அங்கே! என்றவனின் பதிலில் உதட்டைச் சுழித்தாள். கார் கடற்கரையில் வந்து நின்றதும்தான் சுய நினைவுக்கு வந்தாள்.

''பாஸ்! இங்கே...''

காரைப் பூட்டி சாவியை எடுத்து பாக்கெட்டில் போட்டுவிட்டு, ''ப்ளீஸ்! ஆபிஸ் அட்மாஸ்பியர் போரடிச்சுடுச்சு. கொஞ்சம் பீரியா இங்கே டிஸ்கஸ் பண்ணலாமேன்னுதான், கூட்டிட்டு வந்தேன்''

கையிலிருந்த பெரிய டவலை விரித்து தனிமையான இடம் தேடி அமர்ந்ததும், நிஜமாகவே ஒரு மணி நேரம் வேறு எந்தச் சிந்தனையும் இன்றி வேலையில் மூழ்கிப் போயினர்.

இரு கைகளையும் உயர்த்தி சோம்பல் முறித்த கௌதம், ''போதும் ரிஷிபாலா. பிசினஸ், வொர்க் பத்தி இன்னைக்கு நிறையப் பேசியாச்சு. இன்னொரு நாள் பார்த்துக்கலாம்'' என்றான்.

''ம். உங்களைப் பத்தி எனக்கு ஒன்றுமே தெரியாது. உங்க சொந்த ஊரே சென்னை தானா? நீங்க நார்த் இண்டியன் மாதிரியே இல்லை. தமிழ்ப் பொண்ணு மாதிரிதான் இருக்கீங்க!'' என்றவனின் பார்வை அவள் முகத்திலேயே நிலைத்திருந்தது.

திடீரென்று தெறித்து விழுந்த கேள்வியில் தடுமாறி, ''ஹான்! என்ன கேட்டீங்க? ஆமாம். இல்லை... இல்லை. என் ஊர் ஜோத்பூர். அங்க தான் இன்டீரியர்-ல ஸ்பெஷலைஸ் பண்ணினேன். என் அப்பா தமிழ்...'' என்றவள், இதற்கு மேல் கேள்வி கேட்டால் மாட்டிக் கொள்வோம் என்ற பயத்தில், ''பாஸ்! மணி எட்டாச்சு. கிளம்பலாம்... தாத்தாவும் இல்லை. சீக்கிரம் வீட்டுக்குப் போகணும்'' எனப் பிடிவாதக்காரக் குழந்தையாய் பேசியவளைப் பார்த்து சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

''இன்னும் கொஞ்ச நேரம் ப்ளீஸ். இன்னிக்கு என்னமோ கொஞ்சம் ப்ரீயா இருக்கேன். உங்க பேச்சு, டேலண்ட் பார்த்தா... என் பார்பியை ஞாபகப்படுத்துது. பார்பி என் மனைவி. உங்களுக்கும் தெரியும் தானே?'' என்றதும், கலங்கிப் போய் அவனைப் பார்த்தாள்.

''ஆஃபிஸ் ப்ரண்ட்ஸ். என்னைப் பத்தி இன்னேரம் சொல்லியிருப்பாங்க.''



''ஆமாம். ரியலி அயாம் சாரி!'' என்றவளிடம் அதிரடியாக, ''எதற்கு சாரி? நான் தான் அவளைப் பிரியவே இல்லையே. இப்பக் கூட, அவ என் கூடத் தான் இருக்கா!'' என்றதும் திடுக்கிட்டுப் போனாள். ''என்ன அதிர்ச்சியா இருக்கா? என் பார்பியை என்னிடமிருந்து யாராலும் பிரிக்க முடியாது. என் உயிரில், சுவாசத்தில அவ எப்பவுமே கலந்திருக்கா. அதனால நான் அவளைப் பிரிஞ்சதா நினைக்கவே இல்லை'' என்றதும் அவனின் காதலில் கரைந்து பேச்சற்றுப்போனாள்.

இன்னிக்குத் தான் மனம் விட்டு பேசறேன். உங்களை என்னோட ப்ரெண்டா நினைக்கறதால தான். நீங்க என்னை விட சின்னவங்களாத் தான் இருக்கணும். அதனால நீன்னே கூப்பிடறேனே. என் பார்பிக்குப் பிறகு முதன்முதலா உன்னோட தான் வெளியவே வரேன். இன்னும் கொஞ்ச நேரம் பிரியா பேசிகிட்டு, வெளியே டின்னர் முடிச்சுகிட்டு பத்திரமா நானே உன்னை வீட்டில் கொண்டு போய் விடறேன். சரியா?''

பதில் பேசத் தெரியாமல் பேந்த பேந்த விழித்துக் கொண்டு நின்றவளை மேலும் கேள்வி கேட்டுச் சீண்ட வேண்டும் என்ற ஆவல். அதற்குள் அவனுக்குத் தன்னுவிடமிருந்து அழைப்பு. இன்று மதுவைப் போய் பார்க்கவில்லை. அதனாலதான், கூப்பிடுகிறாள் என்று தெரிந்தது. வேண்டுமென்றே, ''எனக்கு ரொம்ப ஸ்பெஷலான வங்ககிட்டயிருந்து போன்... ப்ளீஸ்!'' என்று சொல்லி, போனைக் காதில் வைத்ததும் எதிர்பார்த்தது போலவே மது தான்!

தன் மழலைக்குரலில், ''ஹலோ மாம்ஸ்! இன்னிக்கு நீ ஏன் வரலை? உன் கூட டூ போ'' என்றாள்.

முகம் முழுக்க சந்தோஷம் பொங்க, ''ஹாய் டார்லிங்!'' என்றான்.

ரிஷிபாலா திடுக்கிட்டுப் போனாள். அவள் ரியாக்ஷனைப் பார்த்து மேலும் உற்சாகமாக, ''டார்லிங்! கோவிச்சுக்காதே குட்டிம்மா. நாளைக்கு உன்னை ஸ்பெஷலா ஷாப்பிங் கூட்டிட்டுப் போறேன். நீ கேட்கிறதெல்லாம் வாங்கித் தரேன். நாளைக்குப் புல்லா உன் பிரபு உன் கூடத் தான் இருப்பான். ஓகேவா இப்ப நான் பிசினஸ் விஷயமா ஒரு ப்ரண்ட் கூட பேசிகிட்டு இருக்கேன் நைட் வரேன் எனக்காக காத்திருடா. பை குட்டிம்மா.'' என்றவன் புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

அதற்கு மாறாக அவள் முகத்தில் டன் டன்னாக எரிச்சல்.

''கௌதம்! உங்களுக்கு ரொம்ப ஸ்பெஷலானவங்க உங்களை எதிர்பார்த்துகிட்டு இருக்காங்க போல இருக்கு... கோவிச்சுக்கப் போறாங்க. நீங்க கிளம்புங்க நானும் கிளம்பறேன்'' கொதித்தாள்.

''நோ! நோ! ஈவினிங் டைம் உங்ககூட ஸ்பெண்ட் பண்றதா டிசைட் பண்ணியாச்சு. என் டார்லிங்கை சமாளிக்க எனக்கு வழி தெரியும்'' என்றவன் சிபியை போனில் அழைத்தன்.

''டேய் சிபி! பெங்களூர் எப்படிடா இருக்கு? ட்ரெயினிங் ஸ்மூத்தா போகுதா. இந்த சண்டே வந்திடுவ தானே? தன்னு, மது இரண்டு பேரையும் நேற்று வெளியே கூட்டிப் போனேன். ம்... என் பார்பி என் மேல ரொம்ப கோபமா இருக்கா. அவளைச் சினிமா கூட்டிட்டுப் போறதா



சொல்லியிருந்தேன். உன்னால தானே என் டார்லிங் எனக்குக் கிடைச்சா. அதனால அவ கோபத்தையும் நீயே சமாளி. ப்ளீஸ் எனக்காக அவகிட்ட போன் பண்ணி பேசுடா. நைட் நான் போய்ச் சமாதானப் படுத்தறேன். பை டா.''

கௌதம் பேசுவது சிபியிடம் என்றதும் தவிப்புடன் அவன் பேசுவதைக் கூர்ந்து கேட்க ஆரம்பித்தவள், பேசி முடித்ததும் ஆத்திரமானாள். சென்னை வந்ததிலிருந்தே எல்லாரையும் பார்க்கத் துடித்தவளை, தாத்தா தான் அடக்கி வைத்திருந்தார். அதற்குள் கௌதம் டார்லிங், பார்பி, குட்டிம்மா என்ற இவளின் செல்லப் பெயர்களையே கூறி உரிமையோடு பேசும் அளவிற்கு யாரிடமோ பழகி வருகிறான்' என்பதை தாங்கவே முடியவில்லை.

அதற்கும் மேலாக, சிபியும் இதற்கு உடந்தை என்றதும், கோபத்தில் உடலே நடுங்கியது. ''உங்க மச்சானுக்கும் உங்க பிரண்ட் பத்தித் தெரியுமா?''

''தெரியுமாவா? அவன் தான் டார்லிங்கை நான் மீட் பண்ணவே உதவி செய்தவன். என் பார்பியின் இடத்தை நிரப்பிக் கொண்டிருப்பதே அவள் தான். சாயல் அப்படியே என் பார்பி தான். அவளை ஒரு நாள் கூட பார்க்காமல் இருக்க முடியாது. அவளுக்கும் அப்படித்தான்'' என்றான் பெருமை வழிய!

ரிஷிபாலாவின் முகமோ சினத்தில் சிவந்து போனது. 'யாரையோ இத்தனைக் கொஞ்சறான்; என்னை மறந்தே போயிட்டான். நான் இவன் சுவாசத்தில் கலந்திருக்கேன்னு கப்சா விடறான்? விட்டா... நாளைக்கே அவளைத் தாலி கட்டிக் கூட்டிட்டு வந்திடுவான் போல இருக்கு. உடனே தாத்தாவைக் கிளம்பி வரச் சொல்லணும். நான்

முந்திக்கலைன்னா என் லைப்பே டேஞ்சராயிடும்.

அவள் மனதில் ஓடும் எண்ணங்களைத் துல்லியமாக அறிந்து கொண்ட கௌதமிற்கு அவள் மேல் செல்லமாக கோபம் வர, 'என்ன கண்மணி! என் மேல கோபம் பொங்குதா? இருக்கட்டும், இந்த மேட்டரை வைத்தே உன்னை ஓட்டறேன் பாரு!' என்று மனதோடு கொஞ்சி விட்டு, ''ரிஷிபாலா! என்ன பலமான யோசனை? எனக்குப் பசிக்குது. போகலாம். நைட் போய்... பார்பியை வேற பார்க்கணும். ப்ராமிஸ் பண்ணிட்டேன்.''

சாப்பிடும்போது, ''இப்பவே மணி ஒன்பது. டின்னர் முடிச்சு என்னை டிராப் பண்ணிட்டு ரொம்ப லேட்டா போனா... அவங்க பேரண்ட்ஸ் அலவ் பண்ணுவாங்களா?'' குழந்தையாக உதடு துடிக்க, அவன் பதிலுக்காக காத்திருந்த வளைப் பார்க்கவே பாவமாக இருந்தாலும், அவள் மேல் கோபம் குறையவில்லை.

''சான்சே இல்லை. நான் அவங்க வீட்டுக்கு எப்ப வேணா போற உரிமை இருக்கு. சொல்லப் போனா, நான் போனா அங்க எல்லாருமே ரொம்ப சந்தோஷப்படுவாங்க. ரொம்ப லேட்டானா அங்கேயே கூடத் தங்கிடுவேன் நோ பிராப்ளம்.''

அவன் முன்னே கண்ணீரை மறைக்க முடியாமல், கைக்குட்டையைத் தேடினாள். தன்னுடையதை எடுத்துக் கொடுத்து, ''ரிஷிபாலா! என்னாச்சு? கண் கலங்கியிருக்கு..''

''நத்திங்'' என்றவனிடம் நமட்டுச் சிரிப்போடு ''கண்ணு வேர்க்குதா?'' என்று மும்மரமாக சாலையில் கவனத்தைப் பதித்தான்.

சோர்ந்து போய்த் தானாகவே உறக்கம் தேவியைத் தழுவியது. தன் உயிரானவளைப் பார்த்து முகம் கனிந்தாலும், அவள் தன்னைப் பிரிந்து இருந்ததை மறக்கவோ மன்னிக்கவோ, முடியவில்லை. உறக்கம் கலையாமல் தன் அருகில் இழுத்து தன் தோள் மீது சாய்த்துக் கொண்டான். கலைந்த கூந்தலை மென்மையாக ஒதுக்கி, நெற்றியில் உதடுகளைப் பதித்தான். காரை ஓரமாக நிறுத்தியவன் விழிகள் அவள் முகத்தை ஆசை தீரப் பருகியது. ஆழ்ந்த உறக்கத்திலிருந்தவளை மெல்ல வருடினான்.



''இனி ஏன் பிரிந்து இருக்க வேண்டும்? அப்படியே வீட்டுக்குத் தூக்கிச் செல்ல வேண்டும்'' என்ற தாபம் பொங்கியது. அவள் தோள் மீது கைகளைப் படரவிட்டு அணைத்தவன்.

''எப்படித் தூங்கறா பார்? வேற யார் கூட வந்திருந்தாலும் இத்தனை நித்சலனமாய் உறக்கம் வராது. நான் கூட இருக்கேன்னு தான் நிம்மதியா தூங்கறா. இனி ஒரு நாள் கூட இவளைப் பிரிவது சாத்தியமில்லை. ஒரே ஒரு நாள் பொறுத்திரு கண்மணி'' என்ற ஆசையோடு அவள் கன்னத்தில் இதழ் பதித்து விட்டு காரைக் கிளப்பினான்.

வீடு வந்ததும், மெல்ல அவள் கன்னத்தைத் தட்டி, ''ரிஷிபாலா! எழுந்திரு'' என்றதும் பதறி எழுந்தவள், தன் வீட்டின் முன் கார் நிற்பதைக் கண்டு, ''சா...சாரி! தூங்கிட்டேன்.''

''அதான் தெரியுதே.''

''வீடு உங்களுக்கு எப்படி தெரியும்?''

அவளைப் பார்த்து கண் சிமிட்டி ''எப்படியோ? போய்ப் படுத்து நல்லா தூங்கு. என் தோளுக்குத் தான் போய் ஒத்தடம்

கொடுக்கணும் போல'' என்று சிரித்தான்.

முகம் ரத்தமெனச் சிவந்து போக, ''சாரி'' என்றாள்.

''இட்ஸ் ஓ.கே. ரொம்ப லேட்டாயிடுச்சு. நான் உன் வீட்ல சொல்லி விட்டுட்டு போறேன்.''

உள்ளே விக்ரம் இருப்பதால் தேவி பதறிப்போனாள். ''வேண்டாம். தாத்தா ஊரில் இல்லை. சமேலி தீதீதான் வெயிட் பண்ணுவாங்க. நீங்க கிளம்புங்க. குட் நைட். கையசைத்து விடை கொடுத்தாள்.''

ஹாலில் லைட் எரிந்து கொண்டிருக்க, சோபாவில் அமர்ந்திருந்த விக்ரம், எதுவும் பேசாமல் தன் வாட்சை திருப்பி மணி பார்த்தான்.

குற்றஉணர்வுடன், ''சாரிண்ணா! பீச் போயிருந்தோம். நிஜமா டிஸ்கஸ் தான் பண்ணிட்டு இருந்தோம். டைம் ஆயிடுச்சு.''

''நான் உன்னை எதுவும் கேட்கவே இல்லையே தேவிம்மா. முதலாளி திரும்பி வந்து, உன்னைப் பத்திரமாக ஒப்படைக்கும் வரை, நீ என் பொறுப்பு தானே. லேட்டானதும் கொஞ்சம் படபடப்பாயிடுச்சு பாஸோட இருக்கும்போது போன் பண்ணவும் தயக்கமா இருந்தது. போய்த் தூங்கு.''

# 25

மறுநாள் காலையில், ''ஹலோ குட்மார்னிங்!'' என்ற கௌதமின் குரலில் தூக்கம் பறந்தோட, ''ஹான்!'' என்றாள்.

''யாருன்னு தெரியலையா? கௌதம் பேசறேன். திரும்ப விஷ் பண்ற பழக்கம் இல்லையா?''



''குட்மார்னிங் பாஸ்! உங்க போனை எதிர்பாராததால், கொஞ்சம் தடுமாறிட்டேன்.''

''நைட் லேட்டா போனதுக்கு எதுவும் பிரச்சினையில்லையே? ஏன்னு தெரியலை... உன் கூட இருந்தா... எனக்கு டைம் போறதே தெரியல பாலா! உன்னை என் பிரண்டுன்னு டிக்ளர் பண்ணிய பிறகு, மனது ரொம்பச் சந்தோஷமா இருக்கு.''

இப்ப கொஞ்சம் நாளா என் மனசில் ஒரு விஷயம் பாடாய் படுத்திட்டு இருக்கு. அது பத்திக் கொஞ்சம் பர்சனலா உன்கிட்ட பேசணும். ஈவ்னிங் மீட் பண்ணலாம். உன் சுகமான தூக்கத்தைக் கெடுத்ததுக்குப் பரிகாரமா, இன்னிக்கு உனக்கு லீவ் சாங்ஷன் பண்றேன். நல்லா தூங்கு. ஈவினிங் நானே ஆறு மணிக்கு வந்திடறேன். பை!''

காபியுடன் உள்ளே வந்த சமேலி, ''தேவிம்மா! ஆபிசுக்கு டைம் ஆகலையா? இன்னும் குளிக்கவே இல்லை.''

''இல்லை தீதீ! நான் இன்னிக்கு லீவ். தூங்கப்போறேன். பிரஷ் பண்ணிட்டுக் காபி குடிச்சிட்டு தூங்கறேன். சரியா?''

அவள் பாத்ரூமிலிருந்து வந்ததும் ''தேவிம்மா! கையை நீட்டு. உனக்கு மெஹந்தி வச்சு விடுறேன். நான் அழகா டிசைன் போடுவேன் தெரியுமா? கோன் கொண்டு வந்திருக்கேன்.''

''ரியலி! ஆன இப்ப எதுக்கு மெஹந்தி?''

உன்னோட அழகான கைக்குப் போட்டு விட ரொம்ப ஆசையா இருக்கு. நீ இந்த மாதிரி ஓய்வா வீட்டிலிருப்பதும் அபூர்வம். போடும் போதே, சீக்கிரம் காய்ந்து போயிடும்!''

என்றவள், அவளது முழங்கை வரை மிக அருமையான டிசைனை வரைந்துவிட்டு, ''அவ்வளவு தான். நீ நிம்மதியா தூங்கு. விக்ரம் பையாகிட்ட லீவ் சொல்லிட்டு, டிஃபன் ரெடி பண்ணிட்டு எழுப்பறேன்.'' கனமான வெல்வெட் திரைச்சீலைகளை இழுத்து வெளிச்சத்தைத் தடை செய்து விட்டு, சமேலி வெளியே வந்தாள். அடித்துப் போட்டாற் போல மூன்று மணி நேரம் அயர்ந்து தூங்கி எழுந்ததும், மனம் இலேசானது.

கையில் மெஹந்தி மிக அழகாகச் சிவந்திருந்ததைப் பார்த்து, ''தீதீ! ரொம்ப தேங்க்ஸ். என் மேரேஜின் போது கூட நான் மருதாணி வைக்கல. ரொம்ப அழகா இருக்கு எங்கே கத்துக்கிட்டீங்க?''

''எங்க ஊர்ல இது சகஜம் தேவிம்மா. பொதுவா இது எல்லோருக்குமே தெரியும் நம்ம சைட் மேரேஜ் -ல மெஹந்தி போடறதுன்னா பெரிய பங்கஷனே நடக்கும். டான்ஸ், பாட்டு, எல்லாம் சேர்ந்து வீடே கலகலப்பாக இருக்கும். மாப்பிள்ளை மேல நீ ரொம்பப் பிரியம் வெச்சிருக்க. அதுதான் இவ்வளவு சிவந்திருக்கு!'' என்றதும், முகம் சிவந்து போனது. ஆனால், அவன் வேறு யாரையோ 'டார்லிங்!' என்று அழைத்துக் கொஞ்சியது நினைவுக்கு வர, உடனே வாடிப் போனாள்.

கண்களில் ஈரம் படர்ந்தது. 'என் பிரபுவுக்கு இன்னொரு பெண் மேல விருப்பம் வருதுன்னா, அவ கண்டிப்பா ரொம்ப நல்லவளா தான் இருப்பா. ஆனா, அந்த லக்கி கேர்ள் யார்ன்னு பார்க்கணும். அவளைக் கல்யாணம் பண்ணிக்கறது தான் அவருக்குச் சந்தோஷம்னா, கண்டிப்பா... நான் அதுக்குத் தடையா இருக்க மாட்டேன். என்னைப் பத்தி அவர்கிட்ட வெளிப்படுத்தவும் மாட்டேன். அவருடைய சந்தோஷத்துக்காக, நான் அவரையே விட்டுக் கொடுப்பேன்.



அவர் கல்யாணம் முடிஞ்சதும், தாத்தா கூட ஜோத்பூர் போயிட்டு, அவருக்குத் துணையாக அங்கேயே இருந்திட வேண்டியதுதான். அவரை விட்டுப் பிரிஞ்சதுக்கு, இதை எனக்குக் கிடைத்த தண்டனையா ஏத்துக்கறேன். அவர் கூடச் செலவு பண்ற ஒவ்வொரு நிமிஷமும், எனக்குப் பொக்கிஷம். வாழ்நாள் முழுக்க நினைத்து மகிழ, இந்தத் தருணங்கள் தானே துணையா இருக்கப் போகுது? அதனால, அவராட இருக்கற நாட்களைச் சந்தோஷமா கழிக்கப் போறேன் எதிர்காலத்தைப் பத்தி நினைக்கவே போறதில்லை. நடப்பது நடக்கட்டும்; இனி அழவே மாட்டேன்!' என்று மனதிற்குள் தீர்மானம் செய்து கொண்டாள்.''

அன்று மாலை குளித்து விட்டு, பிங்க், ஆரஞ்சு, சிவப்பு கலந்த டிசைனர் சாரியைக் கையில் எடுத்து ஆசையாகத் தடவிப் பார்த்தாள். திருமண உடை போல முத்துக்கள், குந்தன் கற்கள் பதிக்கப்பட்டிருந்த ஆடையைப் பார்த்ததுமே மனதைப் பறிகொடுத்து, விலையைக் கூட யோசிக்காமல் தேர்வு செய்திருந்தாள்.

பொடியாக வைரம் பதிக்கப்பட்ட பட்டர்பிளை கிளிப், கூந்தலை அடக்கியிருந்தது. ஐ லைனர், மெலிதாகத் தீட்டப்பட்ட லிப்ஸ்டிக், இரு புருவங்களுக்கு இடையே ஒளிர்ந்த சின்ன நெக்லஸ்... குட்டி ஜிமிக்கி என்று தன் முழு அலங்காரத்தையும் கண்ணாடியில் பார்த்ததுமே அவளுக்கே அவளை அடையாளம் தெரியவில்லை. கொஞ்சம் அழகு

கூடியிருப்பதாகத் தெரிந்தாலும், ஒரு சாதாரணச் சந்திப்புக்கு இது அதிகப்படியோ என்று தோன்றியது. பழையபடி முதலில் தேர்ந்தெடுத்த சுடியே போதும் என்று முடிவு செய்து அதை கையில் எடுத்தபோது, வெளியில் கார் ஹாரன் ஒலித்தது. சரியாக மணி ஆறு!

''போச்சு வந்துட்டார்!'' என்று சமேலியிடம் சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

காரில் அமர்ந்ததும், ''போகலாமா பாஸ்?'' என்று கேட்கும் வரை அவன் விழிகள் அவளை விட்டு அகலவேயில்லை. அவள் குரலில் தன் மௌனம் கலைத்து, ''ம்!'' என்பதற்கு மேல் பேச மனமின்றி காரைக் கிளம்பினான்.

அவளிடமிருந்து கிளம்பிய மிதமான யார்ட்லியின் நறுமணம் மனதை மயக்க, அதிலிருந்து மீள விரும்பாமலேயே அதை ஆழ்ந்து அனுபவித்தான். அந்த மௌனத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு, 'அந்தப் பெண்ணைப் பற்றி பேசத் தயங்குவதால்தான் அமைதியாக வருகிறான்' என்று எண்ணினாள் தேவி.

''பாஸ்! இன்னிக்கு நாம எங்கே போறோம்-னு எனக்குத் தெரியுமே!'' என்றதும், கேள்வியாக அவளைப் பார்த்தான்.

''நானே சொல்றேன். உங்க ஸ்பெஷல் ப்ரண்ட் பத்திப் பேசி, அவங்களை எனக்கு அறிமுகப்படுத்தத் தானே கூட்டிட்டுப் போறீங்க? எனக்குத் தெரிஞ்சிடுச்சு!''

அவனைச் சூழ்ந்திருந்த மயக்கம் முற்றிலும் விலக, அவளின் கேள்வியில் வாய் விட்டுச் சிரித்தான்.

உதட்டைச் சுழித்து, ''பரவாயில்லை பாலா! என்னைப் பற்றி ரொம்ப நல்லா தெரிஞ்சு வச்சிருக்க. நிஜமாகவே உன் கெஸ் பிரமாதம். இதற்கே நிச்சயமா ட்ரீட் தரேன். ஆமா,



எப்படி இவ்வளவு கரெக்டா யூகிக்க முடிஞ்சுது? எக்ஸலெண்ட்! என் மனசுல ஒரு பொண்ணு இருக்கான்னு எப்படித் தெரிஞ்சுது? ஆனாலும், நீ இத்தனைக் கிளவரா இருக்கக் கூடாது. உன்கிட்ட ஜாக்கிரதையா தான் இருக்கணும் போல. என் மனசுக்குள்ளயே புகுந்திட்டியே!'', என்றவன், தன் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

மனதில் இருக்கும் வேதனையை மறைத்து, ''அது! என்னை... யாருன்னு நினைச்சீங்க? சரி, அவங்களைப் பற்றிச் சொல்லுங்க.''

''நான் சொல்லப் போற சீக்ரெட்டை, வேற யாருக்கும் சொல்லிடாதே. என் பர்ஸ்ட் மேரேஜ் பத்தி உனக்குத் தெரியும் தானே? நாலு மாதம் முடிவதற்குள், அது கனவாய் போயிருச்சு. இப்பக் கொஞ்ச நாளா, என் மனசு முழுவதையும் என் பார்பிதான் ஆக்ரமிச்சிருக்கா. எப்பவும் அவளையே தான் நினைச்சுகிட்டு இருக்கேன். நானும் எத்தனை நாள் தான், இப்படியே தனியா காலத்தைக் கழிக்கிறது? தனிமை என்னைக் கொல்லுது பாலா.

இப்ப என் பிரின்சஸை சமீபமா பார்த்ததிலிருந்து, என்னால வேற எதையுமே நினைக்க முடியலை. அவளும் என்னை உயிரா விரும்பறா. எனக்காக உயிரையும் கொடுக்கற அளவுக்கு என்னை நேசிக்கறா. இரண்டாவது முறையா என் லைப் அவளோடதான்னு டிசைட் பண்ணிட்டேன். எனக்கே எனக்குன்னு, மது மாதிரி ஒரு பொண்ணு வேணும். என்னை அப்பான்னு கூப்பிடணும். மது எத்தனை அழகு தெரியுமா? ரொம்பச் சுட்டி. அவ, என் பார்பி மாதிரியே இருப்பா பாலா.

என் வீட்டிலேயும் என்னைக் கல்யாணம் பண்ணிக்கச்

சொல்லி ரொம்ப கம்பெல் பண்றாங்க. எனக்கும் லைப்ல ஒரு சேஞ்ச் தேவை. என் வீடு தேவி இருக்கும்போது அத்தனை கலகலப்பா இருக்கும். இப்பலாம் வீட்டுக்குப் போகவே வெறுப்பா இருக்கு.

என் வீட்டில் பழையபடி சந்தோஷம் திரும்பணும். அதுக்கு இந்த மேரேஜ் தான் சரியான வழி. ஒவ்வொரு வாரமும் சண்டே மட்டும் மதுக்குட்டியை இங்கே தூக்கிட்டு வந்திடுவேன். அவளோட சிரிப்பு, மழலை, சுட்டித்தனத்தில் வீடே நிறைஞ்சிருக்கும். ஏன் ஒரு வார வெறுமையும் என்னை விட்டு ஓடிப் போயிருக்கும். தினமும் என் வீடு அந்த மாதிரி இருக்கணும். சாரி, என் சோகத்தை சொல்லி உன்னைப் போரடிக்கிறேன்'' அவள் கைகளைப் பற்றி அழுத்தினான்.

அவன் பேசியது அவள் மனக் கலக்கத்தை அதிகரிக்கவே செய்தது. அவன் கைபற்றி வருடியது, அவள் புத்தியில் உரைக்கவே இல்லை.

''அவங்க ரொம்ப அழகா இருப்பாங்களா?'' ஏக்கத்தோடு குழந்தையாய் அவள் கேட்டபோது நெகிழ்ந்து போனான்.

'உன்னை நீ கண்ணாடியில் பார்த்ததே இல்லையா? பெண்களுக்குப் பொறாமை கூடவே பிறந்த குணம் என்பது சரியாகத் தான் இருக்கு' என்று மனதோடு அவளைக் கொஞ்சியவன், ''ஆமாம் ரிஷிபாலா! பிரின்சஸ் மாதிரி இருப்பா. அவளைப் பார்க்கத் தானே போற.''

அவன் பேசப் பேச மனதை வெறுமை சூழ, கண்களை நாசூக்காக துடைத்துக் கொண்டாள். ''அவங்க ரொம்ப லக்கி பாஸ்! பேர் என்ன?''



''எந்தப் பேரா இருந்தா என்ன? எனக்கு எப்பவுமே பார்பி தான்.''

சி.டி பிளேயரை ஆன் செய்ததும், ''பூக்களே கொஞ்சம் ஓய்வெடுங்கள்.

அவள் வந்து விட்டாள். அவள் வந்து விட்டாள்...''

ஷ்ரேயா கோஷல், ஹரி சரணின் குரல் குழைந்து இசைத்து, மனதை நிறைத்தது. இருவரின் குரலும் உயிரையே உருக்க, அதன் இசையில் தேவியின் மனம் அமைதியடைய கண் மூடி அனுபவித்ததாள். அவளின் மனநிலை புரிந்து மனம் கனிந்தவன், அதன் பிறகு அவளைச் சீண்டாமல் அமைதியாக காரைச் செலுத்தினான்.

அண்ணா நகரில் அவள் வீட்டின் முன் கார் நின்றது.

''ரிஷிபாலா!''

''ம்...''

''இறங்கலாம்''

மலங்க மலங்க விழித்தாள். ''இது..!''

''ஓ! இப்ப தான் பர்ஸ்ட் டைம் இங்கே வர்ற இல்லையா(!) இது தான் என் வீடு. உள்ளே வா.''

''இங்கே எதுக்கு?'' குரல் தந்தியடித்தது. கௌதம் மறுபுறம் வந்து அவள் கைபற்றி அழைத்து வந்தான். முகம் முழுக்கப் புன்னகையைப் படரவிட்டு, ''வெல்கம் ஹோம்...' ரிஷிபாலா! என் தங்கையைத் தவிர வீட்டுக்கு அழைத்து வந்த முதல் பெண் நீ தான். வா.''

அவனைப் புரியாத பார்வை பார்த்தவளிடம், ''யெஸ். நிஜம் தான். எனக்கு ஆச்சரியமா இருக்கு. போன மாதம் என் நடவடிக்கையே வேற மாதிரி இருந்தது. என்கிட்ட இப்ப

நிறைய சேஞ்சஸ். எனக்கே தெரியுது. அதுவும் என்னோட பர்ஸ்ட் அண்ட் பெஸ்ட் கோள் ப்ரண்ட் நீ. அதுதான் எப்படி நடந்ததுன்னு எனக்கே புரியலை. உன்கிட்ட ஏதோ மேஜிக் இருக்கு. அதான் உன்னைப் பார்த்ததுமே மனம் விட்டுப் பேச வைக்குது. ரியலி ஐ வாண்ட் டு தேங்க் வருண் பார் திஸ். அவன் உன்னை என்கிட்ட அனுப்பலைன்னா, உன்னை டோட்டலா மிஸ் பண்ணியிருப்பேன்.

பிரிட்ஜிலிருந்து ஜூஸ் எடுத்து டம்ளரில் ஊற்றியவன், ''ப்ளீஸ் எடுத்துக்க. நான் கொஞ்சம் வெளியே போயிட்டு இப்ப வந்திடறேன். ஜஸ்ட் பைவ் மினிட்ஸ். நீ டிவி பாரு. நானே லாக் பண்ணிட்டு போயிடறேன்.

வீட்டின் உள்ளே நுழைந்ததுமே தேவியின் மனம் தன் வசம் இழந்து தடுமாறிப் போனது. அவனின் பேச்சு கூட கவனத்தில் பதியாமல் சிலை போல அமர்ந்திருந்தவள், கதவை மூடும் ஒலியில் மெல்ல அசைந்தாள்.

அவளின் நீல நயனங்கள் அறை முழுவதும் சுழன்றது. இரண்டரை வருடங்களாக நீறு பூத்த நெருப்பாக அழுந்திப் புதைந்திருந்த நினைவுகள் கிளர்ந்து மேலெழும்பின. தன்னிசையாக கண்கள் நீரைப் பொழிய, எதிரிலிருந்த அனைத்துமே மங்கலாகத் தெரிய, மெல்ல எழுந்தாள்.

கால்கள் துவள, ஒவ்வொரு இடமாக சென்று பார்த்தாள். அவளுடைய பிரபுவோடு ஒவ்வொரு நிமிடமும் சந்தோஷமாகச் சுற்றித் திரிந்தெல்லாம் நினைவுக்கு வந்தது.

ஹால் சோபாவில் அவள் மடியில் படுத்து டிவி பார்த்த பிரபு... சமைக்கும்போது பின்னால் வந்து அணைத்து, கொஞ்சி வேலை செய்ய விடாமல் ரகளை செய்த பிரபு,



ஊஞ்சலை வேகமாக ஆட்டி ரசித்த பிரபு... தலை துவட்டி விடச் சொல்லி அடம் பிடித்த பிரபு, படுக்கையறையில் காதல் கணவனாய் தன்னை ஆக்கிரமித்த பிரபு. மொட்டை மாடியில் நிலவொளியில் ஏகாந்தமாய் இருவர் மட்டுமே ரசித்த மூன் லைட் டின்னர். அதன் பிறகு அவன் அணைப்பில்... என்று ஒவ்வொரு இடமும் ஒரு காவியமே படைக்க தன்னை மீறி நெஞ்சம் விம்மியது.

மெல்ல படுக்கையறைக்குள் நுழைந்தாள். படுக்கை மீது கிடந்த புடவை, அவளின் திருமண ஆல்பம் எல்லாம் கௌதமின் நிலையை எடுத்துக் காட்டியது. படுக்கையைத் தவிர்த்து தினமும் சோபாவில் தான் உறங்குவது போல அதன் மீதிருந்த தலையணையும் போர்வையும் அவனின் காதலை உணர்த்தியது.

படுக்கையில் கிடந்த ஆல்பத்தை நடுங்கும் கரங்களால் கையிலெடுத்து, மார்போடு அணைத்துக் கொண்டாள். மெல்ல மொட்டை மாடிக்கு வந்தவளின் கையிலிருந்த ஆல்பம் இரும்புக்குண்டாய் கனத்தது. அங்கிருந்த ஊஞ்சலில் சென்று அமர்ந்தவள், ஆல்பத்தை விரித்து கௌதமின் முகத்தை மெல்ல வருடினாள்.

ஏறக்குறைய மூன்று வருடங்கள் பிரபுவைப் பிரிந்து, தான் முட்டாள்தனமாக இழந்ததெல்லாம் பூதாகரமாகத் தெரிந்தது. 'இனி என் பிரபு எனக்கில்லை!' என்ற கழிவிரத்தில் தன் மீதே கோபம் வர, ஆல்பத்தில் தலைசாய்த்து விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

என்ன மாதிரியான கவிதையான ஒரு வாழ்க்கையை இழந்துவிட்டோம் என்ற நினைவில், மனம் கதறியது. ஆறுதல் சொல்லவோ, சமாதானப்படுத்தவோ ஆளில்லாத

தனிமையில், துயரம் அவளை மூழ்கடிக்க, அதில் முழுமையாகக் கரைந்து போனாள்.

அரைமணி நேரம் அவளுக்குத் தனிமை கொடுத்து விலகிச் சென்றவன், திரும்பி வந்ததும் அவளைக் காணாமல் தேடிச் சென்றான். மொட்டை மாடிக்குச் செல்லும் கதவு திறந்திருப்பதைப் பார்த்து அங்கு விரைந்தவன், அவள் இருந்த நிலை கண்டு பதறிப் போனான்.

ஓய்ந்து போய் கண்களைத் துடைத்த ரிஷிபாலா, கதவருகில் நின்று தன்னையே துளைத்துக் கொண்டிருந்த கௌதமின் பார்வைக் கண்டு திகைத்தாள்.

# 26

''வா...ங்...க கௌதம்! ரொம்பப் போர...டிச்சது. அதான். வீட்டைச் சுத்திப் பார்த்தேன். ரொம்ப நல்லாயிருக்கு. இந்த... இந்த ஆல்பம்... உள்ளே இருந்தது. இதில இருக்கிறது தான், உங்க மனைவியா?'' அவன் பார்வையோ கத்தி போல கூர்மையாக இதயத்தைத் துளைக்க, அதற்கு மேல் சமாளிக்க முடியாமல், கண்கள் மடை திறந்தது. அதை மறைக்கவும் தோன்றாமல், கை நடுங்க மெல்லத் தலைகுனிந்து, ஊஞ்சலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

அவளின் நிலை கௌதமைக் கலங்கடிக்க, மெல்ல அவளருகே வந்தான். பேச்சற்ற மௌனம் அங்கே போர்வையாகப் படர்ந்திருக்க, தோட்டத்திலிருந்து வந்த மெல்லிய பூங்காற்று மேனியில் இதமாகப் பரவியது.



நிலவொளியைத் தவிர வேறு விளக்குகள் எதுவும் அங்கில்லை.

தன் இதயம் முழுக்க நீக்கமற நிறைந்திருப்பவளின் தூய்மையான அழகு, அவனை நிலை தடுமாறச் செய்தது. அவளிடமிருந்து விலகியிருக்க அறிவு கட்டளையிட்டும், காதல் கொண்ட மனம், அதை ஏற்க மறுத்து புத்தியை மழுங்கச் செய்தது. அவளின் மிக அருகே வந்தவன், கையிலிருந்த ஆல்பத்தை வாங்கி ஊஞ்சலின் மேல் வைத்தான்.

திகைத்துப் போய் விழி விரித்த தேவியின் கண்களில் ஏக்கம், எதிர்பார்ப்பு, காதல், தாபம், தவிப்பு, தோல்வி என்று பலவிதமான பாவங்களைக் கண்டவனுக்கு, அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்தவே முடியாமல் போனது. ஆவேசத்தோடு அவளின் இடையைப் பற்றி இழுத்துத் தன்னுள் அடக்கிக் கொண்டான்.

''கௌதம்!'' என்று குரல் நடுங்க ஏதோ பேச விழைந்தவளின் துடிக்கும் இதழ்களின் மேல் விரல் வைத்து, 'பேச வேண்டாம்' என்று சைகை செய்தான்.

வெகு நேரத்திற்குப் பிறகு, குரல் கரகரக்க, ''என் பார்பிக்கு... நான் எப்பவுமே பிரபு தான் என்பது, இந்த இரண்டரை வருஷத்தில் மறந்து போயிடுச்சா?'' என்றான்.

இத்தனை நேரம் இதயம் தாறுமாறத் துடிக்க அவன் கையணைப்பில் ஒடுங்கியிருந்த தேவிக்கு, அவனின் இந்தப் பேச்சில், ஒரு நிமிடம் சுவாசம் நின்று போனது.

'என் பார்பி!' என்றதுமே, இதுவரை இத்தனை நாட்களாகத் தான் பூட்டி வைத்திருந்த அத்தனை தளைகளும் கட்டவிழ, ''பிரபு! பிரபு! நான் யார்னு தெரிஞ்சுகிட்டீங்களா

பிரபு?'' என்றதற்கு மேல் வார்த்தைகள் சிறைபட, அவன் காலடியில் சரிந்து கதற ஆரம்பித்தாள்.

கௌதமின் கண்களும் கலங்க, கீழே அமர்ந்து அவளைத் தன்னோடு சேர்த்தணைத்துக் கொண்டான். பிரிந்த உள்ளங்கள் ஒன்று பட்டதும், வார்த்தைகளால் உணர வைக்கமுடியாத அத்தனை அன்பும், ஏக்கமும் அவனின் இறுகிய அணைப்பில் வெளிப்பட்டன. அந்த இனிமையான தருணத்திலிருந்து வெளியே வர மனமின்றி இருவரும் கட்டுண்டு கிடந்தனர்.

''சாரி... பிரபு! சாரி...!'' என்றதும் அவனின் கோபம் முழுமையாக வெளிப்பட்டது.

''சாரியா! எதுக்கு நான் உன்கிட்ட வச்ச காதல் மேல சந்தேகம் வந்திடுச்சே... அதுக்கா? அதனால தானே, நீ இருக்கறதையே... என்கிட்ட மறைச்சுட்ட இல்லை? பிரிஞ்சு வாழ முடிஞ்ச உன்னால, என்னை மறந்து வாழ முடியுமா? சொல்லுடி! உன்னால முடிஞ்சாலும் முடியும். அத்தனைத் தைரியம் உனக்கு இருக்கு. உன்முகம் அழகில்லாமப் போனா, வெறுத்திடுவேன்னு பயந்திட்டியா? நான் அழகை அட்மயர் பண்றவன் தான். ஒத்துக்கறேன். ஆனா, கட்டிய மனைவிக்கு விபத்துன்னா, உடனே கைவிட்டுட்டு ஓடிப் போகிற கொடூரமானவன் இல்லைடி.

உன் அழகை விட... உன் குணத்தை... நீ என் மேல காட்டுற பிரியத்தை... ஆயிரம் மடங்கு அதிகமாக நேசிச்சேன். நீ அதைப் புரிஞ்சுக்கவே இல்லைங்கறது நான் சாகற வரை... என்னைக் கொல்லும். இந்த மூணு வருஷமா நீ என்னைத் தவிக்க விட்டாலும், உன்னைப் புரிஞ்சு கிட்டதும், உன் மேல நான் வெச்ச காதல் தான் ஜெயிச்சது.



நீ செஞ்ச அத்தனையும் மறந்து, என்னை உன்கிட்ட இழுத்துகிட்டு வர வச்சது.

அவன் இலக்கற்று வெறித்து, தன் மனதில் இத்தனை நாளாகத் தேக்கி வைத்த துயரத்தையெல்லாம் வார்த்தைகளாய் வடிக்க, அவன் மனவலி உணர்ந்து தேவியின் கண்கள் ஈரமாக, சத்தமின்றி தேம்பியவளை முறைத்துவிட்டு, வேகமாக அவளருகில் வந்தான்.

''இப்ப எதுக்கு நீ அழறே? நீ கண் கலங்கினா, என் மனசு வலிக்குது. அழுது கரையாதே! ஏழேழு ஜென்மத்துக்கும் சேர்த்து, அத்தனை வேதனையையும் அனுபவிச்சு முடிச்சிட்டேன். இனிமேலும் எதையும் தாங்கற சக்தி இல்லை எனக்கு. அணு அணுவா உன்னை நினைத்து செத்துகிட்டு இருந்தேன். நல்லவேளை... நான் முழுசா போய் சேருவதற்குள்... நீ...'' என்றவனை மேலே பேசவிடாமல் அவன் இதழ்களின் மேல் விரல்களை வைத்து மூடியவள், அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

''வேண்டாம் பிரபு. நீங்க எதுவும் பேசாதீங்க. நான் செஞ்சது மன்னிக்கவே முடியாத தவறு தான். அதுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும், மனப்பூர்வமாய் ஏத்துக்கறேன்!'' அடிபட்ட குழந்தையாய் தலையுயர்த்தி ஏக்கத்துடன் பார்த்தவளை, நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

வார்த்தைகளால் அவளை வாட்டி விட்டது புரிய, ''தண்டனையா? கொஞ்ச நேரம் சும்மா இரு பார்பி. உனக்கு எதுவும் ஆகலை. இனிமே, காலம் முழுக்க நீ என்னோடு தான் இருக்கப்போற. இது தான் நிஜம்! உன்னை விட்டுட்டா, இதெல்லாம் கனவாய்ப் போயிடுமோன்னு பயமா இருக்கு. மூச்சு முட்ட இறுக்கிக் கொண்டு அவள் கழுத்து வளைவில்

முகம் புதைத்தவன், தன் உடல் முழுவதும் பரவிய அவளின் மென்மையில் சிலிர்த்துப் போனான்.

எல்லையில்லாத நிம்மதி பரவ, மனம் இலேசானது. இந்தச் சுகம், நிம்மதி, சந்தோஷம் என்ற அனைத்தையுமே, இவளால் மட்டுமே அளிக்க முடியும் என்ற சிந்தனை தோன்றியது. அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி, ''சாரி கண்ணம்மா! உன்னை ரொம்பத் திட்டிட்டேன் இல்லை?'' என்றவன், குனிந்து மென்மையாக அவள் இதழ்களில் முத்தமிட்டான்.

காடு மேடெல்லாம் அலைந்து திரிந்து, கடைசியாக பாதுகாப்பாக தனக்குரிய இடத்திற்கு வந்து சேர்ந்த நிம்மதியில், தேவியும் அவன் கரங்களுக்குள் வாகாக அடங்கினாள். அவளின் கரங்கள் வளைந்து அவன் இடுப்பை சுற்றிக் கொண்டன.

நேரம் அவர்களைத் தொந்திரவு செய்யாமல், அது பாட்டுக்குத் தன் வேலையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தது. கடிகாரத்தின் குக்கூ ஒலி அவளது மோனத்தைக் கலைக்க, முகம் குங்குமமாய்ச் சிவந்து போக, தேவி அவனிடமிருந்து மெல்ல விலகினாள்.

''என் மேல இருந்த கோபமெல்லாம் போயிடுச்சா பிரபு?''

''இல்லைடி. ஒரு பர்சன்ட் கூட குறையல. ஆனா, நீதான் என் பார்பின்னு தெரிஞ்ச பிறகு, ஒரு நொடி கூட உன்னைப் பிரிய மனசும் வரலை. இந்தக் கோபம் என் மனசில இருந்து மறையவே மறையாது. கடைசி வரை இருக்கும் தான்; அதே சமயம், நீயில்லாம நான் ஒண்ணுமேயில்லைன்னும் புரிஞ்சுகிட்டேன். தொழில்ல



ஈஸியா பல சிகரங்களைத் தாண்டி வெற்றிகளைக் குவித்த நான், சொந்த வாழ்க்கையில் சந்திச்சதெல்லாம் வெறுமையும் வேதனையும் தான்.

இத்தனை நாளா என் பலவீனமாக இருந்ததும் நீ தான். இப்ப நீதான் என் பலமாகவும் இருக்க. என் மொத்த சந்தோஷமும் நீ மட்டும் தான்னு புரிஞ்சுக்கிட்டேன். உண்மையான அன்பு எப்பவும் தானே டாமினேட் செய்ய நினைக்காது. விட்டுக் கொடுத்து தோற்பதில் ஒரு வலி இருந்தாலும். அதில் இருக்கிற சுகம் அனுபவிச்சா தான் புரியும். அதுக்கு ஈடா எதுவும் இல்லைடா. உன்னை என்னால கோவிக்கவோ வெறுக்கவோ என்னிக்குமே முடியாது'' நெற்றியில் படிந்த கேசத்தை விலக்கிய கௌதம், அவள் இடையில் கை கோர்த்து, அவள் உச்சியில் தலை சாய்த்தான்.

''பிரபு! வீட்டுக்குப் போன் செய்து தாத்தாகிட்ட பேசணும். நான் இங்கே இருப்பதை அவரிடம் சொல்லணும். இந்தத் தாத்தா... என் அம்மாவோட அப்பா.''

''நான் ஏற்கனவே அவர்கிட்ட பேசியாச்சு. நீ இங்க தான் இருக்கிறேன்னு அவருக்கும் தெரியும்.''

''உ... ங்... களுக்கு அவரை எப்படித் தெரியும்?''

''எல்லா கேள்விக்கும், சாப்பிட்ட பிறகு தான் பதில்!'', என்றவன், அவளைத் தன் அருகில் இருத்திக் கொண்டு, வாங்கி வந்திருந்த டின்னரை முடித்தான்.

குளித்து விட்டு வந்து படுக்கையில் அமர்ந்த தேவியிடம் பால் டம்ளரைக் கொடுத்துவிட்டு, ''நேரம் தான் பார்பி! எல்லாமே உல்டாவா நடக்குது பாரு!'' என்றவனின் வயிற்றில் குத்தியவள், செல்லமாக முறைத்தாள்.

''போடா! நானே குளிச்சிட்டு வந்து கலந்து தர நினைத்தேன். அதுக்குள்ள முந்திரிக் கொட்டையாட்டம் நீங்களே எல்லாம் செய்துட்டு, என்னைத் தப்பு கண்டுபிடிக்கறீங்க?''

''அப்பா! இப்பத் தான் என் பார்பி திரும்பி வந்திக்கா!'' என்றபடி அவள் கையிலிருந்த டம்ளரைப் பிடுங்கி, மீதமிருந்த பாலைப் பருகினான்.

சுகமாக அவள் மடியில் சாய்ந்து, ''என் பார்பிக்கே உரித்தான வாசம்... எத்தனை வருஷமாச்சு இந்தப் படுக்கையில் படுத்து!'' என்றவனைப் பார்த்து நெகிழ்ந்து போனாள்.

அவன் கேசத்தை, அவள் விரல்கள் மென்மையாக அளைந்தன. ''சாரி... பிரபு! உங்களோட பிரிவு இத்தனை வலியைத் தரும்னு உணர்ந்துட்டேன். இனிமேல், கனவில் கூட உங்களைப் பிரிய நினைக்கவே மாட்டேன்.''

கௌதம் பதில் பேசாது, அவள் வயிற்றில் முகம் புதைத்தான்.

''பிரபு! உங்க பார்பியோட அடையாளம் இப்ப என்கிட்ட இருக்கா''ஆசையும் ஆவலுமாகக் கேட்டவளின் உதடுகளை வருடி, ''உன்னைப் பார்த்ததும் எனக்கு வந்த முதல் சந்தேகம் இந்த ஸ்டார் மச்சம் பார்த்துத் தான்டா!''

''அதற்குப் பிறகு... நீ சிரிக்கும்போது, என்னை வசியப்படுத்தும் இந்த டிம்பிள்...'' என்றவனின் விரல்கள், ஆசையுடன் கன்னத்தை வருடியது. '' என்னைக் குழப்பியதே, உன் நீல நயனங்கள் தான்'' -மூடிய இமைகளில் இதழ் பதித்தான்.

''அது கான்டாக்ட் லென்ஸ்'' என அசடு வழிந்தாள்.



குறுஞ்சிரிப்போடு, ''ம். இப்பப் புரியது. ஆனா, எந்த லென்ஸ் போட்டாலும். உன் பார்வையிலிருந்த காதல், என்னையே சுற்றிச் சுற்றி வந்த பார்வையில் நீ காட்டிய நேசம்... இதுதான் என்னிடம் பேசி, உன்னைக் காட்டிக் கொடுத்தது'' என்றபடி அவள் முகத்தோடு முகம் பதித்தான்.

உன் புசு புசு கன்னம் கொஞ்சம் ஒட்டிப் போயிடுச்சு, எனக்குப் பிடிச்சதே உன் நீளமான கூந்தல் தான். இது கூட அழகு தான். ஆனா, மயில் தோகையாய் கூந்தலை விரித்து விட்டு வரும்போது...'' அவன் சொல்லப் போகும் வார்த்தையை எதிர்பார்த்து அவனையே பார்த்திருக்க, ''அப்படியே பத்ரகாளி மாதிரியே... பார்த்தா, பயம்மா... இருக்கும்!'' என்றதும், அவளிடம் அடி வாங்கினான்.

''பிரபு!'' எனப் பேசத் துவங்கியவளை கண் அசைவில் தடுத்தவன், ''போதும் பார்பி! இனி பேச்சுக்கே நேரமில்லை. எல்லா மாற்றமும் நல்லா தான் இருக்கு. ஆனா, நான் கேலி செய்யற உன் சப்பை மூக்கு தான் காணாமப் போச்சு!'' -மூக்கைப் பிடித்து ஆட்டினான்.

உணர்ச்சிக் குவியலாய் கண்மூடி தன்னருகே கிடந்தவளை நோக்கிக் குனிந்தான். தேவியின் கரங்களும், அவன் கழுத்தை வளைத்தன.

அதன் பிறகு ஏ.சியின் ரீங்காரம் மட்டுமே ஆட்சி செய்தது. மனம் முழுவதும் நிறைந்திருக்க, அவள் கன்னத்தில் முத்தமிட்டான். வெட்கம் தாளாது அவன் மார்பில் அடைக்கலமாக, ''தேங்க்ஸ்டி'' என்றான் கிசுகிசுப்பான குரலில்.

''பிரபு...!''

''சொல்லு கண்ணம்மா!''

''நான் இத்தனை நாளா எத்தனை செல்பிஷா இருந்திருக்கேன். தாத்தா, சிபி, தன்னு எல்லோரையும் பார்க்கணும்...''

''கண்டிப்பா. நாளைக்கு ஈவினிங் சின்ன பங்ஷன் வச்சு, உன்னை அவங்க முன்னால நிறுத்தப் போறேன்.''

''பிரபு! நீங்க யாரையோ ஸ்பெஷல் ப்ரெண்டுன்னு சொல்லிப் போனில் பேசினீங்களே? அவங்க...?''

குறுஞ்சிரிப்போடு அவள் கன்னத்தைக் கிள்ளி, ''நீயே அவங்ககிட்ட பேசு. நான் போன் பண்றேன்.''

''ஐயோ! வேண்டாம். யார்னு சொல்லுங்க. அவங்களை மேரேஜ்...''

''என் சந்தேகப் பிசாசே. நான் மேரேஜ் பண்றேன்னு சொன்னதே உன்னைத் தான். அப்படிச் சீண்டினாலாவது, நீ உன்னை வெளிப்படுத்திக்குவேன்னு நினைச்சேன். ஆனா... குண்டு! தைரியம்டி உனக்கு! நான் தினமும் சீண்டினால் கூட, நீ வாயே திறக்கலை!'' என்றவன், செல்போனில் நம்பரை அழுத்தி, ஸ்பீக்கர் மோடில் போட்டான்.

''மாமா! நீங்க ஏன் இன்னிக்கு வரலை. நான் உங்க கூட டூ! பேசவே மாட்டேன்'' என்ற மழலைக் குரலில் தேவி மயங்கிப் போனாள்.

''என் டார்லிங்கிட்ட வராம இருப்பேனா? என் பார்பியைப் பார்க்க, காலையில வரேண்டா செல்லம். சாப்பிட்டியா?''

''ம். அம்மா ரச பூவா ஊட்டி விட்டா. ஆனா, கோபமா ஊட்டி விட்டா.''

''என்னாச்சு? நாளைக்கு வந்து உன் அம்மாவை அடி பின்னிடலாம் என்ன?''



''அம்மா! உங்களை செமத்தியா கவனிக்கணும்னு அப்பாகிட்ட போனில் சொன்னா. அப்பா தூங்கி முழிச்சதும் வந்திடுவாங்க தெரியுமா?''

குழந்தையின் பேச்சிலிருந்து ஏதோ விஷயம் இருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டவன், ''அம்மா கிட்ட போன் குடு குட்டிம்மா!''

''அம்மா! இந்தா... மாமா பேசறாங்க.''

''என்னடி! என்னைப் பத்திக் கோள் சொல்லி முடிச்சிட்டியா?''

''ம்... முடிச்சிட்டேன்!'' என்றதும் தேவியின் இதழ்கள் தன்னையறியாது புன்னகையில் மலர்ந்தது. அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டவன், ''தன்னு! சாப்பிட்டாச்சா?'' என்றான்.

''ம்...''

''மதுக்குட்டி என்னமோ சொல்றா? என்ன விஷயம்? சிபி நாளைக்கு வர்றானா?''

''ம். அதான்... முந்திரிக் கொட்டை, உன்கிட்ட எல்லாமே ஒப்பிச்சுடுச்சே.''

''ஏண்டா ஒரு மாதிரி பேசற?''

''நீதான் ஒரு மாதிரி நடந்துக்கற. ஒரு வாரமா நீ சரியா வருவதும் கிடையாது. போன்ல கூட உன்னைப் பிடிக்க முடியலை. எங்களை விட முக்கியமா யாரோ ஒருத்தர் கூட நீ தினமும் சுத்தறியாம்! மூணாவது மனுஷங்க சொல்லி, எனக்குத் தெரியணுமா? அது யார்னு சஸ்பென்ஸ் வேற! எங்ககிட்ட மறைக்கிற அளவுக்கு, நாங்க அன்னிய மாயிட்டோம்... இல்லண்ணா?'' -குரல் தழுதழுத்தது.

''இல்லைடா. நானே முறையா எல்லோருக்கும் சொல்றேன்... அது யார்னு.''

''அது யாரா இருந்தாலும், உனக்குப் பிடிச்சிருந்தா... எங்களுக்கும் சந்தோஷம் தான். எங்ககிட்ட மறைக்கிறியேங்கற வருத்தம் தான்.''

''சாரி தன்னு! நாளைக்கு ஈவினிங் எல்லா சஸ்பென்ஸும் பிரேக் ஆயிடும். மனசைப் போட்டு உழப்பாம நிம்மதியா தூங்கு. சிபியையும் குடையாதே. நிஜமாவே, அவனுக்கு எதுவும் தெரியாது. தாத்தா படுத்தாச்சா?''

''ம். இப்பத் தான் டேப்லட் போட்டுட்டு படுக்கப் போனார். பெரியப்பா வாக்கிங் போயிருக்காங்க.''

''இந்த நேரத்திலயா?''

''தோட்டத்துக்குள்ள தான். பத்து நிமிஷத்தில வந்திடுவாங்க... சாரிண்ணா! நீ சொல்லாம, யாரோ ஒருத்தர் உன்னைப் பத்தி தப்பா பேசறாங்களேன்னுதான் கோபமா பேசிட்டேன்.''

''உனக்கு அதுக்கு எல்லா உரிமையும் இருக்குடா. உனக்கும், சிபிக்கும் அவளைக் கண்டிப்பா பிடிக்கும். லேட்டாச்சு. மதுவைத் திட்டாதே! சமாதானப்படுத்தித் தூங்க வை. நான் வரலைன்னு, ஏற்கனவே கோபமா இருக்கா. குட்நைட் தன்னும்மா!''

உரையாடல் முழுவதையும் கேட்டிருந்த தேவி, ''தன்னு மாறவே இல்லை பிரபு. அதே துடுக்குத்தனம்'' என்றாள்.

''ம். உன்னை இழக்க, என் அம்மாவே காரணமா இருந்துட்டாங்க. அவங்க பேசினதெல்லாம் என்னால ஜீரணிக்கவே முடியலை. அதன் பிறகு அவங்க முகத்தைக் கூடப் பார்க்கலை. மது அருந்தவும் ஆரம்பிச்சேன்.



அதிலிருந்து என்னை மீட்டு வந்தது சிபி, தன்னு அப்புறம் மது. அந்த மழலையோட அன்பில்தான் என்னையே நான் கரைச்சுகிட்டேன். என் உலகமே மதுதான்னு ஆயிருச்சு. உன் சாயல்ல உதட்டில அதே ஸ்டார் மச்சத்தோடு பிறந்தவளைக் கையில் ஏந்திய போது, நம்ம குழந்தையா நினைச்சு தான்... மதுமதின்னு பேர் வச்சு, பார்பின்னு கூப்பிட ஆரம்பிச்சேன். அன்னிக்குப் பீச்சில அவ கூட பேசினபோது, உன் முகத்தில நீ காட்டிய கோபத்தைப் பார்த்துத் தான், அப்படியே என் கோள் ப்ரெண்டுன்னு கப்சா விட்டு, உன்னைச் சீண்டினேன். அப்பக் கூட, நீதான் பார்பின்னு சொல்லவே இல்லை. சரியான ராட்சஷிடி நீ!''

''ஆனா, நீங்க என்னை எப்பயிருந்து சந்தேகப்பட ஆரம்பிச்சீங்க?''

''உன்னைப் பார்த்த நொடியில இருந்தே எனக்கு டவுட் தான். அதுவும் உன்கிட்ட கைகுலுக்கினபோது அந்த ஸ்பரிசம்... அது எனக்குத் தெரியாமப் போகுமா? அப்பயிருந்தே, உன்னை நோட் பண்ண ஆரம்பிச்சேன்.''

''பிரபு!''

''பின்ன... ஐயாவை என்னன்னு நினைச்ச? நான் எத்தனைப் பெரிய ஹெர்லக்ஹோம்ஸ் வேலையெல்லாம் செஞ்சிருக்கேன் தெரியுமா? தினமும் நான் உள்ள வரும்போது ஒரு லுக் விடுவியே... அது போதாதா? நம்ம மேரேஜுக்கு முன்னாலயும் உன்னோட இதே பார்வைதான் என்னை டிஸ்டர்ப் பண்ணும். உன்னோட நீல நயனங்களின் பாஷை எனக்கு மட்டுமே நல்லா புரிஞ்சுது.

ஒரு நாள் லஞ்ச் டைமில ஓ.எம்.ஜி.ன்னு ஆரம்பிச்சு, வழக்கம் போல தாத்தா புராணம் பாடின பாரு. அப்பத்தான்

கன்பர்ம் பண்ணிக்கிட்டேன். உடனே பிரைவேட்டா டிடெக்டிவ் ஏஜென்ஸி நடத்திகிட்டு இருந்த என் ப்ரண்ட் விஜய்கிட்ட, உன்னைப் பத்தி விசாரிக்கச் சொன்னேன்.

ஒரே வாரத்தில அவன் உன்னைப் பத்தி புல் ரிப்போர்ட்டும் கொடுத்துட்டான். அன்னிக்கு எனக்கு, உன்னைக் கொலை செய்யும் அளவுக்கு, உன் மேல் கோபம் வந்தது. அன்னிக்கு முழுக்க என்னால என்னைக் கன்ட்ரோல பண்ணவே முடியலை. உன்னை என் பக்கத்தில வச்சுகிட்டு, உன் முகத்தில ஏதாவது காயம், தழும்பு இருக்கான்னு பார்த்துத் தவிச்சுப் போயிட்டேன். நீ நார்மலா இருக்கிறது தெரிஞ்சும் கூட மனசு சமாதானம் ஆகலை.

வருணோட அப்பா பேமசான டாக்டர். அவர் மூலமா உனக்கு ஆபரேஷன் பண்ணிய டாக்டர்.மோகன் தாமஸ்கிட்ட அப்பாயின்ட்மெண்ட் வாங்கிட்டு, மும்பை கிளம்பினேன். அவரை நேரில் பார்த்துப் பேசி, என் டவுட்ஸ் எல்லாம் கிளியர் செஞ்சதும், தேங்க் பண்ணினேன். நீ எப்பவும் என்னைப் பத்தி மட்டும் தான் பேசுவேன்னு சொன்னதும், எனக்கு ஆகாயத்தில் பறக்கற மாதிரி இருந்தது. உடனே உன்கிட்ட வரத்துடிச்ச மனசைக் கட்டுப்படுத்திகிட்டு, ஜோத்பூர் கிளம்பினேன். ஆரம்பிச்ச வேலையை, முழுசா முடிக்கணும் இல்லையா?''

'தன் நலனுக்காக எத்தனை அலைந்திருக்கிறான்' என்ற பெருமிதத்தில், ''பிரபு!'' என அவன் மார்பில் கொடியாய்ப் படர்ந்தவளின் முதுகை வருடியவன், முகம் காதலில் பளபளக்க, ''இன்னும் இருக்கு பார்பி. விஜய்கிட்ட பேசறதுக்கு முன்னால...'' என்றவன் கொஞ்சம் தயங்கிவிட்டு, ''உன்னுடைய ஆக்ஸிடெண்ட் போட்டோ



பார்த்தேன். உன் இடது கை குளோசப்பில் தெளிவா இருந்தது. அதில, நாம எலெக்ஷன்ல ஓட்டுப் போட்டபோது வச்ச அடையாள மை, மிஸ்ஸிங்கா இருந்தது. அது ஒரு சந்தேகம். ரிப்போர்ட்ல இறந்து போன பெண்ணின் வயது முப்பது இருக்கும்னு போட்டிருந்தது. இதெல்லாமே உன்னைப் பார்த்ததும் தான் என் கண்ணுக்குப் பட்டுது.

அவளைத் தன் மேல் இழுத்துப் போட்டுக் கொண்டு, ''நான் ஜோத்பூர் போன போது உன் தாத்தாவைப் பார்க்க உடனே அனுமதி கிடைக்கலை. பொறுமையா தினமும் முயற்சி செஞ்சேன். மூணாவது நாள் தான், என்னை வரச் சொன்னார். அவரோட அரண்மனையைப் பார்த்ததும் மலைத்துப் போனேன். அதே பீல்டில் இருக்கிறதால அதன் பிரம்மாண்டம், ஆடம்பரம், கலைநயம், வொர்க்மேன்ஷிப் எல்லாம் பார்த்ததும், பேச்சே வரலை. அப்பா! பிரமாதம்! அரண்மனைன்னா எப்படி இருக்கும்னு புரிஞ்சுது. ஒரு குட்டி சாம்ராஜ்யமே அவருக்கு இருந்தது. உள்ளே நுழைஞ்சதும் ஹாலைப் பார்த்து வாயைப் பிளந்துட்டேன். மிக நவீனமான அரியணை பாணியில் போட்டிருந்த சோபாவில் உட்கார்ந்ததும், என்னை நானே ராஜாவா உணர்ந்தேன்.

அப்பதான், ஒரு ராஜான்னு... பார்த்ததுமே சொல்லற மாதிரி உயரமும், கம்பீரமுமா உன் தாத்தா வந்தார். என்னையுமறியாம எழுந்து அவரை வணங்கினேன். வெறும் பார்வையிலேயே அத்தனைப் பேரையும் ஆட்டி வக்கிற ஆளுமை அவர்கிட்ட இருந்தது. ஆனா, என்கிட்ட ரொம்பப் பிரியமா பேசினார்.''

''ம். தாத்தாவுக்கு நம்ம மேல ரொம்பப் பிரியம்.''

''ஆமா. அவர் என்னைக் கட்டிப் பிடிச்சுகிட்டார்.

கௌதம் பேட்டா! வாங்க. ரொம்ப சந்தோஷம் என உடைந்த தமிழில் பேசினார்.''

''தேவி எனக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்திருக்கா. நான் ஜஸ்வந்த் சிங் ஜோதா! உங்க பார்பியோ அம்மா வழி தாத்தா. நான் என்ன செய்யணும் சொல்லுங்க'' என்றார் கனிவாக.

''தாத்தா! உங்களை அப்படியே கூப்பிடலாம் தானே? நீங்க என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடுங்க. மரியாதை வேண்டாம். நானும் உங்க பேரன் தான்.''

''நல்லா பேசற கௌதம்!'' - சிரித்தார். ''அப்புறம் தேவி உங்களைப் பத்தி நிறைய்ய்ய சொல்லியிருக்கா. பேச ஆரம்பிச்சா நிறுத்தவே மாட்டா. உங்க மேல ரொம்பப் பிரியம். அவ சொன்ன மாதிரியே அவளை நீங்க பார்த்ததுமே கண்டுபிடிச்சு விசாரிக்க வந்துட்டீங்க!''

''நான் அவகிட்ட இன்னும் பேசலை. டிடெக்டிவ் ஏஜென்சி மூலமா கண்டு பிடிச்சு, முதல்ல உங்ககிட்ட விபரம் கேட்கணும்னு வந்திருக்கேன். ப்ளீஸ் தாத்தா! முதல்ல என்ன நடந்ததுன்னு மறைக்காம சொல்லுங்க. விபத்து நடந்த பிறகு என்ன நடந்தது? உங்களை என் பார்பிக்கு முன்னாலயே தெரியுமா? ஆனா, இதுவரை ஒருமுறை கூட பேசியதில்லையே! என் உயிரையே காப்பாத்தி... என்கிட்ட கொடுத்திருக்கீங்க. இது எப்படி நடந்தது?''

''பேட்டா! நீ ரொம்ப டயர்டா இருக்க. முதல்ல சாப்பிட்டு விட்டு நல்லா ரெஸ்ட் எடு. மெதுவா பேசலாம்.''

''நிஜமா பார்பி... அன்னிக்குத் தாத்தா கொடுத்த விருந்தை என்னிக்குமே மறக்க முடியாது. ராஜ விருந்துன்னா



எப்படி இருக்கும்னு ரசிச்சு அனுபவிச்சேன். எனக்கிருந்த சோர்வெல்லாம் போக நல்லா தூங்கி எழுந்தேன். பிறகு குளிச்சிட்டு கீழே வந்தேன். டின்னர் முடிந்ததும், அவரின் பர்சனல் ரூமுக்குக் கூட்டிட்டு போனார்.

''கௌதம் பேட்டா! நந்தினி தேவி... உன் மாமியார், என் ஒரே வாரிசு. அத்தனைச் செல்லம். அவ ஒரு இளவரசி. அதனால தரையில கால் படாம அருமையா வளர்த்தேன். அவளோட பதினாறாவது வயசில என் மனைவி ப்ரியங்கா தேவி ஹார்ட் அட்டாக்ல எங்களை விட்டுப் பிரிஞ்சுட்டா. அதற்குப் பிறகு நான்தான் நந்தினிக்கு அம்மாவா... ப்ரெண்ட் மாதிரி எல்லா விஷயமும் என்கிட்ட ஷேர் பண்ணிக்குவா. அவ இஷ்டப்படி பிலானியில இன்ஜினியரிங் படிக்க ஆரம்பிச்சா.

நந்தினி ரொம்பக் கிளவர். துடிப்பா, துறுதுறுன்னு இருப்பா. மாதத்தில் இரண்டு நாள் வந்து, என் கூட இருப்பா. அந்த மாதம் நடந்தது முழுக்க வாய் ஓயாம பேசித் தள்ளுவா. அவ மூணாவது வருஷம் படிச்சுகிட்டு இருந்தபோது, அவ நடவடிக்கையில லேசா மாற்றம் தெரிஞ்சுது. என்கிட்ட போனில் பேசறது கூட குறைஞ்சுப் போச்சு. என் ஆட்களை விட்டு விசாரிச்சேன். தமிழ்நாட்டைச் சேர்ந்த சங்கர்ங்கற பையனோடு நெருங்கிப் பழகிட்டு இருக்கிறது தெரிஞ்சதும், என் கோபம் கட்டுக்கடங்காமப் போச்சு.

எங்க ராஜ பரம்பரையைச் சேர்ந்த மாப்பிள்ளையை அவளுக்காகப் பார்த்து வச்சிருந்தேன். அவ படிச்சு முடிச்ச பிறகு கல்யாணம்ங்கற அளவில, பேச்சு வார்த்தை கூட முடிஞ்சிருந்தது. மாப்பிள்ளை மேற்படிப்புக்காக பாரினில் இருந்தார். நந்தினி ஊருக்கு வந்தபோது கண்டிச்சேன்.

படிச்சது போதும்ன்னு தடுத்துட்டேன். அதுக்கு மட்டும் அவ ஒத்துக்கவே இல்லை. அப்பா! மூணு வருஷம் முடிஞ்சுது. இன்னும் ஒரு வருஷம் தான் இருக்கு! நான் இனி நீங்க சொல்றபடி கேட்டு ஒழுங்கா நடந்துக்குவேன். ப்ளீஸ் படிப்பை மட்டும் நிறுத்தாதீங்கன்னு கெஞ்சினா. அவளைத் தனியா வீடெடுத்து தங்க வச்சு, அவளைப் பார்த்துக்க ஆட்களை நியமித்தேன். எங்களை மீறி அவ எதுவுமே செய்ய முடியாதபடி செஞ்சு படிக்க அனுப்பினேன். நாலு வருஷம் படிப்பு முடிஞ்சதும் அந்தப் பையன் சங்கரைக் கூட்டிக்கிட்டு வந்தா.

''அப்பா இவர் சங்கர். பி.ஜி முடிச்சிருக்கார். புனேயில் பெரிய நிறுவனத்தில் செலக்ட் ஆகியிருக்கார். எனக்கும் அதே ஊர்ல வேலை கிடைச்சிருச்சு. நாங்க ரெண்டு பேரும், போன வருஷமே ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டோம். படிச்சு முடிச்ச பிறகு தான் சேர்ந்து வாழறதுன்னு முடிவெடுத்திருந்தோம். எங்களை மன்னிச்சு, ஆசிர்வாதம் பண்ணுங்கன்னு எந்தத் தயக்கமும் இல்லாமல், தைரியமா பேசினாள்.

எனக்குள் எழுந்த அத்தனைக் கோபத்தையும் ஒரேநொடியில் கட்டுப்படுத்திக் கொண்டு, ''நல்லாயிருங்க. நம்ம பரம்பரையோட கௌரவத்தையும் என்னோட மானம், மரியாதையும் மதிக்காத நீ... எனக்கு இனி தேவையில்லை. என் வரையில... என் பொண்ணு செத்துட்டா. இனி, இந்த ஜென்மத்தில உன் முகத்தையே பார்க்கமாட்டேன்னு வெறுத்துப் போய், கோபத்தில் அவளைப் பார்த்தேன்.

அதோடு சரி. அதன் பிறகு என் மகளை நான் பார்க்கவே இல்லை. அடிக்கடி அவளைப் பற்றிய தகவல் வரும்.



சென்னை போய் செட்டிலானது. குழந்தைகள் பிறந்தது எல்லாமே தெரியும். என் ரத்தம் தானே நந்தினியின் உடம்பில் ஓடுது. ஒருநாள் கூட அதன் பிறகு அவளும் என்னைத் தொடர்பு கொள்ளவே இல்லை. அவளுக்கு இருக்கும் பிடிவாதத்தில் பாதியாவது எனக்கு இருக்கும் தானே. எனக்கும், என் மகளோட குடும்பத்தைப் பார்க்க எழுந்த ஆசையைக் கட்டுப்படுத்திக்கிட்டேன்.

அப்பத்தான் என் பெண்ணும், மாப்பிள்ளையும் விபத்தில இறந்த செய்தி கேட்டுத் துடிச்சுப் போனேன். இத்தனை நாள் நந்தினியை வேண்டான்னு சொன்னதெல்லாம் வெளிவேஷம்னு புரிஞ்சுது. பத்து நாட்களாக சுய நினைவே இல்லாம, பிதற்றிட்டு இருந்தேன். அதன்பிறகு என் பேரக் குழந்தைகளைப் பார்க்க, சென்னைக்குக் கிளம்பினேன்.

பிரியங்கா தேவி, என் மனைவியோட மறுபதிப்பா இருந்தா. நந்தினி, அம்மா பேரையே மகளுக்கும் வெச்சிருந்தா. சங்கரோட பழகினவன்கிற முறையில அறிமுகப்படுத்திகிட்டு, அங்க போய் கிருஷ்ணமூர்த்தியை விசாரித்தேன்.

நந்தினி என்னைப் பத்தி ஒரு வார்த்தை கூடச் சொல்லாம, குழந்தைகளை வளர்த்திருக்கா. அத்தனை வீம்பு! எனக்கும் கோபம் தான். பெற்றோர்களை இழந்து துயரத்திலிருந்த அந்தக் குழந்தைகள்கிட்ட என்னை வெளிப்படுத்திக்காம, திரும்பி வந்திட்டேன். அவங்க தாத்தா குழந்தைகளை அரவணைச்ச விதத்தைப் பார்த்து நிம்மதியாவும், அதே சமயம் பொறாமையாகவும் இருந்தது. அவங்க மனக் காயம் ஆறிய பிறகு பேசலான்னு முடிவு

செஞ்சேன். அவங்களைப் பாதுகாக்க சிலரை நியமிச்சேன்.

ஆனா, உன் ஆபிசில் அவங்க வேலைக்குச் சேர்ந்த பிறகு, இரண்டு பேர் பற்றி தகவல் சொல்லவும் ஆள் தேவைப்பட்டது. சிபிக்கு... ஆனந்த்தும்; தேவிக்காக விக்ரமும் என இரண்டு பேரும் அங்கேயே வேலைக்குச் சேர்ந்தாங்க.''

''தாத்தா! விக்ரம் உங்க ஆளா? ஆனா, வேலையில கெட்டி. கச்சிதமா செஞ்சு முடிப்பான்.''

''என் சொந்தம் தான் அவன். தேவிக்கு அண்ணன் முறை. நீ தேவியை விரும்பியதெல்லாம், அவன் மூலமா எனக்கு உடனுக்குடன் தெரிய வந்தது. கோயிலில் நடந்த கல்யாணத்துக்கு நானும் வந்தேன். ஒரு மூணாவது மனுஷனா அதில கலந்துகிட்டேன். எப்படி நடக்க வேண்டிய கல்யாணம்! ம்...! உன் அம்மா திரும்பி வந்ததும், மிகப் பிரம்மாண்டமாக ஒரு வரவேற்பு விழா ஏற்பாடு செய்ய திட்டம் போட்டிருந்தேன். அவங்க ஊரிலிருந்து வருவது தெரிந்ததும், அவங்ககிட்ட பேச நானும் சென்னை வந்து தங்கியிருந்தேன். ஆனா, அதற்குள்ள என்னென்னமோ நடந்திருச்சு...'' என்றவர் கௌதமைத் தோளோடு அணைத்துக் கொண்டார்.

''நல்ல வேளை! அவளுக்கு விபத்து நடந்த நேரம் நான் அங்க இருந்தது கடவுள் செயல். உடனே அவளைக் காப்பாற்ற முடிஞ்சுது. அவளுக்கு நடந்த ட்ரீட்மெண்ட் மருத்துவ உலகின் அதிசயம் தான். அவ நல்லபடியா மாறி உன்கிட்ட வந்து சேரணும்கற ஆர்வத்தில, டாக்டருக்கு முழுசா கோ-ஆபரேட் பண்ணினா. ஆனா, ட்ரீட்மெண்ட் போது ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கா. அவளை டைவர்ட்



பண்ணத் தான், இன்டீரியர்ல ஸ்பெஷலைஸ் பண்ண வச்சேன். பாவம்... இந்த வயதில் இது மாதிரி கஷ்டம் யாருக்கும் வரக்கூடாது.''

''சாரி தாத்தா! நான் இனி அவளை என் கண்ணுக்குள்ள வெச்சு பத்திரமா பார்த்துக்குவேன்!'' என நெகிழ்ந்து போய் பேசிய கௌதமைத் தட்டிக் கொடுத்து, ''உன் மேல் எந்தத் தப்பும் இல்லை பேட்டா. என் பேத்தி என்ன சொல்றா?'' என்றார்.

''உங்க பேத்தி மிஸ்டர்.கௌதம் பிரபாகர்னு என்னைக் கூப்பிட்டுக் கை குலுக்கியதில் தான் மாட்டிகிட்டா. என்னையே நாள் முழுக்க முறைச்சுப் பார்த்து கிட்டேயிருந்தா. போய்க் கவனிச்சுக்கறேன்.''

''பேட்டா! என் பேத்தியைத் திட்டினா அவ்வளவு தான்! எங்க வீட்டு இளவரசி அவ!'' என்று செல்லமாக மிரட்டினார்.

''தாத்தா! அவ உங்க பேத்தியா உங்ககிட்ட பேசறதுக்கு முன்னாலயே, எனக்கு மனைவியா ஆயிட்டா. அதை ஞாபகம் வச்சுங்குங்க. நான் கேட்கிறதை தப்பா எடுத்துக்காதீங்க. அவ இளவரசின்னு தான். இந்த மூணு வருஷமா என்கிட்டயிருந்து மறைச்சு வச்சீங்களா... நான் உங்க பேத்திக்கு மேட்சா...?''

''பர்பெக்ட் மேட்சா இருக்க பேட்டா. இந்த விபத்துக்கு அப்புறமா தான், என் பேத்தி எனக்கு முழுசா கிடைச்சருக்கா. திரும்ப உங்களைப் பார்த்துட்டா, என் கூட இருக்க மாட்டா. இந்த மூணு வருஷமா கூட, மனசளவில உன்னை விட்டு அவ பிரியவே இல்லை. அத்தனை நேசம் உன் மேல. அவ அம்மா மாதிரி தான் அவளும். நீங்க வந்த உடனே உங்க எல்லோர் கூடவும் வந்திருப்பா.

இத்தனை நாளும் என் கூடவே இருந்து கொஞ்சி, சின்னக் குழந்தையிலிருந்து என்னை விட்டு பிரிஞ்ச ஏக்கத்தையெல்லாம் ஈடுகட்டற மாதிரி, நான்தான் அவ உலகம்னு சந்தோஷமா இருந்தா. உன்னைப் பார்த்திருந்தா, இதையெல்லாம் இழந்திருப்பேன். பாசத்துக்காக ஏங்கிப் போயிருக்க இந்தக் கிழவனை மன்னிச்சிடு.''

நெகிழ்ந்து போன கௌதம் அவர் கைகளைப் பற்றிக் கொண்டு, ''அவ என்னிக்குமே உங்க பேத்தி தான் தாத்தா! எப்ப வேணா அவ இங்க வந்து உங்க கூட இருக்கட்டும். நீங்க கவலையேபடாதீங்க. அவளை இங்க அனுப்பி வைக்கறது என் பொறுப்பு. இன்னும் ஒரு வாரம் அவளுக்கு டைம் கொடுக்கறேன். அதுக்குள்ள என்கிட்ட வந்து பேசறாளான்னு பார்க்கறேன்.

அதுவரை, நான் வந்து உங்களைப் பார்த்த விஷயம் அவளுக்குத் தெரிய வேண்டாம். ப்ளீஸ் தாத்தா எனக்காகன்னு கேட்டேன். உன்னைக் காயப்படுத்தக் கூடாதுங்கற கண்டிஷனோட சம்மதிச்சார். அவரோட அன்பு வேண்டுகோளைத் தட்ட முடியாம, இரண்டு நாள் அங்கேயே தங்கிட்டு அப்புறமா தான் இங்க கிளம்பி வந்தேன். எப்படி ஐயாவோட திறமை?'' என்றவன், பதிலே வராது போக, குனிந்து தேவியைப் பார்த்தான். அவள் மார்பில் தலைசாய்த்து நன்றாக உறங்கியிருந்தாள்.

''அடிப்பாவி! இத்தனை நேரம் வாயில நுரை தள்ள, மாடுலேஷனோடு பேசிக்கிட்டு இருந்தா..., இப்படிக் கும்பகர்ணியாட்டம் குறட்டை விட்டுத் தூங்கறதைப் பாரு. சரியான வாலுடி நீ'' என்றவன், அதன்பின்னர் கண்களை மூடினான்.



மெலிதான ஈரம் கன்னத்தில் படர, கண்ணைத் திறந்தவனுக்கு வெகு அருகில், தேவியின் கண்கள் குறும்போடு அவன் மேல் பதிந்திருந்தது.

''பிரபு...!'' என்றவளை, அதற்கு மேல் கௌதம் பேச விடவில்லை.

# 27

சிபியின் குரல் கேட்டுக் கண்விழித்த மது, ஓடிவந்து அவன் கால்களைக் கட்டிக் கொண்டு, ''அப்பா! கொஞ்சம் குனிங்க. கிஸ் குடுக்கணும்'' எனவும், அவளைத் தூக்கி முத்தமழை பொழிந்த சிபி, ''என் செல்லக் குட்டிம்மா இத்தனை நாளா சமர்த்தா இருந்தாளா? அம்மா என்ன பண்ணினா? தாத்தாவுக்கு மருந்தெல்லாம் கரெக்டா குடுத்தாளா, என் செல்லக் குட்டி!'' என அவளைக் கொஞ்சினாலும், விழிகள் தான்யாவைத் தேடின. சமையலறையில் ஏதோ உருளும் சத்தம் கேட்டது.

'மகாராணிக்குக் கோபம் போல!' என்று தனக்குள் புன்னகைத்துக் கொண்டான். பேப்பர் படித்துக் கொண்டிருந்த விஸ்வநாதன் மற்றும் தாத்தாவிடம் சிறிது நேரம் பேசிவிட்டு, தன் அறைக்குச் சென்றான். முகம் கைகால் கழுவிவிட்டு வந்த பிறகும் கூட, தான்யாவின் தரிசனம் கிடைக்கவில்லை.

''குட்டி! அம்மாவை காபி கொண்டு வரச் சொல்லுடா. தலை வலிக்குது'' - கண்மூடிப் படுத்திருந்தான்.

'ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஊர் திரும்பியவுடன் சிபி, தன்னைத் தேடிவந்து அணைத்துக்

கொள்வான்' என்ற எதிர்பார்ப்பு பொய்யாகிப் போன எரிச்சலில், சமையலறையில் பாத்திரங்கள் அவளிடம் வதைப்பட்டன.

''அம்மா! அம்மா!''

''என்னடி!''

''அப்பாக்கு ஒரே ஹெட் ஏக். பாவம்மா. நீ காபியே குடுக்கலை. அப்பா படுத்துத் தூங்கிட்டார்.''

''போடி! பெரிய மனுஷி பாரு. உன்கிட்ட தூது விட்டிருக்கார். நண்டு மாதிரி இருந்துகிட்டு, உன் அப்பா வந்ததும் என்னைக் கண்டுக்கவே இல்லை பாரு. தினமும்... நீ சொல்லித்தான் உன் அப்பாவுக்குக் காபி குடுத்தேனா? எல்லாம் தெரியும். நீ தாத்தா கூட கார்டன் போய், பூவைப் பறிச்சிட்டு வா!'' என்று செல்லமாக கடிந்து கொண்டு அவளைத் துரத்தி விட்டாள்.

'துரைக்குக் கோபம் வந்திருச்சாக்கும்!' காபி கப்பை எடுத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்து, அவனைப் படுக்கையில் காணாமல் தேடினாள்.

அறைக்கதவை தாளிட்டு வந்து, பின்னாலிருந்து அவளை இறுக அணைத்த சிபி, ''தனு!'' என்றான் குழைவாக.

''ஷ்! காபி சிந்திடும். விடுங்க மாமா!''

''உனக்கென்னடி கோபம்? நான் வந்து அரை மணியாச்சு; எட்டியே பார்க்கலை!''

அழுகையோடு ஆத்திரமும் சேர, ''நீங்க மட்டும்! வந்து அரைமணி நேரமா நான் எங்கேன்னாவது தேடினீங்களா? நான்தான் நீங்க எப்ப வருவீங்கன்னு கிடந்து தவிச்சேன். உங்களுக்கு என்ன? பெங்களூர்ல நல்லா சைட் அடிச்சுகிட்டு ஜாலியா சுத்தியிருப்பீங்க.''



வாய் விட்டுச் சிரித்தவன், ''ராட்சஸி! ஒரு குழந்தைக்கு அப்பாடி நான்! வந்ததும் மரியாதைக்காக தாத்தாகிட்டயும், மாமாகிட்டயும் ஜஸ்ட் இரண்டு வார்த்தை பேசினேன். என் குரல் கேட்டதும் மது ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடிச்சு கிஸ் பண்ணினா. நீ வந்தியாடி?'' என்றதும் முகம் சிவந்தவளை, ரசனையுடன் பார்த்தான்.

''நான் செஞ்சது தப்புன்னா, போனாப் போகுது மன்னிச்சு விட்டுரு தனு! பெரிய தண்டனையெல்லாம் குடுக்காதே!'' என்றபடி கண் சிமிட்டின சிபியை தலையணையில் மொத்தினாள். அவள் கைவிரல்களை முத்தமிட்டு, ''பின்ன என்ன தனு! பெங்களூர் என்ன நான் பார்க்காத ஊரா? நான் படிச்சதே அங்கே தானே. நானும், உன் அண்ணனும் சுத்தாத இடமே இல்லை. லட்டு மாதிரி எத்தனைப் பொண்ணுங்களைப் பார்த்து சைட் அடிச்சிருப் போம். இப்ப அதெல்லாம் நினைச்சு கூடப் பார்க்காம, உன் நினைப்புல ஓடி வந்தா, ரொம்ப முறுக்கறியே!''

ஆசையோடு அவள் முகம் நோக்கி குனிந்தவனை தள்ளிவிட்டு, ''அப்ப அந்த லட்டுவையே சாப்பிடுங்க'' என்றவளைச் சுலபமாக அடக்கி, ''எனக்கு இப்போதெல்லாம் குலாப் ஜாமூன் தான் பிடிக்குது'' என்றவன், தான் நினைத்ததைச் சாதித்துக் கொண்டான்.

அவனின் செயலில் தன் கோபமனைத்தும் மறந்து போய், சமாதானமாகி அவன் மார்பில் சாய்ந்தவள், ''மாமா! கௌதம் அண்ணா யாரோ ஒரு பெண்ணைக் கூட்டிகிட்டு ஹோட்டலுக்குப் போறான். என்னால் நம்ப முடியலை, ஆனா, இது எப்படி?''

''நிச்சயமா இருக்காதுடா. கௌதமை, உன்னை விட எனக்கு நல்லா தெரியும். அவன் மனசில என் தங்கைக்கு மட்டும்தான் இடம் கொடுத்திருக்கான். வேறயாரும் அவன் நினைப்பிலகூட வரமுடியாது. வேற ஏதோ விஷயம் இருக்கு.''

''வேற என்ன மாமா? அவகிட்ட அத்தனைப் பிரியமா பேசியிருக்கான். தனியா ஒரு பெண்ணை வெளியே கூட்டிட்டுப் போக, வேற என்ன காரணம் இருக்க முடியும்?''

''அதான் நானும் யோசிக்கிறேன். நான் போன வாரம் பேசினபோது, நீ எனக்குச் செய்யற கொடுமையை எல்லாம் அவன்கிட்டச் சொல்லிப் புலம்பினேன். உயிர்காப்பான் தோழன் இல்லையா? அதனால, அவன் என்னை... இல்லை... எனக்காகக்கூட இந்தப் பெண்ணைப் பார்த்து வச்சிருக்கலாம். ஒரு தங்கையா அவளை வெளியே கூட்டிட்டுப் போய் பிரியமா பேசி, இதுக்குச் சம்மதிக்க வச்சிருக்கலாம் இல்லை? அந்த ஆங்கிள்ல யோசிச்சுப் பாரு. சான்ஸ் இருக்கலாம் தானே?

''டேய்!'' என்று கொலைவெறியோடு பாய்ந்தவளிடமிருந்து, அலைபேசியில் ஒலித்த கௌதமின் அழைப்பு காப்பாற்றியது.

''டேய் மச்சான்! சரியான சமயத்தில் போன் செஞ்சு, பெரிய கண்டத்திலிருந்து என்னைக் காப்பாத்திட்டடா. வந்து அரைமணி நேரமாகுது. ஆனா, அஞ்சு வருஷம் ஆன மாதிரி இருக்குடா!'' என்றபடி பரிதாபமாக தான்யாவைப் பார்த்தான்.

''உன்கிட்ட நேர்ல பேசணும்.''

''வீட்டுக்கு வாடா. டிஃபன் சாப்பிட்டுகிட்டே பேசலாம்.''



''ம். அரைமணியில வரேன்.''

கண்கலங்க அமர்ந்திருந்தவனைப் பார்த்து பதறிப் போய் அவளை இறுக அணைத்த சிபி, ''என்ன தன்னும்மா? கல்யாணத்துக்கு முன்னாலேயே என்னைப் பத்தி நல்லா தெரிஞ்சு வச்சிருந்த உனக்கு, இப்ப என் மனசு புரியாதா?'' உன்னைச் சீண்டினாதான் என்கூட கொஞ்சநேரம் உட்கார்ந்து இருப்பேன்னுதான்... விளையாட்டு வினையாப் போயிருச்சு!

குட்டிம்மா போன பிறகு, நீ தானேடா என் உலகம்? உனக்குப் புரியலையா? என்னை அம்மா மாதிரி கவனிக்க, உன்ன விட்டா யாரிருக்கா? ப்ளீஸ்! சாரிடா!'' அவளை சமாதானப்படுத்தி, தன் ஆசையையும் பூர்த்தி செய்து கொண்டான், அந்தக் கள்ளன்.

கௌதம் உள்ளே வந்ததுமே, சிபியை அணைத்துக் கொண்டான். ''ட்ரெயினிங் நல்லபடியா போச்சா சிபி?''

''ஃபைன்-டா. நீ எப்படி இருக்க?''

அதற்குள் தாத்தா உட்பட அனைவரும் ஹாலில் ஆஜராகியிருந்தனர். மதுவைத் தூக்கி கொஞ்சி, அவள் கையில் சாக்லேட் பாரைத் திணித்தவனிடம், ''மாமா! புதுசா ஒரு அத்தை வந்திருக்காங்களாம். அம்மா, அப்பாகிட்ட சொன்னா. அத்தை எங்கே?'' என்று எல்லாருமே பேசத் தயங்கிய விஷயத்தை பட்டெனப் போட்டு உடைத்தாள்.

இந்தப் பேச்சை எப்படித் துவங்குவது என்று தவித்த கௌதமுக்கு, மதுவின் கேள்வி தேனாய் இனித்தது.

இல்லை என்று சொல்லி விளக்கம் சொல்வான் என்று அவனையே அனைவரும் ஆவலோடு பார்த்திருக்க,

''ஆமாடா குட்டி! புது அத்தை தான். என் பார்பி போலவே. ஈவினிங் எல்லோருமே பார்க்கலாம்... என்னடா?'' என்று எல்லோருக்கும் தெளிவுபடுத்தினான்.

அவனின் எதிர்பாராத பதிலைக் கண்டு எல்லோருமே திகைத்துப் போயினர். சிபியோ, நம்ப முடியாத விஷயம் தன் காதில் விழுந்த அதிர்ச்சியில், ஏதோ கேட்க முயன்றான்.

''ப்ளீஸ்டா! இப்ப எதுவும் கேட்காதே. ஈவினிங் நம்ம வீட்டுக்கு எல்லோரையும் கூப்பிடத் தான் வந்தேன். டின்னர் அரேஞ்ச் பண்ணியிருக்கேன். உங்க எல்லோர் மனசிலும் இருக்கிற கேள்விக்குப் பதிலை, அங்கே வச்சுச் சொல்றேன். அப்பா சாரிப்பா! ப்ளீஸ் தாத்தா! கண்டிப்பா நீங்களும் வரணும். இந்தாடா மது! இந்தப் புது டிரஸ்ஸை ஈவினிங் போட்டுட்டு வா. தன்னு! பசிக்குது. டிஃபன் ஆச்சா...?'' என சூழ்நிலையைச் சகஜமாக்க முயன்றான்.

சிபியோ, ''உன் முடிவில் முழு சம்மதம்டா. அது யாராக இருந்தாலும், இனிமே அவ என் குட்டிமாவா இருப்பா. உன் மனசில் இடம் பிடிச்சவ, சாதாரணமானவளா இருக்கமாட்டா. எனக்கும் ரொம்பப் பிடிக்கும்டா. வா சாப்பிடப் போகலாம்!'' என்றவனை மனம் நெகிழ அணைத்தான் கௌதம்.

''உன் நம்பிக்கை வீணாகாதுன்னு மட்டும்தான் இப்ப என்னனால சொல்ல முடியும் சிபி. நான் உன் ப்ரெண்டா இருக்கறது, எனக்கு ரொம்பப் பெருமையா இருக்குடா.''

அதே மனநிறைவோடு வீட்டுக்கு வந்தவன், தேவியிடம் நடந்த அனைத்தையும் பகிர்ந்து கொண்டான். ''எங்க அண்ணன் உங்களை எப்படிப் புரிஞ்சு வெச்சிருக்கான் பாருங்க!'' என்றாள் பெருமித்துடன்.

''உண்மைதான் பார்பி! நல்ல ப்ரண்ட் அமையறது, ஒரு



வரம். எனக்கு அது அமைஞ்சிருக்கு. தன்னுவோட முகம் கூட கொஞ்சம் வாடியிருந்தது. ஆனா, சிபிக்கு அத்தனைச் சந்தோஷம். ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சுகிட்டவங்களோட நட்பு... கண்ணுக்கும், கைக்கும் உள்ள ரிலேஷன்ஷிப் மாதிரி. கையில் அடிபட்டா, கண்ணுல கண்ணீர் வரும். கண்ணுல கண்ணீர் வந்தா, கை ஆறுதலா அதைத் துடைச்சு விடும். அது மாதிரி தான் எங்க நட்பும். நான் கொடுத்து வச்சவன்டா!''

''ம்...''

''நீ ஈவினிங் எந்த டிரஸ் போடப் போற? வா. கடைக்குப் போய் உனக்கு ஒரு சாரியும், அதுக்கு மேட்சா ஜுவல்ஸும் வாங்கிட்டு வரலாம்.''

''பிரபு! நாம மேரேஜ் அன்னைக்கு போட்ட டிரஸ்ஸே போதும். என் தாத்தா, அத்தைகிட்ட ஆசீர்வாதம் வாங்கணும்.''

கௌதமின் முகம் இறுகிப் போனது. ''தேவி! உன் அத்தையைப் பற்றி இனி நீ ஒரு வார்த்தை கூடப் பேசக் கூடாது. இனிமேல் அப்படிப் பேசி, என்னை மூட் அவுட் பண்ணாதே!'' என அழுத்தமாக தணிந்த குரலில் பேசி விட்டு அகன்றான்.

தேவியோ அசராமல், ''பிரபு! நான் சொல்றதை கேளுங்க. அத்தை எந்தத் தவறும் செய்யலை. உங்க மேல இருக்கிற அதிகப்படியான பாசமும், கொஞ்சம் அந்தஸ்து மோகமும்தான், அவங்களை அப்படிப் பேச வைத்தது. என் அம்மா மாதிரிதான் அவங்களும். அந்த இடத்தில் யாரா இருந்தாலும் அப்படித் தான் பிரபு பேசுவாங்க. நான் அத்தனை டென்ஷன் ஆகியிருக்கக் கூடாது.

நான் அமைதியா இருந்திருந்தா, இல்லை... பொறுமையா போயிருந்தா... கொஞ்ச நாளில் அவங்க என்னைப் புரிஞ்சுகிட்டு இருந்திருப்பாங்க. உங்ககிட்ட சொல்லி யிருந்தா, அத்தைகிட்ட பக்குவமா பேசிச் சரி பண்ணி யிருக்கலாம். அவங்க அஞ்சு நிமிஷம் என்கிட்ட கோபமா பேசினதுக்கு, ஆயுள் தண்டனையையே அனுபவிச்சுட்டாங்க. தனிமைச் சிறையில அவங்களைத் தள்ளி... நீங்களும், மாமாவும் செஞ்சதுதான் அநியாயம்.

பாவம் பிரபு அவங்க! எந்தத் தாயாலும்... கெட்டவங்களா இருக்கவே முடியாது. நீங்க தானே சொல்வீங்க... உண்மையான அன்பு எப்பவும் டாமினேட் செய்யாது... விட்டுக் கொடுக்கும்னு. நீங்க அத்தை மேல வச்ச பிரியத்தில பொய்யில்லைன்னா, அதை எனக்கு நிரூபிச்சுக் காட்டுங்க பிரபு! அன்பு மட்டும்தான் எதையும் சாதிக்கும். மன்னிக்கறதுக்கும் பெரிய மனசு வேணும். அது என் பிரபுகிட்ட நிறைய இருக்குன்னு நம்பறேன்!'' என்று மிருதுவாகப் பேசி அவன் தோளில் சாய்ந்தாள்.

அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் மனதில ஈட்டியாகப் பாய, ''இவள் என் மனைவி'' என்ற கர்வம் அவனுக்குள் எழுந்தது. கைகள் தாமாக உயர்ந்து அவளை அணைத்தது.

**மா**லை கவிழத் தொடங்கியது. இருவரும் குளித்து விட்டு, திருமண உடையணிந்து தயாரானார்கள். அவளை ரூமிலேயே இருக்கச் செய்து, ''இன்னொரு தடவை உன்னைக் கல்யாணம் செஞ்சுக்க ஆசையா இருக்கு பார்பி! எல்லோரும் வந்ததும், மாடிக்கு அவங்களைக் கூட்டிட்டுப் போன பிறகு வந்து, உன்னைக் கூட்டிட்டுப் போறேன். அதுவரை கதவை லாக் பண்ணிட்டு, உள்ளேயே இரு!'' என்றவன், அவளது கன்னத்தைத் தட்டிவிட்டு ஹாலுக்கு வந்தான்.



கௌதமைப் பார்த்து விசிலடித்தான் சிபி. ''டேய் கௌதம்! ரொம்ப ஸ்மார்ட்டா... என் பழைய கௌதம் திரும்பி வந்தமாதிரி இருக்குடா.''

''உனக்குக் கொஞ்சம் கூட வருத்தமா இல்லையா சிபி?'' என ஆழ்ந்த குரலில் கேட்டவனைப் புன்சிரிப்போடு ஏறிட்டு, ''எதுக்காக? உன்னை இத்தனை நிம்மதியா, முகத்தில் பல்ப் எரிய பார்க்கவே சந்தோஷமா இருக்குடா. எங்கேடா என் தங்கை?''

ஒரு நிமிடம் மௌனத்தில் கழிய, ''இத்தனை நேரம் பொறுத்தாச்சு. இன்னும் கொஞ்ச நேரம் வெயிட் பண்ணு. ஒரு பெரிய சர்ப்ரைஸ் இருக்கு. வாங்க மாடிக்குப் போகலாம்!'' தாத்தாவைக் கைபற்றி அழைத்துச் சென்றான்.

மாடி முழுக்க அழகாக அலங்காரம் செய்யப்பட்டு தயாராக இருந்தது. வருண் மட்டும் வர, ''ஏன் வருண் சிஸ்டர் வரலையா? அம்மா, அப்பா?'' என்றான் கேள்வியாக.

''இல்லைடா. மிருதுவோட டெலிவிரிக்கு ஒரு வாரம் தான் இருக்கு. அம்மாவும், வர்ஷிக்காவும் கண்டிப்பா நோ சொல்லிட்டாங்க. அவ ஆசையாதான் இருந்தா. அம்மா உங்க இரண்டு பேரையும் கண்டிப்பா வீட்டுக்கு வரச் சொன்னாங்க.''

''கண்டிப்பா வரோம். நாங்க ஒண்ணா சேருவதற்கு, நீயும் ஒரு முக்கியமான காரணம்டா. ரொம்ப தேங்க்ஸ் வருண். மிதுவுக்கு டெலிவிரி முடியட்டும். வரோம்.''

எல்லோரும் வந்து சேர்ந்ததும், ''இதோ வர்றேன்!''

என்று அவன் கீழே செல்ல, படபடப்போடு அவர்களது வருகைக்குக் காத்திருந்தனர்.

அதே போல் பதட்டத்தோடு ஆவலும் சேர, கௌதமை ஏறிட்டாள். அவளைத் தன் தோளோடு சேர்த்தணைத்து பதட்டத்தைக் குறைத்த கௌதம், ''பயப்படாமல் வா!'' என்று மாடிக்கு அழைத்துச் சென்றான்.

வண்ண விளக்குகள் ஒளிர மாயா ஜாலமாகக் காட்சியளித்த மாடியில், கால்கள் துவள நுழைந்தாள். கௌதமின் கரத்தை இறுகப் பற்றிக்கொண்டு மெல்ல ஏறிட்டவளின் நீல நயனங்களில் முதலில் பட்டது சிபிச் சக்கரவர்த்தி தான்.

சிபி அவளைப் பார்த்ததும் தயங்கியது ஒரே ஒரு நிமிடம் தான். அதன் பிறகு எந்த விதச் சந்தேகமும் இல்லாமல் இரு கைகளையும் விரித்து, ''குட்டிம்மா! நீயாடா...? நிஜமா... நீயே தானா...?'' என்று குரல் நடுங்கக் கத்தியதும், அனைவரும் ஸ்தம்பித்துப் போனார்கள்.

தேவி, ''ப்ரோ!'' என்று அவன் கரங்களுக்குள் புகுந்த பின்னர், அந்த இடமே உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கியது. கண்களைப் பனிப்படலமாய் நீர் நிறைக்க, கௌதமும் சுவரில் சாய்ந்து மௌனமாக ஒரு சாட்சியாய் நடப்பதைப் பார்த்திருந்தான்.

தாத்தாவின் மடி சாய்த்து கண்ணீர் விட்டவளை, ஆதூரத்தோடு தலையை வருடி, ''ஏன் குட்டிம்மா! இத்தனை நாளா எங்களைத் தவிக்க விட்டுட்டே?'' என்றார் குரல் தழுதழுக்க.

''இதுக்குப் பதிலை நான் தான் சொல்லணும் சம்பந்தி. ஏன்னா... இதுக்கான முழுக்காரணமே நான் தான்!'' என்ற



குரலில் திரும்பியவர்கள், அங்கே விக்ரம் சிங்கோடு கம்பீரமாய் வந்து நின்ற ஜஸ்வந்த் சிங் ஜோதாவைக் கண்டு திகைத்தனர்.

கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து கரம் குவித்து, ''நான் ஜஸ்வந்த்! நந்தினியோட அப்பா. சந்தர்ப்ப சூழ்நிலையால தான், தேவி என்கிட்ட... என் பாதுகாப்பில் இருந்தா'' என்று ஆரம்பித்து அவர் அருகில் அமர்ந்து, நடந்த அனைத்தையும் விளக்கமாகக் கூற ஆரம்பித்தார்.

அவர் பேசப் பேச, மூச்சு விடவும் மறந்து போய் கேட்டுக் கொண்டிருந்தனர். தான்யாவின் கைகளைப் பற்றியபடியே, மதுவை மடியில் தாங்கி அமர்ந்திருந்த தேவியின் அருகில் வந்த கௌதம், ''மதுக்குட்டி! அந்த அங்கிள் ஐஸ்கிரீம் வச்சிருக்கார். போய் வாங்கிச் சாப்பிடுடா'' என்று அவளை அனுப்பிவிட்டு, அவளருகில் ஈஷிக் கொண்டு அமர்ந்தான்.

அவள் கையைத் தன்னோடு கோர்த்துக் கொண்டு, ''என்ன செல்லம்! எல்லோரையும் பார்த்ததும், என்னைய திரும்பியே பார்க்கலை. நாம மேல வந்து இரண்டு மணி நேரம் ஆச்சு. என்னை நிமிர்ந்து கூடப் பார்க்க நேரம் இல்லையா? ஒழுங்கா என்னோட வா. தனியா ஒரு விஷயம் பேசணும்!'' -மெல்ல இழுத்தான்.

கன்னங்களில் ரோஜாக்கள் பூக்க, ''ஷ்! என்ன பிரபு? விடுங்களேன். ப்ளீஸ் யாராவது பார்க்கப் போறாங்க. அதுவும் தான்யா பார்த்தா போச்சு. என்னை ஒரு வழி பண்ணிடுவா. ப்ளீஸ் பிரபு!'' என்று கெஞ்சியவளின் தோளில் உரிமையாகக் கை போட்டுத் தன்னருகில் இழுத்தான் உல்லாசமாக. ''அதெல்லாம் உன் பிரச்சினை

பேபி. அவளை நீயே எப்படியாவது சமாளிச்சுக்கோ. வான்னு சொன்னா வரணும்! ஒரு முக்கியமான விஷயம்.''

''அது என்னன்னு எனக்கும் தெரியும். சும்மா இருங்க பாஸ்! சிபி அண்ணா உங்களைத் தான் பார்க்கிறான்.''

''இதிலென்னடி இருக்கு? நான் என் பொண்டாட்டி கிட்ட தானே பேசறேன்? யார் வேணா பார்க்கட்டும்!'' என்றவன், சிவந்து கிடந்த தன்னவளின் முகம் பார்த்து மனம் விட்டுச் சிரித்தான்.

''இத்தனை நாளா... இந்தச் சந்தோஷத்தையெல்லாம் தொலைச்சிருந்தியே கௌதம். இனி மேலாவது உன் முகத்தில் இந்த மகிழ்ச்சி என்னிக்கும் நிலைச்சு இருக்கணும்!'' என்று மனதார வாழ்த்தினான் சிபிச் சக்கரவர்த்தி.

எல்லா விஷயங்களையும் சொல்லி முடித்த பெரியவர், ''உங்க எல்லோர்கிட்டயும்... இன்னும் ஒரு ரிக்வெஸ்ட்'' என்று விக்ரமைப் பார்த்ததும், அவன் கீழே போய் அழைத்து வந்தது பத்மினி மேடத்தை.

அவரைப் பார்த்து அத்தனை பேருமே அதிர்ந்து போனார்கள். மடிப்புக் கலையாத உடையில், கம்பீரமும் மிடுக்குமாக ஒரு ராணி போல மிகப் பெரிய தொழில் சாம்ராஜ்யத்தையே தன் ஒரே பார்வையில் கட்டுப்படுத்திய பத்மினியா இது என்ற பேரதிர்ச்சி!

உடல் தளர்ந்து, பொலிவிழந்து, சோர்ந்து போய் நோயுற்றவளைப் போல, விக்ரமின் கைகளைப் பற்றியபடி மெதுவாக வந்த பத்மினியைப் பார்த்து உயிர் துடிக்க அவரருகில் விரைந்தார் விஸ்வநாதன்.

''பத்மினி! நீயா இது? என்னாச்சும்மா?'' என்றவரின்



குரலிலிருந்த வேதனையையும், குற்றவுணர்ச்சியையும் பார்த்த பத்மினியின் மொத்த கர்வமும் கரைந்து போக, ''என்னை மன்னிச்சிடுங்க விஷ்வா! நான் ரொம்பப் பெரியப் தப்பு பண்ணிட்டேன். இது நாள் வரை, உங்களுக்கு ஒரு நல்ல மனைவியா... நான் எதுவுமே செய்யலை.

ஒரு கணவனுக்குரிய மரியாதையும் தரலை. சாரி! என் ஒரே மகனையும் நான் ரொம்ப அலட்சியப் படுத்திட்டேன். சின்ன வயசில் தர வேண்டிய தாயன்பு இல்லாமப் பண்ணிட்டேன். கண்டிப்பா அவன்... என்னிக்கும் என்னை மன்னிக்கவே மாட்டான்.''

தேவி ஓடி வந்து அவர் பாதம் பணிந்து, ''அத்தை! நீங்க ஒரு தப்பும் செய்யவே இல்லை. செஞ்சதெல்லாம் நான் தான். என்னால தான், உங்களுக்கு இப்படி ஒரு நிலைமை வந்திருக்கு. சாரி! என்னைத் திட்ட உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கு. உங்களை என் அம்மாவா நினைச்சிருந்தா, அன்னிக்கு அத்தனை அவசரமா காரைக் கிளப்பிட்டு போயிருக்க மாட்டேன். அன்பானவங்களைப் பிரிஞ்சு இருக்கிறது எத்தனை பெரிய கொடுமையான விஷயம்?

இந்த மூணு வருஷத்தில அதை நல்லா அனுபவிச்சுட்டேன். என்னை உயிரா பார்த்துக்க தாத்தா இருந்தும் கூட, ரொம்ப வேதனையா இருந்தது. யாருமே இல்லாம... தனியா நீங்க என்ன பாடுபட்டிருப்பீங்க? என்னை மன்னிச்சுடுங்க அத்தை!'' என்று பெருந் தன்மையோடு தன் மீதே எல்லா பழியையும் போட்டுக் கொண்டு, மன்னிப்பை யாசித்து நின்றவளை, கண்கலங்க அணைத்துக் கொண்டார் பத்மினி.

''நானே தேடியிருந்தா கூட, இத்தனை அருமையான மருமக எனக்குக் கிடைச்சிருக்க மாட்டா. என்னை மன்னிச்சுரும்மா! உன்னை மிரட்டிய பத்மினி என்றைக்கோ இறந்துட்டா. அவளோட... அவகிட்டயிருந்த ஆணவம், அகங்காரம், மோகம் எல்லாமே போயிருச்சு.

இப்ப இருக்கிறது புதுசா பிறவியெடுத்திருக்கிற பத்மினி. நான் அனுபவிச்ச கொடுமையான தனிமை என்னைத் திருத்திடுச்சு. ஒரு அளவுக்கு மேல, பணத்தோட வேல்யூ பூஜ்ஜியம்தான்னு புரிஞ்சுகிட்டேன். அது வெறும் பேப்பர் தான். எந்த ஒரு சூழ்நிலையிலும் மனுஷங்களோட ஆதரவு தான் பலம்.

அதுதான் நிம்மதியும், சந்தோஷமும் தரும்னு தெரிஞ்சுகிட்டேன். என்னால எத்தனைப் பேருக்கு வருத்தம்... தேவையில்லாத குழப்பம்! என்னை எல்லோரும் மன்னிச்சிடுங்க. பிரியங்கா தேவியை மருமகளா... எங்க வீட்டு மகாலட்சுமியா கூட்டிட்டுப் போக அனுமதி கொடுங்க'' என்று கிருஷ்ணமூர்த்தியிடம் கை கூப்பி வேண்டினார்.

பேசுவது தன் தாயா என்ற திகைப்பிலிருந்த கௌதம், அவர் அவ்வளவு தூரம் கீழறிங்கி மன்னிப்பை வேண்டியதும் நெகிழ்ந்து போனான்.

ஏற்கனவே அவரின் தோற்றத்தில் அதிர்ந்து போயிருந்தவன், விரைந்து அவரருகில் சென்று, ''அம்மா!'' என்றதும் பத்மினி கதறி விட்டார்.

சூழ்நிலையை சகஜமாக்கும் பொருட்டு ஜஸ்வந்த், ''என் பேத்தி மறு ஜென்மம் எடுத்து வந்திருக்கா. யாரும் கண்ணீர் விடக் கூடாது. பத்மினி நீ என் பொண்ணு மாதிரி. கௌதம்



பேட்டாவை சின்ன வயசில் கொஞ்சி மகிழ முடியலைன்னு வருத்தப்படாதே.

உன் ஏக்கத்தைப் போக்க, தேவிம்மா உனக்கு ஒரு பேரனை பெத்துக் கொடுக்கப் போறா. அவனை உன் இஷ்டப்படி வளர்த்து, உன் ஆசையெல்லாம் தீர்த்துக்க. என்ன தேவிம்மா... நான் சொல்றது சரிதானே?'' என்றதும் குங்குமமாகச் சிவந்த முகத்தை, தன் கணவனின் தோளில் மறைத்துக் கொண்டாள் தேவி.

ஜஸ்வந்த் சிங்கின் அன்பு வேண்டுகோளைத் தட்ட இயலாதவனாய் சிபிச் சக்கரவர்த்தி அவருடன் ஜோத்பூர் சென்று, அவரின் வாரிசாக அவரின் அத்தனை தொழில்களையும் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு, விக்ரமின் துணையோடு அதை வெற்றிகரமாக நடத்தினான். தன்னுடன், தாத்தாவையும் ஜோத்பூருக்கு வற்புறுத்தி அழைத்துச் சென்றான்.

ஜஸ்வந்தி சிங் தன் பேத்தியின் ரிசப்ஷனை மிகப் பிரம்மாண்டமாக, ஊரே அதிசயக்கும்படி நடத்தி முடித்து, பத்மினியின் வீட்டிற்கு முறையாகத் தேவியை அழைத்துச் சென்றார்.

''கௌதம் பேட்டா! இந்த மூணு வருஷமா தேவிம்மா என் கூட இருந்து என் உயிரா மாறிட்டா. இனி அவளைப் பிரிஞ்சு எப்படி இருப்பேன்? அடிக்கடி நீங்க வந்து, என்னைப் பார்த்துட்டுப் போகணும்!'' என்று வேண்டிக் கொண்டார்.

அவர் கைகளை ஆறுதலாகப் பற்றிய கௌதம், ''கண்டிப்பா தாத்தா! உங்களுக்கு அவளைப் பார்க்கணும் போல இருந்தா, ஜஸ்ட் ஒரு போன் பண்ணுங்க. உடனே ஓடி

வந்திடறோம்'' என்றான் சிரிப்புடன்.

சிபியோடு இவர்களும் ஜோத்பூர் சென்று அங்கேயே தங்கள் தேனிலவையும் முடித்துக் கொண்டு ஊர் திரும்பினர். கடமை அழைக்க, இருவருமே முழு மூச்சாக பிசனஸில் ஈடுபட்டு. வெற்றிகளைக் குவித்தனர்.

**சுபம்**


# சுபம் பப்ளிகேஷன்ஸ்

எண். 15, மணிகண்டன் ஐந்தாவது தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600 021.
செல் : 9443142544
E-mail : subampublications@gmail.com

2015

அன்புடையீர்,

வணக்கம். உங்கள் அனைவரின் பேராதரவுடன் சுபம் பப்ளிகேஷன்ஸ் பல இளம் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி, தரமான புனைகதைகளை வெளியிட்டு வருகிறது.

பேரன்பு மிக்க வாசக - வாசகிகளான தங்கள் அனைவரின் ஒத்துழைப்புடனும், நூலகங்கள், மற்றும் புத்தக விற்பனையாளர்களின் நல்லாதரவுடனும், அனைவரின் பாராட்டுக்களுடன் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

இனிமையான, தரமான படைப்புகளை தங்களுக்கு வழங்க முயற்சித்துக்கொண்டிருக்கும் எங்களுக்கு, தங்களின் ஆதரவை தொடர்ந்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எங்களது வெளியீடுகளை தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். தங்களது முகவரியையும், வாங்க விரும்பும் புத்தகங்களின் பெயர்களையும் தெளிவாக குறிப்பிட்டு அனுப்பவும். தொலைபேசி மூலமாக எங்கள் வெளியீடுகளை பெற **94431 42544** என்ற எண்ணில் தொடர்புகொள்ளவும்.

நன்நெறியையும், நற்பண்புகளையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் சுவைபட எடுத்தியம்பும் நல்ல **கதையம்சம் கொண்ட புதினங்களை/ நாவல்களை வெளியிட எங்களை அணுகவும்.**

வியாபாரிகளுக்குத் தக்க கழிவு உண்டு.

# நீல நயனங்களில்...

## அபிபாலா

சுபம் வெளியீடு